# இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்

M.B.M. இஸ்மாயில் (ஸலாமி) BA. Hons (Madeena)
Dip.in. psycho social intervention (ippsw-s)

**மேலாய்வு :**

N.P.M. அபூபக்ர் சித்தீக் (மதனி)

**வெளியீடு:**

அல்மனார் நிறுவனம், ஸ்ரீ லங்கா ஹிறா பவுண்டேஷன்,
காத்தான்குடி- இலங்கை.

## BIBLIOGRAPHY

| | |
|---|---|
| Copy Right | : Reserved |
| Author | : M.B.M. Ismail (Madany) |
| Title | : Islathin Parvail Sahabakkal |
| Subject | : Islamic History |
| Language | : Tamil |
| Cover Design | : M.B.M.Sameem (Qasimi) |
| Number of Copies | :10,000 |
| Number of Pages | : 268 |
| Size | : 1/8 |
| 1st Edition | : 15-11-2010 (JASM. Paragahatheniya, Weuda.) |
| 2nd Edition | : 2013 (Rawza Dha`wa Center, K.S.A) |
| 3rd Edition | :2015.04.10 (al-Manar & Srilanka Hira Foundation, Kathankudi.) |
| **ISBN** | **: 978-955-51897-0-5** |

**Price : 200/=**

جمعية علماء سريلانكا
සමස්ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
(Incorporated by Act of Parliament No.: 51 of 2000)

இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் சபை / ඉස්ලාම් ආගමික විද්‍යතුන්ගේ සංගමය / COUNCIL OF MUSLIM THEOLOGIANS

## அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் செயலாளர். அஷ்ஷெய்க் எம்.எம். அஹ்மத் முபாரக் அவர்கள் வழங்கிய **மதிப்புரை.**

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ் ஒருவனே புகழுக்குரியவன். ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத்ﷺ அவர்கள் மீது உண்டாவதாக. வஹீ அருளப்படும் நேரம் முதல் நபிﷺ அவர்களுடனே வாழ்ந்து, அன்னாரது சகல தகவல்களையும் ஒரு குறையுமின்றி எத்திவைத்த உத்தம ஸஹாபாக்கள் மீதும் அன்னாரது குடும்பத்தர் கிளையார் அனைவர் மீதும் அல்லாஹ்வின் பேரருள் உண்டாவதாக.

'இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்' என்ற நூலைப் பார்வையிடக் கிடைத்தது. அலஹம்துலில்லாஹ் நல்லதொரு முயற்சியை சகோதரர் அஷ்-ஷெய்க் இஸ்மாயில் ஸலாமீ, மதனீ செய்து முடித்துள்ளார். உத்தமத் தோழர்களின் கண்ணியம் பேணாது அவ்வுத்தமர்கள் மீது வசைபாடும் ஜன்மங்கள் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளவேண்டும். ஷீஆக்களின் கொள்கைகளில் ஒன்றான இந்நடைமுறை நம் நாட்டில் ஊடுருவியிருப்பது வேதனைக்குரியதே. எங்கோ உள்ள நோயை இங்கு பரவச் செய்யும் முயற்சி மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். ஷீஆக்கள் உத்தமத் தோழர்களை நேசிப்பதில்லை என்பதற்கு அவர்கள் சொல்லும் எழுதும் ஸலவாத்தே சான்றாகும். அவர்களது ஸலவாத் اللهم صل على محمد وآل محمد என்பதாகும். ஸஹாபாக்களை அவர்கள் சேர்க்கவே மாட்டார்கள். நாமோ اللهم صل على محمد وعلـــى آل محمـــد وصحبه وســـــلم எனக் கூறுகிறோம். சிந்திப்போம் தெளிவு பெறுவோம்

உத்தமத் தோழர்களை உரிய முறையில் கண்ணியப்படுத்துவது. ஈமானுடனிய விடயமாகும். அல்லாஹ்வும் ரஸூலும் போற்றிய நல்லோரை சபிப்பதும் தரக்குறைவாகக் காண்பதும்



பெரும் பாவமாகும். உலக மாந்தருள் ஸஹாபாக்களுக்குள்ள உயர்வும் மதிப்பும் மேலானது. அதனால்தான் அவர்களது அந்தஸ்தை உஹத் மலை அளவு தங்கத்தை செலவிட்டாலும் அடைந்து கொள்ளமுடியாது அடைய முடியாது என்று நபி மொழி கூறுகிறது. தமது உயிர் பொருள் அனைத்தையும் வழங்கிய அவ்வுத்தமர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டதாக கூறிவிட்டான். அவர்கள் சுவனவாசிகள் எனப் பிரகடனப் படுத்தியுள்ளான். எனவே, அத்தகைய நல்லோரை குறை காண்பவன் அல்லாஹ்வின் கோபத்தையே அடைந்து கொள்வான். அல்லாஹ்வும் ரஸூலும் தூய்மைப் படுத்தியவர்களை திட்டுவது, சபிப்பது, குறைகாண்பது, தரக்குறைவாகப் பார்ப்பது யாவுமே குப்ராகும்.

இந்த வகையில், "இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்" என்ற நூல் நல்ல தெளிவைத் தருமென நம்புகிறேன். உலமாக்களும், சன்மார்க்கக் கல்வி கற்போரும் சகல ஹதீஸ் கிரந்தங்களிளும் காணப்படும் பழா இலுஸ்ஸஹாபா, அல்மனாகிப் போன்ற பகுதிகளை அதிகமதிகம் வாசித்துத் தெளிவு பெற வேண்டும். அத்தோடு அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றிலிருந்து தடுக்கவே, உண்மை கூறுவோரைப் பற்றி இவர்கள் வெளிநாட்டுக் காசுக்கு இயங்குபவர்கள் என்று ஷீஆக்கள் சித்தரித்துப் பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

இந்நாட்டு முஸ்லிம்கள் உத்தம ஸஹாபாக்களை கண்ணியக் குறைவாகப் பார்ப்போரை கணக்கிலெடுக்கமாட்டார்கள். ஏனென்றால் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தினரின் அடிப்படையே அது. அதை விடுத்து சில சில்லறைகள் செஞ்சோற்றுக் கடனாக ஸஹாபாக்கள் மீது குறைகண்டு பேசுவதும் எழுதுவதும் குப்ரிலே சேர்க்கும் என்பதை விளங்கும் மக்கள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் சரியான கொள்கையிலே நிலைத்திருப்பர். அதற்கு வழிகாட்டும் ஒரு நூலாக சகோதரர் இஸ்மாயில் மதனீ எழுதியுள்ள இந்நூல் அமைய வேண்டும். இதன் மூலம் குழம்பிப் போயுள்ள நம் சமூகத்தவர் தெளிவு பெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.
அந்த நற்பணியை வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

Ash - Shaikh M.M.A. Mubarak
General Secretary
All Ceylon Jamiyyathul Ulama
211, Orabi Pasha Street,
Colombo - 10

காதி நீதி மன்றம் **QUAZI COURT** ක්වාසි අධිකරණය

Movlavi, Al-Haj **S.M. ALIYAR** (Falahi) J.P.
Kattankudy.

**Judicial Administrative Division M.P.N.M.T.E.P. Pattu (Kattankudy)**
நீதி பரிபாலன பிரதேசம் : ம.ப.வ.ம.தெ.எ.போ.பற்று (காத்தான்குடி)

President :
Batticaloa District Jammiyyathul Ulama

President :
Kattankudy Jammiyyathul Ulama

## மட்டக்களப்பு மாவட்ட உலமா சபைத்தலைவர் அஷ்ஷெய்க் அலியார் (பலாஹி) அவர்கள் வழங்கிய அணிந்துரை.

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால். புகழ் அனைத்தும் அவனுக்கே உரித்தாகட்டும். சாந்தியும் சமாதானமும் நபிகள் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மீதும் உண்டாவதாக.

அரபுத்தீபகற்பமும் அதனை சுற்றியுள்ள பகுதிகளும் அறியாமையில் மூழ்கியிருந்த அந்தக்காலத்தில்: மக்கள் மதுவுக்கும் மங்கைக்கும் அடிமையாகிக் கிடந்தனர் போராட்ட குணமும் வக்கிர புத்தியும் அவர்களின் உள்ளங்களில் வேரூன்றி இருந்தது பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டார்கள், பலமுள்ளவன் பலமில்லாதவனை அடக்கியாண்டான். அக்கால மக்களின் அறியாமை இருளை நீக்கி சத்தியத்தை நிலை நிறுத்துவதற்காக அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களைத் தேர்வு செய்தான். அறிமைக்கால அந்த மக்களின் மிகவும் நல்லவர்களை நபியின் தோழர்களாக அல்லாஹ் தேர்வு செய்து நபியவர்களை கௌரவித்தான்.

நபியவர்களின் தலைமையில் இஸ்லாமியப் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது வழமைபோல் பல இன்னல்களை இப்பிரச்சாரம் சந்தித்த போதிலும் அல்லாஹ்வின் உதவியால் நபியவர்களின் தியாகம் மற்றும் ஸஹாபாக்கள் காட்டிய ஈடுபாட்டினால் இப்பிரச்சாரத்தைத் தடுக்க எவராலும் முடியாமல் போனது. நபியவர்களையும் இந்த இஸ்லாத்தையும் பாதுகாப்பதற்காக ஸஹாபாக்கள் தங்கள் உயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருந்தார்கள். சொத்து செல்வம் குடும்பம் அத்தனையும் இழந்தார்கள். அவர்களின் உயிர் பிரியும் நேரத்திலும்



நபியவர்களின் காலில் ஒரு முள் தைப்பதைக் கூட அவர்கள் விரும்பவில்லை.

egpat Hfspd; fz;ikfF mtHfs; fIL ggI; hHfs;> cyfjjpy; thot;ij tpd RtHfjjpy; thot;J mtHSfF kpTk; tpUggkhdjhf ,UejJ> ,jdhy; kuzjij mjpfk; Nerpjj hHfs; Nghuhl;ffsjjpy;jd;c apHgpupatpy;iy vdgjwfhf mOjhHfs;> ,ejg; Nghuhl;jjpy;ehDk;fyeJnfhzL kuzpff Ntz;Lk; vdW Mirggl; hHfs;,jdhy;> mtHfis vtuhYk; vjpHf;f Kbatpy;iy. egpatHfisf;nfhyy epdjjtHSk; ,]yhjij mopff epdjjtHSk;] `hghf;fshy; nfhiy nraaggl; hHfs;

egpatHfspd; Nghjid dfspy; mrruk; gpfhky; gpd gwwpa egpNjhoHfs; mij kwwtHSfF vwwpt ggjpY k; mij g; ghJfhggjwFj; Njitahd eIt bfjffis vLggjpY k; KkKukhf ,UejhHfs; egpatHfspd; Nghjidfspy; vJTk; ki weJtpf$IhJ vdgjpy; mtHSfF ,Uej mff;iu kwwtHis nkarrpy;pHff itjjJ. ,jjifa NjhoHfs; cyfjjpy;vej xU kdpUfFk;fpIfftpy;iy vdWkwwtHNs ]`hghf;fisg;Gfoej hHfs;]`hghf;fs;,ej ,]yhjijg; ghJfhggjpy;fhl;ba <Lghl;bdhyjhd;ehk;1400Mz;Lfs;jhz;ba gpd;Dk;J}aika hd ,]yhjijg; gpd gwwpnfhz;bUff pNwhk;myyh`;mtHSfF mUs;Gupthdhf. MkPd;

,jd; fhuzkhf ,]yhjij vjpHf;fpd;w vyNyhUk;]`hghf;fs;kPJ fhyGz;Hrpnfhz;I hHfs;]`hghf;fis mopggjdhyjhd;,ej ,]yhjij mopff KbAk; vdW epdjjhHfs;]`hghf;fisf;nfhiy nraf;pd;wKawrpapy; ,wqf;pdhHfs;,jd;,dndhU mqfkhf ,]yhjij VwWf;nfhz;ItHspk;]`hghf;fSfF ,Uf;fpd;wkjpgi gAk; kupahijiaAk;,yyhnjhopff KawrpjhHfs;mtHs;kPJ ,IL;ff;IL;ffisAk;>nghaf;isAk;$wpkff;spk;mtHis mrpqf;ggLjjpdH

ஸஹாபாக்களை ஆயுத முனையில் அழிக்கின்ற முயற்சியை ஒரு குழு முன்னெடுக்க. ஷீஆக்கள் போன்ற இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட குழுக்கள்: முஸ்லிகளிடம் ஸஹாபாக்களுக்கு இருக்கின்ற மகிமையை இல்லாதொழிக்கின்ற பணியை தொடர்ந்தனர். பிற்பட்ட காலத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் அனைவருமாகச் சேர்ந்து இரகசியமான ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஷீஆக்களை வளர்க்கும் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்ததனால் சமகாலத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பெரிய ஒரு சவாலாக ஷீஆக்கள் வளர்ந்திருக்கிறார்கள். எனவேதான், இவர்களை எதிர்கொண்டு முஸ்லிம்களின் அடிப்படைகளைப் பாதுகாக்கின்ற பணியில் எமது உலமாக்களும் புத்திஜீவிகளும் செயலாற்றுவது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இந்தப் பணியினைச் செய்யும் வகையில் ஸஹாபாக்களின் சிறப்புக்களையும் அவர்கள் விடயத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பதில்களையும் உள்ளடக்கிய மௌலவி இஸ்மாயில் (மதனி) அவர்களின் "இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள்'' எனும் நூலை பரப்புவதற்கான முயற்சியினை காத்தான்குடி அல்-ஹிறா நிறுவனத்தின் சகோதரர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அல்லஹ்ஹ் அருள் புரிவானாக.

தற்காலத்திற்கு தேவையாக இருக்கின்ற இந்நூலை மூன்றாவது முறையாகவும் அச்சிட்டு விநியோகிக்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற சகோதுர் மும்தாஸ் (மதனி) அவர்களுக்கும் அவர்களது நிருவாகத்தினருக்கும் நூலாசிரியருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இம்முயற்சி வெற்றிபெற இறைவனிடம் பிரார்த்தனை புரிகின்றேன்.

எமது பணிகளை ஏற்றுக்கொண்டு அல்லாஹ் அருள் புரிவானாக.

Moulavi, Al-Haj. SM. Aliyar (Falahi) JP
President,
Jamiyyathul Ulama - Batticaloa District,
Sri Lanka

மௌலவி அஷ்ஷெய்க் எஸ்.எம். அலியார் (பலாஹி)
மட்டக்களப்பு மாவட்ட உலமா சபைத் தலைவரும்,
காத்தான்குடி காதி நீதிபதியும்



**அணிந்துரை.**

அஷ்ஷெய்க்: எம்.எச்.எம். ஸமீல் (நளீமி)

**பணிப்பாளர்.**

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

புகழ் அனைத்தும் சர்வ வல்லமை வாய்ந்த சிருஷ்டி கர்த்தாவாகிய அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகுக. அவனது ஸலவாத்தும் ஸலாம் என்னும் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் அகிலத்தின் அருட் கொடையாம் எம் உயிரினும் உயர்ந்த உத்தமத் தருத்தூதர் பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரின் அருமைத் தோழர்கள் மீதிலும் அவர்களது உத்தமக் கிளையார்கள் மீதிலும் குன்றாது குறையாது நிலைக்கட்டுமாக.

ஞாலத்தின் நவீன முற்போக்கு வாதிகளால் மனிதாபிமானமும் நல்ல பழக்க வழக்கங்களும் குன்றி மழுங்கிப் போகும் இக்கால கட்டத்தில் குறிப்பாக அவணியில் ஒழுக்கம் சிதைந்து அனாச்சாரங்கள் மல்கி வரும் இந்நாட்களில் இறை பற்றையும் மனித நேயத்தையும் நல்லொழுக்கத்தையும் வளர்க்கும் படியான நல்ல நூல்கள் பல தேவை. இறைநேசர்கள் உத்தம ஸஹாபாக்கள் போலுற்ற மகான்களின் நல்லுபதேசம் போன்ற சாத்வீக உணர்ச்சியை ஊட்டும் நல்ல கிரந்தங்கள் பல தேவை.

வசனங்களில் மிக்க வாய்மை வாய்ந்தது இறை வேதமும் வழிகாட்டுதலில் சிறந்தது பெருமானார் முஹம்மது நபி அவர்களின் வாக்குகளுமாகும். அத்துடன் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒன்றோடொன்றாக வாழ்ந்த உத்தம ஸஹாபாக்களின் வாழ்க்கை வழிமுறைகள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

ஸஹாபாக்களின் போதனைகள், அவர்களின் பணிவான பேச்சு, எளிமையான வாழ்க்கை, மற்றையவர்களை மதித்துணரும் பண்பு, மன்னிக்கும் மனப்பாங்கு, போன்ற சிரேஷ்ட பண்புகளை சித்தரிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

மேலும், இத்தகைய முயற்சியினை பொதுமக்களுக்கும் குறிப்பாக கல்வியியலாலர் சமூகத்திற்க்கும் முன்வைப்பதன் மூலம் உத்தம ஸஹாபாக்களின் புனித வரலாற்றை அறிந்துகொள்ள முடியும் என நம்புகின்றேன்.

இது பாடசாலை, அஹதிய்யா பாடசாலை, மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். அதே போன்று சாதாரண பொது மக்கள் ஒவ்வொருவருக்கும் விளங்கிக்கொள்வதற்கும், தங்களது வாழ்க்கையில் பின்பற்றி வெற்றி பெறுவதற்கும் இந்நூல் உகந்தது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

வல்ல இறைவன்இவ்வாசிரியருக்கு உடல் நலமும், அறிவும், ஞானமும் தீர்க்க ஆயுளும் நல்கி இதுபோன்ற இன்னும் பல அரிய நூல்களை எழுத நல்லருள் பாலிப்பானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

இந்நூலை, மூன்றாம் பதிப்பாக வெளியிடுவதற்காக அல்மனார் நிறுவனம் மற்றும் ஸ்ரீ லங்கா ஹிரா அமைப்பு மேற்கொள்ளும் முயற்சிகளானது காலத்தின் தேவையாகும். எனவே வல்ல இறைவன் அல்லாஹு தஆலா அவ்வமைப்பினருக்கும் நல்லருள்பாலிப்பானாக.

சமுதாய நண்பர்கள் இந்நூலை வாங்கி தாமும் வாசித்தறிந்து மற்றவர்களுக்கும் வாசிக்க வழங்கி ஆதரவு தந்து ஆசிரியரை ஊக்குவிப் -பதுடன் தானும் நன்மை அடைபவார்களாக. உத்தம ஸஹாபாக்களின் நல்ல வழிகாட்டல்களை அறிந்து நம் வாழ்வில் அவற்றைக் கடைபிடித்து ஈருலக நற்பாக்கியங்களையும் அடைய முயற்ச்சிப்போமாக. இது போன்ற இன்னும் பல நூல்கள் சமூகத்தில் வெளிக்கொணரப்படவேண்டும் எனவும், அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன். இந்த சந்தர்பத்தில் இத்தகைய பணியை ஆரம்பித்து முஸ்லிம் சமுகத்துக்கு பங்களிப்பு செய்தமைக்காக நூலாசிரியருக்கும், இந்நூலை மூன்றாம் பதிப்பாக வெளியிட முயற்சிக்கும் அல்மனார் நிறுவனம் மற்றும் ஸ்ரீ லங்கா ஹிரா அமைப்பினருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களது முயற்சியை அல்லாஹ் அங்கீகரித்து சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

❀❁❀



# பதிப்புரை.

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்**

இஸ்லாத்தின் பார்வையில் ஸஹாபாக்கள் என்ற இந்த நூலை மூன்றாம் முறையாக வெளியிடக்கிடைத்தமைக்கு முதலில் சர்வவல்லமையும் பொருந்திய அழ்ழாஹ்வுக்கும், பின்பு நூலாசிரியர் அஷ்ஷெய்க் எம்.பி.எம். இஸ்மாயீல் (ஸலாமி) அவர்களுக்கும் நான் எனது நன்றியை பதிவுசெய்துகொள்வதில் மனநிறைவு கொள்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.

யூத, கிறிஸ்த்தவ மற்றும் ஷீயாக்களின் சூழ்ச்சிகள் முஸ்லிம்களை சூழ்ந்துவருகின்ற அபாயகரமான தற்கால நிலைமையினை கருத்திற் கொண்டு இந்த புத்தகத்தை மீள் பதிப்பு செய்யவேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது.

கண்ணியமிக்க ஸஹாபாக்கள் இஸ்லாத்துக்காக ஆற்றிய அர்ப்பணிப்புக்கள், அழ்ழாஹ்வின் கட்டளைகளையும், கண்மனி நாயகம் ஸல்லழ்ழாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் போதனைகளையும் கடைப்பிடித்து வாழ்ந்து இவ்வுலகையும், மறுவுலகையும் வெற்றிகண்ட நிலையினை இக்காலகட்டத்தில் மட்டுமல்ல எக்காலகட்டத்திலும் எமது சமூகமும் அறிந்து தமது வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வாழ இந்நூல் உதவியாய் அமையும் என்பதில் எமக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

முஸ்லிம்களைப் பற்றிய தவறான கண்ணோட்டத்துக்கும், ஸஹாபாக்கள் மீதான அவதூறுப் பிரச்சாரங்களுக்கும் நெற்றியடித்தாற் போல் தக்க பதிலை வழங்குவதற்கு ஒவ்வொரு சகோதரர்களும் இந்நூலை வாசிக்கவேண்டும். அதேபோன்று பிறமதத்து சகோதரர்கள் இஸ்லாத்தை விளங்கிகொள்ளவும் இந்நூலை கொள்வனவுசெய்து அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்க

வேண்டும் என்றும் நாம் ஆசைப்படுகின்றோம். இந்நூலின் மூலம் அனைவரும் பிரயோசனமடைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே நூலின் பெறுமதித் தெகையையும்விட மிகவும் குறைந்த தொகையில் வழங்குவதற்கு முன்வந்தோம்.

எமது அல் மனார் நிறுவனமும், ஸ்ரீ லங்கா ஹிறா பவுண்டேசனும் இணைந்து எத்தனையோ சேவைகளை ஆற்றியிருக்கின்ற அல்லது ஆற்றிவருகின்றபோதும் இப்புத்தக வெளியீட்டின் மூலம் எமது சமூகத்துக்கு இஸ்லாமிய கொள்கையின் ஆழ்ந்த அறிவுக்கும், பிற மதத்துச மூகத்தவர்களுக்கு இஸ்லாம் பற்றிய தெளிவை புரிந்துகொள்ள வைக்கவும் வல்லநாயன் எமது இரு நிறுவனத்தையும் தெரிவுசெய்திருக்கின்றானே என்ற நினைப்பு எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. இதில் ஆத்மதிருப்தியும் ஏற்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

எல்லாம் வல்ல அழ்ழாஹ் இப்பதிப்புக்கு உதவியாய் அமைந்த அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக!

அல்ஹாஜ்: M.L.A.M.ஹிஸ்புல்லாஹ் (M.A, M.P)
**தலைவர்.** ஸ்ரீ லங்கா ஹிறாபவுண்டேசன்.

&

அஷ்ஷெய்க் ALM.மும்தாஸ் (மதனி) BA.,
**செயலாளர் நாயகம்,**
அல் மனார் நிறுவனம்
காத்தான்குடி - இலங்கை.



# முன்னுரை:

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்...

ஸலவாத்தும் ஸலாமும் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது வாழ்க்கையினைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் வாழ்கின்றவர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்ததாக இந்த உலகில் வாழ்ந்த நல்ல மனிதர்கள் ஸஹாபாக்கள்தான். அல்லாஹ்வின் உதவியால் ஸஹாபாக்களின் தியாகமும் முயற்சியும்தான் இஸ்லாம் இன்றளவும் உயிர்வாழ்வதற்கு உரமாகியிருக்கிறது. ஸஹாபாக்களின் இந்த முயற்சியினால் இஸ்லாத்தின் எதிரிகளின் முயற்சிகள் நிலைக்கவில்லை. அதனால், ஸஹாபாக்கள் விடயத்தில் குறைகாண்பதற்கு இஸ்லாத்தின் எதிரிகள் முயற்சிக்கின்றனர். இது இஸ்லாம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, இஸ்லாத்தைப் பாதுகாக்க நினைக்கின்ற ஒவ்வொருவரும் ஸஹாபாக்கள் பற்றி சொல்லப்படுகின்ற விடயங்களில் தெளிவோடும் நடுநிலையோடும் இருப்பது காலத்தின் தேவையாக மாறியுள்ளது. அரபு மொழியில் இது தொடர்பான அதிகமான நூல்கள் இருந்தபோதிலும், தமிழ் மொழியில் இல்லாதிருந்தது மிகப்பெரும் குறையாக இருந்தது. அல்லாஹ்வின் உதவியால் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து எமது மார்க்கத்தின் முதல் சாட்ச்சிகளான ஸஹாபாக்கள் பற்றிய முழுமையான தெளிவை சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த நூலை எழுதியுள்ளேன். அல்ஹம்துலில்லாஹ்.

அல்லாஹ்வின் உதவியால் இந்நூல் வெளியாகி குருகிய காலத்திலேயே மூன்றாவது முறையாக அச்சுருப் பெறுவதையிட்டு

மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அல்ஹம்துலில்லாஹ். முந்திய பதிப்புகளைப் போன்றல்லாமல் இம்முறை சில திருத்தங்களுடன் இந்நூல் வெளிவருவது இரட்டிப்பு சந்தோசத்தைத் தருகின்றது.

காலத்தின் தேவை கருதி இந்நூலை வெளியிட்டு சமுகத்தில் பரப்புவதற்கான முயற்சியினை மேற்கொண்ட சகோதரர் மும்தாஸ் (மதனி), அல்-ஹிரா நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

இந்நூல் பெரியதாக இருந்த போதிலும் இதன் உள்ளடக்கத்தைக் கவனத்தில் கொண்டு பல வேலைகளுக்கு மத்தியிலும், அதை மீளாய்வு செய்து ஆக்கப்படுத்தி, முதலில் வெளியிட்ட ஜமாஅத்து அன்ஸாரிஸ்ஸுன்னதில் முஹம்மதிய்யாவின் தலைவர் அபூபக்ர் ஸித்தீக் (மதனி), அதன் செயலாளர் ஊழியர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக.

என்னை நூலாக்கத்துறைக்கு அறிமுகம் செய்த காத்தான்குடி இஸ்லாமிக் சென்டர், அதன் ஊழியர்கள் அனைவரையும் இந்நேரத்தில நன்றியோடு ஞாபகப்படுத்துகின்றேன். இறுதியாக இந்நூலை வாசிக்கும் உங்களையும் அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக. ஆமீன்.

இந்நூல், ஒரு மனித முயற்சி என்பதால் பல தவறுகள் இதில் இருக்கலாம் அவ்வாறு தவறுகளைக் காண்பவர்கள் கட்டாயம் எமக்கு அதைத் தெரியப்படுத்துங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

நிச்சயமாக அல்லாஹ் நம் அனைவரின் பணிகளையும்
ஏற்றுக்கொள்ள போதுமானவன்.

M.B.M. இஸ்மாயில் (மதனி)
**அதிபர்,** தாறுஸ்ஸலாம் அரபுக் கலாபீடம்.
பிரதான வீதி, தியாவட்டுவான், வாழைச்சேனை.
31.03.2015



## பொருளடக்கம்

மதிப்புரை.//iii
அணிந்துரை.1//v
அணிந்துரை.2//viii
பதிப்புரை.//x
முன்னுரை.//xii

**பகுதி–01**

முதற்பதிப்பின் முன்னுரை. //01
வரலாற்றை வாசிக்கும் முன்...//05
வரலாற்றை எவ்வாறு வாசிப்பது?//08
நாம் யாரிடமிருந்து வரலாறுகளைப் படிப்பது?//12
வரலாற்றை வாசிக்கும் போது கவனிக்க வேண்டியவை...//16
ஸஹாபி என்றால் யார்?//18
ஸஹாபியை தீர்மானிப்பதற்கான வழிகள்.//22
ஸஹாபாக்கள் பற்றி அல்–குர்ஆன்.//23
ஹதீஸ்களில் ஸஹாபாக்கள்.//26
ஸஹாபாக்களும், தியாகமும்.//43
ஸஹாபாக்கள் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர். //50
ஸஹாபாக்களைக் குறை கண்டால் அல்லது காபிர்கள் என்று சொன்னால்!//62
ஸஹாபாக்கள் விடயத்தில் வழிகெட்டுப் போனவர்கள்.//67
அஹ்லுல் பைத் என்போர் யார்?//90

நபியின் அஹ்லுல் பைத்தினர் யார்?//97
விதண்டாவாதமும் விளக்கமும்.//101
அஹ்லுல்பைத்களுக்கும் ஏனைய ஸஹாபாக்களுக்கும் மத்தியில் உள்ள உறவுகள்.//112

**பகுதி–02**

குழப்பங்கள் பற்றி இஸ்லாம்.//125
குழப்பங்களின் திறவுகோல்.//129
எங்கிருந்து குழப்பங்கள் தோன்றும்?//132
ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகள்.//137
பிரச்சினைகளுக்கு அடித்தளமிட்ட உஸ்மான் ﷺ அவர்களின் கொலை.//138
உஸ்மான் ﷺ அவர்களைக்கொன்றவன் யார்?//144
உஸ்மான் ﷺ அவர்களின் கொலையில் ஸஹாபாக்கள் சம்பந்தப்பட்டனரா?//146
ஸஹாபாக்கள் இருந்தும் உஸ்மான் ﷺ கொலைசெய்யப்பட்டது எவ்வாறு? //149
அலி ﷺ அவர்களின் பதவிப்பிரமாணமும் போராட்டங்களும்//151
ஜமல் போர். //153
ஸிப்பீன் யுத்தம்.//157
நமது நிலைப்பாடு.//161
இந்தப்போராட்டங்களில் ஸஹாபாக்களின் நிலைப்பாடு.//163



நஹர்வான் யுத்தம்.//164

**பகுதி–03**

குற்றச்சாட்டுக்களும் பதில்களும்.//168
ஸஹாபாக்கள் மார்க்கத்தை மறைத்தார்களா?//169
ஸஹாபாக்கள் பித்அத்வாதிகளா?//174
ஸஹாபாக்கள் ஹுதைபியாவில் வைத்து நபியவர்களை நிராகரித்து இஸ்லாத்தைவிட்டும் சென்று விட்டனரா?//178
உஸாமாவின் படையில் பெரும் ஸஹாபாக்கள் செல்லாதது ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவா?//182
நபியவர்களின் பின் கலீபா யார்?//185
அபூபக்கர் ﷺ அவர்கள் பாதிமா ﷺ அவர்களுக்கு அநியாயம் செய்தார்களா?//195
உஸ்மான் ﷺ அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்.//199
அபூஹுரைரா ﷺ அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்.//216
ஆயிஷா ﷺ அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்.//236
ஷீஆக்களால் முடியுமா?//246
குறிப்புக்கள்.//252

## முதற்பதிப்பின் முன்னுரை

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வைப்போற்றி அவன் திருப்பெயரால்... இறைவனின் சாந்தியும் சமாதானமும் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் மீதும் அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்ந்த, வாழ்கின்ற அனைவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாத்தை உண்மைப்படுத்துவதும் பொய்ப்பிப்பதும் ஸஹாபாக்கள் விடயத்தில் நாம் கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. ஏனெனில், அவர்களே அடிப்படை. அடிப்படையை தகர்த்தபின் கட்டிடம் நிலைபெறாது. இதனால்தான் ஷீஆக்களும் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளும் இஸ்லாத்தை குழிதோண்டிப் புதைக்கும் நோக்கத்துடன் ஸஹாபாக்களைக் குறைகூறி இஸ்லாத்தின் ஆணிவேரை அறுத்துவிட முயற்சிக்கின்றனர். இது எம்மில் அதிகமானவர்களுக்குத் தெரிவதில்லை. படித்தவர்கள், பாமரர்கள் என்ற வித்தியாசமின்றி மிகவும் ஆபத்தான விடயங்களைக்கூட சாதாரணமாக ஏற்றுக்கொள் -கின்றோம். எமது பிள்ளைகளுக்கும் அதை கற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றோம்...

ஸஹாபாக்களை எவராவது குறைகண்டால் அவன் இஸ்லாத்தையே அழித்துவிடுவதற்கு முயற்சிக்கின்றான் என்று புரிந்துகொள்ளுங்கள். ஏனெனில் நாம் குர்ஆனை உண்மையென்பதும் ஹதீஸை உண்மையென்பதும் ஸஹாபாக்கள் நம்பகமானவர்கள் என்பதனால்தான். இவர்கள் எமது சாட்சிகளை இல்லாமலாக்குவதன் மூலம் எமது அடிப்படைகளை இல்லாமலாக்க முயல்கின்றனர். என்று இமாம்கள் குறிப்பிடுகின்றனர்.

ஸஹாபாக்களைப் பற்றிய பல மோசமான கருத்துக்கள், அதன் விளைவுகளையும் அவைகளை உருவாக்கியவர்களின் உள்நோக்கத்தையும் தெரிந்துகொள்ளாமல்; பல்கலைக்கழகங்கள்,



பாடசாலைகள் என்று பரப்பப்படுகின்றன; கற்பிக்கப்படுகின்றன. இந்நிலையில், இக்கருத்துக்களின் உண்மைத் தன்மையை தெளிவுபடுத்தும் ஒரு நூல் தமிழ் உலகத்தில் இல்லாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். என்று நான், ஷீஆக்கள் தொடர்பாக வாசிக்க ஆரம்பித்தேனோ அன்றிலிருந்தே ஸஹாபாக்கள் பற்றிய பிழையான கருத்துக்களுக்கு விளக்கமளிக்கும், ஒரு முழுமையான ஆய்வை இந்த சமுதாயத்திற்கு முன்வைக்க வேண்டும் என்ற ஆவல் என் உள்மனதில் பதிந்து விட்டது. இந்த நூலின் மூலம் அந்த நீண்ட நாள் கனவு ஓரளவு நிறைவேறியிருக்கிறது என்று நினைக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த நூலை வாசிக்கும் சிலர், இவ்வளவு பாதகமான கருத்துக்களைக்கொண்டிருக்கின்ற ஷீஆக்களைப் பற்றியும் ஸஹாபாக்கள் விடயத்தில் அவர்களின் தவறான கொள்கைகளைப் பற்றியும் விளக்குகின்ற நூல்கள் ஏன் தமிழ் உலகத்தில் அதிகமாக வெளிவரவில்லை? என்று கேட்க முடியும் அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

**01)** எப்போதும் ஷீஆக்கள் கிறிஸ்தவர்களைப்போன்று இரத்தத்தை மையமாகக் கொண்டு பிரச்சாரம் செய்கின்ற ஒரு கூட்டம். மக்களின் உணர்வுகளைக்கிளறி அதை தங்கள் கொள்கைக்கு உரமாகப் பயன்படுத்துகின்றனர். கிறிஸ்தவர்கள் தங்கள் பிரச்சாரங்களில் இயேசு சிலுவையில் அறையப்பட்டதைச் சொல்லி மக்களின் கண்ணீரைப் பெற்றுக் கொள்வதைப்போல, ஷீஆக்களும் தங்கள் பிரச்சார மேடைகளை, ஹுஸைன் رضي الله عنه அவர்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதையும் அவர் கொலை செய்யப்பட்ட விதத்தையும் சொல்லி மக்களை கதறி அழவைப்பதற்கே பயன்படுத்துகின்றனர்.

இதனால், அவர்கள் தங்களின் கொள்கை பற்றி சொல்லாமல் இருக்கும் போது அவர்களைப்பற்றி நாம் எழுதுவது அவர்களை அறிமுகப்படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது என்று எமது அறிஞர்கள் கருதியிருக்கலாம்.

**02)** ''குற்றம் செய்தவன் மனது குறுகுறுக்கும்''என்பதைப்போல தங்களின் மோசமான கொள்கைகள் மக்களுக்கு தெரியவரும்போது அல்லது அக்கருத்துக்கள் அடங்கிய தங்களின் புத்தகங்கள் மக்களின் கரங்களுக்கு சென்றுவிட்டால், நாம் தோழுறிக்கப்பட்டு -விடுவோம் என்பதனால் ஷீஆக்கள் தங்கள் நூல்களை பகிரங்கப் படுத்துவதில்லை. தங்களின் நூல்களை மறைப்பதனால் தங்கள் சுயரூபத்தை ஒரு பரம ரகசியமாக வைத்திருக்கலாம் என்று நினைக்கின்றனர்.

என்றாலும், அல்லாஹ் மிகப்பெரியவன் என்பதனால் அவர்களின் நூல்கள் பிற்பட்ட காலங்களிலேயே வெளியில் வந்தன. இதனால் அவர்களின் அடிப்படை நூல்களைப் பெற்றுக்கொள்வதில் எமது அறிஞர்கள் சவால்களை எதிர்நோக்கியிருக்கலாம்.

**03)** ஷீஆக்களின் நூல்கள் பெரும்பாலும் பாரசீக மொழியிலேயே இருக்கின்றன. பிந்திய நாட்களில் அதிலும் அவர்களின் கொள்கைகள் மக்களுக்கு மத்தியில் பரவி குழப்பங்களை ஏற்படுத்த ஆரம்பித்தபோது, அவர்களின் உண்மை நிலையை தெளிவுபடுத்தும் நோக்கில் அந்த நூல்கள் அரபுமொழிக்கு மாற்றப்பட்டு வருகின்றன. பாரசீக மொழியினை நன்றாகத் தெரிந்தவர்கள் குறைவாக இருந்ததும் இத் தலைப்புக்களில் அதிகமாக நூல்கள் வெளிவராதிருந்ததற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

**04)** அறிஞர்கள் தங்கள் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மத்தியில் எந்தப்பிரச்சினை அதிகமானதாகவும் முதன்மைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருக்கிறதோ, அல்லது முக்கியமானது என்று அவர்கள் கருதுகிறார்களோ அதிலேயே பெரும்பாலும் தங்கள் முழுக்கவனத்தையும் குவித்தனர். எனவே, அவர்களின் கவனக்குறைவும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

எது எவ்வாறிருப்பினும் நச்சுக்கருத்துக்களிலிருந்து எமது சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இது போன்ற தலைப்புக்களில் இனிவரும் காலங்களில் அதிகமாக எழுதுவதும் ஷீஆக்கள் பற்றி பல கோணங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதும் காலத்தின் தேவை என நினைக்கிறேன்.



இந்த நூலில் ஷீஆக்கள் பற்றிய அறிமுகக்குறிப்புக்களை தவிர்த்துள்ளேன். ஸஹாபாக்கள் பற்றிய அவர்களின் கருத்துக்களுக்கும், குற்றச்சாட்டுக்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளேன். அத்தோடு புத்தகத்தின் தலைப்பு முழுமை பெறுவதற்காக அதனோடு தொடர்புடைய வேறு சில தலைப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஷீஆக்கள் பற்றிய சுருக்கமான குறிப்புக்களைப்பெற விரும்பும் சகோதரர்கள எனது முதல் நூலான ''இமாம்களின் பார்வையில் ஷீஆக்கள்'' என்ற நூலை வாசிக்குமாறு வேண்டுகிறேன்.

இந்த நூல் சிறப்பாக அமைவதற்குத் துணைபுரிந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தப் புத்தகத்திற்கான தகவல்களை திரட்டுவதற்கு உதவி செய்த எனது வெளிநாட்டு நண்பர்கள், ஆசிரியர்கள், இந்தப்புத்தகத்தை திருத்தி அழகுற அமைவதற்கு துணைபுரிந்தவர்கள், ஆலோசனை வழங்கியவர்கள், மதிப்புரை வழங்கியவர், இந்த நூலை மேலாய்வு செய்து, வெளியிடுகின்ற ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யாவின் பொதுத் தலைவர் அபூபக்கர் சித்தீக் (மதனி), அதன் செயலாளர் ஏ.எல். கலீலுர் ரஹ்மான் (எம்.ஏ) மற்றும் அதன் ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் பணிகளை இறைவன் ஏற்றுக்கொண்டு அருள் புரியவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புக்குரிய வாசகர்களே! இது இந்தத் தலைப்பில் எனது முதல் முயற்சி உங்களின் ஆதரவும் வரவேற்பும் இருந்தால் மேலும் பல தலைப்புக்களில் எழுதுவதற்கு திட்டமிட்டுள்ளேன். எனவே உங்களின் பிரார்த்தனைகளை வேண்டுவதோடு இந்த நூலில் நான் தவறுகள் விட்டிருப்பின் அவைகளைத் திருத்தவும் சுட்டிக்காட்டவும் பின்நிற்காதீர்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

அல்லாஹ் எம்மனைவருக்கும் நேரான பாதையைக் காட்டுவானாக.

-அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்-

MBM. இஸ்மாயில் (மதனி)
பாடசாலை வீதி, செம்மண்ணோடை,
வாழைச்சேனை. இலங்கை.

## பகுதி -01

## வரலாற்றை வாசிக்கும் முன்:

இஸ்லாமிய வரலாற்றில் அதன் பொற்காலமாக வர்ணிக்கப்படுவது அப்பாஸியாக்களின் ஆட்சிக்காலமான இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளாகும். இதில்தான் இஸ்லாமியர்கள் இன்றளவும் போற்றுகின்ற பல கலைகள் நூலுருப்படுத்தப்பட்டன, வளர்ச்சியும் கண்டன. இஸ்லாமிய வரலாறும் இந்தக்காலத்திலேயே நூலுருப்படுத்தப் பட்டது. இக்காலத்தில் வரலாற்றை எழுதியவர்கள் மூன்று குழுக்களாகக் காணப்பட்டனர்.

**01) உலகாயத நோக்கம் கொண்டவர்கள்:**

இவர்கள் எல்லாக் காலத்திலும் இருப்பதைப்போல அக்காலத்திலும் இருந்தார்கள். அப்பாஸியாக்களின் ஆட்சிக் காலத்தில் இவர்கள் இருந்ததால் அப்பாஸிய்யாக்களிடம் புகழையும் பணத்தையும் எதிர்பார்த்து அப்பாஸிய்யாக்களுக்கு முன்னால் ஆட்சிசெய்த உமைய்யாக்களை ஏசியும் அவர்களை மக்கள் தவறாக புரிந்து கொள்ளும் அடிப்படையில் அவர்களின் வரலாறுகளை சித்தரித்தும், அப்பாஸியாக்களை புகழ்ந்தும், அவர்களின் சேவைகளை பாராட்டியும் வரலாற்றை திரிபுபடுத்தி எழுதினர்.

**02) ஹவாரிஜ், ஷீஆ (ரவாபிழா) போன்ற குழுக்கள்:**

அலி ﷺ போன்ற பெரும் ஸஹாபாக்களை ஹவாரிஜ்கள் காபிர் என்றனர். அவரின் வரலாற்றில் அவரை காபிர் என்று சொல்வதற்கு எவையெல்லாம் தங்களுக்கு துணை செய்யும் என்று அவர்கள் நினைத்தார்களோ, அதை மாத்திரம் தங்கள் நூல்களில் பதிவு செய்தனர். அல்லது பிரச்சாரம் செய்தனர். அலி ﷺ அவர்கள் இறை சட்டங்களுக்கு பதிலாக மனித சட்டங்களை ஏற்று இறைவனை நிராகரித்துவிட்டார் என்று பிரச்சாரம் செய்தனர். அலி ﷺ அவர்களைப்



பற்றி வாசிப்பவரும் கேட்பவரும் அவரை காபிர் (இறைவன் எம்மை பாதுகாப்பானாக) என்று புரிந்து கொள்ளுமளவுக்கு அவரின் வரலாற்றை திரிபுபடுத்தினர்.

ஷீஆக்கள் ஹவாரிஜ்களுக்கு முற்றிலும் எதிரானவர்கள். அலி ﷺ அவர்களை நபியின் அந்தஸ்திலும் சில போது இறைவனின் அந்தஸ்திலும் அதைவிடவும் உயர்ந்த இடத்திலும் வைத்து நோக்குபவர்கள். ஏனைய ஸஹாபாக்களை கொச்சைப்படுத்துவதையும் இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியேற்றுவதையும் தங்கள் இலட்சியமாகக்கொண்டவர்கள்.

இவர்கள் தங்கள் கொள்கையை உண்மைப்படுத்துகின்ற அடிப்படையில், ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த சில நிகழ்வுகளுக்கு தவறான விளக்கம் கொடுப்பது அல்லது தங்கள் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காக வரலாறுகளை புனைதல், வரலாற்றில் எந்த அடிப்படைகளும் இல்லாத கற்பனைக் கதைகளை உருவாக்குதல் போன்ற வழிகளில் வரலாற்றைப் பதிவு செய்தனர்.

அதாவது, எது உண்மையான வரலாறு, எது தவறானது என்பதற்கு பதிலாக பார்ப்பவர் ஸஹாபாக்களை தவறானவர்கள் என்றும், அலி ﷺ அவர்கள் போன்ற சில ஸஹாபாக்களே உண்மையான முஸ்லிம்கள் என்றும் முடிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில்; இருப்பது, இல்லாதது எல்லாம் சேர்த்து எழுதப்பட்டது.

**03) நடுநிலை பேணிய எழுத்தாளர்கள்: (இமாம் தபரி, இப்னு கதீர், இப்னுல் அதீர், இப்னு அஸாகிர், தஹபி, இப்னு ஹிஸாம் (ரஹிமஹு முல்லாஹ்) போன்றோர்)**

வரலாற்றைக் கையாள்வதில் ஏற்பட்டுள்ள தவறான அணுகுமுறையிலிருந்தும், அதனால் மக்களிடம் தோன்றியுள்ள தப்பான முடிவுகளிலிருந்தும் மக்களைப் பாதுகாத்து, மக்களுக்கு சரியான வரலாறுகளை தெளிவுபடுத்தவேண்டும் என்ற நோக்கத்தில்

வரலாற்றை அறிவிப்பாளர் வரிசையுடன் இவ்விமாம்கள் பதிவு செய்தனர். இதுவே வரலாறுகளில் மக்கள் தப்பானது எது என்பதை புரிந்துகொள்வதற்கு போதுமானது என்றும் அவர்கள் கருதினர். இதற்கும் மேலாக சிலபோது அறிவிப்பாளர்களில் உள்ள விமர்சனங்-களையும் முரண்பாடுகளையும் அவ்வப்போது சுட்டிக்காட்டினர்.

எனவே, இவர்களின் நூல்களில் பலமான அறிவிப்பாளர் தொடரைக்கொண்ட செய்திகளும், பலவீனமான அறிவிப்பாளர் தொடரைக்கொண்ட செய்திகளும் காணப்பட்டன. பிற்பட்ட காலங்களில் வரலாற்றை படித்தவர்கள் அறிவிப்பாளர் வரிசைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு பதிலாக செய்திகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து இந்த இமாம்களின் நூல்களில் இந்த செய்தி பதிவாகியுள்ளது என்று நம்பி ஏமாந்து போனதோடு மற்றவர்களை வேண்டுமென்றோ, தெரியாமலோ ஏமாற்றியும் விட்டனர். (அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக)

❁❁❁



## வரலாற்றை எவ்வாறு வாசிப்பது ?:

வரலாறு என்பது மனிதர்களுக்கு மிகவும் விருப்பமான ஒரு துறை. நாம் இப்படிச்செய்ய வேண்டும் இவ்வாறுதான் இருக்கவேண்டும் எனும் கட்டளைகளை விட, இவ்வாறு இருந்தார்கள் இப்படி நடந்தது என்று சொல்வதை மக்கள் அதிகம் விரும்புகிறார்கள். அத்தோடு என்ன விடயம் என்பதை சுருக்கமாகக் கேட்டு இரசிப்பதே மக்களின் இயல்பாக மாறிவிட்டது. இதனால் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் மக்களின் இரசனையைக் கருத்தில் கொண்டு திடுக்கிடச்செய்யும் வரலாறுகளையும், ஆச்சரியமான அபூர்வமான சம்பவங்களையும் சேர்த்துக்கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இது உண்மையானதா? அல்லது தவறானதா? என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. மக்கள் ரசனையை இலக்காகக்கொண்டு செயற்படுகின்றனர்.

இவர்கள் சிலபோது, இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் இதை அறிவிப்புச் செய்துள்ளார்கள் என்று சொல்வார்கள். இப்னு கதீரைப்பார்த்தால் அவரே அந்த அறிவிப்பு பலவீனமானது என்று சொல்லி இருப்பார். சில போது இடத்திற்கு ஏற்றாற்போல் புதிய வரலாறுகளை பழைய பெயர்களில் புனைகின்றனர். இது, குறித்த பேச்சாளர் அல்லது நூலாசிரியரின் இலட்சியத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றது. நல்ல உணர்வுகளையும் சிறந்த முடிவுகளையும் அவர் விரும்பினால் அதற்கு ஏற்றாற்போலும், தவறான முடிவுகளையும் தீய உணர்வுகளையும் உருவாக்கவோ அல்லது கட்டிக்காக்கவோ விரும்பினால் அதற்கு உகந்ததாகவும் தான் கொண்டுவரும் துணுக்கை வடிவமைக்கிறார்.

எமது தமிழ் உலக வாசகர்களைப் பொறுத்தவரை அல்லது பொதுவாக பெரும்பான்மையான வாசகர்களைப் பொறுத்தவரை எது முதலில் அவர்களின் கரங்களில் கிடைக்கிறதோ அதை வேதவாக்கு என்று நினைத்துவிடுகின்றனர். சரியானதா? தவறானதா? என்று ஆய்வு செய்வதற்கு பதிலாக அதையே அடிப்படையாகக்கொண்டு மற்றையதை உரசிப்பார்க்கின்றனர்.

இதனால் சரியான வரலாறுகள் நிராகரிக்கப்படுவதுடன், இட்டுக்கட்டப்பட்ட வரலாறுகள் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. சிலர் சரியானது எது என்பதை தெரிந்துகொள்வதற்கான அடிப்படைக் கலைகள் பற்றிய அறிவு இல்லாமல் இருக்கின்றனர். ஆனால் ஏனைய துறைகளில் முன்னேறி பல்கலைக்கழக ஆசிரியர்களாகவும், உயர்தர மாணவர்களுக்கு பாடம் போதிப்பவர்களாகவும் உள்ளனர். இவர்களுக்கு வரலாறுகள் அவசியம் தேவைப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த கலையைத் தெரிந்துகொண்டு சரியான வரலாறுகளை தெரிந்துகொள்வதற்கு முயற்சித்தல் அல்லது அது பற்றிய அறிவுள்ளவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்வதற்கு பதிலாக தங்கள் சிந்தனையை உபயோகிக்கின்றனர். அல்லது தான் வாசித்தவற்றில் எது அதிகமாக கூறப்படுகிறதோ அதை உண்மையானது என்று முடிவு செய்துவிடுகின்றனர். உண்மையில் நடந்து முடிந்த ஒரு நிகழ்வில் உண்மையானது எது என்பதை தெரிந்து கொள்வதற்கு இது உகந்த வழியல்ல.

எனவே, நபியவர்களின் ஹதீஸ்களில் சரியானவற்றை தெரிந்துகொள்வதற்கு நாம் எத்தகைய வழிகளைப் பின்பற்றுகிறோமோ அதுபோன்ற வழிகளை சரியான வரலாறுகளைத் தெரிந்து கொள்வதற்கும் பின்பற்றவேண்டும். இதுவே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் ஒன்றை நாம் கேள்விப்பட்டால் அது பலமானதா? அல்லது பலவீனமானதா? என்று முதலில் ஆய்வு செய்கின்றோம். அதன் பின்பே, அதற்கேற்றாற் போல் முடிவுகளை மேற்கொள்கின்றோம்.

இஸ்லாமிய அறிஞர்கள் ஒரு ஹதீஸைப் பலமானது என்று தீர்மானிப்பதற்கு குறித்த செய்தியின் அறிவிப்பாளர் வரிசையையும் அதன் உள்ளீட்டை (அவர்கள் சொல்கின்ற செய்தியை) யும் அவதானிக்கின்றனர்.

அறிவிப்பாளர் வரிசையை அவதானமாகவும் நிதானமாகவும் ஆய்வு செய்கின்றனர். அந்த அறிவிப்பாளர் வரிசையில் பலவீனமானவர்கள்



இடம்பெற்றுள்ளனரா? என்பதை தெரிந்து கொள்ள கடும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அறிவிப்பாளர் வரிசை சரியானது என்பதை தெரிந்துகொண்டதன் பின்பு அறிவிக்கப்படும் செய்தியை அவதானிக்கின்றனர். அதில் அறிவிப்பாளர்களால் உட்புகுத்தப்பட்ட விடயங்கள் உள்ளனவா? அல்லது அந்த செய்தியை பலவீனப்படுத்தும் வேறு ஏதாவது காரணங்கள் அந்த செய்தியில் உள்ளதா? என்பதை அவதானிக்கின்றனர்.

இதன் போது குறித்த செய்தியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு விதமான ஆய்வுகளிலும் குறைகள் எதுவும் இல்லாதவிடத்து அந்த செய்தி பலமானது என்று தீர்ப்பு வழங்குகின்றனர். அதில் வடுக்கள் இருக்குமாயின் அதன் தராதரத்திற்கு ஏற்ப அதை பலவீனமானது என்றும், மிகவும் பலவீனமானது என்றும், இட்டுக்கட்டப்பட்டது என்றும் வரையறை செய்கின்றனர்.

வரலாற்றில் இந்த விதிகளைப் பயன்படுத்துவது மிகவும் கடினமானது என்றாலும் நாம் அதை பயன்படுத்தாமல் இருக்கமுடியாது. இந்த விதிகளை நாம் பயன்படுத்தினால், அதிகமான வரலாறுகளை இழந்துவிடுவோம் என்று சிலர் விமர்சிக்கின்றனர். இது தவறானதொரு விமர்சனம். இவர்கள் கற்பனை செய்வதைப்போன்று அதிகமான வரலாறுகளை நாம் இழந்துவிடமாட்டோம்.

உண்மையில் இட்டுக்கட்டப்பட்ட வரலாறுகள்தான் அதிகமானதாக இருந்தால் அதை நிராகரிப்பதற்கு நாம் பின்னிற்கவும் கூடாது. எல்லா விடயங்களையும் இத்தகைய பகுப்பாய்விற்கு உட்படுத்தா-விட்டாலும் குறைந்தது கருத்துமுரண்பாடுள்ள விடயங்கள் அல்லது ஒருவரை குறைகாண்பதைப்போன்று அமைந்துள்ள விடயங்களையாவது ஆய்விற்குட்படுத்த வேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது.

நம்மிடம் ஆயிரம் செல்லாக்காசுகள் இருப்பதைவிட ஒரு ரூபாயாவது நல்ல நாணயம் இருப்பதுதானே நல்லது. நமக்கு வரலாறு குறைந்துபோகும் என்ற கவலை வேண்டாம். நம்

முன்னோர்கள் மீது சேறு பூசாமல் வாழ்வதே போதுமானது. குளிக்கப்போய் சேறு பூசத் தேவையில்லை. மறுமையை இலக்காகக் கொண்டு செயற்படும் மனிதர்களுக்கு இதுவே மிகச்சிறந்த வழி.

நமது வரலாறுகள் எல்லாம் அறிவிப்பாளர் வரிசையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இமாம் தபரி (ரஹ்) தன்னுடைய தாரீஹ் என்ற நூலில் பதிவுசெய்துள்ளார்கள். மேலும் ஸஹீஹுல் புஹாரி, முஸ்னத் அஹ்மத், ஜாமிஉத்திர்மிதி போன்ற ஏராளமான ஹதீஸ் நூல்களிலும் பதிவாகியுள்ளன. மற்றும் இப்னு ஜரீர், இப்னு கதீர் போன்ற தப்ஸீர் கலை அறிஞர்கள் சில வரலாற்றுத் தகவல்களை அறிவிப்பாளர் வரிசையுடன் பதிவு செய்துள்ளனர். சில வரலாற்று நிகழ்வுகளைக்குறித்து தனியான நூல்கள் அறிவிப்பாளர் வரிசையுடன் எழுதப்பட்டுள்ளன.

எனவே, போதியளவு வரலாறுகள் அறிவிப்பாளர் வரிசையுடன் இருக்கிறது. அவ்வாறு அறிவிப்பாளர் வரிசைதான் இல்லாமல் இருந்தாலும் நம்மிடம் அல்குர்ஆன் எனும் ஒரு அடிப்படை உள்ளது. அதில் அல்லாஹ், ஸஹாபாக்களை சிறந்தவர்கள் என்கிறான். அவர்கள் நீதமானவர்கள், ரஸூல்மார்கள், நபிமார்களுக்கு அடுத்த அந்தஸ்தில் உள்ளவர்கள் அவர்கள்தான் என்று குறிப்பிடுகிறான். மேலும் அவர்களை அல்லாஹ் பொருந்திக்கொண்டான். எனவே, அந்த குர்ஆனின் அடிப்படையில் நின்று எங்களிடம் உள்ள செய்திகளை தரம்பிரித்துக்கொள்ள முடியும்.

ஆகவே, வரலாறுகளைப் படிக்கின்றபோது நம்பகமானது எது? நம்பகமற்றது எது? என்பதை பகுப்பாய்வு செய்து படிக்கவேண்டும்.

❁❁❁



## யாரிடமிருந்து வரலாறுகளைப் படிப்பது?.

யாரிடமிருந்து வரலாறுகளைப் படிப்பது அல்லது எத்தகைய நூல்களிலிருந்து வரலாறுகளை வாசிப்பது என்பது மிகவும் முக்கியமான தொரு கேள்வி.

சமுதாயத்தில் யார் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவராகவும், சிறந்த கற்பனைவளம் மிக்கவராகவும், எடுக்கும் தொனிப்பொருளை தொய்வில்லாமல் இறுதிவரை கொண்டு செல்லக்கூடியவராகவும், வாசிக்கும் போது மனதுக்கும் நாவுக்கும் இதமான வார்த்தைகளையும் கற்பனைகளையும் தனது நூல்களில் கலந்து வைத்துள்ளாரோ, அவரின் புத்தகங்களே இன்று அதிகம் விற்பனையாகின்றன அல்லது வாசிக்கப்படுகின்றன. சிலர் சொல்வதைப்போல, இன்றைய கற்பனை உலகில் இதுவே தேவை என்றும் எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். உண்மை எது என்று தெரிந்துகொள்வதற்கு பதிலாக மனதிற்கு இதமானது எதுவோ அவற்றை தேர்ந்தெடுக்கிறார்கள். இது மிகவும் கவலையான விடயமாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் அரபு மொழியே அதில் அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றது. அதாவது அது அரபு மொழியிலேயே தொகுக்கப்பட்டுள்ளது. மூலமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கும் அதிகமான நூல்கள் கீழைத்தேய ஆய்வாளர்களின் திருவிளையாடல்களுக்கு உள்ளாகியிருக்கிறது அல்லது மோசமான சிந்தனைகளுக்கு அடிமையானவர்களின் கை அதிலே மேலோங்கியிருக்கிறது. அரபு அல்லாத மொழியை பேசக்கூடியவர்களுக்கு இது ஒரு சவால்.

அது மாத்திரமல்லாமல் அரபு மொழியை படித்தவர்கள் இந்த துறையில சமுதாயத்திற்கு உண்மையான வரலாறுகளை பெற்றுக்கொடுப்பதில் தவறிழைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். தாங்கள் எதற்காக அரபு மொழி படிக்கிறோம் அல்லது படிக்கவேண்டும் என்ற இலட்சியத்தை மறந்து அவர்கள் செயற்படுகின்றனர்.

இஸ்லாமிய வரலாற்றை வாசிப்பவரின் தரத்திற்கு ஏற்ப அவர் வாசிக்கவேண்டிய நூல்கள் வேறுபடுகின்றது.

**(01)** வாசிப்பவர், அறிவிப்பாளர் வரிசையை ஆய்வு செய்து சரியானது எது? தவறானது எது? என்பதைதெரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவராக இருந்தால்!

இமாம் தபரீ (ரஹ்) அவர்கள் எழுதிய "தாரீஹ்" என்ற நூலை வாசிக்கலாம். இஸ்லாமிய வரலாறு பற்றி பேசுகின்ற நூல்களில் இதுவே அடிப்படை நூலாக கருதப்படுகின்றது. சரியான வரலாற்றைச் சொல்பவர்களும், தவறான கொள்கையை வளர்க்க வரலாற்றை ஆதாரமாகக் காட்டுபவர்களும் இந்த நூலையே ஆதாரமாகக் காட்டுகின்றனர். எனவே இரு சாராரிடமும் இந்த நூல் ஓர் அடிப்படை நூலாக கருதப்படுகின்றது.

இமாம் தபரீ (ரஹ்) அவர்களின் இந்த நூலிலே வரலாறுகள் அனைத்தும் அறிவிப்பாளர் வரிசையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் சரியான தகவல்களும் இருக்கின்றன. தவறான தகவல்களும் இருக்கின்றன. இவைகளை வாசிப்பவர் ஆய்வு செய்து அறிந்து கொள்ள வேண்டும்.

ஆரம்பகால இமாம்கள் ஒரு செய்தியின் நம்பகத்தன்மையை சுட்டிக்காட்ட அதன் அறிவிப்பாளர் வரிசையை குறிப்பிடுவதே போதுமானது என்று கருதினார்கள். இதனால் இமாம் தபரீ (ரஹ்) அவர்களும் அவ்வாறு செய்தார்கள். எனவே, வாசிப்பவர் அவதானமாக இருக்க வேண்டும். எதுவும் வீணாகிவிடக்கூடாது என்பதற்காகவும், இந்த விடயத்தில் தவறான ஓர் அறிவிப்பும் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவுமே அத்தனை செய்திகளையும் அறிவிப்பாளர் வரிசையுடன் இமாமவர்கள் பதிவுசெய்துள்ளார்கள்.

இமாம் தபரீ (ரஹ்) தன்னுடைய முகவுரையின் 05ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:



"எமது இந்த நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்! நான் என்ன நிபந்தனையிட்டேனோ, அதற்கேற்ப வந்த அறிவிப்புக்களையெல்லாம் இதிலே பதிவுசெய்துள்ளேன். இதிலே நான் குறிப்பிட்டிருப்பவையெல்லாம்; என்னிடம் வந்த செய்திகளிலும் சம்பவங்களிலும், நான் எதை குறித்தசெய்தியின் அறிவிப்பாளர்கள் வழியாக அறிந்தேனோ அவைகளைத்தான். என்னுடைய இந்த நூலில் பலவீனமான உண்மையல்லாத, வாசிப்பவர் வெறுக்கின்ற, கேட்பவர் மோசமாக கருதுகின்ற முந்தியவர்களைப்பற்றிய சில செய்திகள் நாம் குறிப்பிட்டவற்றில் இருக்கும். இவைகளெல்லாம் நாமாக குறிப்பிடவில்லை என்பதை அவர் (வாசிப்பவரும், கேட்பவரும்) தெரிந்துகொள்ளவேண்டும்.

மாறாக, எங்களுக்கு யார் அதை அறிவித்தார்களோ அவர்கள் சொன்னது, எங்களுக்கு எவ்வாறு வந்ததோ அவ்வாறே நாங்கள் பதிவு செய்ததைத்தவிர வேறு எதுவும் எமது பணியன்று."

அதாவது இமாம் தபரீ (ரஹ்) அவர்கள் தன்னுடைய முன்னுரையில், 'நீதான் எது சரி, எது பிழை என்பதை தீர்மானிக்க வேண்டும். நான் எனக்குக்கிடைத்தவற்றை அறிவிப்பாளர் வரிசையுடன் எழுதி வைத்திருக்கிறேன்' என்று சரியானதையும் பிழையானதையும் தீர்மானிக்கும் பொறுப்பை எமக்குத் தந்திருக்கிறார்கள். எனவே நாம் தவறான வரலாறுகளைச் சொல்லி, 'இமாம் தபரீ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்' என்று சொல்வது தப்பான அணுகுமுறையாகும்.

இமாம் தபரீ (ரஹ்) அவர்களின் நூல் இஸ்லாமிய வரலாற்றை அறிந்துகொள்வதற்கு தவறான வரலாறுகளை குறிப்பிடுவோர், சரியான வரலாறுகளை குறிப்பிடுவோர் போன்ற இரு சாராராலும் முதன்மைப்படுத்தப்படுவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

1. இஸ்லாமிய வரலாற்றில் நடைபெற்ற இத்தகைய நிகழ்வுகளை நூலுருப்படுத்தியவர்களில் இந்த நிகழ்வுகளுக்கு காலத்தால் மிகவும் நெருக்கமானவர் இவர்தான்.

2. இமாம் தபரீ (ரஹ்) அவர்கள், தான் குறிப்பிடும் எந்த அறிவிப்பையும் அறிவிப்பாளர் வரிசையுடன் குறிப்பிடுகிறார். இதை வைத்தே சரியானதையும் தவறானதையும் இனங்காண முடியும் என்பதால் அறிஞர்களுக்கு மத்தியில் இது முக்கியத்துவம் பெற்றது.

3. பிற்பட்ட காலத்தில் வந்த வரலாற்று ஆய்வாளர்கள் எல்லோரும் இந்த நூலையே தங்கள் ஆய்வின் அடிப்படை நூலாக கருதி செயற்பட்டுள்ளனர்.

எனவே சரியான அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றை நாங்கள் ஆய்வு செய்ய விரும்பினால், அதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பெற்றிருந்தால் இமாம் தபரீ (ரஹ்) அவர்களின் நூலை அணுக வேண்டும். அணுகும்போது அவதானமாகவும் விமர்சனக்கண்ணோட்டத்தோடும் அணுகுதல் அவசியமானது.

**(02)** சரியானதையும் பிழையானதையும் அறிந்து கொள்வதற்கான பகுப்பாய்வுக் கலை பற்றிய அறிவு இல்லாதவர்கள்.

இவர்கள் பின்வரும் நூல்களை அணுகினால் ஸஹாபாக்கள், அவர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகள் போன்றவற்றில் சரியான வரலாறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்களின் "அல்பிதாயா வந்நிஹாயா"
  البداية والنهاية للإمام ابن كثير رحمه الله
- இமாம் தஹபி (ரஹ்) அவர்களின் "தாரீஹுல் இஸ்லாம்"
  تاريخ الإسلام للإمام الذهبي رحمه الله
- இமாம் அபூபக்ர் இப்னுல் அரபியின் "அல் அவாஸிம் மினல் கவாஸிம்"
  العواصم من القواصم للإمام أبي بكر بن العربي رحمه الله



## வரலாற்றை வாசிக்கும் போது கவனிக்க வேண்டியவை:

எந்த ஒரு வரலாற்று நூலை வாசிக்கும் போதும் அவர் சொல்லும் கருத்துக்கள் முற்றிலும் உண்மையானது என்பதை உள்வாங்கிக்கொண்டு அவரின் கருத்தை முழுமையாக நம்பி வாசிக்கக்கூடாது. அவர் சொல்லுகின்ற கருத்துக்களில் நம் கவனத்தைச் செலுத்துவதை விடுத்து, அவர் அறிவிப்புச்செய்கின்ற விடயங்களிலேயே நம் கவனத்தைச் செலுத்தவேண்டும். அதன் உண்மை நிலையை அறிந்துகொள்வதற்கே முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். வாசிக்கும் போது எப்போதும் நடுநிலைவாதி -யாகவும் சரியானதை ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையோடும் இருக்க வேண்டும். குறிப்பாக நாம் ஸஹாபாக்களைப்பற்றிவாசிக்கும்போது இரண்டு விடயங்களை கவனத்திலிருத்திக்கொள்ள வேண்டும்.

**01) நபிமார்களுக்குப்பிறகு ஸஹாபாக்களே இந்த சமுதாயத்தில் சிறந்தவர்கள் என்று நம்புதல்.**

ஏனெனில் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அவர்களை புகழ்ந்துள்ளனர். இந்த சமுதாயத்தில் சிறந்தவர்கள் அவர்கள்தான் என்று குறிப்பிட்டுள்ளனர். மேலும் அவர்களை இறைவன் பொருந்திக்கொண்டதாக சொல்கிறான். அவர்களில் அதிகமானவர்கள் சுவர்க்கத்தைக்கொண்டு நன்மாராயம் கூறப்பட்டிருக்கின்றனர். (இது தொடர்பான ஆதாரங்களை ஸஹாபாக்கள் பற்றி அல்குர்ஆன், ஹதீஸில ஸஹாபாக்கள் போன்ற தலைப்புக்களில் அறிந்துகொள்ளலாம்)

**02) ஸஹாபாக்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் அல்ல.**

ஸஹாபாக்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களுடைய வாழ்விலும் தவறுகள் நடந்திருக்கின்றன. எனவே, ஸஹாபாக்கள் பற்றிய ஒரு மோசமான சம்பவத்தை நாம் வாசித்தால் உடனடியாக அதை மறுத்துவிடக்கூடாது. அதேநேரம், அதை ஏற்றுக்கொள்ளவும் கூடாது. அதன் நம்பகத்தன்மை தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும். செய்தி நம்பகமானதாக இருந்தால்

அது அவர்களிடம் ஏற்பட்ட தவறுகளாகும். ஏனைய மனிதர்களுக்கு ஏற்படுவதைப்போன்று அவர்களுக்கும் தவறுகள் ஏற்படும். அத்தகைய தவறுகளில் ஒன்றுதான் இது என்று நாம் முடிவு செய்ய வேண்டும். செய்தி பலமானதாக இல்லையென்றால் நாம் நிராகரித்துவிடல் வேண்டும்.



## ஸஹாபி என்றால் யார்?

மொழி வழக்கில் தோழன் என்ற கருத்தைக் கொண்டுள்ள இப்பதம், ஒருவரை ஒரு விநாடியேனும் சந்தித்தவருக்கும் பயன்படுத்தலாம் என்பதில் மொழித்துறை சார்ந்த அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு இல்லை.

மொழி வழக்கில் இப்படி இருந்தாலும், பரிபாஷையில் யாருடைய சந்திப்புக்கள் அதிகரித்து குறிப்பிட்ட ஒரு காலம் தொடர்ச்சியாக நிலைத்திருக்கிறதோ அவர்களையே ஸஹாபி என்றழைக்கப்படும்.

இஸ்லாமிய வழக்கில் “யாரெல்லாம் இஸ்லாத்தை நம்பிய நிலையில் நபி ﷺ அவர்களை சந்தித்து முஸ்லிமாக மரணித்தாரோ” அவரே ஸஹாபி என்றழைக்கப்படுவார் இந்த வரைவிலக்கணத்தையே இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்தாகவும் பொருத்தமான வரைவிலக்கணமாகவும்குறிப்பிடுகிறார்கள் (பார்க்க: ‘நுஹ்பதுல் பிக்ர்’ ப:55)

இந்த வரைவிலக்கணத்தில் அதிகமான நிபந்தனைகள் உள்ளன. அதனால், இதன் ஒவ்வொரு வார்த்தையையும் விரிவாக அவதானிப்போம்.

**01) யாரெல்லாம்:**

யாரெல்லாம் என்ற சொல் பகுத்தறிவுள்ள மனிதர்கள், ஆண், பெண் இருபாலாரையும் குறிக்கும். இதிலே பகுத்தறிவில்லாத எதுவும் அடங்காது. உதாரணமாக நபியவர்கள் பிரயாணம் செய்த கழுதை, நபியவர்கள் பிரசங்கம் நிகழ்த்திய மரக்குற்றி, நபியவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**02) சந்தித்தல்:**

ஒரு விநாடியேனும் சந்திப்பு நடந்திருத்தல் போதுமானது. பல தடவைகள் சந்தித்திருக்க வேண்டும்; பல தடவைகள் பேசியிருக்க

வேண்டும்; இருவரும் ஒன்றாக பல தடவைகள் நடந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லை. இதற்கும் மேலாக ஒருவரை ஒருவர் பார்க்க வேண்டும் என்ற நிபந்தனையும் கிடையாது. இதனாலேயே கண் தெரியாத இப்னு உம்மி மக்தூம் போன்றவர்களையும் ஸஹாபி என்று சொல்ல முடிகின்றது.

இந்த நிபந்தனையின் படி யாரெல்லாம் நபியவர்களை சந்திக்க வில்லையோ அவர்களெல்லாம் ஸஹாபி என்ற அடைமொழிகொண்டு அழைக்கப்படமாட்டார்கள். அவர்கள் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்து நபியவர்களை ஈமான்கொண்டிருந்தாலும் சரியே. இதனால்தான் மன்னர் நஜ்ஜாஸி நபியவர்களின் காலத்தில் வாழ்ந்தும், அவர் நபியவர்களை ஈமான் கொண்டிருந்தும் அவரை ஸஹாபி என்றழைப்பதில்லை.

**03) நபியவர்களை:**

நபி ﷺ அவர்களை சந்தித்திருக்க வேண்டும். அதாவது, முஹம்மத் பின் அப்துல்லாஹ் என்ற மனிதருக்கு அவரது 40வது வயதில் நபித்துவம் கிடைக்கிறது. இதற்குப்பிறகு, அவரை சந்தித்தவர்களே ஸஹாபி என்றழைக்கப்படுவார்கள்.

நபி ﷺ அவர்களுக்கு நபித்துவம் கிடைப்பதற்கு முன் அவரது இளமைக்காலத்தில் அவரை சந்தித்தவர்கள் ஸஹாபாக்கள் என்றழைக்கப்படுவதில்லை. உதாரணமாக நபியவர்கள் தனது 12வது வயதில் தன் சாச்சாவுடன் வியாபாரத்திற்கு செல்லும் போது; நபியவர்களைச் சந்தித்து எதிர்காலத்தில் இவர் நபியாக அனுப்பப்படுவார் என்று கூறிய மதகுருவான புஹைராவைக் குறிப்பிடலாம்.

இமாம் இராகி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "நபித்துவம் கிடைத்த பின்பு நபியவர்களை சந்திப்பவர்களுக்குத்தான் ஸஹாபி என்றழைக்கப்படும் என்பதற்கு சிறந்த ஆதாரம்: அறிஞர்கள் நபியவர்களின் குழந்தை இப்றாஹீமை ஸஹாபி என்றழைக்கின்றனர்.



காரணம்: அவர் நபித்துவம் கிடைத்தபின் பிறந்தவர். நபியவர்கள் அவரை முத்தமிட்டார்கள். பின்புதான் அவர் மரணித்தார். ஆனால் நபியவர்களின் இன்னுமொரு புதல்வர் காஸிமை அறிஞர்கள் ஸஹாபி என்று சொல்வதில்லை, காரணம்: அவர் நபியவர்களுக்கு நபித்துவம் கிடைப்பதற்கு முன்னால் பிறந்து மரணித்துவிட்டார்."
(தத்ரீபுர்ராவி 2:209)

**04) நபியவர்களை ஈமான்கொண்ட நிலையில்:**

முதல் சொன்ன மூன்று நிபந்தனைகளுடன் நபியவர்களை ஈமான் கொண்ட நிலையில் அந்த சந்திப்பு நடைபெற்றிருக்க வேண்டும் என்பதும் மிகவும் முக்கியமான நிபந்தனையாகும். முன்சென்ற மூன்று நிபந்தனைகளும் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதோர் இருவருக்கும் பொருந்தும். ஆனால் இந்த நிபந்தனையின மூலம் ஸஹாபி என்ற பதம் முஸ்லிம்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகிறது.

ஸஹாபாக்களின் காலத்தில் இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்து நபியவர்கள் சந்தித்த குழந்தைகளை "அத்பாலுஸ்ஸஹாபா" அதாவது 'பிறப்பால் நபியின் காலத்தை அடைந்தவர்கள்' என்றழைக்கின்றனர். இவர்கள் ஏதாவதொரு செய்தியை அறிவித்தால் அதை இன்னுமொரு ஸஹாபியிடமிருந்து கேட்டிருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்கின்றனர்.

**05) முஸ்லிமாக மரணித்திருத்தல் வேண்டும்:**

முன்சென்ற நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கும் அதேவேளை முஸ்லிமாக மரணித்திருக்க வேண்டும் என்பதும், ஒருவரை ஸஹாபி என்றழைப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். முன்சென்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தும், பின்பு அவர் மதம்மாறி அந்த மதத்திலேயே மரணித்திருந்தால் அவர் ஸஹாபி என்று அழைக்கப்படமாட்டார். இவ்வாறு மூவர் மரணித்துள்ளனர்.

1. உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஸ்

2. அப்துல்லாஹ் பின் ஹதல்
3. ரபீஆ பின் உமையா பின் ஹலப்

இவர்கள் மூவரையும் ஸஹாபி என்றழைப்பதில்லை. ஆனால் சிலபோது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சிலர் ஏதோவொரு காரணத்திற்காக மதம்மாறி பின்பு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு இஸ்லாத்தில் மரணித்திருக்கலாம். இவர்களை, பெரும்பான்மையான அறிஞர்கள் ஸஹாபி என்றே அழைக்கின்றனர்.

உதாரணமாக, அஸ்அத் பின் கைஸ் என்பவரைக் குறிப்பிடலாம். இவர் நபியவர்கள் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் -கொண்டு பின்பு மதம்மாறி, அபூபக்ர் ﵁ அவர்களின் காலத்தில் மீண்டும் இஸ்லாத்தில் நுழைந்தார். இஸ்லாமியனாகவே மரணித்தார் ஸஹாபாக்கள் எல்லோரும் தங்களின் தோழனாக அவரை ஏற்றுக் கொண்டனர். அபூபக்ர் ﵁ அவர்கள் தன் சகோதரியை அவருக்குத் திருமணம் செய்துவைத்தார். அறிஞர்கள் எல்லோருமே அவரை ஸஹாபி என்றே அழைக்கின்றனர்.

❁❁❁



## ஸஹாபியை தீர்மானிப்பதற்கான வழிகள்:

ஒருவர் ஸஹாபியா? இல்லையா? என்பதை அறிந்து கொள்வதற்கு அறிஞர்கள் பல வழிகளைக் குறிப்பிடுகின்றனர். அவற்றில் பின்வரும் வழிகள் மிகவும் முக்கியமானவை.

**01) அத்தவாதுர்.**

அதாவது இவ்வளவு பேரும் சேர்ந்து ஒரு பொய்யை சொல்லமாட்டார்கள் என்று எண்ணுமளவிற்கு பெரும் ஒரு கூட்டத்தினால ஒருவர் ஸஹாபி என்று உறுதிப்படுத்தப்படுதல்.
(شرح التبصرة والتذكرة)

**02) ஸஹாபி என்று சமுதாயத்தில் பிரபல்யம் அடைந்திருத்தல்.**
(شرح التبصرة والتذكرة)

**03) வேறொரு ஸஹாபியினால் உறுதிப்படுத்தப்படல்.**
(الإستيعاب في أسماء الأصحاب)

**04) தாபிஈன்களில் நம்பகமானவர் ஒருவர் மூலம் ஸஹாபி என்று உறுதிப்படுத்தப்படல்.**

**05) தன்னைத்தானே ஸஹாபி என்று வாதிடுதல்:**

இவ்வாறு ஒருவர் சொன்னால் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் அவரை ஸஹாபி என்று ஏற்றுக்கொள்ளலாம்.

1. வாதிடுபவர் நம்பிக்கையாளராகவும், நீதமுடையவராகவும் இருத்தல்.
2. நபியவர்களின் காலத்தில் வாழ்ந்தவராக இருத்தல்.

அதாவது நபி ﷺ அவர்களின் காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்குள் மரணித்தவராக இருக்க வேண்டும். ஏனெனில் புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் நபி ﷺ அவர்கள் சொன்னதாக பின்வருமாறும் செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது: “ஒரு தடவை நபியவர்கள் கூறினார்கள் இன்றைய தினம் உயிரோடு உள்ள எவரும் 100 வருடங்களின் பின் உயிருடன் இருக்கமாட்டார்கள்.”

## ஸஹாபாக்கள் பற்றி அல்–குர்ஆன்:

ஹி.6 ஆம் ஆண்டு ஹுதைபிய்யா என்னும் இடத்தில் நடந்த உடன்படிக்கையில் கலந்துகொண்டு நபியின் கரங்களில் உயிர் உள்ளவரை போராடுவது என்று செய்து கொண்ட உடன்படிக்கையின் போது பின்வரும் வசனத்தை இறைவன் இறக்கிவைத்தான்.

"(நபியே!) திட்டமாக அல்லாஹ் விசுவாசிகளை அவர்கள் மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்தபோது பொருந்திக்கொண்டான், பின்னர் அவர்களின் இதயங்களிலிருந்ததை நன்கறிந்து, அவர்கள் மீது அமைதியை இறக்கிவைத்தான்அன்றியும், சமீபமான வெற்றியையும் அவர்களுக்கு (அருட்கொடையாகக்) கொடுத்தான்" (48:18)

"முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் (இஸ்லாத்தை ஏற்க) முதலாவதாக முந்திக்கொண்டவர்களையும், (அவர்களின் சொல், செயல்களாகிய) நற்கருமத்தில் அவர்களைப் பின்பற்றினார்களே அவர்களையும் அல்லாஹ் பொருந்திக்கொண்டான், அவர்களும் (அல்லாஹ்வாகிய) அவனைப் பொருந்திக்கொண்டனர். அன்றியும் சுவனபதிகளை அவர்களுக்கென அவன் தயாராக்கி வைத்திருக்கின்றான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றிலேயே அவர்கள் நிரந்தரமாக (த் தங்கி) இருப்பார்கள், இது மகத்தான வெற்றியாகும்" (9:100)

"நபியே! உமக்கு அல்லாஹ்வும் உம்மைப் பின்பற்றிய இறை விசுவாசிகளும் போதுமாகும்" (8:64)

"முஹம்மது, அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்பவர்களோ நிராகரிப்போர் மீது மிகக் கண்டிப்பானவர்கள். தங்களுக்கிடையே மிக்க அன்புடையவர்கள். (குனிந்து) ருகூஉ செய்பவர்களாகவும், (சிரம் பணிந்து) ஸுஜூது செய்கிறவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அல்லாஹ்விடமிருந்து பேரருளையும் (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுவார்கள். அவர்களுடைய அடையாளம்,



சிரம்பணிவதன் அடையாளத்தினால் அவர்களுடைய முகங்களில் இருக்கும், இதுவே தவ்றாத் (என்னும் வேதத்) தில் உள்ள அவர்களின் உதாரணமாகும், இன்னும் இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது. ஒரு பயிரைப்போன்றதாகும், அது தன் முளையை வெளிப்படுத்தி பின்னர் அதை பலப்படுத்துகின்றது. பின்னர் அது (தடித்து) கனமாகின்றது. பின்னர் அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கின்றது: விவசாயிகளை ஆச்சரியமடையச்செய்கிறது, இவர்களைக்கொண்டு நிராகரிப்போருக்கு அவன் கோபமூட்டுவதற்காக (இவ்வாறு உதாரணங்கள் கூறுகிறான்) அவர்களில் விசுவாசங்கொண்டு நற்கருமங்களும் செய்கின்றவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கின்றான்." (48:29)

"தங்கள் வீடுகளையும், தங்கள் பொருட்களையும் விட்டு (அக்கிரமமாக மக்காவிலிருந்து) வெளியேற்றப்பட்டார்களே அத்தகைய ஹிஜ்ரத்துச் செய்தவர்களான ஏழைகளுக்கும் (அப்பொருளில் பங்குண்டு) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பேரருளையும் (அவனுடைய) பொருத்தத்தையும் தேடுகின்றனர். இன்னும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி செய்கின்றனர் இவர்கள்தாம் (ஸாதிகூன் என்னும்) உண்மையாளர்கள் இன்னும் (முஹாஜிர்களாகிய) அவர்களுக்கு முன்பே (மதீனாவில்) வீட்டையும், (அல்லாஹ்வின் மீது) விசுவாசம் கொள்வதையும் (கலப்பற்றதாக்கிக்) கொண்டிருந்தார்களே அத்தகைய (அன்ஸாரிகளான) வர்கள், தம்பால் ஹிஜ்ரத்செய்து வந்தோரை நேசிப்பார்கள். மேலும் (ஹிஜ்ரத்துச்செய்து வந்த) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைப் பற்றி தங்கள் நெஞ்சங்களில் காழ்ப்புணர்ச்சியைப் பெறமாட்டார்கள்.

மேலும் தங்களுக்கு (கடும்) தேவையிருந்த போதிலும், தங்களைவிட ((முஹாஜிரீன்களான அவர்களை)த் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இன்னும் எவர் தன் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டாரோ அத்தகையோர் தாம் வெற்றி பெற்றவர்கள். மேலும் அவர்களுக்குப் பின் வந்தார்களே அத்தகையவர்கள், "எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில்

எங்களை முந்திவிட்டார்களே அத்தகைய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக! விசுவாசங் கொண்டவர்களைப்பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன். மிகக் கருணை -யுடையவன் என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்." (59:8,9,10)

"(விசுவாசங்கொண்டோரே!) மனிதர்களுக்காகத் உருவாக்கப்பட்ட (சமுதாயத்தார்களிலெல்லாம்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள். தீமையை விட்டும் (அவர்களை) நீங்கள் விலக்குகிறீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்க்ள்
(3:110)

இந்த வசனத்தில் கூறப்படும் சிறப்பில் முதலில் நுழைபவர்கள் ஸஹாபாக்கள்தான் என்பது தெளிவாகின்றது.

"மேலும், (நபியே!) காலையிலும், மாலையிலும் தங்களுடைய இரட்சகனை அவனது (சங்கையான) முகத்தை நாடியவர்களாக அழைத்து (ப்பிரார்த்தித்து)க் கொண்டிருப்போரை நீர் விரட்டிவிட வேண்டாம். அவர்களுடைய கணக்கிலிருந்து யாதொன்றும் உம்மீது (பொறுப்பாக) இல்லை. உம்முடைய கணக்கிலிருந்து யாதொன்றும் அவர்கள் மீது (பொறுப்பாக) இல்லை. ஆகவே நீர் அவர்களை விரட்டினால், அநியாயக்காரர்களில் (ஒருவராக) ஆகிவிடுவீர்."
(6:52)

❁❁❁



## ஹதீஸ்களில் ஸஹாபாக்கள்:

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்; "என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைத் செலவு செய்தாலும், என் தோழர்கள் (இறை வழியில்) செலவு செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக கூட (அவரின்) அந்த தர்மம் எட்ட முடியாது."
அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ ؓ, புஹாரி 3673.

"மக்களிடையே ஒரு காலம் வரும். அப்போது மக்களில் ஒரு குழுவினர் புனிதப் போருக்குச் செல்வார்கள். அப்போது, (அவர்கள் யார் மீது படையெடுத்துச் செல்கிறார்களோ) அவர்கள், "உங்களிடையே இறைத்தூதர் ﷺ அவர்களுடன் தோழமை கொண்டவர்கள் இருக்கின்றனரா?" என்று கேட்பார்கள். "ஆம், இருக்கிறார்கள்" என்று (போரிடச் சென்ற) அவர்கள் பதில் சொல்வார்கள். உடனே, போருக்குச் சென்றவர்களுக்கு வெற்றி அளிக்கப்படும். பிறகு மக்களிடையே ஒரு காலம் வரும். மக்களில் ஒரு குழுவினர் புனிதப் போர் புரியச் செல்வார்கள். (அவர்களிடம்), "உங்களிடையே இறைத்தூதர் ﷺ அவர்களின் தோழர்களுடன் தோழமை கொண்டவர்க்ள இருக்கிறார்களா?" என்று கேட்கப்படும். போருக்குச் சென்றவர்கள், "ஆம், இருக்கிறார்கள்" என்று சொல்வார்கள். உடனே அவர்களுக்கும் வெற்றியளிக்கப்படும்.

பிறகு மக்களிடையே ஒரு காலம் வரும். மக்களில் ஒரு குழுவினர் போருக்குச் செல்வார்கள். அப்போது அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதருடைய தோழர்களுடன் தோழமை கொண்டிருந்தவர்களுடன், தோழமை கொண்டவர்கள் உங்களிடையே இருக்கின்றனரா?" என்று கேட்கப்படும். அதற்கு அவர்கள், "ஆம், இருக்கிறார்கள்" என்று பதிலளிப்பார்கள். "உடனே, அவர்களுக்கு வெற்றியளிக்கப்படும்." என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்
அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ ؓ, புஹாரி 3649

"மக்களில் சிறந்தவர்கள் என் தலை முறையினர். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வருபவர்கள். அவர்களுக்குப் பிறகு (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வருபவர்கள். பின்னர், ஒரு சமுதாயத்தார் வருவார்கள். அவர்களின் சாட்சியம் அவர்களின் சத்தியத்தை முந்திக் கொள்ளும். அவர்களின் சத்தியம் அவர்களின் சாட்சியத்தை முந்திக் கொள்ளும்." என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்ؓ, புஹாரி 3651

"அன்ஸார்களான (மக்காவாசிகளை வரவேற்று, மதீனாவில் வாழ்ந்த ஸஹாபாக்களை) இறைவிசுவாசியைத் தவிர வேறு எவரும் நேசிக்கமாட்டார். நயவஞ்சகனைத் தவிர வேறு எவரும் கோபிக்கமாட்டார். யார் அவர்களை நேசிக்கிறாரோ அவரை அல்லாஹ் நேசிக்கிறான். யார் அவர்களைக் கோபிக்கிறாரோ அவரை அல்லாஹ்வும் கோபிக்கிறான்" என நபியவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: பறாஉ ؓ, புஹாரி 3783, முஸ்லிம் 246

"அபூபக்ருடைய வாயிலைத் தவிர (மஸ்ஜிதுந் நபவிக்கு வரும்) அனைத்து வாயில்களையும் அடைத்து விடுங்கள்" என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (திர்மிதி 3678, பைஹகி 4496)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்; "தன் நட்பிலும் தன் செல்வத்திலும் எனக்கு மக்களிலேயே பேருதவியாளராக இருப்பவர் அபூபக்ரேயாவார். என் இறைவனல்லாத வேறெவரையாவது நான் உற்ற நண்பராக ஆக்கிக் கொள்ள விரும்பியிருந்தால் அபூபக்ர் அவர்களையே ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும், இஸ்லாத்தின் சகோதரத்துவமும் அதனால் ஏற்படும் பாச உணர்வும் (எனக்கும் அவருக்குமிடையே ஏற்கனவே) இருக்கத் தான் செய்கின்றன. (என்னுடைய இந்தப்) பள்ளி வாயலில் அபூபக்ரின் வாயிலைத் தவிர வேறு எந்த வாயலும் அடைக்கப்படாமல் இருக்க வேண்டாம்."
அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ ؓ, புஹாரி 3654



நாங்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் மக்களிடையே சிறந்தவர்கள் இன்னார், இன்னார் என்று மதிப்பிட்டு வந்தோம். (முதலாவதாக) அபூ பக்ர் ؓ அவர்களைச் சிறந்தவராக மதிப்பிட்டோம். பிறகு உமர் இப்னு கத்தாப் ؓ அவர்களையும் பிறகு உஸ்மான் இப்னு அ∴ப்பான் ؓ அவர்களையும் சிறந்தவர்களாக மதிப்பிட்டு வந்தோம். அறிவிப்பவர்: இப்னு உமர் ؓ, புஹாரி 3655.

"(இறைவனைத் தவிர வேறு) ஒருவரை நான் உற்ற நண்பராக ஆக்கிக் கொள்ள விரும்பியிருந்தால் அபூ பக்ர் அவர்களையே ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும், அவர் (மார்க்கத்தில்) என் சகோதரரும், (இன்பம், துன்பம் யாவற்றிலும்) என் தோழரும் ஆவார்." என்று நபிﷺ அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ؓ, புஹாரி 3656.

நபி ﷺ அவர்களிடம் ஒரு பெண்மணி (தேவை ஒன்றை முறையிடுவதற்காக) வந்தார். நபி ﷺ அவர்கள் அந்தப் பெண்மணியைத் திரும்பவும் வரும்படி கட்டளையிட்டார்கள். அந்தப் பெண்மணி, "நான் வந்து தங்களைக் காண (முடிய)வில்லையென்றால்...?" என்று, (நபி ﷺ அவர்கள் இறந்துவிட்டால் என்ன செய்வது? என்பது போல்) கேட்டாள். அதற்கு நபிﷺ அவர்கள், "நீ என்னைக் காணவில்லையென்றால்அபூபக்ரிடம் செல்" என்று பதில் கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஜுபைர் இப்னு முத்யிம் ؓ, புஹாரி 3659.

நான் நபி ﷺ அவர்களிடம் அமர்ந்திருந்தேன். அப்போது அபூபக்ர்ؓ அவர்கள் தம் முழங்கால் வெளியே தெரியுமளவிற்கு ஆடையின் ஒரு பக்கத்தை (தூக்கிப்) பிடித்தபடி (எங்களை நோக்கி) வந்தார்கள்.

உடனே, நபி ﷺ அவர்கள், "உங்கள் தோழர் வழக்காட வந்துவிட்டார்" என்று கூறினார்கள். அபூபக்ர் ؓ (நபி ﷺ அவர்களுக்கு) சலாம் கூறிவிட்டு, "இறைத்தூதர் அவர்களே! எனக்கும் கத்தாபின் மகனா(ர் உம)ருக்கும் இடையே சிறிது வாக்குவாதம்

ஏற்பட்டது. நான் (கோபமாக) அவரை நோக்கி விரைந்தேன். பிறகு (என் செய்கைக்காக) நான் வருந்தி அவரிடம் என்னை மன்னிக்கும்படி கேட்டேன். அவர் என்னை மன்னிக்க மறுத்துவிட்டார். எனவே, உங்களிடம் வந்தேன்'' என்று கூறினார்கள். உடனே, நபி ﷺ அவர்கள், "அபூபக்ரே! அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக!'' என்று மூன்று முறை கூறினார்கள்.

பிறகு உமர் ؓ (அபூபக்ர் ؓ அவர்களை மன்னிக்க மறுத்துவிட்டதற்காக) மனம் வருந்தி அபூபக்ர் ؓ அவர்களின் வீட்டிற்குச் சென்று, "அங்கே அபூபக்ர் ؓ இருக்கிறார்களா?'' என்று கேட்க வீட்டார், "இல்லை'' என்று பதிலளித்தார்கள். எனவே, அவர்கள் நபி ﷺ அவர்களிடம் சென்றார்கள். அப்போது நபி ﷺ அவர்களின் முகம் (கோபத்தால்) நிறம் மாறலாயிற்று. இதனால், பயந்துபோன அபூபக்ர் ؓ அவர்கள், தம் முழங்கால்களின் மீது மண்டியிட்டு அமர்ந்து, "இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீதாணையாக! நானே (வாக்கு வாதத்தைத் தொடங்கியதால் உமரை விட) அதிகம் அநீதியிழைத்தவனாகிவிட்டேன்.'' என்று இருமுறை கூறினார்கள்.

அப்போது நபி ﷺ அவர்கள், "(மக்களே!) அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பினான். "பொய் சொல்கிறீர்'' என்று நீங்கள் கூறினீர்கள். அபூபக்ர் அவர்களோ, "நீங்கள் உண்மையே சொன்னீர்கள்'' என்று கூறினார். மேலும் (இறை மார்க்கத்தை நிலை நிறுத்தும் பணியில்) தன்னையும் தன் செல்வத்தையும் அர்ப்பணித்து என்னிடம் பரிவுடன் நடந்து கொண்டார். அத்தகைய என் தோழரை எனக்காக நீங்கள் (மன்னித்து)விட்டு விடுவீர்களா?'' என்று இரண்டு முறை கோட்டார்கள். அதன் பிறகு அபூபக்ர் ؓ அவர்கள் மன வேதனைக்குள்ளாக்கப் படவில்லை. என்று அபுத்தர்தா ؓ அறிவிக்கிறார்கள். நூல்: புஹாரி 3661.

அம்ர் இப்னு ஆஸ் ؓ கூறினார்கள்; நபி ﷺ அவர்கள் "தாத்துஸ் ஸலாஸில்'' எனும் போருக்கான படைக்கு (தளபதியாக்கி)



என்னை அனுப்பி வைத்தார்கள். அப்போது நான் நபி ﷺ அவர்களிடம் சென்று, "மக்களிலேயே உங்களுக்கு மிகப் பிரியமானவர்கள் யார்?'' என்று கேட்டேன். அவர்கள், "ஆயிஷா'' என்று பதிலளித்தார்கள். "ஆண்களில் மிகப் பிரியமானவர் யார்?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "ஆயிஷாவின் தந்தை (அபூபக்ர்)'' என்று பதிலளித்தார். "பிறகு யார் (பிரியமானவர்)?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "பிறகு உமர் இப்னு கத்தாப் தான் (எனக்கு மிகவும் பிரியமானவர்)'' என்று கூறிவிட்டு, மேலும் பல ஆண்க(ளின் பெயர்க)ளைக் குறிப்பிட்டார்கள். (புஹாரி 3662)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்; "நான் உறங்கிக் கொண்டிருந்தபோது (கனவில்): என்னை, வாளி தொங்கிக் கொண்டிருந்த ஒரு கிணற்றின் அருகே கண்டேன். அதிலிருந்து அல்லாஹ் நாடிய அளவிற்கு(த் தண்ணீர்) இறைத்தேன். பிறகு அபூ குஹாபாவின் மகன் (அபூபக்ர் அவர்கள்) அதை எடுத்துக் கொண்டு அதிலிருந்து ஒரு வாளி நீரை அல்லது இரண்டு வாளி நீரை இறைத்தார். அவர் (சிறிது நேரம்) இறைத்தபோது சோர்வு தெரிந்தது. அல்லாஹ் அவரின் சோர்வை மன்னிப்பானாக! பிறகு, அது மிகப் பெரிய வாளியாக மாறிவிட்டது. அப்போது அதை கத்தாபின் மகன் உமர் எடுத்தார். உமர் இறைத்ததைப் போன்று இறைக்கிற (வலிமை மிக்க) ஒரு புத்திசாலியான (அபூர்வத்) தலைவர் ஒருவரை மக்களில் நான் பார்த்ததில்லை. மக்கள் (தங்கள் ஒட்டகங்களுக்கு நீர் புகட்டி, நீர் நிலையருகே அவற்றின்) ஓய்விடத்தில் கட்டி வைக்கும் அளவிற்கு (அவர் நீர் இறைத்தார்.)
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா ؓ, புஹாரி 3664

இறைத்தூதர் ﷺ அவர்கள், "இறைவழியில் ஏதேனும் ஒரு ஜோடிப் பொருட்களைச் செலவிட்டவர் சொர்க்கத்தின் வாயில்களில் (ஒவ்வொன்றிலும்) இருந்து "அல்லாஹ்வின் அடியாரே! இது சிறந்ததாகும். (இதன் வழியாக நுழையுங்கள்)'' என்று அழைக்கப்படுவார். அதாவது தொழுகையாளியாக இருந்தவர் தொழுகைக்குரிய வாயலிலிருந்து அழைக்கப்படுவார். ஜிஹாத்

(அறப்போர்) புரிபவராக இருந்தவர் ஜிஹாதுக்குரிய வாசலிலிருந்து அழைக்கப்படுவார். தர்மம் (ஸதகா) செய்பவராக இருந்தவர் தர்மத்திற்குரிய வாயலிலிருந்து அழைக்கப்படுவார். நோன்பாளியாக இருந்தவர் நோன்பின் வாயலிலிருந்தும்; "அர்ரய்யான்" என்னும் (நோன்பாளிகளுக்கே உரிய சிறப்பு) வாயலிலிருந்தும் அழைக்கப்படு-வார்" என்று கூறினார்கள். உடனே அபூபக்ர்ﷺ, அவர்கள் "இந்த வாசல்களிலிருந்து அழைக்கப்படுபவருக்குத் துயரம் எதுவும் இருக்காது. (அவர் எந்த வழியிலாவது சொர்க்கம் சென்றுவிடுவார்.) என்று கூறிவிட்டு, இறைத்தூதர் அவர்களே! "அவை அனைத்திலிருந்தும் எவராவது அழைக்கப்படுவாரா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள், "அபூபக்ரே! நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைராﷺ, புஹாரி 3666.

அபூ மூஸா அல்-அஷ்அரீﷺ அறிவிக்கிறார்கள்; நான் என் வீட்டில் உளூச் செய்துவிட்டுப் புறப்பட்டேன். (அப்போது எனக்குள்), "நான் இறைத்தூதர்ﷺ அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களுடனேயே இந்த நாள் (முழுவதும்) இருப்பேன்" என்று சொல்லிக் கொண்டேன். நான் பள்ளி வாயலுக்கு வந்து நபி ﷺ அவர்களைக் குறித்துக் கேட்டேன். அப்போது மக்கள், "நபி ﷺ அவர்கள் புறப்பட்டு இந்தப் பக்கம் போனார்கள்" என்று கூறினர். நான் (நபி ﷺ அவர்கள் சென்ற திசையில்) அவர்களின் அடிச்சுவட்டில் அவர்களைப் பற்றி விசாரித்தபடி சென்றேன். இறுதியில் (குபாவுக்கு அருகிலுள்ள ஒரு தோட்டமான) பிஃரு அரீஸுக்குள் சென்று அதன் வாயலில் அமர்ந்தேன்.

அதன் வாயல் பேரீச்ச மட்டையால் தயாரிக்கப்பட்டிருந்தது. இறைத்தூதர் ﷺ அவர்கள் தம் (இயற்கைக்) கடனை நிறைவேற்றிக் கொண்டு உளூச் செய்தார்கள். உடனே, நான் அவர்களிடம் சென்றேன். அவர்கள் (பிஃரு) அரீஸ் (என்னும் அத்தோட்டத்தில் உள்ள) கிணற்றின் மீது அதன் சுற்றுச் சுவருக்கு நடுவே தம் கால்கள் இரண்டையும் திறந்து கிணற்றுக்குள் தொங்க விட்டபடி இருந்தார்கள். நான் அவர்களுக்கு சலாம் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்று



வாயலருகே அமர்ந்து கொண்டேன். நான் (எனக்குள்), "இன்று நான் அல்லாஹ்வின் தூதருடைய வாயில் காவலனாக இருப்பேன்" என்று சொல்லிக் கொண்டேன். அப்போது அபூபக்ர் ﷺ வந்து கதவைத் தள்ளினார்கள். நான், "யார் அது?" என்று கேட்டேன். அவர்கள், "(நானே) அபூபக்ர் (வந்துள்ளேன்)" என்று பதிலளித்தார்கள். உடனே நான், "சற்றுப் பொறுங்கள்" என்று சொல்லிவிட்டு (நபி ﷺ அவர்களிடம்) சென்று, "இறைத்தூதர் அவர்களே! இதோ அபூபக்ர் அவர்கள் (வந்து) தங்களிடம் உள்ளே வர அனுமதி கேட்கிறார்கள்" என்று சொன்னேன். நபி ﷺ அவர்கள், "அவருக்கு அனுமதி கொடுங்கள். மேலும், அவர் சுவர்க்கவாசி என்று நற்செய்தி சொல்லுங்கள்" என்று கூறினார்கள்.

நான் அபூபக்ர் ﷺ அவர்களிடம், "உள்ளே வாருங்கள். இறைத்தூதர்ﷺ அவர்கள் நீங்கள் சொர்க்கவாசி என்று அறிவித்தார்கள்" என்று சொன்னேன். உடனே, அபூபக்ர்ﷺ அவர்கள் உள்ளே வந்து, இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு வலப் பக்கத்தில் அவர்களுடன் (கிணற்றின்) சுற்றுச் சுவரில் அமர்ந்து கொண்டு, நபி ﷺ அவர்கள் செய்தது போன்றே தம் கால்கள் இரண்டையும் கிணற்றில் தொங்கவிட்டு கால்களைத் திறந்து வைத்தார்கள். பிறகு, நான் மீண்டும் (வாயலில்) அமர்ந்து கொண்டேன். நான் (முன்பே) என் சகோதர(ர் ஒருவ)ரை உளூச் செய்து என்னுடன் சேர்ந்து கொள்ளும்படி சொல்லி, விட்டு விட்டு வந்திருந்தேன். எனவே (எனக்குள்), "அல்லாஹ் அவருக்கு நன்மையை நாடியிருந்தால் அவரை (இங்கு), வரச் செய்வான்" என்று சொல்லிக் கொண்டேன்.

"அவருக்கு" என்று அபூமூஸா அல்-அஷ்அரீ ﷺ கூறியது. தம் சகோதரரைக் கருத்தில் கொண்டே" என்று அறிவிப்பாளர் ஸயீத் இப்னு முஸய்யப்(ரஹ்) கூறினார்கள்:

அப்போது ஒருவர் கதவை அசைத்தார். நான், "யார் அது?" என்று கேட்டேன். வந்தவர், "(நானே) உமர் இப்னு கத்தாப் (வந்துள்ளேன்)"

என்று சொன்னார். நான், “கொஞ்சம் பொறுங்கள்” என்று கூறிவிட்டு, இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து அவர்களுக்கு சலாம் கூறி, “இதோ, உமர் இப்னு கத்தாப் அவர்கள் வந்து தங்களிடம் (உள்ளே வர) அனுமதி கேட்கிறார்கள்” என்று சொன்னேன். நபி ﷺ அவர்கள், “அவருக்கு அனுமதி கொடுங்கள் அவர் சுவர்க்கவாசி என்று அவருக்கு நற்செய்தி சொல்லுங்கள்” என்று கூறினார்கள்.

நான் சென்று, “உள்ளே வாருங்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் நீங்கள் சுவர்க்கவாசி என்று உங்களுக்கு நற்செய்தி கூறுகிறார்கள்” என்று சொன்னேன். அவர்கள் உள்ளே வந்து கிணற்றின் சுற்றுச் சுவரில் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு இடப்பக்கம் அமர்ந்து தம் இரண்டு கால்களையும் கிணற்றுக்குள் தொங்கவிட்டார்கள். பிறகு நான் திரும்பிச் சென்று (வாசலருகே) அமர்ந்து கொண்டேன். “அல்லாஹ் அவருக்கு (என் சகோதரருக்கு) நன்மையை நாடியிருந்தால அவரை (இங்கு) வரச் செய்வான்” என்று (முன்போன்றே எனக்குள்) கூறிக் கொண்டேன். அப்போது ஒருவர் வந்து கதவை ஆட்டினார். நான், “யார் அது?” என்று கேட்டேன். அவர், “(நானே) உஸ்மான் இப்னு அஃப்பான் (வந்திருக்கிறேன்)” என்று பதிலளித்தார். உடனே, “கொஞ்சம் பொறுங்கள்” என்று சொல்லிவிட்டு, இறைத்தூதர் ﷺ அவர்களிடம் சென்று, அவர்களுக்கு உஸ்மான் அவர்கள் வந்திருக்கும செய்தியை அறிவித்தேன். நபி ﷺ அவர்கள், “அவருக்கு அனுமதி கொடுங்கள். அவருக்கு நேரவிருக்கும் ஒரு துன்பத்தையடுத்து அவருக்கு சுவர்க்கம் கிடைக்கவிருக்கிறது என்று நற்செய்தி சொல்லுங்கள்” என்று கூறினார்கள். அவ்வாறே நான் உஸ்மான் அவர்களிடம், “உள்ளே வாருங்கள். உங்களுக்கு நேரவிருக்கும் ஒரு துன்பத்தையடுத்து உங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கவிருக்கிறது என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் நற்செய்தி கூறினார்கள்” என்று சொன்னேன். அவர்கள் உள்ளே வந்து (பார்த்த போது) சுற்றுச் சுவர் (ஒரு பக்கம்) நிரம்பி விட்டிருப்பதைக் கண்டார்கள். எனவே, மற்றொரு பக்கம் நபி ﷺ அவர்களுக்கு எதிரே அமர்ந்தார்கள்.

(புஹாரி 3674.)



அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்; “(ஒரு முறை) நபி ﷺ அவர்கள், அபூபக்ர் ؓ, உமர் ؓ, உஸ்மான் ؓ ஆகியோர் உஹுது மலை மீது ஏறினார்கள். அது அவர்களுடன் நடுங்கியது. அப்போது நபி ﷺ அவர்கள், “உஹுதே! அசையாமல் இரு! ஏனெனில், உன் மீது ஓர் இறைத்தூதரும், ஒரு உண்மையாளரும், இரண்டு உயிர்த் தியாகிகளும் உள்ளனர்” என்று கூறினார்கள்.” (புஹாரி 3675.)

இப்னு அப்பாஸ் ؓ அறிவிக்கிறார்கள்; “நான் சிலரிடையே நின்று கொண்டிருக்க, அவர்கள் உமர் இப்னு கத்தாப் ؓ அவர்களுக்காக பிரார்த்தித்தார்கள். உமர் ؓ அவர்கள் (இறந்து) கட்டிலின் மீது வைக்கப்பட்டிருந்தார்கள் அப்போது, என் பின்னாலிருந்து ஒருவர் தன் முழங்கையை என் தோளின் மீது வைத்து (உமர் ؓ அவர்களை நோக்கி,) “அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரியட்டும். அல்லாஹ் (உங்கள் உடல், அடக்கம் செய்யப்படும் போது) உங்களை உங்களுடைய இரண்டு தோழர்க(ளான நபி ﷺ அவர்கள் மற்றும் அபூபக்ர் ؓ அவர்க)ளுடன் (அவர்களின் மண்ணறைகளுக்கு அருகே) அடக்கப்பட வேண்டும் என்று நான் விரும்பினேன். ஏனெனில், பெரும்பாலான நேரங்களில் இறைத்தூதர் ﷺ அவர்கள், “நானும் அபூபக்ரும் உமரும் (இப்படி) இருந்தோம்; நானும் அபூபக்ரும் உமரும் (இப்படிச்) செய்தோம்; நானும் அபூபக்ரும் உமரும் (இங்கே) சென்றோம்” என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே, உங்களை அல்லாஹ் அவ்விருவருடன் (அவர்களின் மண்ணறைகளுக்கு அருகே) அடக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்” என்று கூறினார். நான் திரும்பிப் பார்த்தேன். அந்த மனிதர் அலீ இப்னு அபீ தாலிப் ؓ அவர்களாக இருந்தார்கள்.”

(புஹாரி 3677.)

உர்வா இப்னு ஸுபைர்(ரஹ்) அறிவிக்கிறார்கள்;

“இணைவைப்பவர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு இழைத்த துன்பங்களிலேயே மிகக் கடுமையானது எது?” என்று நான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் ؓ அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், “(ஒரு முறை மக்காவில்) உக்பா இப்னு அபீ முஐத் என்பவன், நபி ﷺ அவர்கள் தொழுது கொண்டிருக்கும் நிலையில்

வந்து தன் போர்வையை அவர்களின் கழுத்தில் போட்டு அதை (அவர்களின் மூச்சு திணறும்படி) கடுமையாக நெறித்ததைப் பார்த்தேன். அப்போது அபூபக்ர்ؓ வந்து, நபி ﷺ அவர்களைவிட்டு உக்பாவை (தம் கையால்) தள்ளினார்கள். அப்போது, “என் இறைவன் அல்லாஹ் தான்” என்று சொல்லும் காரணத்திற்காகவா ஒரு மனிதரை நீங்கள் கொல்(ல முனை)கிறீர்கள்? அவரோ தம் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்திருக்கிறார்” என்று கூறினார்கள். (புஹாரி 3678.)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், “நான் (கனவில்) என்னை சுவர்க்கத்தில் கண்டேன். அங்கு நான் அபூ தல்ஹா அவர்களின் மனைவி ருமைஸாவுக்கு அருகே இருந்தேன். அப்போது நான் மெல்லிய காலடி ஓசையைச் செவியுற்றேன். உடனே, “யார் அது?” என்று கேட்டேன். அதற்கு (அங்கிருந்த வானவர்), “இவர் பிலால்” என்று பதிலளித்தார். நான் (அங்கு) ஓர் அரண்மனையைக் கண்டேன். அதன் முற்றத்தில் பெண்ணொருத்திஇருந்தாள். “இது யாருக்குரியது?” என்று கேட்டேன். (வானவர்), “இது உமருடையது” என்று கூறினார். நான் அந்த அரண்மனையில் நுழைந்து அதைப் பார்க்க விரும்பினேன். அப்போது (உமரே!) உங்கள் ரோஷம் என் நினைவுக்கு வந்தது (எனவே, அதில் நுழையாமல் திரும்பிவிட்டேன்)” என்று கூறினார்கள். அதற்கு உமர்ؓ, “இறைத்தூதர் அவர்களே! உங்களுக்கு என் தந்தையும் என் தாயும் அர்ப்பணமாகட்டும். உங்களிடமா நான் ரோஷம் காட்டுவேன்” என்று கேட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ؓ, (புஹாரி 3679)

இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்; “நான் தூங்கிக் கொண்டிருந்தபோது (கனவில் என்னிடம் ஒரு பால் பாத்திரம் கொண்டு வரப்பட்டது. அந்தப்) பாலை நான் (தாகம் தீரும் அளவு) அருந்தினேன். இறுதியில், என் நகக்கண் அல்லது, நகக் கண்கள் ஊடே (பால்) பொங்கி வருவதைக் கண்டேன். பிறகு (நான் அருந்தியது போக இருந்த மிச்சத்தை) உமர் அவர்களுக்குக் கொடுத்தேன்” என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள். மக்கள்,



“இதற்கு (இந்தப் பாலுக்கு) நீங்கள் என்ன விளக்கம் கண்டீர்கள், இறைத்தூதர் அவர்களே!” என்று கேட்க, அதற்கு அவர்கள்: “அறிவு” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர்ؓ, புஹாரி 3681.

நபி ﷺ அவர்கள் ஒரு முறை உமர் பின் கத்தாப்ؓ அவர்களைப் பார்த்து, “கத்தாபின் புதல்வரே! என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! ஒரு தெருவில் நீங்கள் (நடந்து) செல்வதை ஷைத்தான் கண்டால், அவன் உங்கள் தெருவைவிட்டு வேறொரு தெருவில் தான் செல்வான்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸஅத் இப்னு அபீ வக்காஸ்ؓ, புஹாரி 3683

இப்னு அப்பாஸ்ؓ அறிவிக்கிறார்கள்; உமர்ؓ (இறந்தவுடன்) கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார்கள். அப்போது மக்கள், அவரைச் சுற்றிலும் (எல்லாப் பக்கங்களிலும்) சூழ்ந்து பிரார்த்திக்கலாயினர். அவரின் ஜனாஸா (சடலம்) எடுக்கப்படுவதற்கு முன்பாக அவருக்காக ஜனாஸாத் தொழுகை தொழலாயினர். அப்போது நான் அவர்களிடையே இருந்தேன். என் தோளைப் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் தான் என்னை திடுக்கிடச் செய்தார். (யாரென்று திரும்பிப் பார்த்த போது) அது அலீ இப்னு அபீ தாலிப்ؓ தாம். அவர்கள், “உமர் அவர்களுக்கு அல்லாஹ் கருணை புரிவானாக!” என்று பிரார்த்தித்துவிட்டு,

“(உமரே!) உயரிய நற்செயலுடன் நான் அல்லாஹ்வைச் சந்திப்பதற்கு முன்மாதிரியாக, விரும்பி ஏற்கத் தக்கவர் எவரும் உங்களுக்குப் பின்னால் இல்லை. (நீங்கள் தாம் அத்தகைய மனிதர்.) அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் உங்களை உங்கள் தோழர்க(ளான நபி ﷺ அவர்கள் மற்றும் அபூபக்ர் ؓ அவர்)கள் இருவருடனும் (அவர்களின் மண்ணறைக்கு அருகில் தான்) அடங்கச் செய்வான் என்று எண்ணியிருந்தேன். ஏனெனில், நபிﷺ அவர்கள், “நானும் அபூபக்ரும் உமரும் (இங்கே) சென்றோம்” என்றும், “நானும் அபூபக்ரும் உமரும் (இந்த இடத்திற்கு) உள்ளே புகுந்தோம்” என்றும், “நானும் அபூபக்ரும் உமரும் புறப்பட்டோம்” என்று, சொல்வதை நான் அதிகமாகச் செவியேற்றிருக்கிறேன். (புஹாரி 3685)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்; "உங்களுக்கு முன்பிருந்த சமுதாயங்களில், (பல்வேறு) பிரச்சினைகளில் சரியான தீர்ப்பு எது? என்பது குறித்து இறையருளால்) முன் கூட்டியே அறிவிக்கப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். என் சமுதாயத்தினரில் அப்படிப்பட்டவர் எவரேனும் இருந்தால் அது உமராகத்தான் இருக்கும்." அறிவிப்பவர் அபூ ஹுரைரா ﵁ , புஹாரி 3689

(பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில், ஓர் ஆட்டிடையன் தன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது ஓர் ஓநாய், ஆடு ஒன்றைக் கவ்விக் கொண்டு ஓடலாயிற்று. ஆட்டை மேய்த்துக் கொண்டிருந்தவர் அந்த ஓநாயைத் துரத்திச் சென்றார். அப்போது ஓநாய் அவரைப் பார்த்து, "மன் லஹா யவ்மஸ் ஸபுஇ - கொடிய விலங்குகள் ஆதிக்கம் செலுத்தும் (உலக முடிவு) நாளில் இதைப் பாதுகாக்கக் கூடியவர் யார்? அப்போது என்னைத் தவிர இதற்கு மேய்ப்பாளன் (பொறுப்பாளன்) எவனும் இருக்க மாட்டானே" என்று கூறியது" என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (இதைக் கேட்டு வியந்தவர்களாக) "சுப்ஹானல்லாஹ், அல்லாஹ் தூயவன்" என மக்கள் கூறினர். அப்போது நானும், அபூபக்ரும் உமரும் இந்த நிகழ்ச்சியை நம்புகிறோம்" என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (நபியவர்கள் இதைக் கூறிய சமயம்) அபூபக்ரும் உமரும் அங்கு இருக்கவில்லை. அறிவிப்பவர்: அபூ ஹுரைரா ﵁, புஹாரி 3690

அபூ ஸயீத் அல்குத்ரீ ﵁ கூறினார்கள்; (ஒரு முறை), "நான் தூங்கிக் கொண்டிருந்தபோது, (கனவில்) மக்கள் (பலவிதமான) மேலாடைகளை அணிந்தவர்களாக எனக்கு எடுத்துக்காட்டப்பட்டார்கள். அவற்றில் (அவர்களின்) மார்பை எட்டக்கூடியவையும் இருந்தன. அவற்றில் (அவர்களின்) மார்பை எட்டாதவையும் இருந்தன. உமர் அவர்கள், (தரையில்) இழுத்துக் கொண்டே செல்லும் அளவிற்கு (நீளமான) ஆடையொன்றை அணிந்தவராக எனக்குக் காட்டப்பட்டார்" என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். மக்கள், "இதற்கு நீங்கள் என்ன விளக்கம் கண்டீர்கள், இறைத்தூதர் அவர்களே!" என்று கேட்டார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள். "(அந்த ஆடைகள்)



அவர்களின் மார்க்கத்தை (மார்க்க உணர்வையும் செயல்பாடுகளையும்) குறிக்கும்" என்று (விளக்கம் காண்பதாக) பதில் கூறினார்கள். (புஹாரி 3691.)

ஸலமா இப்னு அக்வஃ ﵁ அறிவிக்கிறார்கள்:

அலீ ﵁ அவர்கள் கைபர் போரின்போது நபி ﷺ அவர்களுடன் (போருக்குச்) செல்லாமல் இருந்தார்கள். அவர்களுக்கு கண் வலி ஏற்பட்டிருந்தது. "நான் அல்லாஹ்வின் தூதருடன் (போருக்குச்) செல்லாமல் பின் தங்கி விட்டேனே" என்று (வருத்தத்துடன்) கூறினார்கள். பிறகு அலீ ﵁ புறப்பட்டு (வந்து) நபி ﷺ அவர்களுடன் சேர்ந்தார்கள். நபி ﷺ அவர்கள் கைபரை வெற்றி கொண்ட அந்த நாளின் (இரவுக்கு முந்தைய) மாலை நேரம் வந்தபோது, இறைத்தூதர் ﷺ அவர்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நேசிக்கின்ற, அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கின்ற... ஒரு மனிதரிடம் நாளை இந்தக் கொடியைத் தரப்போகிறேன்... அல்லது அத்தகைய ஒருவர் இக்கொடியைப் பிடித்திருப்பார்... என்று சொல்லிவிட்டு, "அவருக்கு அல்லாஹ் வெற்றியளிப்பான்" என்று கூறினார்கள். நாங்கள் எதிர்பார்க்காத நிலையில் அலி ﵁ வந்து எங்களுடன் இருக்கக் கண்டோம். உடனே மக்கள், "இதோ அலீ அவர்களே!" என்று கூறினர். இறைத்தூதர் ﷺ அவர்கள் அலீ ﵁ அவர்களிடம் கொடியைக் கொடுக்க, அவர்களுக்கு அல்லாஹ் வெற்றியளித்தான். (புஹாரி 3702)

ஆயிஷா ﵂ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; "நபி ﷺ அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது, தம் மகள் பாத்திமாவை அழைத்து அவரிடம் ஏதோ இரகசியமாகக் கூறினார்கள். (நபி ﷺ அவர்கள் சொன்னதைக் கேட்டு) பாத்திமா அழுதார். மீண்டும் பாத்திமாவை நபி ﷺ அவர்கள் அழைத்து எதையோ இரகசியமாகக் கூறினார்கள். (அதைக் கேட்டவுடன்) பாத்திமா சிரித்தார். நான் அதைப் பற்றி அவரிடம் கேட்டேன். அதற்கு பாத்திமா, நபி ﷺ அவர்கள் (முதல் முறை) என்னிடம் இரகசியமாகப் பேசியபோது, தமக்கு ஏற்பட்டிருந்த அந்த (நோயின்)

வலியிலேயே தாம் இறக்கவிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதனால் நான் அழுதேன். பிறகு (இரண்டாம் முறை) பேசியபோது அவர்களின் குடும்பத்தாரில் நானே அவர்களைத் தொடர்ந்து (இறைவனிடம்) செல்லப் போகும் முதல் ஆள் என்று கூறினார்கள். அதனால் நான் (மகிழ்ச்சியோடு) சிரித்தேன்'' என்று பதிலளித்தார்கள்.

(புஹாரி 3715, 3716)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்; ''ஒவ்வோர் இறைத்தூதருக்கும் ஒரு பிரத்தியேக உதவியாளர் (ஹவாரிய்யு) உண்டு. என் பிரத்தியேக உதவியாளர் ஸுபைர் இப்னு அவ்வாம் ஆவார்.'' அறிவிப்பவர்: ஜாபிர் ؓ, புஹாரி 3719.

அப்துல்லாஹ் இப்னு உமர்ؓ அறிவிக்கிறார்கள்; நபிﷺ அவர்கள், உஸாமா இப்னு ஸைத்ؓ அவர்களைத் தளபதியாக்கி ஒரு படையை அனுப்பினார்கள். மக்களில் சிலர் உஸாமா அவர்களின் தலைமையைக் குறை கூறினார்கள். அப்போது நபிﷺ அவர்கள், ''(இப்போது) இவரின் தலைமையை நீங்கள் குறை கூறுகிறீர்கள் என்றால்... (இது ஒன்றும் புதிதல்ல). இதற்கு முன் (மூத்தா போரின் போது) இவரின் தந்தையின் (ஸைத் அவர்களின்) தலைமையையும் நீங்கள் குறை கூறிக் கொண்டிருந்தீர்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் (ஸைத்) தலைமைப் பொறுப்புக்குத் தகுதியுடையவராகவே இருந்தார். மேலும், அவர் மக்களிலேயே எனக்கு மிகவும் விருப்பமானவராக இருந்தார். (அவரின் மகனான) இவர் (உஸாமா) தான் அவருக்குப் பின் எனக்கு மிகவும் பிரியமானவர்'' என்று கூறினார்கள். (புஹாரி 3730)

உஸாமா இப்னு ஸைத்ؓ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; நபிﷺ அவர்கள் (சிறார்களாயிருந்த) என்னையும் ஹஸன்ؓ அவர்களையும் கையிலெடுத்து ''இறைவா! இவர்கள் இருவரையும் நான் நேசிக்கிறேன் நீயும் நேசிப்பாயாக!'' என்று பிரார்த்திப்பார்கள்.

(புஹாரி 3735)

ஹுதைபாؓ அறிவிக்கிறார்கள்; நபிﷺ அவர்கள் நஜ்ரான் வாசிகளிடம், ''நம்பகத்தன்மையில் முறையோடு நடந்து கொள்ளும்



நம்பிக்கையாளர் (அமீன்) ஒருவரை உங்களுக்கு நிச்சயம் நான் அனுப்புவேன்'' என்று கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் (பலர் அந்த ''அமீன்'' என்னும் சிறப்பு தமக்கு கிட்டாதா என) பேராவல் கொண்டார்கள். நபிﷺ அவர்கள் அபூ உபைதாؓ அவர்களை அனுப்பி வைத்தார்கள். (புஹாரி 3745)

அபூ பக்ர்ؓ அறிவிக்கிறார்கள்; நபிﷺ அவர்கள் மிம்பரின் (மேடை) மீது (உரையாற்றியபடி) இருக்க ஹஸன்ؓ அவர்கள் நபிﷺ அவர்களின் பக்க வாட்டில் அமர்ந்திருந்தார்கள். நபிﷺ அவர்கள் ஒரு முறை மக்களையும் மறு முறை ஹஸன்ؓ அவர்களையும் நோக்கியபடி, ''இந்த என்னுடைய (மகளின்) மகன் மக்களின் தலைவராவார். முஸ்லிம்களின் இரண்டு குழுவினரிடையே இவர் வாயிலாக அல்லாஹ் சமாதானத்தை ஏற்படுத்தவிருக்கிறான்'' என்று சொல்லக் கேட்டேன். (புஹாரி 3746)

அனஸ்ؓ அறிவிக்கிறார்கள்; ஸைத் இப்னு ஹாரிஸா அவர்களும் ஜஃபர் இப்னு அபீ தாலிப் அவர்களும் (அப்துல்லாஹ்) இப்னு ரவாஹா அவர்களும் (மூத்தா போர்க் களத்தில்) உயிர்நீத்துவிட்ட செய்தியை, அது (மதீனாவிற்கு) வந்து சேர்வதற்கு முன்பே (இறைவனால் அறிவிக்கப் பெற்று மக்களுக்கு) நபி(ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.

''(முதலில்) இஸ்லாமியச் சேனையின் கொடியை ஸைத் (தம் கையில்) எடுத்தார் அவர் கொல்லப்பட்டுவிட்டார். பிறகு, ஜஃபர் (தம் கையில்) எடுத்தார். அவரும் கொல்லப்பட்டுவிட்டார். பிறகு இப்னு ரவாஹா (தம் கையில் கொடியை) எடுத்தார். அவரும் கொல்லப்பட்டுவிட்டார்'' என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது நபிﷺ அவர்களின் கண்கள் இரண்டும் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருந்தன. இறுதியில் அக்கொடியை அல்லாஹ்வின் வாட்களில் ஒரு வாள் (காலித் இப்னு வலீத்) எடுத்தது. அல்லாஹ் (அவரின் கரத்தில்) முஸ்லிம்களுக்கு வெற்றியை அளித்துவிட்டான்'' என்று (போர்க்கள நிகழ்ச்சிகளை விவரித்துச்) கூறினார்கள். (புஹாரி 3757)

இறைத்தூதர்ﷺ அவர்கள் ஒரு நாள், ''ஆயிஷாவே! இதோ (வானவர்) ஜிப்ரீல் உனக்கு சலாம் கூறுகிறார்'' என்று சொன்னார்கள். நான், சலாமுக்கு பதில் கூறும் முகமாக ''வ அலைஹிஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு'' அவரின் மீதும் சலாம் (இறை சாந்தி) பொழியட்டும். மேலும், அல்லாஹ்வின் கருணையும் அவனுடைய அருள் வளங்களும் பொழியட்டும்'' என்று பதில் முகமன் சொல்லிவிட்டு, ''நான் பார்க்க முடியாதவற்றை நீங்கள் பார்க்கிறீர்கள்'' என்று இறைத்தூதர்ﷺ அவர்களிடம் கூறினேன்.

அறிவிப்பவர்: ஆயிஷா ؓ, புஹாரி 3768.

''ஆண்களில் நிறையப் பேர் முழுமை பெற்றிருக்கிறார்கள். ஆனால், பெண்களில் இம்ரானின் மகள் மர்யமையும், ஃபிர் அவ்னின் மனைவி ஆஸியாவையும் தவிர வேறெவரும் முழுமை பெறவில்லை. (உலகின் மற்ற) பெண்களை விட ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு (மற்ற) எல்லா உணவுகளைக் காட்டிலும் ''ஸரீத்'' என்னும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும்.'' என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூ மூஸல் அஷ்அரீ ؓ, புஹாரி 3769.

உர்வா இப்னு ஸுபைர்(ரஹ்) அறிவிக்கிறார்கள்; மக்கள் தங்களின் அன்பளிப்புகளை நபிﷺ அவர்களுக்கு வழங்கிட, நபியவர்கள் ஆயிஷாؓ அவர்களிடம் தங்கும் நாளையே தேர்ந்தெடுத்து வந்தனர். (அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து) ஆயிஷாؓ கூறினார்: (நபியவர்களின் துணைவியரான) என் தோழிகள் உம்மு ஸலமாؓ அவர்களிடம் ஒன்று கூடி, ''உம்மு ஸலமாவே! அல்லாஹ்வின் மீதாணையாக! மக்கள் தங்களின் அன்பளிப்புகளை நபிﷺ அவர்களுக்கு வழங்கிட, நபிகளார் ஆயிஷாவிடம் தங்கும் நாளையே தேர்ந்தெடுக்கிறார்கள். ஆயிஷா நபிﷺ அவர்களுக்கு நலம் நாடுவதைப் போன்றே நாமும் அவர்களுக்கு நலம் நாடுகிறோம். எனவே, தமக்கு (தரவிரும்பும்) அன்பளிப்புகளை தாம் இருக்குமிடத்தில்... அல்லது செல்லுமிடத்தில்... (அது எவருடைய வீடாக இருந்தாலும் அங்கு) அனுப்பி வைத்து



விடவேண்டும் என்று மக்களுக்குக் கட்டளையிடும்படி இறைத்தூதர்ﷺ அவர்களிடம் நீங்கள் எடுத்துச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டனர்.

உம்மு ஸலமாؓ கூறினார்:

நான் நபிﷺ அவர்களிடம் இதைச் சொல்ல, நபிﷺ அவர்கள் என்னைக் கண்டு கொள்ளவில்லை. மீண்டும் நபிﷺ அவர்கள் என்னிடம் திரும்பி வந்தபோது நான் அவர்களிடம் அதைச் சொன்னேன். அப்போதும் அவர்கள் என்னைக்கண்டு கொள்ளவில்லை. மூன்றாம் முறை வந்த போதும் நான் அவர்களிடம் இதே கோரிக்கையைச் சொன்னேன். அப்போது அவர்கள், ''உம்மு ஸலமாவே! ஆயிஷாவின் விஷயத்தில் எனக்கு மனவேதனை தராதே. ஏனெனில், அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களில் அவரல்லாத வேறெந்தப் பெண்ணின் போர்வைக்குள் நான் இருக்கும் போதும் எனக்கு வஹீ (இறைச்செய்தி) அருளப்பட்டதில்லை'' என்று பதிலளித்தார்கள். (புஹாரி 3775)

''ஸஃத் பின் முஆத் ؓ அவர்களின் மரணத்தின் போது அல்லாஹ்வின் அர்ஷ் நடுங்கியது'' என்று நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்ؓ நூல்: புஹாரி (3703), முஸ்லிம் (2466)

இங்கே நாம் தொகுத்துள்ள ஹதீஸ்கள் நபியவர்களால் சொல்லப்பட்ட சில செய்திகளேயாகும். இது தவிர அதிகமான செய்திகள் உள்ளன. விரும்பியவர்கள் ஹதீஸ் அடிப்படை நூல்களில் அவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

## ஸஹாபாக்களும் தியாகமும்:

ஸஹாபாக்களின் தியாகங்கள் பற்றி பல பாகங்களில் தனியான நூல்கள் இருக்கின்றன. ஸஹாபாக்கள் இந்த மார்க்கத்திற்காக செய்த தியாகங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இந்தத் தலைப்பின் கீழ் ஸஹாபாக்களின் தியாகங்களை விரிவாக குறிப்பிடுவது எமது நோக்கமல்ல. மாறாக "ஸஹாபாக்கள்" என்ற இந்த நூலின் முழுமைத்தன்மைக்கு தவிர்க்க முடியாத ஒரு பகுதி இது என்பதனால் அது தொடர்பான சில குறிப்புகளை இங்கு தருகின்றோம்.

ஸஹாபாக்கள் இந்த மார்க்கத்திற்காக செய்த தியாகங்களை சுருக்கமாக 04 வகையாக நோக்கலாம்.

**01) இந்த மார்க்கத்தை ஏற்றுக்கொள்வதற்காக அவர்கள் செய்த தியாகம்:**

ஸஹாபாக்கள்: தாங்கள் வாழ்ந்த சமுதாயத்தில் பெரும்பாலும் எந்தக் குற்றமும் செய்யாத உத்தமர்களாக, அந்த சமுதாயத்தை வழிநடாத்தக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக பல தியாகங்களை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

உதாரணமாக, சுமையா ﷺ அவர்கள் இந்த மார்க்கத்தை ஏற்றுக்கொண்டதற்காகவே பல சோதனைகளைத் தாண்டவேண்டியேற்பட்டது. அவர் இந்த மார்க்கத்தை ஏற்றுக்கொண்டதற்காகவே அபூஜஹ்ல் அவரின் மர்ம உறுப்பில் அம்பெய்து அவரைக் கொலை செய்தான். அவரின் கணவர் யாஸிர் ﷺ அவர்கள்: இரு கால்களும் இரண்டு ஒட்டகங்களில் கட்டப்பட்டு இரண்டு திசைகளை நோக்கி விரட்டப்படுகிறது. அவர் இரண்டாகக் கிழிக்கப்படுகிறார். பிலால் ﷺ அவர்கள் இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக பாலைவன மணலில், சுடும்வெயிலில் வெற்று மேனியோடு கிடத்தப்பட்டு, எழும்பாத அடிப்படையில் பாராங்கற்களை வைத்து வேதனை செய்யப்பட்டார்கள்.



கொல்லனாக இருந்த ஹப்பாப் இப்னு அரத் ﷺ அவர்கள் இந்த மார்க்கத்தில் நுழைந்ததற்காக அவரின் கடையில் இருந்த இரும்புகளே அவரின் எதிரிகளாக மாறிவிடுகின்றன. அவரின் இரும்புகளே சூடுபோடப்பட்டு பின்பு அவருக்கு அவற்றினால் வேதனை வழங்கப்பட்டது. இவ்வாறு, இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டதற்காக ஸஹாபாக்கள் செய்த தியாகங்கள் ஏராளமாக இருக்கின்றன. பின்பொரு காலத்தில் உமர் ﷺ அவர்கள் ஹப்பாப்ﷺ அவர்களிடம்: இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபோது செய்யப்பட்ட வேதனை தொடர்பாகக் கேட்டார்கள். அதற்கு ஹப்பாப் ﷺ அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் தமது ஆடையை உயர்த்தி முதுகைக் காட்டினார்கள். சதையேதும் இல்லாமல் இருந்தது, உடலியல் ரீதியான அத்தனை தண்டனைகளையும் உமர் ﷺ அவர்களுக்கு அது உணர்த்தியது.

நாம் மேலே குறிப்பிட்டவை உடலியல் ரீதியான தியாகங்கள் மாத்திரமே ஆனால், அவர்களின் வரலாற்றைப் படிப்பவர்கள் வேதனை, சோதனையின் அத்தனை வடிவங்களும் அவர்களைத் தொட்டுச் சென்றிருப்பதை உணர்வார்கள்.

**02) இஸ்லாத்தை கற்றுக்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும்...**

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஸஹாபாக்கள் அதைக் கற்றுக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்தவும் பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அதிகமான ஸஹாபாக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட செய்தி, அவர்கள் நபியவர்களுடன் வைத்திருந்த இறுக்கமான தொடர்பு, அவர்கள் இஸ்லாத்தைக் கற்பதற்காக நபியவர்களை அடிக்கடி சந்தித்தமை கற்றதைப் பின்பற்றியமை என்பவற்றினாலேயே வெளியுலகிற்குத் தெரிய வந்தது. இவ்வாறு தெரிய வந்தபோதெல்லாம் ஸஹாபாக்கள் தங்கள் இன்பங்கள் அத்தனையையும் இழக்க நேரிட்டது.

அக்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அபூதாலிப் கணவாயில் மூன்று வருடங்கள் முற்றுகையிடப்பட்டார்கள்.

இந்த உலகுக்கும் அவர்களுக்குமிடையில் தடுப்பு ஏற்படுத்தப்பட்டது என்றே சொல்லவேண்டும். அந்தளவிற்கு, துன்பங்களை எதிர்கொண்டார்கள். அவர்களுக்கும் ஏனைய சமூகத்திற்கும் மத்தியிலான அத்தனை தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. உண்பதற்கு ஏதுமில்லாததால் அவர்கள் இலைகுழைகளை உண்டனர், இதனால் அவர்களின் மலம் மிருகங்களின் மலம் போன்று இருந்ததாக சில ஸஹாபாக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த இஸ்லாத்தை மக்காவில் எம்மால் பின்பற்ற முடியாது என்ற நிலை வந்தபோது தங்கள் சொத்து, குடும்பம், பிறந்த மண் அத்தனையையும் விட்டுவிட்டு அண்டை நாடுகளுக்கு இடம்பெயர வேண்டியேற்பட்டது. இந்த வகையில் இரண்டு தடவைகள் அபீஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர். பின்பு மக்காவில் நாம் இனியும் தங்கியிருந்து இந்த இஸ்லாத்தை எடுத்து நடப்பது கஷ்டமான காரியம் என்ற முடிவுக்கு வந்தபோது எல்லோரும் மக்காவிலிருந்து சுமார் 480கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் மதீனாவைநோக்கி இடம்பெயர்ந்தார்கள். தங்கள் உடைமைகள், உறவுகள் அத்தனையையும் இழந்து கொள்கை என்ற ஒரே உரத்தோடு மதீனா நகரை அடைந்தார்கள். இது, அவர்கள் இஸ்லாத்தை பின்பற்றியதற்காக ஒரே நேரத்தில் எல்லா வகையான சோதனைகளையும் தாங்கிய மிகவும் பெரியதோர் சந்தர்ப்பம் என்று கூறலாம்.

இஸ்லாத்தைப் படிப்பதற்காக பலரும் பலநாடுகளிலிருந்து நபியவர்களிடம் வருவார்கள். இதற்கு வரலாற்றில் பல உதாரணங்க்ள காணப்படுகின்றன. பாதைகள் சரியாக செப்பனிடப்படாத போக்குவரத்து வசதிகளெல்லாம் முன்னேற்றமடையாத அக்காலத்தில் இஸ்லாத்தைக் கற்பதற்காக பல 100 கிலோமீற்றர்களைத் தாண்டிச்செல்வதென்பது இலகுவான காரியமல்ல. பல துன்பங்களையும் துயரங்களையும் தாங்கியே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது என்பது யாவரும் அறிந்த உண்மை.



ஸஹாபாக்களில் சிலர் இந்த இஸ்லாத்தைக் கற்பதற்காக தங்கள் தொழில், குடும்பம் அத்தனையையும் இழந்து தங்களை அப்படியே அர்ப்பணித்து பசியோடும் பட்டினியோடும் வாழ்ந்தார்கள் என்பதை நாமறிவோம்.

**03) இஸ்லாத்தை மற்றவர்களுக்கு எத்திவைப்பதற்காக:**

தாம் உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு படித்துப் பின்பற்றிய இஸ்லாத்தை மற்றவர்களுக்கு எத்திவைப்பதிலும் ஸஹாபாக்கள் பல தியாகங்களைச் செய்ததோடு, பலசோதனைகளையும் தாங்கிக் கொண்டார்கள். இப்னு மஸ்ஊத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள். ‘‘நாம் இறைவனுடைய வேதத்திலிருந்து 10வசனங்களைக் கற்றுக்கொள்வோம் அதை நடைமுறைப்படுத்தி மற்றவர்களுக்கு எத்திவைத்து அமல் செய்யாமல், அதற்குப்பின்னால் இறங்கிய 10 வசனங்களை நாம் கற்றுக்கொள்ள மாட்டோம்.’’
(ஸுனன் அல்-குப்ரா, தபகாதுல் குப்ரா)

இந்த மார்க்கத்தை மக்களுக்கு மத்தியில் பரப்புவதில் மிகுந்த கூலி இருப்பதாக நபியவர்கள் அதிகமான சந்தர்ப்பங்களில் தூண்டியதன் விளைவாக அதிகமான ஸஹாபாக்கள் தங்களின் அத்தனை வேலைப்பளுக்களையும் மறந்து சிலபோது தங்களையே மறந்து செயற்பட்டனர். உமர் ﵁ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். “நானும் எனது அன்ஸாரித்தோழரும் வயலில் வேலை செய்வதற்கும், நபியவர்களுடன் இருப்பதற்குமாக நாட்களைப் பிரித்துக்கொண்டோம். நான் ஒரு நாளைக்கு வயலில் வேலை செய்வேன்; அவர் நபியவர்களுடன் இருப்பார். அன்று வீடு திரும்புவதற்கு முன்னால், நபியவர்கள் சொன்ன செய்திகளை என்னிடம் வந்து சொல்லிவிட்டுத்தான் வீடு செல்வார். மறுநாள் அவர் தோட்டத்தில் வேலைசெய்வார்; நான் நபியவர்களிடம் செல்வேன். வீடு திரும்புவதற்கு முதல் எனது தோழரிடம் வந்து நபி ﷺ அவர்கள் அன்றைய தினம் சொன்னதை சொல்லிவிட்டே வீடு செல்வேன்...” (புஹாரி 89)

நபியவர்கள் இஸ்லாத்தை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கென்று தூதுவர்களை பிற நாடுகளுக்கும், தூரப்பிரதேசங்களுக்கும் அனுப்பிவைப்பார்கள். மதீனாவாசிகள் நபியவர்களுடன் இரண்டாம் அகபா உடன்படிக்கையில் கலந்து கொண்டு ஒப்பந்தம் செய்துவிட்டு திரும்பும்போது நபியவர்கள் முஸ்அப் இப்னு உமைர் ﷺ அவர்களை மதீனாவாசிகளுக்கு இஸ்லாத்தை கற்றுக் கொடுப்பதற்காக அனுப்பிவைத்தார்கள்.

முஸ்அப் இப்னு உமைர் ﷺ அவர்கள் குர்ஆனை நன்கு ஓதத்தெரிந்தவர்களில் ஒருவராக இருந்தார் மதீனாவிற்கு வந்ததிலிருந்து இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காகவே தனது வாழ்வை அர்ப்பணித்தார். அவரின் பிரச்சாரத்தின் மூலம் மதீனாவின் முக்கிய தலைவர்களெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். மக்காவில் வாழும் போது மிகப்பெரிய செல்வந்தராக இருந்த முஸ்அப் ﷺ அவர்கள் ஒவ்வொரு நாளைக்கும் புதிய புதிய ஆடைகளையும் விலைமதிப்புமிக்க பாதணிகளையும் பயன்படுத்துபவர். ஆனால், இஸ்லாத்தை ஏற்று மதீனாவிற்கு இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக சென்று ஹி. 03ம் ஆண்டு உஹதுக்களத்திலே மரணித்தபோது. அவரை முழுமையாக கபனிடுவதற்கு ஓராடைகூட இருக்கவில்லை. தலையை மூடினால் கால் தெரிகிறது, காலை மூடினால் தலைதெரிகிறது என்ற நிலையில் ஒரு சிறிய ஆடைதான் அவருக்கிருந்தது. பின்பு நபியவர்களின் உத்தரவின் படி அவரின் தலையை மூடிவிட்டு காலை மரக்கிளைகளை வைத்து மறைத்தனர். மிகப்பெரியதொரு செல்வந்தரின் வாழ்க்கைப் பயணம் இஸ்லாமியப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதினால் எவ்வளவு சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டிவந்திருக்கிறது என்பதற்கு இதை விட வேறு எடுத்துக்காட்டு இருக்கமுடியாது.

நபியவர்களிடம் சிலர் இஸ்லாத்தை ஏற்றதாகச் சொல்லி தமது கோத்திரத்தினருக்கு இஸ்லாத்தை பிரச்சாரம் செய்ய சிலரை கேட்டனர். நபியவர்களும் தன்னுடைய தோழர்களில் சிறப்பாக குர்ஆனை ஓதத்தெரிந்த, அது பற்றிய அறிவுள்ளவர்களை தேர்வு



செய்து 70 பேர் கொண்ட ஒரு குழுவை அனுப்பிவைத்தார்கள். அத்தனை பேரையும் கூட்டிச்சென்ற அவர்கள், பி∴ரு மஊனா என்ற இடத்தில் வைத்து கொலை செய்தார்கள். பிரச்சாரக்குழுவிற்கு நடந்த பரிதாபத்தை தெரிந்து கொண்ட நபியவர்கள் கூட்டிச்சென்ற ர∴லு, தக்வான் போன்ற கோத்திரங்களை சபித்தும் விசுவாசிகளுக்கு சார்பாக பிரார்த்தித்தும் ஒரு மாதகாலம் ஐங்காலத் தொழுகையிலும் குனூத் ஓதினார்கள். (புஹாரி)

இவ்வாறு பிரச்சாரத்திற்காக நபியவர்களால் அனுப்பபட்டவர்கள் முதல் தாங்களாக பிரச்சாரம் செய்தவர்கள் வரை பிரச்சார வரலாற்றில் அவர்களுக்கு ஏற்பட்ட சோகக்கதைகள் அதிகமாக உள்ளன.

**04) இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பாதுகாத்தல்:**

இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்குமான முயற்சியில் பல தற்காப்பு யுத்தங்கள் நடந்திருக்கின்றனஅதிலெல்லாம் ஸஹாபாக்கள் நெஞ்சுரத்தோடும் கொள்கைப்பற்றோடும் தன் சகோதரனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடும் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்துப் போராடியிருக்கின்றனர்.

ஸஹாபாக்கள் இழுக்கப்பட்ட அத்தனை போராட்டங்களும் வெளியிலிருந்து பார்த்தால் தற்கொலை முயற்சி என்று சொல்லுமளவிற்கு அபாயங்கள் நிறைந்ததாகவே காணப்பட்டன. ஆனால் அந்த சூழலிலும் ஸஹாபாக்கள் காட்டிய உறுதி தாங்கள் இந்தக்கொள்கையையும் அதை ஏற்றுக்கொண்டவர்களையும் பாதுகாக்க எதையும் இழக்கத்தயார் என்பதை சுட்டிக்காட்டியது.

நபியவர்கள் வலுக்கட்டாயமாக இழுக்கப்பட்ட முதல் போர் பத்று யுத்தம். இதில், எதிரிகள் சுமார் 1000 பேர். ஒட்டகங்கள், குதிரைகள், போர்த்தளபாடங்கள் அனைத்தும் தேவைக்கு அதிகமாகவே இருந்தன. பயிற்றப்பட்ட போர்வீரர்கள் தாராளமாக இருந்தார்கள்.

இதில் ஏதாவது குறைவுள்ளது என்று கண்டால் மேலதிகமாக வந்து கலந்து கொள்வதற்கென்று படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், ஸஹாபாக்களின் நிலையோ மிகவுமே பரிதாபகரமானது. கடும் வறுமைக்கோட்டின் கீழ்வாழ்ந்த 313 பேர்தான் அவர்களின் ஆளணியாக இருந்தது. போர்த்தளபாடங்கள், வாகனங்கள் எல்லாமே மிகக்குறைவாகவே இருந்தன. ஆனாலும் ஸஹாபாக்கள் உறுதியோடு போராடி பகீரதப்பிரயத்தனங்களுக்கு மத்தியில் இறைவன் உதவியினால் வெற்றி கண்டார்கள்.

ஹி03ல் நடைபெற்ற உஹதுப்போரில் முஸ்லிம்கள் 700பேர் எதிரிகள் 3000பேர், அஹ்ஸாப் யுத்தம் எதிரிகள் 10000பேர் அப்போது மதீனாவில் வாழ்ந்த மொத்த முஸ்லிம்களே 3000பேரைத் தாண்டவில்லை. இந்த அஹ்ஸாப் யுத்த முற்றுகை 27நாட்கள் நீடித்தது. ஒவ்வொரு நாளும் கூலித்தொழில் செய்து சேமிக்க மனமில்லாமல் தேவைபோக மற்றயதை பிறருக்கு கொடுத்து மகிழ்ந்த ஸஹாபாக்கள் இந்த தொடர் முற்றுகையில் எவ்வளவு சோகத்தை அனுபவித்திருப்பார்கள் என்று நான் சொல்லவேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு நபியவர்கள், ஸஹாபாக்கள் சந்தித்த எந்தப்போர்முனையை எடுத்துக்கொண்டாலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்கும், அவர்களின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவும் ஸஹாபாக்கள் செய்த தியாகங்களுக்கு கட்டியம் கூறுவதாகவே உள்ளது.

❁❁❁



## ஸஹாபாக்கள் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் :

ஸஹாபாக்கள் பற்றிய அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கை அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவுக்கு உடன்பட்டிருப்பதையும் அல்-குர்ஆன், அஸ்ஸுன்னா ஸஹாபாக்கள் பற்றிச்சொல்வதையே அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் தங்களின் கொள்கையாகக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம். ஸஹாபாக்கள் விடயத்தில் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கையை பின்வருமாறு நிரல்படுத்த முடியும்.

**01) ஸஹாபாக்கள் நீதமானவர்கள் என்று நம்புதல். அவர்களின் சிறப்புக்கள், சிறப்பில் அவர்கள் முந்தியவர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ளுதல்.**

அஹ்லுஸ்ஸுன்னாக்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஸஹாபாக்கள் பற்றிச்சொல்லும் சிறப்புக்களை உறுதிப்படுத்துகின்றனர். மேலும் நபி ﷺ அவர்களுக்குப் பின் இந்த உலகத்தில் சிறந்த ஒரு சமுதாயம் என்றால் அது ஸஹாபிய சமுதாயம்தான். அவர்களைப் போன்று ஒரு சமுதாயம் ஒரு போதும் வராது என்று குறிப்பிடுகின்றனர். “எனது சமுதாயத்திலே மிகவும் சிறந்தவர்கள் நான் வாழும் இந்த நூற்றாண்டில் வாழ்பவர்கள்...” என்று நபிﷺ அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

ஸஹாபாக்களை அல்லாஹ் தனது தூதரோடு தோழமை கொள்வதற்கு தேர்ந்தெடுத்தான். எவருமே செய்யாத தியாகங்களை இஸ்லாத்திற்காக அவர்கள் செய்தார்கள். அவர்கள் செய்த தர்மங்களோடு அல்லது தியாகங்களோடு எங்கள் அமல்களை ஒப்பிட முடியாது.

**02) ஸஹாபாக்களை நேசித்தல்:**

ஸஹாபாக்கள் எவரையும் கோபிக்காமல் அவர்கள் அனைவரையும் நேசிப்பதும், அவர்கள் மீது அன்பு வைப்பதும் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் பிரதானமான அடிப்படைகளில் ஒன்றாகும்.

“மு∴மினான ஆண்களும் மு∴மினான பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளர்களாக இருக்கிறார்கள். நன்மையை ஏவுகிறார்கள் தீமையைத் தடுக்கிறார்கள்.” (9:71)

மு∴மீன்கள் பற்றி குர்ஆன் இப்படிச்சொன்னால் எல்லா மு∴மீன்களிலும் பார்க்க சிறந்தவர்களாக திகழும் ஸஹாபாக்கள் விடயத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்.! ஸஹாபாக்களை நேசிப்பதை அஹ்லுஸ்ஸுன்னாக்கள் ஒரு வணக்கமாகக் கருதுகின்றனர். ஸஹாபாக்களை வெறுப்பவர்களை வெறுப்பதையும் வணக்கமாகக் கருதுகின்றனர். இவைகளை இறைவனுக்காகச்செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர். இதை ஈமானின் அங்கம் என்றும் ஈமான் இருப்பதற்கான அடையாளம் என்றும் பறைசாற்றுகின்றனர்.

“ஈமானின் அடையாளம் அன்ஸார்களை நேசிப்பதாகும் நயவஞ்சகர்களின் அடையாளம் அன்ஸார்களை வெறுப்பதாகும்” (புஹாரி 3784)

“அல்லாஹ்வையும் மறுமைநாளையும் நம்பிய எந்த மனிதனும் அன்ஸார்களை வெறுக்கமாட்டான்” (முஸ்லிம் 76)

ஸஹாபாக்களை நேசிப்பதன் சிறப்பு அதன் அவசியம் பற்றி அஹ்லுஸ்ஸுன்னா இமாம்கள் சொல்லும் கருத்துக்களை இமாம் அல்லாலகாயி அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் கொள்கைகளை விளக்கும் வகையில் எழுதிய “ஷரஹு உஸூலி இ∴திகாதி அஹ்லிஸ்ஸுன்னதி வல் ஜமாஆ” என்ற நூலில் தனியான ஒரு தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது பிரயோசனம் தரும் என்று கருதுகின்றேன்.

குபைசதுப்னு உக்லா சொல்கிறார்: “ஸஹாபாக்கள் ஒவ்வொருவரையும் நேசிப்பது இறைதூதரின் வழிமுறையாகும்.”
(شرح أصول اعتقاد أهل السنة والجماعة 7:1240)



ஹஸன் ﷺ அவர்களிடம்; “அபூபக்ர் ﷺ, உமர் ﷺ ஆகியோரை நேசிப்பது ஸுன்னத்தா?” என்று கேட்கப்பட்டது. அதற்கு இமாமவர்கள்: “இல்லை, அவர்களை நேசிப்பது பர்ழு (ஸுன்னத் அல்ல கடமை)” என்றார்கள்.
(شرح أصول اعتقاد أهل السنة والجماعة 7:1239)

மஸ்ரூக் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்; “அபூபக்ர்ﷺ, உமர்ﷺ போன்றோரை நேசிப்பதும் அவர்களின் சிறப்புக்களை தெரிந்து கொள்வதும் நபிவழியாகும்.”
(شرح أصول اعتقاد أهل السنة والجماعة 7:1239)

இமாம் தஹாவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்; “நாம் நபிﷺ அவர்களின் தோழர்கள் அனைவரையும் நேசிப்போம். அவர்களில் எவர் மீது காட்டும் நேசத்திலும் கவனக்குறைவாக இருக்கமாட்டோம். அவர்களில் எவரை விட்டும் நாம் நீங்க மாட்டோம். அவர்களை கோபிப்பவர்களை கோபிப்போம். மேலும் அவர்களை மோசமாக விமர்சிப்பவர்களையும் கோபிப்போம்அவர்கள் விடயத்தில் நல்லதையே சொல்வோம். அவர்களை நேசிப்பது மார்க்கம், ஈமான்,நல்லகாரியம், அவர்களை கோபிப்பது நிராகரிப்பு, நயவஞ்சகம், எல்லை மீறுதல் ஆகும்.” (العقيدة الطحاوية مع شرحها لابن أبي العز ص 289)

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்; “உஸ்மான் ﷺ, அலிﷺ போன்ற அனைவரையும் நேசிப்பதும் இவர்கள் இருவரையும் விட அபூபக்ர்ﷺ, உமர் ﷺ, ஆகியவர்களை முதன்மைப்படுத்துவதும் ஸுன்னத்தாகும்” (مجموع الفتاوى 3:408)

மக்களுக்கு மத்தியில் ஸஹாபாக்களின் சிறப்புக்களை பரப்புவதையும் அவர்களைக் குறைகாண்பதைத் தவிர்ப்பதையும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள், ஸஹாபாக்களை நேசிப்பதின் ஓர் அங்கமாக கருதுகின்றனர். தங்கள் சிறார்களை ஸஹாபாக்களை நேசிக்கப் பழக்குகின்றனர். ஸஹாபாக்களை கௌரவிக்கக்கூடியவர்க -ளாக உருவாக்கினர், உருவாக்குகின்றனர்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "முன்சென்ற நல்லடியார்கள் அபூபக்ரையும், உமரையும் நேசிப்பதை (அஹ்லுஸ் ஸுன்னாக்கள்) குர்ஆனில் ஒரு ஸூராவை கற்றுக்கொடுப்பதைப்போல தங்கள் சிறார்களுக்குக் கற்பித்தனர்."

(شرح أصول إعتقاد أهل السنة 7/1240)

நபி ﷺ அவர்களிடம் ஒரு மனிதர்: ஒரு சமூகத்தை நேசிப்பவனின் நிலை பற்றிக்கேட்டார் அதற்கு நபியவர்கள் "ஒவ்வொரு மனிதனும் அவன் நேசிப்பவர்களோடு இருப்பான்" என்றார்கள்.

(புஹாரி 6169)

இந்த நபிமொழியை உணர்ந்த அஹ்லுஸ்ஸுன்னாக்கள் வரலாறு நெடுகிலும் ஸஹாபாக்களை நேசிப்பதிலும் அவர்களுக்கு எதிராக பேசுபவர்களை எதிர்ப்பதிலும் அதிகம் முயற்சித்தனர்.

**03) ஸஹாபாக்களுக்காக பிரார்த்தித்தல்:**

அல்-குர்ஆனில் அல்லாஹ் முன்சென்ற நல்லடியார்களுக்காக பிரார்த்திக்குமாறு சொல்கிறான். இதனால் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் ஸஹாபாக்களுக்காக பிரார்த்திப்பதை தங்களின் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டுள்ளனர்.

"மேலும் அவர்களுக்குப்பின் வந்தோர் 'எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில் எங்களை முந்தியவர்களையும், எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னிப்பாயாக விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்; மிக்க கருணையுடையவன்' என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்." (59:10)

**04) ஸஹாபாக்கள் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களல்ல.**

அல்லாஹ்வின் தூதர் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர். அவர் தவறு செய்தபோது இறைவன் அதைச் சுட்டிக்காட்டினான்.



ஆனால், ஸஹாபாக்கள் அவ்வாறில்லை. அவர்களும் சாதாரண மனிதர்கள் போல் தவறுகள் செய்யலாம். என்றாலும், அவர்கள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுமளவு சிறப்பும் அதற்கு போதுமான வணக்க வழிபாடுகளையும் கொண்டவர்கள் என்று நம்புகின்றனர்..

**05) ஸஹாபாக்களின் வாழ்க்கையை படித்தல், அதிலிருந்து படிப்பினைகளைப் பெறல், அவர்களை நல்ல விடயங்களில் பின்பற்றுதல்.**

**06) ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகளில் நாவடக்கத்தோடு நடந்து கொள்ளல்:**

ஸஹாபாக்கள் விடயத்தில் குறை காண்பவர்கள் பெரும் பாலும் ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த சில பிரச்சனைகளை சிறந்த ஊடகமாகக் கையாளுகின்றனர். ஆனால், அஹ்லுஸ்ஸுன்னாக்கள ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சனைகளில் மௌனிகளாக நாம் இருப்பதுதான் ஈமானுக்கு பாதுகாப்பு என்று கருதுகின்றனர்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம் அலி ﷺ, உஸ்மான் ﷺ, ஸிப்பீன் யுத்தம் தொடர்பாக வினவப்பட்டது அதற்கவர்கள்; "எனது கரங்களை அந்த ரத்தத்தைவிட்டும் அல்லாஹ் தடுத்துவிட்டான் எனது நாவை அந்த ரத்தத்தில் நனைத்துக்கொள்வதை நான் வெறுக்கிறேன்" என்றார்கள்.

(ابن سعد في الطبقات 5/307)

அலி ﷺ, முஆவியா ﷺ அவர்களுக்கு மத்தியில் நடந்தது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு இமாமவர்கள் "நிச்சயமாக அவர்கள் விடயத்தில் நல்லதைத்தவிர வேறு எதையும் சொல்லமாட்டேன். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அருள்புரிவானாக" என்றார்கள்.

(الخلال في السنة 1/460)

அபூ உஸ்மான் அஸ்ஸாபூனி (ரஹ்) அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கொள்கையை தெளிவுபடுத்தும் போது சொல்கிறார்கள்: "நபி ﷺ அவர்களின் தோழர்களுக்கு மத்தியில் நடந்தவற்றில் நாம் மௌனமாக இருக்கவேண்டும் என்று அவர்கள் கருதுவதோடு, ஸஹாபாக்களைக் குறைகாணும் விதத்திலோ அல்லது அவர்களைக் குறைத்து மதிப்பிடும் விதத்திலோ பேசுவதிலிருந்தும் எமது நாவுகளைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். மேலும் ஸஹாபாக்கள் அனைவரையும் நேசிக்க வேண்டும். அவர்கள் அனைவருக்காகவும் அருள் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும் என்று கருதுகின்றனர்."

(عقيدة السلف اصحاب الحديث ص294)

இது போன்ற கருத்துக்களை அதிகமான அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இக்கருத்தை அறிஞர்கள் பின்வரும் காரணங்களுக்காகவே சரியானதாகக் காண்கின்றனர்.

★ குறித்த பிரச்சினைகளில் தொடர்புடைய இரு சாராரும் மரணித்து விட்டார்கள். அவர்களில் ஒரு சாராரை நல்லவர்கள் என்றும் மற்றவர்கள் கெட்டவர்கள் என்றும் அல்லது ஒரு சாரார் சரியாகச் செய்தார்கள் மற்றவர்கள் தவறிழைத்துவிட்டார்கள் என்றும் சொல்வதனால் எந்த பிரயோசனமும் நமக்கு இல்லை.

★ ஜமல் போர் தற்செயலாக நடந்தது அதாவது திட்டமிட்டு அது மேற்கொள்ளப்படவில்லை. சமாதானமாக இருப்பது என்றே இரு சாராரும் முடிவு செய்தனர். என்றாலும், கயவர்களான ஷீஆக்களின் மூதாதையர் ஸபஇய்யாக்களால் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்டதே ஜமல் யுத்தம். இதனால் தான் அலி ؓ அவர்கள் தல்ஹா ؓ கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டபோது அழுது விட்டு இதற்கு இருபது வருடங்களுக்கு முன் நான் மரணித்திருக்கக் கூடாதா! என்றார்கள். யுத்தம் முடிந்ததும் அதில் மரணித்தவர்களுக்காக அனைவரும் கைசேதப்பட்டார்கள். ஹஸன்ؓ அவர்கள் இந்த யுத்தத்தை நடத்தியதற்க்கு கண்டனம் தெரிவித்தார்கள். எனவே இங்கே எவர் மீதும் குற்றம் சுமத்த முடியாத ஒரு நிலை காணப்படுகிறது.



ஸிப்பீன் யுத்தத்தை பொறுத்தவரை இஜ்திஹாதின் அடிப்படையில் நடந்ததாகும். ஸஹாபாக்கள் அனைவருமே இஜ்திஹாத் செய்யும் அந்தஸ்தைப்பெற்றவர்கள், அதற்கு தகுதியானவர்கள். அலிؓ அவர்கள் தனது முடிவை சரியானதாகக் கண்டார்கள். முஆவியாؓ அவர்களும் தனது முடிவை சரியானதாகக் கண்டார்கள். இருவரின் முடிவும் வித்தியாசமானதாக இருந்ததால் பிரச்சினை வலுப்பெற்றது.

நபி ﷺ அவர்கள் சொன்னார்கள்: "ஒரு ஹாகிம் முயற்சி செய்து அதில் சரியான முடிவை அடைந்து கொண்டால் அதற்கு இரண்டு கூலிகளும் அதில் தவறான முடிவை அடைந்து கொண்டால் அதற்கு ஒரு கூலியும் வழங்கப்படும்."

(அபூதாவுத், திர்மிதி, நஸஈ, இப்னுமாஜா)

இஜ்திஹாத் செய்யும் தகுதியைப் பெற்று அதை செய்யும் ஒவ்வொருவருக்கும் கூலியுண்டு என்று நபியவர்கள் சொன்னார்கள். கூலியில் வேண்டுமானால் வித்தியாசமிருக்கலாம், ஆனால் கூலி உண்டு. இப்படி நபியவர்களே சொன்னதற்குப் பிறகு நாம் ஒரு தரப்பாரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதும், காபிர்கள் என்று சொல்வதும் அறிவுடைமையாகாது.

இந்தப்போராட்டங்களில் கலந்து கொண்ட ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்டவர்கள். அவர்களைப் பொருந்திக் கொண்டதாக அல்லாஹ் சொல்கிறான். இறைவன் முக்காலங்கள் பற்றிய அறிவு படைத்தவன், அவனுக்கு இப்படியான பிரச்சினைகள் நடக்கும் என்பது தெரியும். அப்படி தெரிந்திருந்தும் அவன் அவர்களைப் பொருந்திக் கொண்டதாகச் சொல்லும் போது, நாம் அவர்களை இறைவனின் அருளிலிருந்து வெளியானவர்கள் என்று சொல்வது முறைகேடான செயலாகும்.

★ ஒரு சில ஸஹாபாக்கள் தவறிழைத்தாலும் அவர்களின் பாவங்கள்

மன்னிக்கப்படும் அளவுக்கு நன்மைகள் அவர்களிடம் அதிகமாக இருக்கிறது. எனவே அவர்களை மறுமைப் பாக்கியத்திலிருந்து தூரமாக்குவது வக்கிர புத்தியின் வெளிப்பாடாகும்.

✸ ஸஹாபாக்கள் யுத்தங்கள் செய்தாலும் தங்களின் தவறுகளை உணர்ந்து இறைவன் சொல்வதைப்போன்று தங்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து கொண்டனர்.

“உங்களுடைய சகோதரர்களுக்கு மத்தியில் பிரச்சினை ஏற்பட்டால் அதை சமாதானமான முறையில் தீர்த்து வையுங்கள்.” (49:9)

**07) ஸஹாபாக்கள் விடயத்தில் நாம் எல்லை மீறமாட்டோம்:**

ஸஹாபாக்கள் எல்லோரையும் மதிக்கவேண்டும். அதே நேரம் அவர்களில் ஒரு சிலரை மெச்சுவதில் எல்லை மீறுவதும் மற்றும் சிலரை கீழ்த்தரமாக விமர்சிப்பதும் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் வழிமுறையன்று. ஸஹாபாக்கள் எல்லோரையும் நேசிக்கவேண்டும். அதில் எல்லை மீறிவிடக்கூடாது என்பதில் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் உறுதியாக இருக்கிறார்கள். ஸஹாபாக்களை, மனிதனை மிஞ்சிய செயற்பாடுகளின் சொந்தக்காரர்களாக காட்டுவதோ, இறைவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை அவர்களுக்குச் செய்வதோ, அவர்களை எல்லை மீறிப்புகழ்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும். எது செய்வதானாலும் திருந்தச்செய்வதும் நடு நிலைபேணுவதுமே அஹ்லுஸ்ஸுன்னாக்களின் சிறப்பம்சமாகும்.

**08) ஸஹாபாக்கள் எல்லோரும் ஒரே அந்தஸ்தில் இல்லை:**

அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினர்: எல்லா ஸஹாபாக்களையும் நேசிக்க வேண்டும் என்பதிலும், அவர்கள் அனைவரும் சிறப்புக்குரியவர்கள் என்பதிலும் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் எல்லா ஸஹாபாக்களும் ஒரே அந்தஸ்தில் இல்லை. அவர்களில் சிலர் சிலரைவிட அதிக சிறப்பு பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றனர்.



இதன்படி ஸஹாபாக்களுக்கு மத்தியில் அந்தஸ்தின் அடிப்படையில் உள்ள வேறுபாடு பின்வருமாறு நிரல்படுத்தப்படுகின்றது.

**01- அபூபக்ர் ؓ**
**02- உமர் ؓ**

அம்ரிப்னு ஆஸ் ؓ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: “நான் நபி ﷺ அவர்களிடம் மனிதர்களில் உங்களுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் யார் என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள்; ஆயிஷா என்றார்கள். ஆண்களில் யார்? என்று கேட்டேன். அவருடைய தந்தை (அபூபக்ர்) என்றார்கள். பிறகு யார்? என்றேன் அதற்கவர்கள் உமருப்னு கத்தாப் என்றார்கள்..”
(புஹாரி 3662, முஸ்லிம் 2384)

இந்த சமுதாயத்தில் நபியவர்களுக்குப் பிறகு மிகவும் சிறப்புக்குரியவர் அபூபக்ர்ؓ அதன் பிறகு உமர்ؓ என்பதற்கு ஏராளமான ஹதீஸ்கள் ஆதாரமாக உள்ளன.

**03- உஸ்மான் ؓ**

இப்னு உமர் ؓ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; “நபி ﷺ அவர்கள் உயிரோடிருந்தபோது, ஸஹாபாக்களும் அதிகமாக இருந்தவேளை: நாம் இந்த சமுதாயத்தில் மிகவும் சிறந்தவர் அபூபக்ர் ؓ பின்பு உமர் ؓ பின்பு உஸ்மான் ؓ என்று கணிக்கக் -கூடியவர்களாக இருந்தோம். நான்காவதாக யாரையும் சொல்லாமல் மௌனமாக இருப்போம்.” (அஹ்மத் 4626)

இதே கருத்தை சொல்லும் இப்னு உமர் ؓ அறிவிக்கின்ற இன்னுமொரு செய்தி புஹாரியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**04- அலி ؓ அவர்கள்**

இந்த சமுதாயத்தில் மிக சிறப்புக்குரியவர்கள் என்ற இடத்தை வகிப்பவர்கள் அபூபக்ர்ؓ, உமர்ؓ என்பதில் ஐயமில்லை அறிஞர்கள் அதில் ஒரு மித்த கருத்திலிருக்கின்றனர்.

ஆனால், மூன்றாம் இடத்தை வகிப்பவர் உஸ்மான் ﷺ அவர்களா? அல்லது அலி ﷺ அவர்களா? என்பதில் சிறு கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஆனால் பெரும்பான்மையான அஹ்லுஸ்ஸுன்னாக்கள் மூன்றாமிடம் கலீபா உஸ்மான் ﷺ அவர்களுக்குரியது, நான்காமிடமே கலீபா அலி ﷺ அவர்களுக்குரியது என்பதில் உறுதியாக இருக்கின்றனர். ஏனெனில் ஸஹாபாக்கள் அனைவரும் அலி ﷺ அவர்களைவிட உஸ்மான் ﷺ அவர்களையே முற்படுத்தினர். அதுபோன்று உஸ்மான் ﷺ கலீபாவாக்கப்பட்டபோது இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்; "மீதமிருந்தவர்களில் மிகச்சிறந்தவர் தலைவராக்கப் பட்டிருக்கிறார்." (السنة للخلال ص 384)

இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: "அஹ்லுஸ்ஸுன்னாக்களின் அறிஞர்கள், தலைவர்கள், படைவீரர்கள், வணக்கசாலிகள் அனைவருமே இந்த சமூகத்தில் சிறந்தவர் அபூபக்ர் ﷺ, பின்பு உமர் ﷺ பின்பு உஸ்மான் ﷺ பின்பு அலி ﷺ என்று சொல்வதில் ஏகோபித்த முடிவில் இருக்கின்றனர்" (مجموع الفتاوى 3/406)

**05- உமர் ﷺ அவர்களால் நியமிக்கப்பட்ட 06பேர் கொண்ட ஆலோசனை சபையில் உஸ்மான் ﷺ, அலி ﷺ தவிர்ந்தவர்கள்:**

உமர் ﷺ அவர்கள் மரணிக்கும் போது தனக்குப்பின் ஆட்சிசெய்பவரை தீர்மானிக்கும் பொறுப்பை 06பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இதற்கு எந்த ஸஹாபியும் முரண்படவில்லை என்பதால் இது ஸஹாபாக்களின் ஏகோபித்த முடிவாகக் கொள்ளப்படுகிறது. இதனால் நான்கு கலீபாக்களிற்கு அடுத்ததாக சிறப்புக்குரியவர்களாக இவர்கள் கருதப்படுகின்றனர்.

அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் ﷺ, தல்ஹா ﷺ, ஸுபைர் ﷺ, உஸ்மான் ﷺ, அலி ﷺ போன்றோர் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.



**06- சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் செய்யப்பட்ட பிரபல்யமான பத்துப்பேர் தவிர்ந்த; சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் செய்யப்பட்ட ஏனைய ஸஹாபாக்கள்:**

நபி ﷺ அவர்கள் குறித்த சிலரின் பெயரைக்கூறி சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறினார்கள். இது இவர்கள் ஏனையவர்களைவிட சிறப்புக்குரியவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**07- பத்ர் போரில் கலந்துகொண்டவர்கள்:**

இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் கூறுவதாக அல்லாலகாயி சொல்கிறார்; "....பின்பு (சிறப்புக்குரியவர்கள்) பத்ரில் கலந்து கொண்ட முஹாஜிர்கள், பின்பு பத்ரில் கலந்து கொண்ட அன்ஸார்கள்." (شرح أصول إعتقاد أهل السنة)

**08- மக்காவெற்றிக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள்:**

''அன்றியும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? மேலும் வானங்கள் மற்றும் பூமியிலுள்ளவர்களின் வாரிசுரிமை அல்லாஹ்வுக்கே உரியது. உங்களில் (மக்கா) வெற்றிக்கு முன்னர் யார் தன் பொருளை செலவு செய்து யுத்தமும் புரிந்தாரோ அவருக்கு உங்களில் யாரும் நிகராகமாட்டார். (முந்திய) அவர்கள் (மக்கா வெற்றிக்குப்) பிறகு செலவும் செய்து போரிட்டார்களே அத்தகையோரைவிட பதவியால் மிக மகத்தானவர்கள் (எனினும்) ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் நன்மையையே வாக்களித்திருக்கிறான். மேலும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்குணர்பவன்.'' (57:10)

**09- ஏனைய ஸஹாபாக்கள்:**

நாம் இதற்கு முன்னால் குறிப்பிட்ட எந்தக்குழுவிலும் சேராமல் மீதமாக இருக்கும் ஸஹாபாக்கள் அவர்களுக்கு பின்

வந்த தாபியீன்களைவிட சிறப்புக்குரியவர்கள் என்பதில் அறிஞர்கள் ஏகோபித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர். நபி ﷺ அவர்கள் பின்வருமாறு சொல்கிறார்கள்: "மனிதர்களில் மிகவும் சிறந்தவர்கள் என்னுடைய இந்த நூற்றாண்டில் வாழ்பவர்கள்..." (புஹாரி)

அந்தஸ்து அடிப்படையில் ஸஹாபாக்களின் படித்தரங்கள் பற்றிய இந்த ஒழுங்கு படுத்தல் முடிந்தவரை முயற்ச்சித்து வழங்கப்பட்டுள்ளது. சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவைகள் தாக்கம் செலுத்தாது என்றே கருதுகிறேன். அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன்.

❁❁❁



## ஸஹாபாக்களைக் குறை கண்டால் அல்லது காபிர்கள் என்று சொன்னால்:

ஸஹாபாக்களைக் காபிர்கள் என்றோ, உள்ளொன்றுவைத்து புறமொன்றாக நடப்பவர் என்றோ விமர்சிப்பவர்கள். பல அபாயகரமான விளைவுகளுக்குத் தங்களை உள்ளாக்கிக்கொள்ள நேரிடும். அவை பின்வருமாறு.

**01) இறைவனை மிஞ்சிய செயற்பாடு:**

அல்லாஹ் ஸஹாபாக்களில் பொரும்பாலோரை சுவர்க்கவாதிகள என்று சொல்கிறான்: அவர்களைப் பொருந்திக் கொண்டதாகக் குறிப்பிடுகிறான். அல்லாஹ் பொருந்திக்கொண்டதாக சொல்லுகின்ற மனிதர்களை நாம் மோசமானவர்கள் என்று சொன்னால் அல்லது அவர்கள் நயவஞ்சகத்தோடு நடந்து கொண்டார்கள் என்று விமர்சித்தால் நாம் இறைவனை மிஞ்சி செயற்பட்டதாக அமையும். அல்லாஹ் எம் அனைவரையும் பாதுகாப்பானாக.

**02) அல்-குர்ஆன், அஸ்ஸு ன்னாவை பொய்ப்பித்தல்:**

அல்-குர்ஆன், அஸ்ஸுன்னா ஸஹாபாக்களை புகழ்ந்து சொல்கிறது. அவர்களை நேசிப்பது ஈமானின் அடையாளம் என்று சொல்கிறது. அவர்களுடன் எங்கள் தர்மங்களையும் தியாகங்களையும ஒப்பிடமுடியாது. அவர்களின் தர்மம் சிறியதாக இருந்தாலும், நன்மை அதிகமாகும் எனும் கருத்தை முன்வைக்கிறது.

இவ்வாறு புகழப்பட்ட ஸஹாபாக்கள் விடயத்தில் குறை காண்பதும் அவர்களை மோசமானவர்களாக சித்தரிப்பதும் அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் நிராகரிப்பதாக அமையும். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

**03) அல்லாஹ்வே அவனது தூதரை கேவலப்படுத்தியதாக அமையும்:**

இந்த உலகத்தில் மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராக அல்லாஹ் நபியவர்களைத் தேர்வு செய்கிறான். அவருக்குப்பின் நபி வருவதில்லை. அவரே இறுதித்தூதர். அவருக்கே மறுமையில் எல்லா மக்களுக்காகவும் கேள்வி கணக்கை துரிதப்படுத்துமாறு செய்யும் சிபாரிசு வழங்கப்பட்டிருக்கிறது. அவர் மீது அல்லாஹ்வும் அவனது அமரர்களும் ஸலவாத்துச்சொல்கிறார்கள் எனவே மக்களே நீங்களும் ஸலவாத்துச்சொல்லுங்கள் என்று அல்குர்ஆன் சொல்கிறது...

இவ்வளவு சிறப்புக்களும் பொருந்திய நபியவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஸஹாபாக்களை நாம் குறை கண்டால் அல்லாஹ் தன் தூதருக்கு அவரை தூய்மையான அடிப்படையில் பின்பற்றுவதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தாமலும் அல்லது அவரைச் சூழ இருந்தவர்கள் அவரை ஏமாற்றி உள்ளொன்றும் வெளியொன்றுமாய் நடந்ததை அவருக்கு தெரிவிக்காமலும அவரைக் கேவலப்படுத்தியதாகவே அமையும். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

**04) ஸஹாபாக்களை பயிற்றுவிப்பதில் நபியவர்கள் தோல்வி கண்டார்கள்:**

நபியவர்கள் இந்த உலகத்தில் பயிற்றுவிப்பாளர்கள் எல்லோரையும் விட மிகச்சிறந்த பயிற்றுவிப்பாளராகத் திகழ்ந்தார்கள். மறுமையின் நிகழ்வுகளையும் இவ்வுலகத்தின் போலித் தன்மையையும் எடுத்துக்காட்டி மக்கள் மனங்களில் இஸ்லாத்தை உறுதிப்படுத்துவது இறைவன் துணையினால் நபியவர்களுக்குக் கைவந்த கலையாகவிருந்தது.

"நபி ﷺ அவர்கள் மரணித்த பின் குறிப்பிட்ட 10பேர் அல்லது அதைவிட சற்று கூடுதலானவர்களைத் தவிர பெரும்பான்மையான ஸஹாபாக்கள் மதம்மாறிவிட்டார்கள்" என்று சொன்னால், நபி ﷺ



அவர்கள் 23வருட தன்னுடைய பயிற்றுவிப்பில் தோல்வி கண்டுவிட்டார்கள் என்பதுதான் அர்த்தம். நபியவர்களுக்கே பயிற்றுவிக்க முடியவில்லை என்றால் யாரால்தான் முடியும். அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

**05) தங்களை பொய்யர்கள் என்று அடையாளப்படுத்தல்:**

ஒருவர் ஸஹாபாக்களை பொய்யர்கள், நயவஞ்சகர்கள், நடித்து வாழ்ந்தார்கள், மார்க்கத்தை மறைத்தார்கள் என்று சொல்வதே அவர் பொய்யர் என்பதற்கு போதுமான ஆதாரமாகும். ஏனெனில், அல்குர்ஆனும், அஸ்ஸுன்னாவும் புகழ்ந்து சொன்ன மக்கள் பொய்யர்களாக நிச்சயமாக இருக்கமுடியாது. எனவே யார் இப்படி விமர்சிக்கிறார்களோ அவர்கள்தான் பொய்யர்களாக இருக்கமுடியும்.

தர்க்கரீதியாக நாம் யோசித்தால் நிச்சயமாக ஸஹாபாக்கள் நயவஞ்சகர்களாக இருக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில், ஒரு மனிதனிடம் மிகவும் பெறுமதியாக இருப்பது அவனுடைய உயிரும் பொருளாதாரமும்தான். இந்த இரண்டையும் விட பெறுமதிவாய்ந்த எதுவும் இருக்கமுடியாது.

ஸஹாபாக்கள் இந்த இரண்டையும் இறைவனுக்காக, அவனின் மார்க்கம் வாழவேண்டும் என்பதற்காகத் தியாகம் செய்தார்கள். நபியவர்களை பாதுகாப்பதற்காக பல போராட்டக் களங்களை சந்தித்தார்கள் பல்லாயிரம் சொத்துக்களை இழந்தார்கள், பல்லாயிரம் உயிர்களைப் பலி கொடுத்தார்கள். தங்கள் தேவையை விட மார்க்கத்தின் தேவையை முதன்மைப்படுத்தினார்கள். தன்னை விட தன் சகோதரனை அதிகமாகக் கவனித்தார்கள். தன் சொத்தின் சரிபாதியை மக்காவில் இருந்து வந்தவருக்கு அவர் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காகக் கொடுத்தார்கள்.

இதையெல்லாம் அவர்கள் நடிப்பிற்காகத்தான் செய்தார்களா? ஒரு மனிதன் நடித்துக்கொண்டு தன் உயிரையே மாய்த்துக்

கொள்வானா? தன் உயிர் போவதைவிட நபியின் காலில் முட்தைப்பதை கூட மிகவும் வேதனைக்குரியதாக கருதினார்களே, இதுவும் நடிப்பின் வெளிப்பாடா? நிச்சயமாக இருக்க முடியாது. எனவே யாரெல்லாம் ஸஹாபாக்களை நடிகர்கள் என்றும் நயவஞ்சகர்கள் என்றும் விமர்சிக்கின்றார்களோ அவர்கள்தான் பொய்யர்கள்; நயவஞ்சகம் கொண்ட கல்நெஞ்சர்கள்.

**06) இஸ்லாமிய வரையறைகளையும் போதனைகளையும் மீறியசெயல்:**

ஸஹாபாக்கள் மரணித்துவிட்டார்கள். மரணித்தவர்கள் விடயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. அதை மீறும் போது மரணித்தவர்கள் விடயத்தில நாம் இஸ்லாமிய வரையறைகளை மீறியவர்களாகக் கருதப்படுவோம்.

✸ மரணித்தவர்களின் நல்லதையே பேசுதல்:

நபி ﷺ அவர்கள் மரணித்தவர்களின் நல்லதையே பேசுங்கள் என்றார்கள். "மரணித்தவர்களை ஏசாதீர்கள். ஏனெனில், அவர்கள் அனைவரும் எதைச்செய்தார்களோ அதை இறைவனிடம் அடைந்து கொண்டார்கள்." (புஹாரி 1329)

✸ மரணித்தவர்களின் பாவங்களை மன்னிக்குமாறு பிரார்த்தித்தல்:

மையவாடிகள் பக்கம் செல்லும் போது மரணித்தவர்களுக்காக பாவமன்னிப்புக்கோருமாறு நபி ﷺ அவர்கள் கூறினார்கள். மையவாடிகளின் பக்கம் செல்லும் ஒருவர் பின்வரும் பொருள்பட அமைந்த துஆவை ஓத வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்கள்.

"இந்த கப்ருகளில் வாழும் மு.்.மீன்கள், முஸ்லிம்கள் அனைவர் மீதும் இறைவனின் சாந்தி உண்டாவதாக. அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாமும் உங்களுடன் வந்து சேர்ந்துவிடுவோம் அல்லாஹ் எங்களையும் உங்களையும் மன்னிப்பானாக."

(முஸ்லிம் 2302)



அல்குர்ஆனில் அல்லாஹ் மு.்.மீன்களின் பண்பு தங்களைவிட முந்திச்சென்ற மு.்.மீன்களுக்காக பிரார்த்திப்பதாகும் என்று கூறுகிறான்.

"மேலும் அவர்களுக்குப்பின் வந்தார்களே அத்தகையவர்கள் 'எங்கள் இரட்சகனே! எங்களையும், விசுவாசம் கொள்வதில் எங்களை முந்திய எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னிப்பாயாக. விசுவாசங்கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன்: மிக்க கருணையுடையவன்' என்று (பிரார்த்தனை செய்தும்) கூறுவார்கள்" (59:10)

பொதுவாக மரணித்தவர்கள் விடயத்தில் இவ்வாறு நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் சொல்லியிருக்க எமக்காக இஸ்லாத்தை பாதுகாத்துத்தந்த எம் பெருமானாரின் தோழர்கள் விடயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்வதே பொருத்தமானதாகும்.

## ஸஹாபாக்கள் விடயத்தில் வழிகெட்டுப்போனவர்கள்:

வரலாற்றில் ஸஹாபாக்கள் விடயத்தில் பலர் மோசமான கருத்தைக்கொண்டவர்களாக இருந்த போதிலும் இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய இரண்டு குழுக்கள் இந்த விடயத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்தன.

01) றாபிழாக்கள்
02) ஹவாரிஜ்கள்

**★ றாபிழாக்கள்:**

ஷீஆக்களில் எல்லை மீறிய ஒரு கூட்டத்தினரே றாபிழாக்களாகும் இன்று உலகத்தில் வாழும் ஷீஆக்களில் 95விகிதமானோர் றாபிழாக்களே. மீதமிருக்கின்ற 5சதவிகிதத்தில்தான் இஸ்மாயீலிய்யா, ஸைதிய்யா, நுஸைரிய்யா போன்றவர்கள் உள்ளனர் ஆனாலும், இவர்களும் றாபிழாக்களின் கருத்துக்களையும், திட்டங்களையும் உள்வாங்கிக் கொண்டு தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொண்டுள்ளனர். இதனால்தான் இமாம்களும் அறிஞர்களும் இன்றிருப்போரை ஷீஆக்கள் என்று சொல்வதற்கு பதிலாக றாபிழாக்கள் என்று அழைக்கின்றனர்.

றாபிழா என்றால் நிராகரித்தவர், மறுத்தவர் என்பது பொருள். அபூபக்ர்ﷺ, உமர்ﷺ, உஸ்மான்ﷺ அவர்களின் சிறப்புக்களை மறுத்ததாலேயே இவர்களுக்கு இவ்வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஸஹாபாக்களில் குறிப்பிட்ட சிலரைத் தவிர மற்ற அனைவருமே காபிர்கள் என்பது றாபிழாக்களின் நிலைப்பாடு. மேலும் ஸஹாபாக்கள் எல்லோரும் நபியவர்களுடன் நடித்துக்கொண்டே வாழ்ந்தார்கள் அவர்களுக்கென்று ஒரு தனியான கொள்கை இருக்கவில்லை. நபியவர்கள் மரணித்தவுடன் அவர்களது



நயவஞ்சகம் வெளியானது. அவர்கள் முஸ்லிம்களுக்கு சதி செய்யக் கூடியவர்களாகவும் நிராகரிப்பை வளர்க்கக்கூடியவர்களாகவும் மாறிவிட்டனர். இவ்வாறு ஸஹாபாக்கள் விடயத்தில் பல மோசமான, இஸ்லாத்தை விட்டும் தூரப்படுத்தக்கூடிய, எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத கொள்கைகளைக் கொண்டிருக்கின்றனர்.

ஸஹாபாக்கள் பற்றி ஷீஆ அறிஞர்கள் குறிப்பிடுகின்ற அபத்தமான கருத்துக்களை தொகுப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். நமக்குக்கிடைத்த கருத்துக்களை மாத்திரம் தொகுப்பதானாலும் பல புத்தகங்கள் எழுதலாம். விரிவை அஞ்சி விட்டிருக்குறேன். என்றாலும், ஸஹாபாக்கள் விடயத்தில் அவர்களின் வன்நெஞ்சத்தையும் கொடூர சிந்தனையையும் தெளிவுபடுத்தும் வகையிலும், மற்றவர்கள் அதைப்புரிந்து கொள்வதற்காகவும் சில கருத்துக்களை மாத்திரம் இங்கே இணைத்துக்கொள்கிறேன்.

இங்கு நாம் குறிப்பிடும் கருத்துக்களில் ஒரு முஸ்லிம் என்பதற்கு மேலாக மனிதன் என்ற அடிப்படையில் சொல்லக்கூடாத வெட்கித்துத் தலைகுனிய வேண்டிய பல கருத்துக்கள் உள்ளன. ஷீஆக்களின் உண்மை நிலையை இந்த சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் பசுத்தோல் கழற்றப்படவேண்டும். அவர்களின் வஞ்சகமுகத்தை எல்லோரும் இனங்காண வேண்டும் என்ற நிர்ப்பந்தம் மாத்திரம் இல்லையென்றால், நிச்சயமாக நான் இவைகளை எழுதமாட்டேன். எல்லாவற்றுக்கும் அல்லாஹ் போதுமானவன்.

சிலர் இந்தக் கருத்துக்கள் ஷீஆக்களின் பழைய புத்தகங்களில்தான் உள்ளன. தற்போதைய அவர்களின் நடைமுறையில் இல்லை என்று குறிப்பிடுகின்றனர். இவர்கள் அல்லாஹ்வைப் பயந்துகொள்ள வேண்டும். உண்மையில் இந்தக் கருத்தை ஆய்வு செய்துதான் சொல்கிறார்களா? இவர்கள் சொல்வது உண்மையானால், ஏன் இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருக்கின்ற புத்தகங்களை ஷீஆக்கள் தற்போதும் அச்சிடுகின்றார்கள்? அந்தக்

கருத்துக்களைச் சொன்னவர்களை ஏன் இன்றுவரை தங்கள் இமாம்களாக மதிக்கின்றனர்? அவர்களின் தற்கால அறிஞர்கள் ஏன் இந்தக் கருத்துக்களை ஆதாரமாகக் கொள்கின்றனர்? ஏன் இந்த கருத்துக்கள் ஷீஆக்களின் மிம்பர் மேடைகளில் முழங்கப்படுகின்றன? என்பதை சற்று நிதானமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

ஸஹாபாக்களை காபிர்கள் என்றும், அவர்களை சபித்தும் சொல்கின்ற ஷீஆக்களின் அறிவிப்புக்கள் மட்டிட முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளன. இதை ஷீஆ அறிஞர்களே குறிப்பிடுகின்றனர்

அல்-கர்கி (ஷீஆக்களின் முக்கிய அறிஞர்), கலீபாக்கள் காபிர்கள் என்று சொல்லுகின்ற, அவர்களை சபிக்கின்ற சில அறிவிப்புக்களைக் குறிப்பிட்டு விட்டு சொல்கிறார்: "இது போன்ற எங்கள் ஷீஆக்களின் புத்தகங்களில் உள்ள செய்திகளை தொகுப்பதற்கு ஒருவர் முனைந்தால் பல வல்யூம்களை அவர் ஒன்று சேர்க்கலாம். அப்போதும் அது முடியாது. அவற்றில் அதிகமானவற்றை 'குலைனி' தன்னுடைய 'அல்காபி' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தெளிவாக சபிக்கின்ற பல செய்திகளும் சபிக்கத்தூண்டுகின்ற பல செய்திகளும் அதில் உள்ளன."
(نفحــات اللاهــوت ص198)

அல்-மஜ்லிஸி (ஷீஆக்களின் முக்கிய அறிஞர்) சொல்கிறார்: "அபூபக்ர், உமர், இவர்கள் போன்றவர்கள் காபிர்கள் என்று சொல்லும் அறிவிப்புக்கள், அவர்களை சபிப்பதற்கான நன்மைகள், அவர்களிலிருந்து நீங்குதல், அவர்களின் பாவங்களை உள்ளடக்கிய அறிவிப்புக்கள் இந்தப்பாகத்திலோ அல்லது பல பாகங்களிலோ குறிப்பிட முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளன."
(بحــار الأنــوار 30/399)

ஷீஆக்களின் தற்கால அறிஞர்களில் ஒருவரான அபூ அலி அல்-அஸ்பஹானி தனது "فرحـة الـزهراء" என்ற நூலில் 33ம்



பக்கத்தில் குறிப்பிடுகிறார்: "அபூபக்ரையும் உமரையும் காபிர் என்று உறுதிப்படுத்துகின்ற விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது (ஷீஆ அறிஞர்களின்) அதிகமான அறிவிப்புக்களில் நிறைந்து காணப்படுகிறது."

ஷீஆக்களின் முக்கிய அறிஞரான அலியிப்னு யூனுஸ் அல்ஆமிலி குறிப்பிடுகிறார்: "உஸ்மான் அவர்களிடம் ஒரு விபச்சாரி தண்டனை வழங்கப்படுவதற்காக கொண்டுவரப்பட்டாள். அவர் அவளோடு தனது இச்சையை தீர்த்துக் கொண்டார். பின்பு, அவளை கல்லெறிந்து கொல்லுமாறு ஏவினார்."(3/30 الصـــراط المســـتقيم)

அலிஅல் கர்கி சொல்கிறார்: "அபூபக்ர், உமர் உள்ளிட்ட நான்கு மனிதர்களை சபித்தே ஜ∴பர் அவர்கள் தொழுகையை முடித்துக் கொள்பவர்களாக இருந்தார்கள்."
(نفحــات اللاهــوت ص12)

"பரம்பரையிலும், வசதி வாய்ப்பிலும் கீழ்த்தரமான அபூபக்ர், உமர், உஸ்மானை, புத்தியுள்ள எந்த மனிதனும் சிறப்பில் முந்தியவர்கள் என்று நம்பமாட்டான். அவர்கள் அறிவிலோ, போராட்டத்திலோ முந்தியவர்களல்ல. நீண்டகாலமாக, சிலைகளை வணங்கினார்கள். உஹுது, ஹுனைன் போராட்டங்களிலிருந்து விரண்டோடினார்கள்.. இன்னும் அதிகமானவற்றை செய்தார்கள் அவைகளில் சிறிய விடயமே அவர்களை காபிர்களாக்கிவிடும். எனவே அவர்கள் மீதும் அவர்களை நேசிப்பவர்கள் (ஏனைய ஸஹாபாக்கள், முஸ்லிம்கள்) மீதும் இறைவனதும் வானவர்களதும் எல்லா மனிதர்களினதும் சாபம் உண்டாவதாக."
(رسـائل الكــركي)

முஹம்மது இப்னு தாஹிர் அல்-கும்மி அஸ்ஸீராஸி அலி ﷺ அவர்களுக்கு முன்சென்ற மூன்று ஆட்சியாளர்களையும் பற்றிச்சொல்கிறார்: "அவர்கள் முனாபிக்குகளின் தலைவர்கள் ரஸூல்மார்களின் தலைவர் கொண்டு வந்த மார்க்கத்தின் எதிரிகள்."
(نفحــات اللاهــوت)

‘‘மூன்றாம் கலீபாவான உஸ்மான் அநியாயக்காரனாகவும் கெட்டவனாகவும் இருந்தான்.’’ (نفحات اللاهوت)

முஹம்மது பாகிர் அல்மஜ்லிஸி சொல்கிறார்: ‘‘காட்டரபிகள் இருவரும் கோபமடைந்தனர். அதாவது அபூபக்ரும் உமரும் கோபப்பட்டனர். ஏனெனில், அவர்கள் இருவரும் இஸ்லாத்திற்காக ஹிஜ்ரத் செய்யவில்லை. இருவரும் நிராகரிப்பாளர்களாகவே இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றது நயவஞ்சகமே அவர்கள் இருவரும் ஹிஜ்ரத் செய்தது முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கேயாகும்.’’ (مرآة العقول)

‘‘அல்அகாயித்’’ என்ற நூலில் அவன் சொல்லும் போது ‘‘ஷீஆக்களின் மார்க்கத்தில் மிகவும் இன்றியமையாத விடயம்தான் அபூபக்ர், உமர், உஸ்மான், முஆவியா போன்றவர்களிலிருந்து நீங்குவது.’’

தனது ‘‘بحار الأنوار’’ என்ற நூலில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார் அதிலே, உஸ்மான் ﵁ அவர்களுக்கும் அலி﵁ அவர்களுக்கும் பிரச்சினை ஏற்படுகிறதாம். அப்போது உஸ்மான்﵁, அலி﵁ அவர்களைப் பார்த்து உனது வாய்க்குள் மண்போகட்டும் என்று ஏசினாராம் (அதாவது உனக்கு மரணம் ஏற்படட்டும்). இதை விளக்கும் மஜ்லிஸி சொல்கிறார்: ‘‘விபச்சாரியின் மகன் உஸ்மான் எப்படி ஏசுகிறான் பாருங்கள்!. அவன் எப்படி அலியை நோவினை செய்கிறான் பாருங்கள்! அவன் மீதும் அவனை நேசிப்பவர்கள் (ஏனைய ஸஹாபாக்கள், முஸ்லிம்கள்) மீதும் இறைவனின் சாபம் உண்டாகட்டும்.’’

ஷீஆக்களின் ஹதீஸ்கலை அறிஞர் நிஃமதுல்லாஹ் அல்ஜஸாயிரி குறிப்பிடுகிறார்: ‘‘செய்திகளில் வந்திருப்பதைப்போல முதலாம் கலீபா அபூபக்ர் நபி ﷺ அவர்களுடன் இருந்தார் (ஆனால்) அவர் ஜாஹிலிய்யாக் காலத்தில் வணங்கும் சிலை அவருடைய கழுத்திலே தொங்கவிடப்பட்டிருந்தது. அவருடைய ஆடையால்



அதை மறைத்துக் கொள்வார். அவர் ஸுஜூது செய்வார். தான் சிலையை வணங்குவதாகவே நினைத்துக்கொள்வார். நபியவர்கள் மரணிக்கும் வரை இவ்வாறு இருந்தார். பின்பு அவர்களின் உள்ளங்களில் இருந்தவற்றை வெளிப்படுத்தினர்.’’ (الأنوار النعمانية 2/111)

நாம் மேலே குறிப்பிட்ட அதே நூலில் சொல்கிறார்: ‘‘மொத்தத்தில் நாம் அவர்களுடன் (ஷீஆக்கள் அல்லாதவர்களுடன்) ஒரு கடவுளிலோ, நபியிலோ, தலைவரிலோ ஒன்று சேரவில்லை. ஏனெனில், அவர்களது இரட்சகனின் தூதர் முஹம்மத் என்றும், அவரின் பின் அவரின் பிரதிநிதி அபூபக்ர் என்றும் சொல்கின்றனர். நாம் இந்த இறைவனை எங்கள் இறைவனென்றோ அந்த நபியை எமது நபியென்றோ சொல்லவில்லை. மாறாக எந்த இறைவனின் தூதர் முஹம்மதாகவும் அவரின் பிரதிநிதி அபூபக்ராகவும் இருக்கின்றாரோ அந்த இறைவன் எமது இறைவனுமல்ல அந்த நபி எமது நபியுமல்ல என்று சொல்கிறோம்.’’ (2:278)

ஷீஆக்களின் பிரபல்யமான ஒரு அறிஞர் யூஸுபுல் பஹ்ரானி சொல்கிறார்: ‘‘அபூபக்ர் அவரை அல்லாஹ் சபிப்பானாக’’, ‘‘உமர். அவரை அல்லாஹ் சபிப்பானாக.’’ (الشهاب الثاقب ص251،232)

அப்துல் ஹுஸைன் ஷரபுத்தீன் எனும் ஷீஆக்களின் முக்கிய அறிஞர் தனது ‘‘المراجعات’’ என்ற நூலிலே ஸஹாபாக்கள் அஹ்லுல் பைத்தினருக்கு அநியாயம் செய்ததாகவும், ரவ்டிகளாக இருந்ததாகவும், பாவிகளாகவும் பச்சோந்திகளாகவும் திரிந்ததாக குறிப்பிடுகிறார். மேலும் அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது விதியாகி விட்டதாகவும் அதிகமான இடங்களில் குறிப்பிடுகின்றார்.

ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான முஹம்மத் பாகிர் அஸ்ஸத்ர் சொல்கிறார்: ‘‘அபூபக்ர் போராட்டத்தின் கஷ்டங்கள் தொல்லைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்ஸார்களின் பல வீரர்களைத் தன் பாதுகாப்பிற்கு வைத்துக்கொண்டு தலைமைத்துவத்திற்குச் சென்றார்.’’ (فدك في التاريخ ص127)

“தன்னுடைய ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக அபூபக்ர் அஹ்லுல்பைத்களின் முக்கியமான சொத்துக்களைச் சூரையாடியது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல, அல்லது அலி “பதக்” அல்லாத பகுதிகளில் தனக்குக் கிடைப்பதை வைத்து தன்பால் மக்களைத் திருப்பப் பயன்படுத்துவார் என்று அபூபக்ர் பயந்திருக்கலாம். அபூபக்ர் போன்ற ஒருவரிடமிருந்து இவ்வாறு நிகழ்வது அபூர்வமான ஒன்றல்ல. அவர்தான் மக்களை ஏமாற்றுவதற்கான வழியாகவும், வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான ஊடகமாகவும் பணத்தை பயன்படுத்தியவர்.” (فدك في التاريخ ص89)

அதாவது ஸஹாபாக்கள் எல்லோரும் அற்ப தீனாருக்காகவும் திர்ஹத்திற்காகவும் தங்கள் மார்க்கத்தை இலகுவில் விற்றுவிடக்கூடியவர்கள் என்கிறார்.

அதே நூலின் 138வது பக்கத்தில் சொல்கிறார்: “அபூபக்ரின் ஆட்சிக்கு அல்லாஹ் அருள் செய்யவுமில்லை முஸ்லிம்கள் அதைப் பொருந்திக் கொள்ளவுமில்லை.”

186வது பக்கத்தில் சொல்லும் போது: “அபூபக்ர் இஸ்லாமிய முறைப்படி ஆட்சி செய்யவுமில்லை. அவரது ஆட்சி இஸ்லாமிய சாயம் பூசப்பட்ட ஆட்சியாக இருக்கவுமில்லை.”

(அல்லாஹ் எம்மனைவரையும் இவர்களின் மோசமான சிந்தனைகளிலிருந்து பாதுகாப்பானாக!)

ஈரானியப்புரட்சியின் தந்தை என்று கருதப்படும் கொமைனி குறிப்பிடுகிறார்: ‘‘ஸஹாபாக்களுக்கு நேரான வழியை காண்பிப்பதற்காகவும் சரியானதை காட்டுவதற்காகவும் கஷ்டங்களை சுமந்துகொண்டு அதிகமான முயற்சிகளை செய்த அந்த நபி ﷺ அவர்களையே ஸஹாபாக்கள் சரியான அடிப்படையில் மதிக்கவில்லை. அவருக்கு கொடுக்கவேண்டிய உரிமைகளை கொடுக்கவில்லை. அவரை கௌரவிக்க வேண்டிய விதத்தில் கௌரவிக்கவில்லை.” (كشف الأسرار ص 113)



ஷீஆக்களின் முக்கிய நகரமான “கும்” எனும் இடத்தில் ஷீஆ அறிஞர்களுக்கு மத்தியில் அவர்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான “குராஸானி” ஓர் உரையை நிகழ்தினார். அது (مقتطفات ولائية) என்ற பெயரில் நூலுருப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உரையில் அவர் சொல்கிறார்:

“ஷீஆ கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒருவர் இன்றைக்கு தனது குடும்பத்திற்கும் தனது கொள்கையை பின்பற்றுவோருக்கும் செய்யவேண்டிய அடிப்படைப் பொறுப்புக்கள் இரண்டு:

**01)** அலி ﷺ அவர்களின் நேசத்தை மிகமிக உயர்ந்த அடிப்படையில் அவர்களின் உள்ளங்களில் விதைத்தல்.
**02)** அலி ﷺ அவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்காதவர்களை (ஒட்டுமொத்த ஸஹாபாக்களையும், முன்சென்ற கலீபாக்களையும்) மிகவும் கடுமையான அடிப்படையில் வெறுத்தலும் கோபித்தலும்.

இவ்வாறான கோபத்திலும் வெறுப்பிலும் ஒரு கடுகளவு குறையுமானாலும் இந்த சமுதாயத்தை சாபம் பிடித்துவிடும் என்று எச்சரிக்கிறார். (அல்லாஹ் போதுமானவன்.)

ஷீஆக்களின் சமகால அறிஞர்களில் ஒருவர் அபூஅலி அல்-அஸ்பஹானி சொல்கிறார்: “எனவே, அமீருல் மு∴மினீன் அலி அவர்களின் எதிரி யார்?.. நிச்சயமாக சபிக்கப்பட்ட மோசமானவர்களான அபூபக்ரையும், உமரையும் தவிர வேறு எவராகவும் இருக்கமுடியாது இறைவா! அவர்கள் இருவரையும் கடுமையாகத் தண்டிப்பாயாக” (فرحة الزهراء ص9-10)

“பிர்அவ்ன் அல்லாஹ்வை ஈமான் கொள்ளவில்லை; நிராகரித்து அல்லாஹ்வுக்கு இணைவைத்து வாழ்ந்தான். அல்லாஹ்வின் அத்தாட்சியான மூஸா (அலை) அவர்களையும் அவர்களைப் பின்பற்றியோரையும் நோவினை செய்தான். இதனால் இறைவன் பிர்அவ்னையும் அவனின் உதவியாட்களையும் தண்டித்தான். அது போலவே சபிக்கப்பட்ட அபூபக்ரும் அல்லாஹ்வை ஈமான் கொள்ளவில்லை.

காபிராகவும் முஸ்ரிக்காகவும் வாழ்ந்தான். இறைவனின் அத்தாட்சியான அலியை நோவினை செய்தான். அவரின் இரத்தத்தை ஓட்டினான். இதனால், நிச்சயமாக அல்லாஹ் அவனை கடுமையாகத் தண்டிப்பா்ன அவனை பின்பற்றுவோரும் அவனுடன் மறுமையில் எழுப்பப்பட்டு கடுமையான தண்டனையை அடைவர்.'' (فرحة الزهراء ص34)

''அஹ்லுல் பைத்தின் விரோதிகளிடமிருந்து நீங்குவது குறிப்பாக அபூபக்ர், உமர் போன்றவர்களிடமிருந்து நீங்குவது இந்த உலகத்தில் வாழ்பவர்கள் மீது மட்டும் கடமையல்ல. (ஏழு) பூமி, (ஏழு) வானம் என்பவற்றில் வாழும் எல்லா உலகத்தாரின் கடமையுமாகும். அவர்கள் அனைவரும் அவர்களை சபிக்கின்றனர். இந்த உலகங்கள் அல்லாத வேறு சில படைப்பினங்களும் இருக்கின்றன. அவைகளுக்கு அவர்களை சபிப்பதையும், அவர்களிலிருந்து நீங்குவதையும் தவிர வேறு அமல் இல்லை. இதை அதிகமான அறிவிப்புக்கள் மூலம் அறியமுடிகிறது.'' (فرحة الزهراء ص70)

''அபூபக்ரையும் உமரையும் சபிப்பதும் அவர்களிலிருந்து நீங்குவதும் இந்த உலகத்தில் பகுத்தறிவில்லாதவற்றுக்கு மத்தியிலும் பரவிக்காணப்படுகிறது. சில பிராணிகள் அவைகளுக்கே உரிய மொழியில் அவர்களை சபிக்கின்றன. வெளிப்படையாக தெரியும் வகையில் அவர்கள் இருவரிடமிருந்தும் விரண்டோடுகின்றன'' (فرحة الزهراء)

''ஆயிஷாவும், ஹப்ஸாவும் அவர்களின் தந்தையர்களைப் போலவே மோசமானவர்களாக வாழ்ந்தார்கள் அதிகமான பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்தார்கள். அவைகளில் ஒன்றுதான் நபி ﷺ அவர்களுக்கு அவர்கள் நஞ்சூட்டியது.'' (فرحة الزهراء)

''அபூபக்ர், உமர், அவர்களை பின்தொடர்ந்தவர்களை நேசிப்பது மிகவும் தண்டனைக்குரிய குற்றமாகும். எந்தமனிதனிடம் அவர்கள் இருவர் மீதும் நேசம் உள்ளதோ அவன் எத்தகையவனாக,



எந்தப்படித்தரத்தில் இருந்தாலும் சரி, அவர்கள் இருவரையும் விரும்புபவர் இறைவனின் மலக்காக இருந்தாலும், அவர் இறைவனுக்கு நெருக்கமானவராக இருந்தாலும் இல்லாது போனாலும் அவர் கடவுளின் கோபத்திற்குரியவராக மாறுவார். மறுமையில் மிகவும் கடுமையாக அவர் தண்டிக்கப்படுவார்.'' (فرحة الزهراء)

இந்த நூலில் அஸ்பஹானியின் உச்சகட்டம் இத்தோடு முடிந்து விட்டது என்று நினைக்காதீர்கள், இந்த நூல் முழுக்க முழுக்க ஸஹாபாக்களுக்கு ஏசுவதை இலட்சியமாகக் கொண்டது என்றாலும் உமர் ؓ அவர்களைக் கொலை செய்தது பற்றி அவன் சொல்வதைக்கூறி முடிக்கிறேன்.

''உமரின் கொலை'' என்று இந்த நூலில் தனியான ஒரு பாடத்தை எழுதியுள்ளான். அதிலே உமர் ؓ அவர்களைக் கொலை செய்த சாபத்திற்குரிய நெருப்புவணங்கி அபூலு.ஃலுஆவை புகழ்கிறான் அவன் சொல்கிறான்:

''அபூ லு.ஃலுஆ என்றால் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அபூலு.ஃலுஆ ஈரானைச் சேர்ந்தவன். அவனது பெயர் பாரசீகப்பெயர் (பைரூஸ்). அவன் கண்ணியமிக்க இறைபாதையில் போரிடும் முஸ்லிம்களில் ஒருவனாக இருந்தான். அதுபோல் அலி ؓ அவர்களை விரும்பி மற்றவர்களை வெறுக்கும் சுத்த ஷீஆக்களில் ஒருவனாகவும் இருந்தான். இந்த கண்ணியமிக்க மனிதன் பெரும் சிறப்பை அடைந்தான். காரணம் பாதிமதுஸ்ஸஹ்ராவின் பிரார்த்தனை பரகத்பொருந்திய இவனது இரண்டு கரங்களினால் நிறைவேற்றப்பட்டது. பாதிமா ؓ அவர்களைக் கொன்றவனைக் கொன்றான். அவனது (உமர் ؓ) துன்பங்கள் கெடுதிகளிலிருந்து மனித இனத்துக்கு விடுதலை வழங்கினான். நாம் இவ்வளவு அதிகமான ஆண்டுகளின் பின்பு ஒரு உண்மையைச் சொல்கிறோம்,

அபூலு.ஃலுஆவே அல்லாஹ் உனக்கு அருள் செய்வானாக. ஸஹ்ராவின் (பாதிமாவின்) பிள்ளைகளின் உள்ளங்களில்

சந்தோசத்தை நுழைத்துவிட்டாய்.. இன்றைக்கு இருக்கின்ற ஷீஆக்களிடம் எதிர்பார்க்கப்படும் விடயம் என்னவென்றால் தூய்மையால் நிரம்பிய அல்லாஹ்வின் அருளைப்பெற்ற காஸானில் உள்ள (அபூலு.ஃலுஅவின்) கப்ரை தரிசிப்பதாகும்." (فرحة الزهراء)

ஷீஆக்களின் கொள்கையை விளங்கிவிட்டீர்களா! அபூலு.ஃ.லுஆ ஒரு நெருப்பு வணங்கிதானாம். ஆனால், அவன் உமர் ﷺ யைக் கொன்றதற்காக இறை நேசனாகிவிட்டானாம்.

ஷீஆக்களின் மிக முக்கியமான அறிஞர்களில் ஒருவரான துஸ்துரி குறிப்பிடுகிறார். "மூஸா ﷺ அவர்கள் பனூ இஸ்ரவேலர்களில் பலருக்கு நேர்வழி காட்டினார்கள். ஆனால், மூஸா ﷺ வாழ்ந்த காலத்திலேயே அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை விட்டு சென்று விட்டனர். ஹாரூன் ﷺ அவர்களைத் தவிர வேறு எவரும் இஸ்லாத்தில் இருக்கவில்லை. இது போலவே முஹம்மத் ﷺ அவர்களும் அதிகமானவர்களுக்கு நேர்வழி காட்டினார்கள். ஆனால் நபியவர்கள் மரணித்ததும் அவர்கள் அனைவரும் மதம் மாறிவிட்டனர்."
( إحقاق الحق للتستري ص316 بواسطة كتاب أوجز الخطاب)

ஷீஆக்களின் பிரதானமான அறிஞர்களில் ஒருவரான மஜ்லிஸி குறிப்பிடுகிறார்:

"ஸஹாபாக்களும் ஏனையவர்களைப் போன்றுதான். அவர்களிலும் நீதமானவர்கள் இருக்கிறார்கள், அவர்களில் நயவஞ்சகர்கள், கெட்டவர்கள் எல்லோரும் உள்ளனர். அதுமட்டுமல்ல. அவர்களில் மிகவும் அதிகமானவர்கள் வழிகெட்டவர்கள்."
(أوجز الخطاب لأبي محمد الحسيني ص:14)

குர்ஆனுக்கு விரிவுரை வழங்குவதில் ஷீஆக்களிடம் பிரபல்யமான காஷானி என்பவர் குறிப்பிடுகிறார்: "ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் நயவஞ்சகத்தை மறைத்துக்கொண்டே நபியவர்களுடன் வாழ்ந்தார்கள். அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டக்



கூடியவர்களாகவும் நபியவர்களை கண்ணியப்படுத்துகின்ற அடிப்படையில் அவரை இழிவுபடுத்துதல், கஷ்டப்படுத்துதல் போன்ற விடயங்களில் அவர்கள் இட்டுக்கட்டக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்."
(أوجز الخطاب في بيان موقف الشيعة من الأصحاب ص:25)

"மனித இனத்தில் நபியவர்களை ஒருவர்தான் ஈமான் கொண்டார் அவர்தான் சத்தியத்தை தேடி தனது நாட்டிலிருந்து புறப்பட்டவர் அவர்தான் ஸல்மானுல் பாரிஸி ﷺ"
(كتاب الشيعة والسنة في الميزان)

"உமர் அவர்கள் ஒரு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். அது ஆண் தண்ணீரினால்தான் சற்றுத்தணியும். இதனால் பின் துவாரத்தில் ஆண் புணர்ச்சியில் ஈடுபடக்கூடியவராக அவர் இருந்தார்." (الأنوا النعمانية 1/63)

(அல்லாஹ் போதுமானவன். இந்த ஷீஆக்களின் அத்துமீறிய, மனிதமில்லாத செயற்பாடுகளுக்கு அல்லாஹ் கூலி வழங்குவானாக.)

"உமரின் நிராகரிப்பு இப்லீஸைவிட அதிகமானதல்ல, என்றாலும் அவனை ஒத்தது." (تفسير العياشي 2/223-224)

"எந்தவொரு புத்தியுள்ள மனிதனும் உமர் காபிர் என்பதில் சந்தேகப்பட முடியாது. அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் சாபம் அவன் மீதும் அவனை முஸ்லிம் என்று கருதுபவர்கள் மீதும் அவனை சபிப்பதை தடுப்பவர்கள் மீதும் உண்டாவதாக."
(جلاء العيون للمجلسي ص45)

முஹம்மத் ஸாலிஹ் அல் ஜவ்ஹரி சொல்கிறார்: "யாராவது அபூபக்ரையும் உமரையும் மாலையில் சபித்தால் அவர் காலையாகும் வரை அவருக்கு எந்தப் பாவமும் எழுதப்படாது."
(ضياء الصالحين ص513)

"யார் அபூபக்ருக்கும் உமருக்கும் இந்த மார்க்கத்தில் ஏதாவது இருக்கிறது என்று நினைத்தானோ அவனுடன் அல்லாஹ் மறுமையில் பேசமாட்டான் அவனை தூய்மைப்படுத்தவுமாட்டான். அவனுக்கு நோவினைதரும் வேதனை உள்ளது."
(أصـــول الكـــافي 1/373)

அல் ஹுர்ருல் ஆமிலி சொல்கிறான்: "ஷீஆக்கள் எதிர்பார்த்திருக்கும் மஹ்தி வந்து அபூபக்ரையும் உமரையும் உயிர்கொடுத்து எழுப்புவார். பின்பு அவர்கள் இருவரையும் ஈத்தங் குற்றியில் அறைவார். ஒவ்வொரு நாளைக்கும் இருவருக்கும் 1000 தடவைகள் அடிப்பார்." (إيقـاظ مـن الهجعـة)

"நிச்சயமாக யாருடைய உள்ளத்தில் உஸ்மானுக்கு எதிர்ப்பு இல்லையோ, யார் அவனின் மானத்தை போக்குவதை ஹலாலாக்க -வில்லையோ மேலும் யார் அவர் காபிர் என்பதை நம்பவில்லையோ, அவன் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் எதிரியாவான் அல்லாஹ் இறக்கிவைத்ததை நிராகரித்தவனாவான்"
(نفحـات اللاهـوت)

ஷீஆக்களின் அறிஞரான அல்-கும்மி "ஆயிஷாவும் ஹப்ஸாவும் தவறாக நடந்தார்கள்" என்று சத்தியமிட்டுச் சொல்கிறார்.
(تفســـير القمـــي2/377)

"ஆயிஷா தவறான நடத்தையின் மூலம் சேகரித்த 40தீனார்களையும் அலியின் விரோதிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்தார்."
(مشـــارف أنـــوار اليقيـــن ص86)

"நபியவர்களின் அபம் நரகம் நுழையும். ஏனெனில் அது சில முஸ்ரிக்கான பெண்களுடன் சேர்ந்துள்ளது."
(كشـف الأسـرار للموسـوي ص24)

கொமைனி சொல்கிறார்: "நீங்கள் ஸஹாபாக்கள் என்று சொல்லும் அவர்கள் நயவஞ்சகர்கள், முனாபிக்குகள்."
(الحكومـــة الإســـلامية ص69)



**ஷீஆக்கள் ஸஹாபாக்களாகக் கருதுவோர் யார்?**

ஷீஆக்கள் மிகவும் சொற்பமானவர்களையே ஸஹாபாக்களாக கருதுகின்றனர். அவர்களின் அறிவிப்புக்களின் படி 10அல்லது 15பேரையே ஸஹாபாக்களாக இனங்காட்டுகின்றனர்.

அபூ ஜஃபர் சொல்கிறார்: "நபியின் மரணத்தின் பின்பு 03 பேரைத் தவிர மற்றைய எல்லோரும் காபிர்களாகி விட்டனர். அந்த மூவர் யார் என்று கேட்கப்பட்ட போது: மிக்தாத், அபூதர் அல்கிபாரி, ஸல்மானுல் பாரிஸி என்றார்." (رجـال الكشـي)

வேறொரு அறிவிப்பில்: "நபியவர்கள் மரணித்ததன் பின்பு மக்களில் 04 பேரைத் தவிர மற்றைய அனைவரும் காபிர்களாகி விட்டனர் என்றார். அவர்கள்: அலி, மிக்தாத், அபூதர் அல்கிபாரி, ஸல்மானுல் பாரிஸி." (تفســـير العياشـــي)

அதுபோல், ஷீஆக்கள் ஈரானிலே ஹம்ஸா ﷺ அவர்களுக்கு கப்று கட்டியுள்ளனர். எனவே, ஹம்ஸா ﷺ அவர்களையும் ஸஹாபியாக கருதுகின்றனர் என்று சொல்லலாம். அதுபோல் அப்பாஸ் ﷺ, அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ﷺ போன்றோரையும் ஷீஆக்கள் ஸஹாபாக்களாகக் கருதுகின்றனர் என்று சொல்ல முடியும்.

**✸ ஹவாரிஜ்கள்:**

ஹவாரிஜ் என்றால் வெளியானவர்கள் அல்லது பிரிந்து நிற்பவர்கள் என்று பொருள்படும். உண்மையான, கட்டுப்படுவதற்கு கடமையான ஒரு தலைவருக்கு எதிராக செயற்படுபவர்களையும் பிரிந்து நிற்பவர்களையுமே இஸ்லாமிய வரலாற்றில் ஹவாரிஜ்கள் என்று அழைக்கப்படுகின்றது.

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "அவர்கள் மார்க்கத்தை விட்டு வெளியானதாலும், மனிதர்களிலேயே மிகவும் சிறந்தவர்களுக்கு எதிராக அவர்கள் செயற்பட்டதினாலுமே அவர்களை ஹவாரிஜ்கள் என்று அழைக்கின்றனர்." (فتـــح البـــاري 12/283)

ஹவாரிஜ்கள் அலி ﷺ அவர்களின் காலத்திலேயே தோற்றம் பெற்றனர். அலி ﷺ அவர்களின் காலத்தில் அவரின் ஆட்சிக்கு எதிராகப்போர் புரிந்ததோடு கிளர்ச்சிகளையும் செய்தனர். அலி ﷺ அவர்கள் நஹர்வான் எனும் இடத்தில் இவர்களுக்கு எதிராக போராடி அவர்களைத் தோற்கடித்தார்கள். இவர்கள் அலி ﷺ அவர்களின் காலத்தில் பெரும் குழுவாகத்தோற்றம் பெற்றாலும் அதற்கான அடிப்படை நபியவர்களின் காலத்திலிருந்தே ஆரம்பித்தது.

அபூ ஸஈத் அல்-குத்ரி ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“நாங்கள் நபி ﷺ அவர்களுடன் இருந்தோம் நபியவர்கள் யுத்தத்தில் கிடைத்த பொருட்களை பங்கு வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, பனூதமீம் கிளையைச்சேர்ந்த ஒருவர் வந்து,“அல்லாஹ்வின் தூதரே நீதமாகப்பங்கு வையுங்கள்” என்றார். (இதைக்கேட்டு கோபமடைந்த நபியவர்கள்) நாசமாகிவிடுவான். நான் நீதி செலுத்தவில்லையென்றால் யார் நீதி செலுத்துவார் என்று கூறினார்கள். மேலும் “நான் நீதி செலுத்த வில்லையென்றால், நாசமாகிவிடுவேன் நஷ்டவாளியாவேன்” என்று கூறினார்கள்.

(இந்த நிகழ்ச்சியை அவதானித்துக்கொண்டிருந்த) உமர் ﷺ “அல்லாஹ்வின் தூதரே அவன் விடயத்தில் எனக்கு அனுமதி தாருங்கள். அவன் கழுத்தை கொய்துவிடுகிறேன்” என்றார். நபியவர்கள் “இல்லை, அவனை விட்டுவிடுங்கள். அவனுக்கு தோழர்கள் இருக்கிறார்கள். அவர்களின் தொழுகையைப்பார்த்து உங்களின் தொழுகை மிகவும் குறைவானது என்று நீங்கள் கருதுவீர்கள். அவர்களின் நோன்பைப்பார்த்து உங்களின் நோன்பை குறை காண்பீர்கள். குர்ஆனை ஓதுவார்கள் அவர்களின் தொண்டையை அது கடக்காது. வில்லிலிருந்து அம்பு பாய்ந்து செல்வதைப்போல இஸ்லாத்தை விட்டும் அவர்கள் வெளியேறுவார்கள்.”

(புஹாரி 3610, முஸ்லிம் 1064)

அலி ﷺ அவர்கள் நஹர்வான் போராட்டம் முடிந்ததும் மரணித்த ஹவாரிஜ்களில் துல்குவைஸிரா இருக்கிறாரா? என்று



தேடிப்பார்க்குமாறு தோழர்களுக்கு உத்தரவிட்டார்கள். அதிலே துல்குவைஸிராவும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அலி ﷺ அவர்கள்: தான் இவர்களுக்கு எதிராய் போராடியதில் தவறில்லை. போராட்டம் நடத்தவேண்டிய ஒரு கூட்டத்திற்கு எதிராகத்தான் போராடியிருக்கின்றேன். என்பதை நினைத்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

ஹவாரிஜ்கள் முஹக்கிமா, அல்ஹரூரிய்யா, அந்நவாஸிப், அல்மாரிகா, அல்அஸாரிகா, அல்இபாழிய்யா போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

ஹவாரிஜ்களின் கொள்கைகள் இஸ்லாத்திற்கு முரணானவை. அவற்றைப்பற்றி விளக்குவது எமது நோக்கமல்ல. ஸஹாபாக்கள் விடயத்தில் அவர்களின் மோசமான கருத்துக்களை அவதானிப்பதே எமது நோக்கமாகும்.

அல்-காழி அபூபக்ர் இப்னுல் அரபி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: “ஹவாரிஜ்கள் இரண்டு வகை; ஒரு குழுவினர்: “உஸ்மான் ﷺ, அலி ﷺ, ஜமல் போரில் கலந்து கொண்டவர்கள், ஸிப்பீன் போரில் கலந்து கொண்டவர்கள், இறுதித் தீர்ப்புக்காக நியமிக்கப்பட்ட குழுவை பொருந்திக்கொண்டவர்கள் அனைவரும் காபிர்கள். என்று குறிப்பிடுகின்றனர். மற்றைய குழுவினர்: யாரெல்லாம பெரும் பாவம் செய்கிறாரோ அவர்கள் காபிர்கள், நரகத்தில் நிரந்தரமாக இருப்பார்கள் என்று குறிப்பிடுகின்றனர். மற்றும் சில அறிஞர்கள் இமாம் இப்னுல் அரபி சொல்கின்ற முதலாவது குழுவினர் இரண்டாம் குழுவிலிருந்தே தோற்றம் பெற்றனர் என்று குறிப்பிடுகின்றனர். ஏனெனில் முதல் குழுவினர் ஸஹாபாக்களில் அதிகமானவர்களைக் காபிர்கள் என்று சொல்வதற்கு காரணம் அவர்கள் (ஸஹாபாக்களை) பெரும் பாவம் செய்தனர் என்று நினைப்பதாகும்.” (فتــح البـــاري 12/285)

முஸ்தபா அஸ்ஸிபாஈ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

"ஹவாரிஜ்களின் அத்தனை பிரிவுகளுமே பிரச்சினை (உஸ்மான் رضي الله عنه அவர்களின் கொலை) நடப்பதற்கு முன் எல்லா ஸஹாபாக்களையும் நல்லவர்களாகவும், நம்பகமானவர்களாகவுமே கருதினர். பின்பு அலி رضي الله عنه, உஸ்மான் رضي الله عنه, ஜமல் யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள், அதிலே நியமிக்கப்பட்ட இரண்டு நடுவர்கள், அதைப் பொருந்திக்கொண்டவர்கள், இரு நடுவர்களையும் அல்லது அவர்களில் ஒருவரை சரிகண்டோர், அனைவரையும் காபிர்கள் என்றனர். பிரச்சினையின் போது இறுதித் தீர்வுக்காக ஏற்படுத்தப்பட்ட முயற்சியை பொருந்திக் கொண்டு, அந்த ஹலீபாக்களை பின்பற்றிய அதிகமான ஸஹாபாக்களின் ஹதீஸ்களை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இத்தகைய ஸஹாபாக்கள் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளுமளவிற்கு நம்பகமானவர்கள் அல்ல என்று (ஹவாரிஜ்கள்) கருதினர்." (السنة ومكانتها في التشريع الإسلامي 150،151)

அப்துல் காதிர் ஷபீஹ் அல்-ஹம்தி (ரஹ்) அவர்கள் ஹவாரிஜ்களின் பிரிவுகளை குறிப்பிட்டதன் பின்பு பின்வருமாறு சொல்கிறார்கள்: "அலி رضي الله عنه, உஸ்மான் رضي الله عنه, இரண்டு நடுவர்கள், நடுவர்கள் நியமிக்கப்படுவதை பொருந்திக்கொண்டவர்கள், அந்த நடுவர்களில் இருவரின் தீர்ப்பையோ அல்லது ஒருவரின் தீர்ப்பையோ ஏற்றுக்கொண்டவர்கள். அனைவரையும் காபிர்கள் என்று சொல்வதில் ஹவாரிஜ்களின் எல்லாப்பிரிவுகளும் ஒற்றுமைப்படுகின்றன. அது போல் அநியாயம் செய்கின்ற அரசனுக்கு எதிராக போராடவேண்டும் என்பதிலும் ஒற்றுமைப்படுகின்றனர். ஹவாரிஜகள் மாத்திரம் அந்த அரசனை அநியாயக்காரன் என்று கண்டாலும் சரியே."
(الأديان والفرق والمذاهب المعاصرة : 104)

**★ விடைபெறு முன்:**

நாம் மேலே குறிப்பிட்டவற்றில் ஸஹாபாக்கள் விடயத்தில் ஷீஆக்களும் ஹவாரிஜ்களும் சில குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளனர், அந்தக் குற்றச்சாட்டுக்களையும் அதற்கான சில



காரணங்களையும் சுருக்கமாக அவதானிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைகின்றேன்.

**01) ஸஹாபாக்கள் எல்லோரும் நயவஞ்சகர்கள், அவர்கள் நடித்துக்கொண்டே நபியவர்களுடன் வாழ்ந்து வந்தனர்.**

ஸஹாபாக்களின் வரலாற்றைப் படிக்கின்ற எவரும் ஸஹாபாக்கள் நடித்துக்கொண்டுதான் நபியவர்களுடன் வாழ்ந்தார்களா? என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். ஸஹாபாக்கள் செய்த தியாகத்தையும் இந்த இஸ்லாத்திற்காக அவர்கள் இழந்தவற்றையும் பார்க்கின்ற புத்தியுள்ள எந்த மனிதனும் அவர்களின் உளப்பூர்வமான ஈடுபாட்டை உணர்ந்து கொள்வான்.

ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற மரணித்தவனைப்போன்று நடிப்பான். ஆனால் மரணிக்கமாட்டான். தன் நோக்கத்தை நிறைவேற்றி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக நடிக்கின்றவன் தன் உயிரையே மாய்த்துக்கொள்வான் என்று சொல்வது தொடர்பில்லாத வாதம்.

ஸஹாபாக்கள் இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக தங்கள் சொந்தங்கள், சொத்துக்கள், மனைவி மக்கள், நாடு அத்தனையையும் இழந்து நாதியற்று நின்றார்கள். தேவைப்படின் இந்த இஸ்லாத்திற்காக தங்கள் உயிரையும் இழந்தார்கள். சிலர் போராட்டக்களங்களில் மரணிக்கவில்லையே என்று கவலைப்பட்டார்கள். 'இத்தனையும் அவர்களின் நடிப்புத்தான், உளப்பூர்வமான செயற்பாடு அல்ல' என்று சொல்வது அறிவுள்ள எந்த மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம். ஸஹாபாக்கள் இழந்தவைகளைப் பெற்றுக்கொள்ளவே ஒரு மனிதன் நடிக்கவேண்டும். ஆனால், அவை அனைத்தையும் இழந்து ஒருவன் எதற்காக நடிக்க வேண்டும் என்று நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

உலகத்தின் இன்பத்தை அடைந்துகொள்வதற்காக நடித்தார்கள் என்று சொன்னால், உலக இன்பங்களை அதிகமாகப்

பெற்றிருந்த பலர் இந்த இஸ்லாத்தை ஏற்றதினால் அவற்றை இழந்தார்கள். தமக்கு உண்ண அதிகமான உணவிருந்தும் இஸ்லாத்தை ஏற்றதற்காக எதுவுமே இல்லாமல் இலைகுழைகளை உண்ணுமளவுக்கு 03வருடங்கள் அபூதாலிப் பள்ளத்தாக்கில் அடைக்கப்பட்டார்கள். முஸ்அப் இப்னு உமைர் மக்காவில் பெரும் செல்வந்தர். ஒவ்வொரு நாளைக்கும் புதிய புதிய ஆடைகளை அணிந்து திரிந்தவர். இவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபின் அத்தனையையும் இழந்து உஹதில் மரணிக்கும் போது முழுமையாக கபனிடுவதற்குக்கூட ஆடை இல்லாமல் போனது. இவ்வளவு கஷ்டமும் அவரது நடிப்புத்தான் என்று சொல்லமுற்படுவது எந்த வகையில் நியாயம்!.

இந்த உலகத்தில் தலைமைத்துவத்தை அடைந்து கொள்வதற்காக இஸ்லாமியனாக நடித்தார்கள் என்று வைத்துக் கொண்டால், குறைஷிகளின் தலைவர்கள் பலர் இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் தங்கள் பதவிகளையும் கௌரவத்தையும் இழந்தார்கள். தலைவராக இருப்பவர் இந்த மார்க்கத்திற்கு வருவதால தலைமைத்துவத்தை இழக்கிறார். அவரைப்பார்த்து தலைமைக்காக நடித்தார் என்பது வஞ்சக எண்ணம் கொண்ட பிரச்சாரம் என்பதைத் தவிர வேறில்லை. அது மாத்திரமல்ல இஸ்லாத்தை ஏற்பவரின் உயிருக்கே உத்தரவாதமில்லாத அக்காலத்தில், உயிருக்கே ஆபத்தான சந்தர்ப்பத்தில் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களைப் பார்த்து நடிகர்கள் என்பது, நமக்கு நாமே அநியாயம் செய்வதைப்போன்றாகும்.

மனிதர்களின் உள்ளும் புறமும் அறிந்தவனான அல்லாஹ், ஸஹாபாக்களை அவன் பொருந்திக்கொண்டதாக சொல்கிறான். நிச்சயமாக அவர்களின் உள்ளும் புறமும் ஒன்றாக இல்லையென்றால அல்லாஹ் அப்படிச்சொல்லியிருக்க மாட்டான்.



### 02) ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் நபியின் மரணத்தின் பின் காபிர்களாகி விட்டனர்:

நபியின் பாசறையில் வளர்க்கப்பட்ட ஸஹாபாக்கள் நபியின் மரணத்தோடு இஸ்லாத்தை விட்டு ஓடிவிட்டனர் என்பது நபியின் பயிற்றுவிப்பில் குறை காண்பதாகும். நபியவர்கள் அவர்களின் தோழர்களை இந்த சமுதாயத்தில் மிகவும் சிறந்தவர்கள் என்று கூறினார்கள். இது இறைவனின் அங்கீகாரத்தைப்பெற்றது. எனவே இஸ்லாமிய சமுதாயத்தில் மிகவும் சிறந்தவர்களை நாம் இப்படி விமர்சித்தால் நமக்கு என்ன மீதமிருக்கிறது என்பதை சற்று நாம் சிந்திக்க வேண்டும்.

நபியவர்களுக்குப் பின் இந்த இஸ்லாத்தை ஸஹாபாக்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் கொண்டு சென்றனர். அதனை பிரச்சாரம் செய்தனர். பலர் இதில் பலியானார்கள். இன்று இஸ்லாம் இவ்வளவு பரவியிருக்கிறது என்றால் அன்று அவர்கள் இட்ட உறுதியான அடித்தளம் இதற்குக்காரணம் என்பதை எவருமே மறுக்க முடியாது. இந்த இஸ்லாத்தின் தூய வடிவத்தை பாதுகாப்பதற்காக அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பற்றி அறிந்துகொண்ட எவரும் இவ்வாறு விமர்சிக்க மாட்டார்கள்.

இன்று இஸ்லாமிய நாடுகள் என்று சொல்லப்படும் அதிகமான நாடுகள் ஸஹாபாக்களின் முயற்சியினால், போராட்டத்தினால் கிடைத்த வெற்றிகள்தான். இன்னும் சொல்லப்போனால் எவர்களெல்லாம் இந்த குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்களோ அவர்களது நாடுகள் கூட ஸஹாபாக்கள் அவர்களுக்குப்போட்ட பிச்சைதான். பிச்சை போட்டவனின் கையை உடைத்து கழுத்தை நெறிக்க முனைவது ஆரோக்கியமான சமுதாயத்தின் அடையாளமல்ல.

ஒரு கொள்கையைப் பின்பற்றி, அக்கொள்கைக்காகவே தன் உயிரைப் பணயம் வைத்து போராடி, உலக இன்பங்களை இழந்து, தங்களையும் மறந்து செயல்பட்ட ஒரு கூட்டத்தினரைப்பார்த்து, அவர்கள் அந்தக்கொள்கையில் பற்றில்லாமலிருந்தார்கள் என்ற

வாதத்தை அறிவிலிகளான இந்த ஷீஆக்களால் மாத்திரமே சொல்லமுடியும். இது உலகில் எவருமே சொல்லாத விநோதமான விடயம்.

ஹவாரிஜ்களைப்பொறுத்த வரை இந்தக் குற்றச்சாட்டுக்களை வித்தியாசமான அடிப்படையில் முன்வைக்கின்றனர். அதாவது ஸஹாபாக்களின் வாழ்க்கையில் நடந்த சில தவறான முடிவுகள் மூலம் ஏற்பட்ட பரிதாபகரமான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி அவர்களின ஒட்டுமொத்த வாழ்க்கைக்கும், அவர்களின் தியாகங்களுக்கும் முடிச்சுப் போடுகின்ற கைங்கரியத்தைச் செய்கின்றனர். ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்தபிரச்சினைகள் தொடர்பாக தனியான தலைப்புக்களில் இந்நூல் ஆய்வுசெய்துள்ளது.

ஆனால், குறித்த பிரச்சினையின் போது ஏற்படுத்தப்பட்ட நடுவர் குழுவையும், அவர்கள் சொன்ன தீர்ப்பை ஏற்றுக்கொண்டவர் -களையும் காபிர்கள் என்று ஹவாரிஜ்கள் சொல்வது மிகவும் தவறானதாகும்.

இறைவனின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய சமுதாயம் தங்கள் முடிவுகளை மனிதர்களின் கரங்களில் கொடுத்திருக்கின்றனர். எனவே, இவர்கள் இறைவனின் தீர்ப்பை புறக்கணித்துவிட்டதனால் அவர்கள் காபிர்கள் என்று ஹவாரிஜ்கள் குறிப்பிடுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கு இப்னு அப்பாஸ்ﷺ அவர்கள் வரலாற்றுப்புகழ்மிக்க ஒரு பதிலைச் சொன்னார்கள்.

பிரச்சினை என்று வந்துவிட்டால் அதை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்வதற்கு நடுவர் குழுக்கள் ஏற்படுத்தப்படுவது வழக்கம். இது தவறானது, இதை செய்பவன் காபிராகிவிடுவான் என்று விமர்சிக்கிறார்கள் ஹவாரிஜ்கள். இது தவறான ஒரு அணுகுமுறை. ஆனால் ஷீஆக்களைப்பொறுத்தவரைக்கும் தங்கள் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காகவே தப்பான முறையில் ஸஹாபாக்களை இட்டுக்கட்டவும், அதை வைத்து ஸஹாபாக்களை குறைகாணவும் செய்கின்றனர். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக)



ஷீஆக்கள் ஸஹாபாக்களைக் குறை கூறும்போது நபியவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொல்வதாக சில அறிவிப்புக்களை தங்களது நூல்களிலே பதிவு செய்துள்ளனர். இவைகளெல்லாம் உண்மையில் அலிﷺ அவர்களோ, அல்லது ஏனைய அஹ்லுல் பைத்தைச்சேர்ந்த ஸஹாபாக்களோ சொன்னவைகள் அல்ல. அவர்கள் பேரில் இட்டுக்கட்டப்பட்டவைகள். ஷீஆக்கள் தாங்களாகவே சில விடயங்களை உருவாக்கிக்கொண்டு அதை நபியவர்களின் குடும்பத்தினர் சொல்வதாக குறிப்பிடுகின்றனர். இவ்வாறு ஷீஆக்கள் செய்கிறார்கள் என்பது நபியவர்களின் குடும்பத்தினருக்கே தெரிந்திருந்தது. இதனால் அவர்கள் ஷீஆக்கள் விடயத்தில் மக்களை எச்சரிக்கக் கூடியவர்களாகவும், தாங்கள் சொன்னதாக ஷீஆக்கள் சொல்லும் தகவல்கள் பொய்யானது என்று மக்களுக்கு தெளிவுபடுத்தவும் செய்தார்கள்.

ஷீஆக்கள் பற்றி நபியவர்களின் குடும்பத்தினர் சொன்ன கருத்துக்களை “இமாம்களின் பார்வையில் ஷீஆக்கள்” என்ற நூலில் தனியாக தொகுத்துள்ளேன். தேவைப்படுவோர் அந்த நூலை வாசிக்க முடியும். எனவே அலிﷺ, ஹஸன்ﷺ, ஹுஸைன்ﷺ, பாதிமாﷺ அல்லது அவர்களின் பரம்பரையில் வந்த சில அறிஞர்கள் பெயரில் சொல்லப்படுகின்ற செய்திகளில் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

ஷீஆக்களின் நூல்களில் காணப்படுகின்ற இவ்வாறான அறிவிப்புக்களை மக்களுக்கு நாம் எடுத்துக்காட்டும் போது ஷீஆக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அலிﷺ அவர்களும் அஹ்லுல் பைத்தின் மற்ற அங்கத்தவர்களும் ஸஹாபாக்களைப்பற்றி சொல்லுவதாக தங்களின் நூல்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற சில நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்காண்பிக்கின்றனர். ஏனையோர், ஷீஆக்கள் விடயத்தில் கோபத்தோடு நடப்பதைப்போலவும், அவர்களிடம் எந்தத் தப்பான கொள்கையும் இல்லை என்பதைப்போலவும் சித்தரிக்க முயல்கின்றனர். ஆனால், ஷீஆ அறிஞர்கள்: ஸஹாபாக்களை அஹ்லுல் பைத்தினர்

புகழ்வதைப்போல அமைந்திருக்கும் அத்தனை அறிவிப்புக்களும் "தகிய்யா" வுக்காக சொல்லப்பட்டவை அதில் உண்மையில்லை என்று சொல்கின்றனர். ஸஹாபாக்கள் நல்லவர்கள் என்பதற்காகவோ, அவர்களைப் புகழ வேண்டும் என்பதற்காகவோ அஹ்லுல் பைத்தினர் இவ்வாறு சொல்லவில்லை. அதாவது இந்த சந்தர்ப்பத்தில் நாம் இப்படிச் சொல்வதுதான் நமக்கு பாதுகாப்பு (இந்த உலகத்தில்), இப்படிச் சொல்வதனால்தான் மற்றவர்கள் நம்மை தப்பானவர்கள் என்று உணர்ந்துகொள்ளமாட்டார்கள், அதற்குப்பிறகு நாம் ஏனைய கொள்கைகளை அவர்களிடம் பிரச்சாரம் செய்யமுடியும் எனும் காரனங்களுக்காகவே, இவ்வாறு சொன்னார்கள். சந்தர்ப்பத்தைப் பார்த்து தங்களையும், தங்கள் கொள்கையையும் பாதுகாக்கும் நோக்கிலேயே இவ்வாறு நடந்துகொண்டார்கள் அவர்களின் கொள்கை அதுவல்ல. (பார்க்க: تصــــحيح الإعتقـــاد ص71)

❁❁❁



## அஹ்லுல் பைத் என்போர் யார்?

எந்த ஒரு வாசகத்தையும் மொழியியல் ரீதியில் ஆய்வு செய்வதற்கு அறிஞர்கள் மொழித்துறை சார்ந்த அறிஞர்களையும் அவர்களின் நூல்களையுமே அணுகுவர். "அஹ்லுல் பைத்" எனும் இந்த வார்த்தை, அரபு வார்த்தையாக இருந்தாலும் இஸ்லாமிய வரலாற்றோடு மிகுந்த தொடர்புடையதாகவும் பெரும் விளைவுகளுக்கு காரணமானதாகவுமிருக்கிறது. அத்தோடு நபியவர்களுடன் இது தொடர்புபடுத்தப்பட்டு பல சிக்கல்களும் உருவாக்கப்படுகின்றன. இதனால், அதை இஸ்லாமிய வழக்கில் ஆய்வு செய்ய வேண்டிய அவசியமிருக்கிறது. எனவே இந்த வாசகத்தின் சரியான அர்த்தத்தை சந்தேகமின்றி அறிந்துகொள்வதற்கு பின்வரும் 04 முறைகளில் ஆய்வு செய்வோம்.

01) மொழி 02) வழக்கு 03) அல்-குர்ஆன் 04) அஸ்ஸுன்னா

**மொழி:**

"அஹ்லுல் பைத்" எனும் அரபுப்பதம் "அஹ்ல்", "பைத்" எனும் இரண்டு சொற்களின் பிணைப்பால் உருவானதாகும்.

'அஹ்ல்' என்றால் சொந்தக்காரன் என்பது பொருள் இது ஒரு பொதுவான சொல் இது எதனோடு இணைக்கப்படுகிறதோ அதனோடு இணைந்து கருத்தைக் கொடுக்கும். உதாரணமாக 'அஹ்லுல் அம்ர்' என்றால் அதிகாரத்தின் சொந்தக்காரன் அதாவது ஆட்சியாளன் எனும் கருத்தைக்கொடுக்கும். 'அஹ்லுல் ஜன்னாஹ்' என்றால் சுவர்க்க வாசிகள் என்றும் 'அஹ்லுந்நார்' என்றால் நரகவாதிகள் என்றும் பொருள் தரும். 'அஹ்லுல் மத்ஹப்' என்றால் மத்ஹபின் சொந்தக்காரர்கள் அதாவது குறித்த மத்ஹபின் படி நடப்பவர்கள் 'அஹ்லுர்ரஜுல்' ஒரு மனிதனின் சொந்தக்காரர்கள் அவனின் குடும்பத்தினர்.

'அஹல' என்றால் திருமணம் செய்தான் என்ற அர்த்தமும் உள்ளது. 'அஹ்ஹலகல்லாஹ்' என்றால் அல்லாஹ் உனக்கு திருமணம்

முடித்ததுத்தருவானாக! உன்னை குடும்பஸ்தனாக மாற்றுவானாக! என்ற பொருள்படும் பிரார்த்தனையாகும்.

'பைத்' என்றால் வீடு. எனவே 'அஹ்லுல் பைத்' என்றால் வீட்டின் சொந்தக்காரர்கள், வீட்டார், வீட்டில் வசித்துவருவோர். 'அஹ்லு பைதிர்ரஜூலி' என்றால் மனிதன் ஒருவனின் வீட்டார் என்பதாகும். ஒரு மனிதரின் வீட்டார் எனும் போது அதில் பிரதானமான பாத்திரத்தை ஏற்பது அவனது மனைவியாகும். ஒருவரின் குடும்பம் என்றாலே அதில் பிரதானமாக இருப்பது அவனின் மனைவியேயாகும். 'அஹ்லுர்ரஜுல்' என்றும் 'அஹ்லுல்பைத்' என்றும் ஒரு மனிதரைக் குறிப்பிட்டு சொல்லப்படுமாக இருந்தால் அது அவனின் மனைவியையே பிரதானமாக குறிக்கும் மக்கள் இருந்தால் மனைவியோடு சேர்ந்து கொள்வார்கள், இல்லையென்றால பிரச்சினை கிடையாது என்பதை மொழித்துறை வல்லுனர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்களில் முக்கியமானவர்கள் பின்வருமாறு:

ஸுபைதி
அல்ஹலபி
இப்னு மன்ழூர்
ஜவ்ஹரி
ஷமஹ்ஷரி

**✷ வழக்காறு:**

பொதுவாக 'அஹ்லுல்பைத்' எனும் இந்த வார்த்தை பரிபாசையில் மனைவி என்ற கருத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. 'அவன் தன் வீட்டாரோடு வந்தான்' என்று சொன்னால் அவனது மனைவியோடு அவன் வந்திருக்கிறான் என்று நாம் விளங்குவோம். 'தன் குடும்பத்தோடு வந்தான்' என்று சொன்னால்தன் மனைவியோடும் பிள்ளைகளோடும் வந்திருக்கிறான் என்றே விளங்குவோம்.ஒருவன் தன் மனைவியை விட்டுவிட்டு பிள்ளைகளோடு மாத்திரம் வந்தால் தன் குடும்ப சகிதம் வந்தான் என்று பயன்படுத்துவது மிகவும்



குறைவு. தன் பிள்ளைகளோடு வந்தான் என்றே பெரும்பாலும் சொல்வோம்.

திருமணம் முடித்து பிள்ளை இல்லை என்றாலும் தன் மனைவியோடு வந்தால் 'குடும்பத்துடன் வந்திருக்கிறார்' என்று சொல்வோம். எனவே குடும்பம் என்ற வார்த்தை பரிபாஷையில், மக்களுக்கு மத்தியில் மனைவியைக் குறிக்கவே அரபியிலும் தமிழிலும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது." குடும்பம் என்ற வார்த்தை "பிள்ளைகளைக் குறிக்க மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது என்று எவராவது சொன்னால் அவருக்கு மொழி அறிவோ, அல்லது மக்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தும் முறையோ தெரியவில்லை என்றே நாம் புரிந்து கொள்வோம்.

**✷ அல்-குர்ஆன்:**

அல்-குர்ஆனில் அல்லாஹ் 'அஹ்ல்' என்ற வார்த்தையை ஏராளமான இடங்களில் பயன்படுத்துகின்றான். இந்த வார்த்தை அல்-குர்ஆனில் உயர்திணையோடு இணைக்கப்படும் இடங்களெல்லாம் பெரும்பாலும் மனைவி, வீட்டார் என்ற கருத்துக்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

'அல்-கஸஸ்' எனும் அத்தியாயத்தில் மூஸா (அலை) அவர்களின் வரலாற்றைச்சொல்லும் போது 12 வது வசனத்தில் மூஸா (அலை) அவர்களை அவரது தாய் பெட்டியில் வைத்து நதியில் விடுகிறார் பிர்அவ்ன் அந்தக்குழந்தையை தத்தெடுக்கிறான். அதற்கு பால் கொடுக்கவென ஒரு பெண்ணை தேடுகிறார்கள். எல்லாப் பெண்களிடமும் பால் குடிக்க அந்தப்பிள்ளை மறுக்கிறது, அப்போது அந்தக்குழந்தையை பின் தொடர்ந்த அதன் சகோதரி "அந்தக்குழந்தையை நம்பிக்கையாக பராமரிக்கக்கூடிய ஒரு வீட்டாரை உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்டாள். இங்கே 'வீட்டார்' என்பதற்கு'أهل البيت' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் மூலம் மூஸா (அலை) அவர்களின் தாயையே நாடப்படுகின்றது. எனவே இங்கு ஒரு பெண்ணைக் குறிக்க "அஹ்லுல் பைத்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதே, அத்தியாயத்தின் 29வது வசனத்தில் “மூஸா ﷺ அவர்கள் குறித்த தவணையை முடித்த பின்பு தன் குடும்பத்துடன் சென்றார்” என்று வந்துள்ளது இதில் குடும்பம் என்பதற்கு ‘அஹ்ல்’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மூஸாவுடன் அவரது குடும்பம் என்று அவரது மனைவியைத்தவிர வேறு எவரும் இருக்கவில்லை. எனவே இங்கே மனைவியைக் குறிக்க ‘அஹ்ல்’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், அதே 29ம் வசனத்தில் மூஸா ﷺ அவர்கள் தூர்ஸீனாவிற்கு பக்கத்தில் ஒளியைக் கண்டபோது தன் குடும்பத்திற்கு (இங்கே) நில்லுங்கள்” என்று சொன்னார் என்றுள்ளது. இங்கும் அவரது மனைவியைக்குறிக்கும் குடும்பம் என்ற அடைமொழிக்கு ‘அஹ்ல்’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

‘ஹூத்’ எனும் அத்தியாயத்தில் அல்லாஹ் இப்றாஹீம் ﷺ அவர்களின் வரலாற்றைச் சொல்கிறான். அவரின் மனைவி நீண்ட காலமாக பிள்ளை இல்லாமல் இருக்கிறார். அல்லாஹ் வானவர்களை அனுப்பி அவர்களுக்குப் பிள்ளை கிடைக்க இருக்கும் சந்தோசமான செய்தியைச் சொல்கிறான். அப்போது, அவரின் மனைவி “எனக்குப் பிடித்த கேடே எனக்கு பிள்ளை பிறப்பதா? நானோ இயலாத மூதாட்டியாக இருக்கிறேன்.என்னுடைய கணவரும் வயோதிபராக உள்ளார். நிச்சயமாக இது ஆச்சரியமான ஒரு விடயமே! என்கிறார். (அதற்கு வானவர்) அல்லாஹ்வின் விவகாரத்தில் நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? அஹ்லுல் பைத்தினரே! உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும் அபிவிருத்தியும் உண்டாவதாக. நிச்சயமாக அவன் புகழுக்குரியவனும் மிகுந்த கொடையாளியுமாவான்” என்று கூறினார்கள். (ஹூத்: 72,73)

இங்கே, வானவர் இப்ராஹீம் ﷺ அவர்களின் மனைவிக்கு பதில் சொல்லும்போது, “அஹ்லுல் பைத்” என்ற வாசகத்தைப் பயன்படுத்துகின்றனர். எனவே இங்கு இப்ராஹீம் ﷺ அவர்களும் அவரின் மனைவியையும் தவிர வேறு எவரும் இல்லாத வேளையில்



அவரின் மனைவிக்கு பதில் சொல்லும் போது அவருக்காக பிரார்த்தித்த வேளை அவரைக்குறிக்க “அஹ்லுல் பைத்” எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

யூஸுப் என்ற அத்தியாயத்தில் அல்லாஹ் யூஸுப் ﷺ அவர்களின் வரலாற்றைக் குறிப்பிடுகிறான். அதிலே யூஸுப் ﷺ அவர்களை ஒரு அரசன் வளர்த்துவருகிறான். அவர் கட்டிளம் பருவத்தை அடைகிறார். மிகப்பெரும் பேரழகனாக திகழ்கிறார். அவரை வளர்த்த அரசனின் மனைவி அவர் மீது மோகம் கொள்கிறாள். எப்படியாவது அவரை அடைந்துவிடவேண்டும் என்பதற்காக, கதவை மூடிவிட்டு அவரை தப்பான வழிக்கு அழைக்கிறாள். ஆனால் யூஸுபோ அதற்கு மறுக்கிறார். அவள் வலுக்கட்டாயமாக இழுக்கிறாள். யூஸுப் இதிலிருந்து தப்பிப்பதற்காக ஓடுகிறார். பின்னால் அரசனின் மனைவி துரத்துகிறாள். இருவரும் கதவை அடைகிறார்கள் அரசனும் அந்த வேளையில் கதவின் பக்கம் வருகிறான். மூவரும் சந்தித்துக் கொள்கிறார்கள். அப்போது, அரசனின் மனைவி அரசரை பார்த்து “உன்னுடைய ‘அஹ்லுடன்’ தப்பாக நடந்து கொள்ள நினைப்பவர்களுக்கு சிறைசெய்தல்அல்லது கொடூரமாக தண்டித்தல் என்பதைத்தவிர வேறு என்ன கூலி இருக்கிறது” என்கிறாள்.

இங்கே, ‘அஹ்ல்’ என்ற வார்த்தை மனைவி என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பிள்ளை இல்லை இதனால்தான் யூஸுபை வளர்த்து வந்தனர்.

பின்வரும் வசனங்கள் யாவும் லூத் (அலை) அவர்களின் வரலாற்றைப் பற்றி பேசுகின்றன. அதிலும் குறிப்பாக “அஹ்லுல்பைத்” என்ற வார்த்தைக்குள் மனைவியே பிரதான பாத்திரம் என்பதைச் சொல்கின்றது.

அ∴ராப்:23, அந்நம்ல்:57, அஷ்ஷுஅரா: 170,171

“நாங்கள் அவரையும் அவரின் குடும்பத்தையும் (அஹ்லுல் பைத்தையும்) காப்பாற்றினோம். ஆனால், அவரின் மனைவியைத்தவிர”

அல்-அன்கபூத்:32,33

இப்றாஹீம் ﷺ அவர்களுக்கு நற்செய்தி கொண்டு வந்த வானவர்கள் "தாங்கள் ஒரு பிரதேசத்தை அழிப்பதற்காக இறைவனால் அனுப்பப்பட்டுள்ளோம்" என்ற செய்தியை இப்றாஹீம் நபியிடம் சொல்கின்றனர். அப்போது இப்றாஹீம் நபியவர்கள். "அந்தக்கிராமத்திலே லூத் ﷺ அவர்கள் இருக்கின்றார்கள்" என்றார்கள் (அதற்கு வானவர்கள்) "அதில் உள்ளவர்கள் பற்றி நாம் அறிவோம். அவரையும் அவரின் குடும்பத்தையும் (அஹ்லையும்) நாம் காப்பாற்றுவோம் ஆனால் அவரின் மனைவியைத்தவிர என்று கூறினர்."

லூத் நபியிடம் வானவர்கள் வருகிறார்கள் நீ கவலைப்படாதே அஞ்சாதே நாம் உன்னையும் உனது குடும்பத்தையும் (அஹ்லையும்) காப்பாற்றுவோம். ஆனால் உன் மனைவியைத்தவிர (அவளை நாம் காப்பாற்றமாட்டோம்) என்று கூறினார்கள்.

லூத் ﷺ அவர்களின் சமூகத்தாரை அழிக்க மலக்குகள் வருகிறார்கள். அந்த சமூகத்தார் மலக்குகளோடும் தப்பாக நடக்க முயற்சிக்கின்றனர். லூத் ﷺ அவர்கள் தன் பெண் மக்களை (மணம் செய்யக்) கொடுத்து "என் விருந்தாளிகளை விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சுகிறார்கள். ஆனால், அவரின் கூட்டம் அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை. லூத் ﷺ அவர்கள் செய்வதறியாது திகைக்கிறார். அப்போது வந்த வானவர்கள் சொன்னார்கள்: "லூதே! நாம் உமது இரட்சகனின் தூதுவர்கள். அவர்கள் ஒருபோதும் உம்மை வந்தடையவே மாட்டார்கள். "நீர் உமது குடும்பத்தோடு (أهل –அஹ்லோடு) இரவில் சென்றுவிடு. உமது அஹ்லில் உனது மனைவியரைத்தவிர வேறு எவரும் திரும்பிப் பார்க்க வேண்டாம். ஏனெனில், அவர்களுக்கு என்ன நடக்குமோ அது அவளையும் பிடித்துக்கொள்ளும்" என்றனர். (ஹூத் 81)

அஸ்ஸாப்பாத்: 133-135

இந்த அத்தியாயத்தில் வரும் வசனங்கள் லூத்ﷺ அவர்களையும் அவரின் குடும்பத்தையும் மலக்குகள் பாதுகாப்பதாகவும் அவரின்



மனைவியைப் பாதுகாக்கமாட்டோம் என்று வானவர்கள் கூறியதாக குறிப்பிடுகின்றன. அதில் குடும்பம் என்பதற்கு "அஹ்ல்" என்ற வார்த்தையை அல்லாஹ் பயன்படுத்துகின்றான்.

மேலே குறிப்பிடப்பட்ட வசனங்களிலெல்லாம் குடும்பம் என்பதற்கு அல்லாஹ் 'அஹ்ல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றான். அதுபோலவே 'அஹ்ல்' என்பதில் தவிர்க்கமுடியாத அங்கம் மனைவி என்பதையும் தெளிவாக உணர்த்துகிறான். குடும்பத்தில் பிரதானமான ஒருவராக மனைவி இல்லாவிட்டால் "குடும்பத்தைக் காப்பாற்றுவோம்" என்று சொல்லிவிட்டு "உன் மனைவியைக் காப்பாற்ற மாட்டோம்" என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. குடும்பத்தின் தலையாய பாத்திரங்களில் ஒன்றாக மனைவி இருப்பதனால்தான் "ஆனால் உன் மனைவியைத்தவிர" என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

### ✸ அஸ்ஸுன்னா:

ஸுன்னாவிலும் 'அஹ்லுல் பைத்' எனும் வார்த்தை மனைவியைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

நபி ﷺ அவர்கள் ஒரு தடவை ஆயிஷா ؓ அவர்களின் அறையில் நுழைந்தார்கள் அப்போது அஹ்லுல் பைத்தினரே! அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொன்னார்கள். (புகாரி 4793)

ஆயிஷா ؓ அவர்கள் மட்டும் வசிக்கும் அறையில் நுழையும் போது அஹ்லுல் பைத்தினரே! என்று அழைத்தது ஆயிஷா ؓ அவர்களைக்குறிக்கவே என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம் மேலே குறிப்பிட்ட நான்கு விதமான ஆய்வுகளின் அடிப்படையிலும் பகுத்தறிவின் படியும் 'அஹ்லுல்பைத்' என்ற வார்த்தை ஒரு மனிதனின் குடும்பத்தைக் குறிக்க பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அதன் தவிர்க்க முடியாத அங்கமே மனைவி என்பதையும் விளங்கலாம்.

# நபியின் அஹ்லுல் பைத் (குடும்பம்) யார்...?

'அஹ்லுல் பைத்' என்பது பொதுவான ஒரு வார்த்தையாக இருந்தபோதும் வழிகெட்ட சில இயக்கங்களின் தாக்கத்தினால் அது நபியவர்களின் குடும்பத்தைக் குறிக்கும் சொல்லாகவே அறிமுகமாகியுள்ளது. அத்தோடு இதில் பல பிரச்சினைகளும் உருவாக்கப்பட்டுள்ளது.

'நபியவர்களின் குடும்பம்' எனும் போது முதலில் நுழைபவர்கள் அவரின் மனைவியர் என்பதை நாம் மேலே குறிப்பிட்ட ஆய்வு தெளிவுபடுத்துகிறது. அஹ்ஸாப் எனும் அத்தியாயத்தில் வரும் பலவசனங்களும் ஆலுஇம்றான் எனும் அத்தியாயத்தின் 121ஆவது வசனமும் அதையே சுட்டிக்காட்டுகிறது.

"(நபியே!) நீர் உம் குடும்பத்திலிருந்து அதிகாலையில் புறப்பட்டுச்சென்று விசுவாசங் கொண்டவர்களை (உஹது யுத்த களத்தில்) போருக்காக (அவரவருக்குரிய) இடங்களில் அமர்த்தி (ஒழுங்குபடுத்தி)க் கொண்டிருந்ததை (நினைத்துப்பார்ப்பீராக! யாவற்றையும்) அல்லாஹ் செவியுறுகிறவன் நன்கறிபவன்" (3:121)

இங்கே, குடும்பம் என்பதற்கு 'அஹ்ல்' என்ற வார்த்தையை அல்லாஹ் பயன்படுத்தியுள்ளான். நபியவர்கள் மதீனாவில் தன்னுடைய வீட்டிலிருந்து உஹதுக்களத்திற்கு செல்லும் போது அவரது மனைவியர்கள் மட்டுமே நபியவர்களின் வீட்டில் இருந்தார்கள். அவரது பிள்ளைகளில் பாத்திமா ﵂ அவர்களைத்தவிர எல்லோருமே மரணித்திருந்தனர். பாத்திமா ﵂ அவர்கள் கூட அலி ﵁ அவர்களை மணந்துகொண்டு தனியாக இருந்தார்கள். எனவே இங்கே 'அஹ்ல்' என்ற வார்த்தை நபியவர்களின் குடும்பத்தில் மனைவியரைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோல், ஸைத் பின் அர்க்கம் ﵁ அவர்கள் அறிவிக்கும் செய்தியில், அவரிடம்: நபியவர்களின் மனைவியர் அவரின் குடும்பமா? என்று கேட்கப்பட்டது, அதற்கு: "நபியவர்களின்



மனைவியர் அவரின் குடும்பத்தினர்தான். ஆனால், ஸகாத் பொருட்களைப் பெற்றுக் கொள்வது ஹராமாக்கப்பட்ட நபியவர்களின் குடும்பம் எனும் போது: அவரின் குடும்பம், ஜஃபரின் குடும்பம், உகைலின் குடும்பம், அப்பாஸின் குடும்பம் என்று எல்லோரும் அடங்குவர்' (முஸ்லிம் 2408)

நபியவர்கள் ஒரு தடவை அலி ﵁, பாத்திமா ﵂, ஹஸன் ﵁, ஹுஸைன் ﵁ போன்றோரை ஒரு போர்வையினால் மூடிவிட்டு "இறைவா! இது எனது குடும்பத்தினர் அவர்களை நீ தூய்மைப்படுத்து" என்று பிரார்த்தித்தார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா ﵂ நூல்: முஸ்லிம் 2424)

அப்துல் முத்தலிப் பின் றபீஆ ﵁ அவர்கள் அறிவிக்கும் ஒரு நீளமான செய்தி, ஹாஷிம் கிளையார் அனைவருமே நபியவர்களின் குடும்பத்தினர் என்பதையும், அவர்கள் அனைவருமே ஸகாத் பெறத் தடைசெய்யப்பட்டவர்கள் என்பதையும் உணர்த்துகின்றது."ரபீஆ ﵁, அப்பாஸ் ﵁ அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து, அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த இரு சிறுவர்களையும் (அப்துல் முத்தலிப் பின் ரபீஆ, பழ்மு பின் அப்பாஸ்) நாம் நபியவர்களிடம் அனுப்பினால் அவர்கள் இருவரும் நபியவர்களிடம் பேசி இருவருக்கும் நபியவர்கள் ஸகாத் நிதியை சேகரிக்கும் பொறுப்பை வழங்கினால், மனிதர்கள் கொடுப்பதை அவர்கள் கொடுத்து (மற்றவர்கள் இதை) சேகரிப்பதால் எதை அடைந்து கொள்வார்களோ? அதை பெற்றுக்கொள்வார்களே என்று இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது, அலி ﵁ அவர்கள் அவ்வழியாக வந்தார்கள். அவர்கள் இருவரும் இவ்விடயத்தை அலி ﵁ அவர்களுக்குச் சொன்னார்கள். அலி ﵁ அவர்கள்; நீங்கள் இவ்வாறு செய்யாதீர்கள். அல்லாஹ்வின் மீதுஆணையாக! நபியவர்கள் உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற மாட்டார் என்றார்கள்.

அப்போது, ரபீஆ ﵁ அவர்கள் அவரை எதிர்த்தார்கள்: "அல்லாஹ்வின் மீது ஆணையாக எங்கள் மீது கொண்ட பொறாமையினால்தான் இதை சொல்கிறாய். நீ நபியவர்களின்

மருமகனானாய், இறைவன் மீது ஆணையாக நாம் அதற்காக உன் மீது பொறாமைப்படவில்லை'' என்று சொன்னார்கள். அலி ﵁ அவர்கள் (அப்படியென்றால்) 'அவர்கள் இருவரையும் அனுப்பிவிடுங்கள்' என்று சொல்லிவிட்டு ஒருக்கணைத்து சாய்ந்து கொண்டார்கள்.

அப்துல்முத்தலிபும், பழ்லும் சொல்கிறார்கள்: நபியவர்கள் லுஹர் தொழுகையை முடித்த போது இருவரும் நபியவர்களது வீட்டின் கதவருகில் சென்று நின்று கொண்டோம். நபியவர்கள் எம்மிடம் வந்து எம் காதுகளைப் பிடிக்கும் வரை நாம் நின்றோம். பின்பு "என்ன சொல்ல நினைக்கிறீர்களோ! அதை சொல்லுங்கள்" என்றார்கள். அன்றைய தினம் வழக்கம்போல் நபியவர்கள் செல்லும் அவரின் மனைவி ஸைனப் பின்த் ஜஹ்ஸிடம் நுழைந்தார்கள், நாமும் நுழைந்தோம். (அப்துல் முத்தலிப் பின் ரபீஆ﵁ அவர்கள் சொல்கிறார்கள்: நாம் இருவரும் மற்றவர் பேச வேண்டும் என்று நினைத்தோம். பின்பு எங்களில் ஒருவர் பேசினார். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மனிதர்களில் அதிகம் நன்மை செய்பவர் நீங்கள், மனிதர்களில் தங்கள் குடும்ப உறவுகளை அதிகம் சேர்த்து வாழ்பவர் நீங்கள். நாமோ பருவ வயதை அடைந்து விட்டோம். ஸகாத் நிதியை சேகரிக்கும் பொறுப்புக்களில் எங்களை நீங்கள் நியமிக்க வேண்டும் என்று பேச வந்துள்ளோம். மனிதர்கள் அவைகளை சேகரித்து உங்களிடம் ஒப்படைப்பதைப்போல நாமும் ஒப்படைப்போம். அப்போது இதற்காக மக்கள் அடைந்து கொள்ளும் பங்கைப்போல நாமும் அடைந்து கொள்வோம்'' என்றனர். அப்துல் முத்தலிப் சொல்கிறார்: நாம் அவரிடம் (திரும்பவும்) பேசுவோமா? என்று நினைக்குமளவு நபியவர்கள் மௌனமாக இருந்தார்கள். அப்போது அவரின் மனைவி ஸைனப் ﵂ அவர்கள் பேசவேண்டாம் என்று திரைக்குப்பின்னால் இருந்து சுட்டிக்காட்டினார்கள். பின்பு நபியவர்கள் சொன்னார்கள்: ஸகாத் பொருட்கள் என்பது முஹம்மதின் குடும்பத்தினருக்கு ஆகுமானதல்ல. நிச்சயமாக அவை மனிதர்களின் அழுக்குகள்.'' (முஸ்லிம் 1072)



(ரபீஆ பின் ஹாரித் ﵁ அவர்கள் நபியவர்களின் மாமா ஹாஷிமின் குடும்பத்தைச்சேர்ந்தவர். எனவே பனூஹாஷிம் கிளையார் அனைவரும் அஹ்லுல் பைத்தினர் என்பது தெளிவு)

மேலே நாம் கூறியவற்றைச் சுருக்கமாக நோக்கினால், பின்வருவோர் நபிவர்களின் குடும்பத்தினர் என்று சொல்லலாம்.

1. நபியவர்களின் மனைவியர்.
2. அலி﵁, பாத்திமா ﵂, ஹஸன் ﵁, ஹுஸைன் ﵁
3. அலியின் குடும்பம், ஜஃபரின் குடும்பம், உகைலின் குடும்பம், அப்பாஸின் குடும்பம்.
4. பனூ ஹாஷிம் கிளையார்.

❁❁❁

## விதண்டாவாதமும் விளக்கமும்.

நாம் மேலே நபியவர்களின் அஹ்லுல் பைத்தினர் யார்? என்பதை குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் தெளிவாக அவதானித்தோம். ஆனால் ஷீஆக்கள் நபியவர்களின் அஹ்லுல் பைத்தினரை முற்றிலும் குர்ஆன், ஸுன்னாவிற்கு முரண்படுகின்ற அடிப்படையில் தீர்மானிக்கின்றனர். அவர்கள் யார்? என்பதையும், அவர்களின் ஆதாரங்களுக்கான தெளிவான பதில்களையும் இங்கு அவதானிப்போம்.

அலி ﵁, பாத்திமா ﵂, ஹஸன் ﵁, ஹுஸைன் ﵁ அவர்களின் குடும்பத்தில் வந்த சிலர் மாத்திரமே அஹ்லுல் பைத்தினர் என்றும் தங்கள் மதத்தின் அடிப்படை அவர்களே என்றும் ஷீஆக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். நபியவர்களின் இரண்டு மகளை திருமணம் செய்த உஸ்மான் ﵁ அவர்களை அஹ்லுல் பைத்தாக ஷீஆக்கள் கணிப்பிடுவதில்லை. ஆனால் ஒரு மகளைத் திருமணம் செய்த அலி ﵁ அவர்களை நபியவர்களின் குடும்பத்தின் தலைவரைப்போலவும், நபியவர்களின் குடும்பத்தில் அவரின் இடத்தைப்போன்ற இடம் எவருக்கும் கிடையாது என்பதைப்போலவும் மதிக்கின்றனர்.

ஷீஆக்கள் தங்களின் இந்தக் கொள்கைக்கு சொல்கின்ற ஆதாரங்களை இனி அவதானிப்போம்.

**ஆதாரம்: 01**

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

"நபி ﷺ அவர்கள் ஒரு காலைப்பொழுதில் வெளியானார்கள். அவர்கள் மீது ஒரு போர்வை இருந்தது. அதிலே அலி ﵁, பாத்திமா ﵂, ஹஸன் ﵁, ஹுஸைன் ﵁ ஆகியோரை நுழைத்தார்கள். பின்பு 'அல் அஹ்ஸாப்: 33'ம் வசனத்தை ஓதினார்கள். பின்பு



"அஹ்லுல் பைத்" (எனும் நபியின் குடும்பத்) தினராகிய உங்களை விட்டும் அசுத்தத்தை அகற்றி உங்களை முற்றிலும் பரிசுத்தப்படுத்திடவே அல்லாஹ் விரும்புகின்றான்." என்று கூறினார்கள். (முஸ்லிம் 2424)

இந்த ஹதீஸின் சில அறிவிப்புக்களிலே உம்மு ஸலமா ﵂ அவர்கள், நானும் போர்வைக்குள் வரலாமா? என்று அனுமதி கேட்டதாகவும் அதாவது நானும் உங்களின் அஹ்லுல் பைத் இல்லையா? என்று சொன்னதாகவும் அதற்கு நபியவர்கள் "நீங்கள் உங்கள் இடத்தில் இருங்கள் நீங்கள் எல்லோரும் நன்றாகவே இருக்கிறீர்கள்" என்று சொன்னார்கள் என்றும் இடம்பெற்றுள்ளது.

இந்த ஹதீஸை ஷீஆக்கள் வைத்துக்கொண்டு இந்தப் போர்வைக்குள் நபியவர்கள் நுழைத்தவர்கள் மாத்திரம்தான் அஹ்லுல் பைத்தினர் என்றும் அவர்கள் தவிரவுள்ள எவரும் அஹ்லுல் பைத்தினர் அல்ல என்றும் வாதிடுகின்றனர். அதாவது பாத்திமா ﵂ அவர்கள் அஹ்லுல் பைத்தில் இருக்கிறார்களாம். அவர்கள் பிறப்பதற்கு காரணமாக இருந்த நபியவர்களின் மனைவி ஹதீஜா ﵂ அவர்கள் அஹ்லுல் பைத்தில் இல்லையாம். இதற்கான பதிலை தெளிவாக நோக்குவோம்.

**01)** நபியவர்களின் 23 வருடகால வாழ்க்கையில் நபியவர்கள் அஹ்லுல் பைத் பற்றி இந்த ஹதீஸில் மாத்திரமே சொல்லியிருப்பதைப்போன்று ஷீஆக்கள் பேசுகின்றனர்.

நபியவர்கள் அஹ்லுல் பைத் தொடர்பாக சொன்ன சில செய்திகளை அஹ்லுல் பைத் பற்றிய அறிமுகத்திலே நாம் குறிப்பிட்டோம். எனவே அவைகளையெல்லாம் கவனித்தே முடிவுகளை செய்யவேண்டும்.

**02)** இங்கே நபியவர்களின் வார்த்தை மற்றவர்கள் அஹ்லுல் பைத்தினர் அல்ல என்பதையோ இவர்கள் மாத்திரம்தான் அஹ்லுல் பைத்தினர் என்பதையோ உணர்த்தவில்லை. ஒருவருக்கு 06 நண்பர்கள் இருக்கும் போது மூன்று பேரைக்காட்டி இவர்கள்

எனது நண்பர்கள் என்று சொல்வதனால் மற்ற மூவரும் எனது நண்பர்கள் அல்ல என்றாகாது. ஒருவர் தன் சகோதரனைக்காட்டி இவர் எனது தம்பி என்றால் அவருக்கு அண்ணன் இல்லை என்றோ வேறு எந்த சகோதரர்களும் அவருக்கு இல்லை என்றோ, அவர்கள் குடும்பத்தில் இருவர்தான் என்றோ நாம் சொல்ல மாட்டோம். இந்த வார்த்தையை மாத்திரம் வைத்து அவ்வாறு சொல்ல முயல்பவர்களை நாம் சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்றோ அறிவாளிகள் என்றோ சொல்லமாட்டோம்.

இறைவனும் இவ்வாறான வார்த்தைகளை அல்குர்ஆனில் பிரயோகிக்கிறான். அத்தவ்பா 36ம் வசனத்தில் "நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை 12 ஆகும். வானம் பூமி படைக்கப்பட்ட நாளிலிருந்து இறைவனின் வேதத்தில் இவ்வாறே உள்ளது. அதில் நான்கு மாதங்கள் சங்கைபொருந்தியதாகும். அதுதான் உறுதியான மார்க்கமாகும்."

இந்த வசனத்தை ஒருவர் வைத்துக்கொண்டு இந்த வசனத்தில் குறிப்பிடப்படுவதுதான் மார்க்கம் வேறு எதுவும் மார்க்கம் அல்ல என்று சொன்னால் நாம் யாராவது அவரை ஏற்றுக்கொள்வோமா? நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்தக் கருத்திலமைந்த பல வசனங்களும் ஹதீஸ்களும் உள்ளன இவற்றையெல்லாம் நாம், அவை மாத்திரம்தான் மார்க்கம். வேறு விடயங்கள் எதுவும் மார்க்கத்தில் இல்லை என்ற அடிப்படையில் விளங்குவதில்லை. மாறாக, இதுவும் மார்க்கம்தான் அதுபோலவே ஏனைய விடயங்களும் மார்க்கத்தில் உள்ளவைதான் என்று சொல்வோம். இதுபோலவே நபியவர்கள், இவர்கள் எனது குடும்பத்தினர் என்று சொல்வதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது இவர்களும் குடும்பமே ஏனையவர்களும் நபியவர்களின் குடும்பத்தில் இருக்கின்றனர் என்றே விளங்க வேண்டும்.

**03)** இந்த ஹதீஸில் வரும் அடிப்படையில் போர்வையின் உள்ளிருந்தவர்கள் மாத்திரமே அஹ்லுல் பைத்தின் அங்கத்தவர்கள்



என்றால் ஏனையவர்கள் எவரையும் அதிலே வெளியிலிருந்து நுழைக்க முடியாது என்றால், ஷீஆக்களினால் அஹ்லுல் பைத் என்றும் தங்களின் இமாம்கள் என்றும் இனங்காட்டப்படுபவர்களில் மீதமுள்ள ஒன்பது பேரையும் எந்த அடிப்படையில் நுழைகிறார்கள் என்றே தெரியவில்லை.

இவ்வாறு நாம் கேட்டால் பாத்திமாவும் அலியும் இருந்தார்கள் ஹஸன்﵁, ஹுஸைன்﵁ இருவருமே இருந்தார்கள்தானே! எனவே அவர்களின் பிள்ளைகளும் இதில் அடங்குவார்கள் என்று சொல்வர். அப்படியென்றால், பாத்திமாவின் தாய் நபியவர்களின் மனைவி ஹதீஜாவும் அஹ்லுல் பைத்தில் அடங்குவார்தானே என்று நாம் சொல்வோம். இதை ஆம் என்று ஏற்றுக்கொண்டால், நபியவர்களின் மனைவி ஹதீஜாவை அவரின் குடும்பம் என்று ஏற்றுக்கொள்ளும் நீங்கள் மற்றைய மனைவியரை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள்..? என்று கேட்க முடியும்... இவ்வாறு ஷீஆக்களின் இந்த தவறான கொள்கையினால் அவர்களால் பதில் சொல்லமுடியாத பல கேள்விகளில் சிக்கித் தவிக்கிறார்கள்.

ஹஸன் ஹுஸைன் இருவரின் பரம்பரையும் அஹ்லுல் பைத்தில் அடங்கும் என்று ஷீஆக்கள் சொல்வார்கள். ஆனால் தங்களின் இமாம்கள் என்றும், அஹ்லுல் பைத் என்றும் இனங்காட்டும் போது ஏன் ஹுஸைன் ﵁ அவர்களின் பரம்பரையை மட்டும் எடுத்துக்கொள்கின்றனர். அவர்களின் வாதத்தில் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தால் இருவரின் பரம்பரையில் வருவோரையும் தங்களின் இமாம்களாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஹஸன்﵁ அவர்களின் பரம்பரையிலிருந்து ஷீஆக்கள் எந்த இமாமையும் எடுத்துக்கொள்ளவில்லை. அதுபோலவே தங்கள் பிரச்சாரங்கள் அனைத்தையும் ஹுஸைன்﵁ அவர்களை மையப்படுத்தியே செய்கின்றனர்.

எனவே, நாம் மேலே குறிப்பிட்ட அடிப்படையில் இந்த போர்வை ஹதீஸ்: இவர்களும் எனது அஹ்லுல் பைத்தினர்தான் என்பதைக்

குறிக்குமே தவிர இவர்கள்தான் எனது குடும்பத்தினர் வேறு எவரும் இல்லை என்பதைக் குறிக்காது.

**ஆதாரம்: 02**

إنما يريد الله ليذهب عنكم الرجس أهل البيب ويطهركم تطهيرا

“நபியின் மனைவியர்களே! நீங்கள் வேறு எந்தப் பெண்ணைப் போன்றவர்களுமல்ல... நபியின் குடும்பத்தினரே! உங்களை அசுத்தத்திலிருந்து தூய்மைப்படுத்தவும் பரிசுத்தப்படுத்தவுமே அல்லாஹ் விரும்புகிறான்.” (அல்-அஹ்ஸாப்: 32,33)

இந்த வசனத்தில் கீழ் கோடிடப்பட்டுள்ள “كم” என்ற வார்த்தை அரபியில் ஆண்பாலுக்கு “நீங்கள்” எனும் கருத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். பெண்களைப்பார்த்து “நீங்கள்” என்பதற்கு “كن” என்ற வார்த்தையும் பயன்படுத்தப்படும் இதை வைத்து ஷீஆக்கள் பின்வருமாறு வாதிடுகின்றனர்.

இந்த வசனத்தில் அல்லாஹ் “كم” என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளான். இது ஆண்களைக்குறிக்க பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். பெண்களைப்பற்றிப் பேசிவிட்டு திடீரென்று ஆண்களைப்பற்றிப் பேசுவதன் மூலம் பெண்களை இதிலிருந்து நீக்கியுள்ளான் என்பது தெளிவாகின்றது. அத்தோடு ஆரம்பத்தில் நபியவர்களின் மனைவியர்கள் பற்றிப் பேசும்போதெல்லாம் பெண்பாலைக்குறிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்திவிட்டு அஹ்லுல்பைத்தினர் பற்றி பேசும் போது ஆண்பாலைக்குறிக்கும் வார்த்தையை பயன்பத்தியிருப்பதே நபியின் மனைவியர் அஹ்லுல் பைத்தில் இல்லை என்பதை தெளிவுபடுத்தவும், அஹ்லுல் பைத்திலிருந்து அவர்களை நீக்குவதற்காகவுமே என்று குறிப்பிடுகின்றனர். இந்த வாதம் தவறானது என்பதை பின்வருமாறு விளக்க முடியும்.

**01)** அரபு மொழியில் ஆண்பாலில் பேசும் போது பெண்களையும் அது உள்ளடக்குகின்றது. ஆனால், பெண்களைக்குறிக்கும்



வார்த்தைகளை பயன்படுத்தும்போது அது ஆண்களை உள்ளடக்கு -வதில்லை. இது அரபு மொழி தெரிந்த யாவரும் அறிந்திருக்கின்ற ஒரு விடயம். இது எவ்வாறு ஷீஆக்களுக்கு தெரியாமல் போனதோ தெரியவில்லை.

அல்-குர்ஆன், அல்ஹதீஸில் உள்ள ஏராளமான கட்டளைகள் ஆண்பாலிலேயே பேசப்படுகிறது ஆனாலும் அது பெண்களுக்கும் உரியது. பெண்பாலில் பேசப்படுபவை அவர்களுக்கே உரிய விடயங்களாகவே உள்ளன.

ஊதாரணமாக, ‘அந்நிஸா’ என்ற அத்தியாயத்தில் வரும் 26,27,28ம் வசனங்களைக்குறிப்பிடலாம்.

يريد الله ليبين لكم ويهديكم سنن الذين من قبلكم ويتوب عليكم

“அல்லாஹ் (தன்னுடைய சட்டங்களை) உங்களுக்குத் தெளிவாக விளக்கவும் உங்களுக்கு முன்னிருந்த (நல்ல)வர்கள் சென்ற நேரான வழிகளில் உங்களையும்....”

இந்த வசனத்திலே நாம் கீழ்கோடிட்டுக் காட்டியபடி அனைத்து வார்த்தைகளும் ஆண்களைக்குறிக்கும் வார்த்தைகளே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதையும் இது போன்றதையும் ஆண்களுக்கு மாத்திரம் உரியது. பெண்கள் இதில் நுழையமாட்டார்கள் என்று எவரும் பிரச்சாரம் செய்வதில்லை.

அல்-கஸஸ் அத்தியாயத்தின் 29வது வசனத்தில் இறைவன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

“ஆகவே, மூஸா தன் தவணையை முடித்துக்கொண்டு தன் குடும்பத்தினருடன் இரவில் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது”

இந்த வசனத்திலும் இது போன்ற வசனங்களிலும் ஆண்களைக்குறிக்கும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டாலும் பெண்களும் அதில் உள்ளடக்கப்படுவார்கள். இதுபோலவே

அஹ்லுல் பைத் தொடர்பாக அஹ்ஸாப் அத்தியாயத்தில் வரும் வசனத்தில் ஆண்களைக்குறிக்கும் “كم” என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டாலும் அது பெண்களையும் குறிக்கும் என்று விளங்கிக் கொள்ளலாம்.

**02)** மேலே நாம் குறிப்பிட்ட அஹ்ஸாப் அத்தியாயத்தில் வரும் வசனத்தின் ஆரம்பத்தில் முழுக்க முழுக்க பெண்பாலில் பேசப்படுகிறது. நேரடியாக பெண்களுக்கு (நபியவர்களின் மனைவியர்களுக்கு) அந்தக் கட்டளைகள் முன்வைக்கப்படுகின்றன. அந்த வசனத்திற்கு அடுத்துள்ள வசனத்திலும் முழுக்க முழுக்க பெண்பாலைக்குறிக்கும் வார்த்தைகளே பயன்படுத்தப் பட்டுள்ளன.

ஆனால், அஹ்லுல் பைத்தினர் பற்றிப்பேசும்போது மட்டும் ஆண்பாலைக் குறிக்கும்“كم” என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஏன் இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது? என்று யோசித்தால், அஹ்லுல் பைத்தில் நபியவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள்தான் அதன் தலைவராகவும் இருக்கிறார்கள். எனவே, இந்த சந்தர்ப்பத்தில். பெண்பாலைக்குறிக்கும் வார்த்தை பயன்படுத்தப்பட்டால் நபி ﷺ அவர்கள் அஹ்லுல்பைத்திலிருந்து நீக்கப்பட்டதாகிவிடும். எனவே, ஆண்பாலைக்குறிக்கும் “كم” என்ற வார்த்தை பயன்படுத்தபட்டுள்ளது. அது நபியவர்களையும் அவரின் மனைவியரையும் உள்ளடக்கும். ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கிய ஒரு விடயத்தை சொல்லும்போது ஆண்பால் வார்த்தைகளை பயன்படுத்தும் அரேபியர்களின் வழமைக்கு இது நிகரானது. இது போன்று அல்குர்ஆனில் ஏராளமான வசனங்கள் உள்ளன.

இப்றாஹீம் عليه السلام அவர்களின் வீட்டுக்கு வானவர்கள் வருகிறார்கள். அவருக்கு ஒரு குழந்தை பிறக்க இருப்பதாக நன்மாராயம் கூறுகின்றனர் இதைக்கேட்ட இப்றாஹீம் عليه السلام அவர்களின் மனைவி ஆச்சரியமடைகிறார். “நான் மூதாட்டி எனது கணவர் இப்றாஹீமோ வயோதிபராக இருக்கிறார். இந்த நிலையில் எவ்வாறு குழந்தை பிறக்கும்?” என்று கூறினார். அதற்கு மலக்குகள் பதில் சொல்லும்போது.



“ قالوا أتعجبين من أمر الله رحمة الله وبركاته عليكم أهل البيت ” (11:73)

“அ(தற்க)வர்கள், ‘அல்லாஹ்வின் கட்டளை குறித்தா நீர் ஆச்சரியப்படுகின்றீர்?’ வீட்டாரே! அல்லாஹ்வின் அருளும், அவனது பாக்கியங்களும் உங்கள் மீது உண்டாவதாக! என்று கூறினர்.”

இங்கே இப்றாஹீம் நபியின் மனைவியோடு பேசும் போது மலக்குகள் ஆரம்பத்தில் பெண்பாலைக்குறிக்கும்‘تعجبين’ என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றனர். ஆனால் அதற்கு பின் அவரின் அஹ்லுல் பைத்தினருக்கு பிரார்த்திக்கும் போது‘كم’ என்ற ஆண்பாலைக் குறிக்கும் வார்த்தையை பயன்படுத்துகின்றனர். காரணம், ஆரம்பத்தில் இப்றாஹீம் عليه السلام அவர்களின் மனைவியோடு மட்டும் பேசுகின்றனர். ஆனால், பின்பு இப்றாஹீம் عليه السلام அவர்களின் குடும்பம் பற்றி பேசுகின்றனர். அவரது குடும்பத்தின் தலைவர் இப்றாஹீம்தான். இதனால்தான் ஆண்பாலைக்குறிக்கும் ‘கும்’ என்ற அரபு வார்த்தையை பயன்படுத்தியுள்ளனர். அதில் அவரது மனைவியும் நுழைகின்றார்.

இதேவேளை, பெண்பாலைக்குறிக்கும் வார்த்தையை பயன்படுத்தினால், அதில் இப்றாஹீம் عليه السلام அவர்கள் நுழையமாட்டார்கள். இங்கே, இப்றாஹீம் நபியின் மனைவி அஹ்லுல் பைத்தில் நுழையமாட்டார். அதனால்தான் ஆண்பாலில் மலக்குகள் உபயோகித துள்ளனர். என்று வாதிடமுடியாது காரணம் ‘கும்’ என்ற வார்த்தை பன்மைக்கு பயன்படுத்தப்படுவது. ஒருமைக்கு பயன்படுத்துவது அல்ல. இப்றாஹீம் நபியுடன் அவரது மனைவியைத்தவிர வேறு எவரும் இருக்கவில்லை. எனவே அவரது மனைவியையும் சேர்த்தே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோலவே நபியவர்களின் குடும்பத்தில் அவர்களே தலைவர் என்பதால் “அஹ்ஸாப்” அத்தியாயத்தில் ஆண்பாலைக் குறிக்கும் ‘كم’ என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

ஜஃபர் பின் அபீதாலிப் رضي الله عنه அவர்கள் போராட்டத்தில் கொலை செய்யப்பட்டபோது நபியவர்கள் ஸஹாபாக்களுக்கு சொல்கிறார்கள்:

إصنعوا لآل جعفر طعاما، فقد أتاهم أمر يشغلهم أم أتاهم ما يشغلهم

"நீங்கள் ஜ.ஃ.பரின் குடும்பத்தினருக்கு உணவு செய்து கொடுங்கள். ஏனெனில், அவர்களை (உணவை விட்டும்) திருப்பும் ஒரு விடயம் (மரணம்) நடந்திருக்கிறது"

(அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, தாரகுத்னி, பைஹகி, அஹ்மத்)

இந்த ஹதீஸில் நாம் கோடிட்டுக்காட்டியுள்ள 'هم' என்ற வார்த்தை ஆண்பாலைக் குறிக்க பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். இதனால் ஜ.ஃ.பரின் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு உணவு சமைத்துக் கொடுக்க நபியவர்கள் சொல்லவில்லை. ஆண்களுக்கு மாத்திரமே உணவு கொடுங்கள் என்று சொன்னார்கள் என்று யாரும் சொல்வதில்லை, அல்லது ஜ.ஃ.பரின் குடும்பத்தில் பெண்கள் இல்லை ஆண்கள் மட்டுமே இருந்தார்கள். அதனாலேயே நபியவர்கள் 'هم' என்று ஆண்பாலைக்குறிக்கும் வார்த்தையைப் பயன்படுத்தினார்கள் என்றும் எவரும் யோசிப்பதில்லை.

எனவே, ஆண்பாலைக்குறிக்கும் வார்த்தையை பயன்படுத்தும்போது பெண்களும் அதில் நுழைந்து கொள்வார்கள். இது ஸஹாபாக்களிடமும், மற்ற எல்லோரிடமும் பிரபல்யம் அடைந்திருந்த ஒரு விடயமாகும். இதனாலேயே நபியவர்களும் அவ்வாறு ஆண்பாலைக்குறிக்கும் வார்த்தையைப் பயன்படுத்தினார்கள்.

இதுபோலவே, அஹ்ஸாப் அத்தியாயத்தின் வசனத்தையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

**03)** நாம் ஆரம்பத்தில் அஹ்லுல் பைத்தினர் என்றால் யார்? என்பது பற்றி தெளிவுபடுத்தும் போது, மனைவியரும் அஹ்லுல் பைத்தில் நுழைவார்கள். ஒரு வகையில் அவர்கள்தான் அஹ்லுல் பைத்தின் பிரதான அங்கமாக உள்ளனர். என்பதை தெளிவாக விளக்கினோம், அதுவும் இந்த வசனத்தை விளக்குவதாக உள்ளது.

அதுபோல், அல்லாஹ் இப்றாஹீம்ﷺ அவர்களின் அஹ்லுல் பைத்தில் அவரின் மனைவி ஓர் அங்கம் என்று குறிப்பிடுகிறான்.



மூஸா ﷺ அவர்களின் மனைவி அவரின் அஹ்லுல் பைத்தில் ஓர் அங்கம் என்று குறிப்பிடுகிறான். இது மாத்திரமல்லாமல் இந்த உலகத்தில் பிறக்கும் எல்லோருடைய மனைவியும் அவருடைய குடும்பத்தின் பிரதான பகுதி என்பது எல்லோரும் அறிந்த விடயம். இவ்வாறிருக்க சங்கைக்குரியநபியவர்களின் மனைவியரை அவரின் குடும்பத்திலிருந்து எவ்வாறு வெளியேற்றமுடியும்.!!

**04)** அல்-அஹ்ஸாப் அத்தியாயத்தில் வரும் அஹ்லுல் பைத் பற்றிய வசனத்திற்கு முன்னாலும் பின்னாலும் வரும் ஏராளமான வசனங்கள் நபியவர்களின் மனைவியரைப் பற்றியே பேசுகிறது இதன் மூலமும் நாம் அஹ்லுல் பைத் என்பதன் அர்த்தத்தைப்புரிந்து கொள்ளமுடியும்.

அல்குர்ஆனை விளக்கும்போது குறித்த வசனத்திற்கு முன், பின் உள்ள வசனங்கள் கவனத்தில் கொள்ளப்படும். பொதுவாக ஒருவரின் பேச்சை விளங்க அவர் முன்னால் பேசியதும், பின்னால் சொன்னதும் தேவைப்படுகிறது. அவ்வாறில்லாமல் பெறப்படும் விளக்கம் பெரும்பாலும் தவறானதாக அமைந்துவிடும்.

**05)** அஹ்ஸாப் அத்தியாயத்தில வரும் வசனத்தில் 'அஹ்லுல் பைத்' என்பதை குறித்து 'كُمْ' என்ற ஆண்பாலைக்குறிக்கும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதால் நபியவர்களின் மனைவியர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று பிரச்சாரம் செய்யும் ஷீஆக்கள் பாத்திமா ﷺ அவர்களை அந்த அஹ்லுல் பைத்தின் அங்கமாகவும், அந்த வசனம் அவரை உள்ளடக்கும் என்றும் குறிப்பிடுகின்றனர். இது எவ்வாறு அவர்களுக்குச் சாத்தியமானது? பாத்திமா ﷺ ஆண் தான் ஆனால் பெண்ணின் தோற்றத்தில் இருக்கிறார் என்று இவர்கள் இதற்கு பதில் சொல்வார்கள் போலும்.

எனவே, இத்தகைய விடயங்களிலிருந்து ஷீஆக்களின் விமர்சனங்களும் விவாதங்களும் உள்நோக்கம் கொண்டவை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

பாத்திமா ﷺ உள்ளிட்ட ஏனையவர்கள் நபியவர்களின் போர்வை ஹதீஸின் மூலம் அஹ்லுல் பைத்தில் நுழைகின்றனர். அவரின் மனைவியர்களோ அஹ்ஸாபின் வசனத்தின் படியும் ஏனைய நாம் குறிப்பிட்ட ஆதாரங்களின்படியும் அஹ்லுல் பைத்தினராகின்றனர்.

❁❁❁



## அஹ்லுல்பைத், ஸஹாபாக்களுக்கு மத்தியில் உள்ள உறவுகள்.

அஹ்லுல்பைத்களான நபியவர்களின் குடும்பத்தினருக்கும் ஏனைய ஸஹாபாக்களுக்கும் மத்தியில் பெரிய இடைவெளி இருப்பதாகவும் பிளவுகள் இருப்பதாகவும், நல்ல உறவு அவர்களுக்கு மத்தியில் இல்லை என்றும் ஷீஆக்கள் பிரச்சாரம் செய்கின்றனர். இதன் உண்மை நிலையை இங்கே அவதானிப்போம்.

### ✸ பரம்பரை ரீதியான தொடர்புகள்:

பரம்பரை சார்ந்த தொடர்புகள் இருசாராருக்கும் இருக்கிறது என்பதால் ஏனைய ஸஹாபாக்களை விட இவர்கள் சிறப்புக்குரிய வர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நபியவர்களின் குடும்பத்தினராக மட்டும் இருப்பதே சுவர்க்கம் செல்வதற்கு போதுமானது என்பதனால், இந்தத் தலைப்பை நாம் இங்கே தேர்வு செய்யவில்லை. அப்படி முடியும் என்று நாம் சொல்லவுமில்லை. மாறாக நபியவர்களின் குடும்பத்தினரைத்தான் நாம் பின்பற்ற வேண்டும் என்று சொல்லும் ஷீஆக்கள், நபியவர்களின் குடும்பத்தினரை குறுகிய வட்டத்திற்குள் சுருக்கிவிடுகின்றனர். இந்த வட்டத்திற்குள் ஷீஆக்களால் குறிப்பிடப்படுபவர்களைத்தவிர நபியவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பல ஸஹாபாக்கள் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

அத்தோடு, நபியவர்களின் குடும்பத்தினரை நேசிப்பதாகவும் அவர்கள் மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பதாகவும் மார் தட்டிக்கொள்ளும் ஷீஆக்கள் மற்றைய ஸஹாபாக்களை ஏசியும், தூசித்தும் வருகின்றனர். ஆனால், ஷீஆக்களால் ஏசப்படும் ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் நபியவர்களின் குடும்பத்தினர் என்பதை அதிகமானவர்கள் அறிந்து கொள்வதில்லை.

நபியவர்களின் உறவுகளை நேசிப்பதாகச் சொல்லும் ஷீஆக்கள் மிகவும் நெருங்கிய உறவுகளை புகழ்ந்தும் மற்றைய

உறவுகளை தூற்றியும் வாழ்வதன் மர்மத்தை மக்களுக்கு உணர்த்துவதும் இதன் நோக்கமாகும்.

நபியவர்களின் குடும்பம் என்றால் அபூஜஹ்லும் வருவானே! என்று சிலர் விதண்டாவாதம் செய்யலாம். அபூ ஜஹ்ல் மட்டுமல்ல மக்காவில் நபியவர்களுக்கு எதிராகச்செயற்பட்டமுக்கிய புள்ளிகளில் அதிகமானவர்கள் நபியவர்களின் குடும்பத்தினர்தான்.ஆனால், அல் குர்ஆன் நூஹ் நபியின் மகன் பற்றிச்சொல்லும்போது.

“மேலும் நூஹ் தன் இரட்சகனை அழைத்தார்: அப்பொழுது அவர் என் இரட்சகனே நிச்சயமாக என் மகன், என் குடும்பத்திலுள்ள்வன நிச்சயமாக (நீ என் குடும்பத்தினரைக் காப்பாற்றுவதாக வாக்களித்த) உன்னுடைய வாக்குறுதியும் உண்மையானது. மேலும் தீர்ப்பளிப்போரில நீ மிக மேலாகத் தீர்ப்பளிப்பவன் என்று கூறினார். (அதற்கு) நூஹே நிச்சயமாக அவன் உம் குடும்பத்தினரில் உள்ளவனல்லன். நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லா செயலுடையவன். ஆதலால் எதில் உமக்கு அறிவு இல்லையோ அதைப்பற்றி நீர் என்னிடம் கேட்க வேண்டாம். அறியாதோரில் ஆவதை விட்டும் நிச்சயமாக நான் உமக்கு நல்லுபதேசம் செய்கின்றேன்” என்று கூறினான். (11:45,46)

குடும்பம் என்றாலும் கொள்கையளவில் வேறுபட்டால் அவர்களுக்கு நல்லவர்களுடைய, நபியவர்களுடைய குடும்பத்துடன் தொடர்பு இல்லை என்று அருள்மறை சொல்கிறது.

எனவே, இங்கு நாம் இஸ்லாத்தை ஏற்காதவர்கள் பற்றிப் பேசவில்லை. நபியின் குடும்பத்தினரை நேசிப்பதாகச் சொல்லும் ஷீஆக்கள் அவர்களில் சிலரை நேசித்தும் சிலரை தூசித்தும் வருகிறார்கள் என்பதனால், நபியவர்களை ஏற்றுக்கொண்ட அவரின் குடும்பத்தினரையும், சொந்தக்காரர்களையும் அறிமுகம் செய்வதே எமது நோக்கமாகும்.

நபியவர்களின் குடும்பத்தினருக்கும் ஏனைய ஸஹாபாக்களுக்கு மத்தியிலும் பரம்பரை அடிப்படையில் பலமான தொடர்பு காணப்படுகிறது.



ஸஹாபாக்களில் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பவர்கள் நபியுடைய பரம்பரையோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு உதாரணமாக அபூபக்ர்ؓ, உமர்ؓ, உஸ்மான்ؓ போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

குறிப்பாக, அப்துமனாபின் பரம்பரையில் வருபவர்கள் நபியவர்களின் குடும்பத்தினராகவே கருதப்படுவார்கள். அதுபோலவே, பனூ ஹாஸிம் கிளையைச் சார்ந்தவர்கள் நபியவர்களின் நெருங்கிய உறவினர்களாக கருதப்படுவர்…

நபி ﷺ அவர்கள் சொன்னார்கள்: “அல்லாஹ் இஸ்மாயிலின் சந்ததியிலிருந்து கினானா கோத்திரத்தாரை தேர்வு செய்தான். கினானாவிலிருந்து குறைஷிகளை தேர்வு செய்தான். குரைஷிகளிலிருந்து பனூ ஹாஷிம் கிளையாரைத் தேர்வு செய்தான். பனூ ஹாஷிமிலிருந்து என்னைத் தேர்வு செய்தான்.”

(முஸ்லிம் 1782, திர்மிதி 3605)

இந்த அடிப்படையில் பார்க்கும் போது ஏராளமான ஸஹாபாக்களை நபியவர்களின் குடும்பத்தினர் என்று சொல்ல முடியும். உதாரணமாக:

உஸ்மான் இப்னு மழ்ஊன்
உஸ்மான் இப்னு அப்பான்
ஸுபைர் இப்னு மழ்ஊன்
ஹாதிப் பின் அம்ர்
அப்துல்லாஹ் பின் அபீ ஸர்ஹ்
இப்னு உம்மி மக்தூம்
அபூ அர்க்கம் இப்னு அபில் அர்க்கம்
உம்மு ஸலமா
அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப்
ஸஃத் பின் அபீ வக்காஸ்
ஸுபைர் இப்னுல் அவாம்

கதீஜா பின்த் குவைலித்
உபைத்துப்னு ஹாரிஸ்
பாதிமா பின்த் அஸத்
அல் அப்பாஸ்
ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப்
உப்பாதிப்னு ஸாபித்
அல் ஹாரிஸிப்னு ஹுஸைமா
ஸஃத் பின் உஸ்மான்

போன்ற ஏராளமான ஸஹாபாக்கள் நபியவர்களின் பரம்பரையோடு தொடர்புபடுகின்றனர். எனவே, நபியவர்களின் குடும்பத்தினருக்காக போராடுவதாக கூக்குரலிடும் ஷீஆக்கள் உண்மையில் அவர்களை நேசிப்பவர்களாக இருந்தால் நபியவர்களின் தூரமான சொந்தமாக இருந்தாலும் நெருங்கிய சொந்தங்களாக இருந்தாலும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டவேண்டும், எல்லோரையும் நேசிக்க வேண்டும்.

**ஏனைய ஸஹாபாக்களின் பெயர்களை அஹ்லுல் பைத்தினர் தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டுதல்.**

ஷீஆக்கள், தங்களின் தலைவர்களாகவும் மார்க்கத்திற்கான முழுமையான ஆதாரமாகவும் சொல்லும் நபியவர்களின் குடும்பத்தினர். ஷீஆக்களால்; ஷைத்தானைவிட மிகவும் எதிரியாக வர்ணிக்கப்படும் ஸஹாபாக்களின் பெயர்களை தங்களின் பிள்ளைகளுக்கு வைத்திருக்கிறார்கள்.

ஒருவர் தன் மகனுக்கு அல்லது மக்களுக்கு பெயர் சூட்டும் போது தனக்கு மிகவும் பிடித்த பெயரைத்தான் சூட்டுவார், அல்லது தனக்கு மிகவும் பிடித்த ஒரு நல்ல மனிதரின் பெயரைத்தான் சூட்டுவார். எவரும் தன் பிள்ளைக்கு ஷைத்தானின் பெயரையோ அல்லது அவனைப் பின்பற்றுபவர்களின் பெயர்களையோ சூட்டமாட்டார்கள். இது சாதாரண மனிதர்களின் நிலை என்றால் நபியவர்களின் நெருங்கிய உறவினர்கள் எவ்வாறு இருந்திருப்பார்கள்.!



அலி ﵁ அவர்கள் தனது மக்களில் ஒருவருக்கு அபூபக்ர் என்று பெயர் சூட்டியிருந்தார்கள். அபூபக்ர் ﵁ அவர்களை எந்தளவிற்கு ஷீஆக்கள் தூற்றுகிறார்கள் என்பது யாவரும் அறிந்த விடயமே. ஷீஆக்களின் மிகவும் பிரபல்யமான அறிஞர்களில் ஒருவர் அல்-முபீத் என்பவர் தனது "அல்-இர்ஷாத்" என்ற நூலில் "அலி ﵁ அவர்கள் பிள்ளைகளில் அபூபக்ர், அப்துல்லாஹ் போன்றவர்கள் அத்தராமிய்யாவுக்கு பிறந்தவர்கள். இருவரும் தங்கள் சகோதரன் ஹுஸைன் ﵁ அவர்களுடன் மரணித்தார்கள் " என்று குறிப்பிடுகிறார். (ப:186)

இந்தக் குழந்தை அலி ﵁ அவர்களுக்கு அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் பிறந்தது. அபூபக்ர்﵁ அவர்கள் மரணித்ததன் பின் அவரின் பெயரை அலி ﵁ தனது மகனுக்கு வைத்ததின் மூலம் அவர்கள் எந்தளவுக்கு அபூபக்ர் ﵁ அவர்கள் மீது பாசம் வைத்திருந்தார்கள் என்பதையும், அபூபக்ர் ﵁ நல்லவர் என்பதில் எந்தளவு நம்பிக்கை வைத்திருந்தார் என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பனூ ஹாஷிம் கிளையாரில் அபூபக்ர் என்ற பெயரை தங்கள் குழந்தைக்கு அலி ﵁ அவர்களுக்கு முன் எவரும் வைக்கவில்லை. அது போலவே ஷீஆக்களின் அறிஞர்களில் ஒருவரான எஃகூபி: ஹஸன் ﵁ அவர்களும் தன் பிள்ளைகளில் ஒருவருக்கு அபூபக்ர் என்று பெயர் வைத்திருந்தார் என்று சொல்கிறார். ஹுஸைன் ﵁ அவர்களும் தன் மகன்களில் ஒருவருக்கு அபூபக்ர் என்று பெயர் வைத்திருந்ததாக மஸ்ஊதி என்று சொல்லப்படும் ஷீஆக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவர் தனது 'அத்-தன்பீஹ் வல் இஷ்ராப்' எனும் நூலில் குறிப்பிடுகிறார். (ப:263)

ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரான ஸைனுல் ஆபிதீன், அபூபக்ர் என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைகப்படுபவராக இருந்தார். (கஷ்புல் கும்மா 2:72) ஹஸனின் மகன் ஹஸனும் தன் மகனுக்கு அபூபக்ர் என்று பெயர்வைத்திருந்தார்.

(முகாதிலுத்தாலிபீன் ப:188)

ஷீஆக்களின் 12 இமாம்களிள் ஒருவரான மூஸா அல்-காழிம் என்பவரும் தனது மகனுக்கு அபூபக்ர் என்று பெயர் வைத்திருந்தார். (கஷ்புல் கும்மா 2:217) அலி அர்ரிழா என்று சொல்லப்படும் ஷீஆக்களின் இமாம்களில் ஒருவரும் அபூபக்ர் என்ற சிறப்புப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்.

ஷீஆக்களே தங்களின் இமாம்களாக நினைக்கின்ற: மூஸா அல்காழிம், அபூஜ.்.பர் அஸ்ஸாதிக், ஸைனுல் ஆபிதீன் போன்றவர்கள், அபூபக்ரின் மகளார் நபியவர்களின் அன்புக்குரிய மனைவி ஆயிஷாவின் பெயரைத் தங்கள் மகளுக்கு வைத்திருந்தார்கள் என்பதை ஷீஆக்களின் பிரதான நூல்களான 'அல்-இர்ஷாத், கஷ்புல்கும்மா, அல்-புஸூலுல் முஹிம்மா' போன்ற நூல்களில் காணமுடியும். இதன் மூலம் அலி ﷺ அவர்களும் அவரின் பிள்ளைகளும் எந்தளவுக்கு அபூபக்ர் ﷺ அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும் மரியாதையும், பாசமும் வைத்திருந்தார்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

ஷீஆக்களிடம் ஷைத்தானை விட எதிரியாகக் கருதப்படுபவர் உமர் ﷺ அவர்கள்தான். அவர்களை சபிப்பவருக்கு இறைவன் அருள் புரிவதாகச் சொல்பவர்கள் ஷீஆக்கள். உமர் என்ற பெயர்தான் ஷீஆக்களிடம் மிகவும் வெறுப்புக்குரிய பெயர் அவர் கொலை செய்யப்பட்ட நாளை ஒரு பெருநாளாகக் கொண்டாடி தங்கள் வெறியைத் தீர்ப்பவர்கள் இந்த ஷீஆக்கள்.

ஆனால், ஷீஆக்களால் மதிக்கப்படுபவர்களாகச் சொல்லப்படும் நபியவர்களின் குடும்பத்தவர்களைப் பார்த்தால், அவர்கள் உமர் ﷺ அவர்களை நேசித்ததோடு அவரின் பெயரை தங்களின் பிள்ளைகளுக்கு சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். அலி ﷺ அவர்கள் தங்கள் மக்களில் ஒருவருக்கு உமர் என்று பெயர் வைத்திருந்தார்கள். (அல்-இர்ஷாத் ப:176)

இவர் ஹுஸைன் ﷺ அவர்களுடன் கர்பழாவில் மரணித்தார். இவரின் பெயர்களையெல்லாம் கர்பழா தினத்தில் ஷீஆக்கள்



சொல்லமாட்டார்கள். இப்படி ஒருவர் இருந்தார் என்பதையே இனங்காட்ட மாட்டார்கள். இனங்காட்டினால் பசுத்தோல் கிழிந்துவிடுமே அதுபோலவே ஹஸன் ﷺ, ஹுஸைன் ﷺ, ஸைனுல் ஆப்தீன் போன்றவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உமர் என்று பெயர் வைத்திருந்தார்கள். (மிர்ஆதுல் உகூல் ப:582). அலியிப்னு ஹுஸைனும் தன் மகனுக்கு உமர் என்று பெயர் வைத்திருந்தார். இவ்வாறு அஹ்லுல் பைத்தின் பரம்பரையில் உமர் என்ற பெயர் வைக்கப்பட்டவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.

அபூபக்ர்ﷺ, உமர்ﷺ அவர்களின் பெயர்களை வைத்ததைப்போல நபியவர்களின் குடும்பத்தினர், உஸ்மான்ﷺ அவர்களின் பெயரையும் தங்கள் குழந்தைகளுக்கு சூட்டி மகிழ்ந்ததை ஷீஆக்களின் அதிகமான நூல்களில் அவதானிக்கலாம். இதுபோலவே ஏனைய ஸஹாபாக்கள் தங்கள் குழந்தைகளுக்கு நபியவர்களின் நெருங்கிய உறவினர்களின் பெயர்களை வைப்பதில் ஆர்வம் காட்டினார்கள். இதனால்தான் அலி, ஹஸன், ஹுஸைன், பாதிமா, ஸைனப், உம்முகுல்தூம் போன்ற பெயர்களில் ஸஹாபாக்களின் அதிகமான பிள்ளைகள் இருக்கிறார்கள்.

ஸஹாபாக்களும், அஹ்லுல் பைத்தினரும் ஒருவருக்கொருவர் நேசம் கொண்டிருந்ததின் விளைவாகவே இது காணப்படுகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு பெயர் சூட்டும்போது அந்தப்பெயரின் சொந்தக்காரர்கள் வாழ்ந்ததைப்போலவும், அவர் மார்க்கத்தைப் பின்பற்றியதைப்போலவும், அவர் இறை பாதையில் போராடியதைப் போலவும் எங்கள் பிள்ளைகளும் உருவாக வேண்டும் என்பதற்காகவே அந்தப் பெயர்களை வைத்தார்கள். இதை ஷீஆக்கள் மறுத்தால், அஹ்லுல் பைத்களை குறைகாண்பதாக அமைந்துவிடும். தான் எதிர்க்கின்ற, வெறுக்கின்ற மோசமான ஒருவரின் பெயரை தன் பிள்ளைக்கு வைத்ததன் மூலம் வரலாற்றில் எந்த மனிதனும் செய்யாத இழி செயலை எமது இமாம்கள் செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு ஷீஆக்கள் நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

இந்தத் தலைப்பில் நாம் ஆதாரமாக குறிப்பிட்ட ஷீஆக்களின் நூல்களெல்லாம் அவர்களின் நம்பகமான, பிரபல்யமான இமாம்கள் எழுதிய நூல்கள். இவற்றை நாம் அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நூல்களில் இல்லை என்பதற்காக குறிப்பிடவில்லை. இந்த செய்திகள் எமது அறிஞர்களின் நூல்களில் தாராளமாக உள்ளன. என்றாலும் ஷீஆக்களின் முன்பின் முரண்பாடுகளையும், அவர்கள் மனோ இச்சையைப் பின்பற்றுபவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுவ -தற்காகவே இவ்வாறு செய்துள்ளேன்.

இவற்றையெல்லாம் பலவீனமானவை என்று ஷீஆக்கள் சொல்லலாம். அதுதான் அவர்களுக்கு கைவந்த கலை. தாங்கள் மாட்டிக்கொள்ளும் போது எந்த விளக்கமும் சொல்லாமல் அது பலவீனமானது என்று சொல்லி பாமரரின் கண்களில் மிளகரைத்து விடுகின்றனர். சிலபோது அல்லாஹ் ஒருவன் என்று சொன்னால் நமக்கு எதிராக அமைந்துவிடும் என்றால் அதையும் பலவீனமானது என்று சொல்லிவிடுவார்கள். இந்த வார்த்தைப் பிரயோகங்களெல்லாம், மற்றவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் பயன்படுத்துபவை, ஒன்றை பலமானது அல்லது பலவீனமானது என்பதை தெரிவதற்கான அடிப்படைகளே அவர்களிடமில்லை. மற்றவர்களிடம் இருக்கிறது என்பதற்காக சில வழிமுறைகளை அவர்கள் உருவாக்கி இருந்தாலும் அவர்கள் அவைகளை நடைமுறைப்படுத்துவதில்லை.

**ஸஹாபாக்களுக்கும் அஹ்லுல் பைத்களுக்கும் இடையிலிருந்த திருமண உறவுகள்.**

ஸஹாபாக்களுக்கும் அஹ்லுல் பைத்துகளுக்கும் இடையிலிருந்த இறுக்கமான உறவை எடுத்துக்காட்டும் பிரதானமான விடயங்களில் அவர்களிடமிருந்த திருமணரீதியான உறவுமுறையும் பெரும் பங்கு வகிக்கின்றது. நாம் வெறுக்கின்றவர்களின் பிள்ளைகளைத் திருமணம் செய்யமாட்டோம். அதேபோன்று, நாம் வெறுக்கின்றவர்களுக்கு நமது பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்கமாட்டோம்.



எமது பிள்ளைகளை நாம் மற்றவர்களுக்கு திருமணம் செய்து கொடுப்பதன் மூலம் குறித்த அந்த நபர் நல்லவர் என்று சான்று பகர்கிறோம்.

இந்த உறவுமுறை ஸஹாபாக்களுக்கும் அஹ்லுல் பைத்களுக்கும் மத்தியில் சற்று அதிகமாகவே இருந்திருப்பதை வரலாற்று நூல்கள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. அஹ்லுல் பைத்தினரின் ஆணிவேரான அண்ணல் நபி ﷺ அவர்கள் அபூபக்ர் ؓ அவர்களின் மகள் ஆயிஷா ؓ அவர்களையும், இரண்டாம் கலீபா உமர் ؓ அவர்களின் மகள் ஹப்ஸா ؓ அவர்களையும் திருமணம் செய்தார்கள். இதில் நான்கு விதமான கருத்துக்களை யூகிக்க முடியும்.

01) அபூபக்ரும் ؓ, உமரும் ؓ அவர்களின் மக்களும் சிறந்தவர்களாக இருந்தார்கள் இதனால் நபியவர்கள் திருமணம் செய்தார்கள்.

02) ஆயிஷா ؓ, ஹப்ஸா ؓ இருவரும் தான் சிறந்தவர்கள். அவர்களின் தந்தைகளெல்லாம் வழிகேட்டிலேயே இருந்து, மரணித்தார்கள். ஆயிஷா ؓ, ஹப்ஸா ؓ இருவரும் சிறந்தவர்களாக இருந்ததால் நபியவர்கள் இருவரையும் மணந்துகொண்டார்கள்.

03) ஆயிஷா ؓ, ஹப்ஸா ؓ இருவரும் மோசமானவர்கள். ஆனால், அவர்களின் தந்தையர்களோ சிறந்தவர்களாக இருந்தார்கள். இதனால் நபியவர்கள் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

04) ஆயிஷா ؓ, ஹப்ஸா ؓ அவர்கள் நல்லவர்கள் கிடையாது அவர்களின் தந்தையரும் நல்லவர்கள் கிடையாது. எதற்காக நபியவர்கள் திருமணம் செய்தார்கள் என்றே தெரியவில்லை.

நபியவர்களின் திருமணத்திற்கு இந்த நான்கில் ஒன்றைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாது. நபியவர்கள் திருமணம் செய்தது இரு தரப்பாரும் சிறந்தவர்களாக இருந்ததால் தான்

எனும் முதலாவது முடிவில் நாம் இருக்கின்றோம். இதுவே குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களுக்கு உடன்படுவதாகவும் உள்ளது. இரண்டாவது காரணம்: குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களுக்கு முரண்படுவதாக உள்ளது ஆயிஷா ﷺ, ஹப்ஸா ﷺ இருவரும் சிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களின் தந்தைமாரையும் அல்-குர்ஆன் ஸுன்னா சிறந்தவர்கள் என்று சொல்கிறது.

மூன்றாவது காரணத்தை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது ஏனெனில் சாதாரண மனிதன் கூட திருமணம் செய்யும்போது தான் திருமணம் செய்யப்போகும் குறித்த பெண் நல்லவளா? கெட்டவளா? என்பதை மிகவும் அதிகமாக ஆய்வு செய்வான். பிள்ளை மோசமாக இருந்தால் குடும்பம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் மோசமானவ்ன கூட திருமணம் செய்யமாட்டான். எனவே, இதை நமது நபியுடன் சேர்ப்பது அவரையே குறை காண்பதாகவும், அவரை மோசமானவர் என்று சித்தரிப்பதாகவும் அமைந்துவிடும்.

நான்காவது காரணத்தை புத்தியுள்ள எவரும் சொல்லமாட்டார்கள். மாற்றுமதத்தவர்கள் கூட அதைச்சொல்ல மாட்டார்கள். மோசமான குடும்பத்தில் பிறந்த மோசமான பெண்ணை நபியவர்கள் திருமணம் செய்தார்கள் என்பது நமது நபியை கொச்சைப்படுத்துவது மாத்திரமல்லாமல் நபிக்கே ஆப்பு வைக்கும் அம்சமாகும்.

இது ஷீஆக்களுக்கு மிகப்பெரும் பொறி, இதில் எந்தக்காரணத்தை அவர்கள் கூறினாலும் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொள்வார்கள். முதல் மூன்று காரணங்களில் எதைச்சொன்னாலும் அவர்களின் அனைத்து நூல்களையும், அடிப்படைக் கொள்கையையும் நிராகரிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள். ஏனெனில் அவர்களின் நூல்களெல்லாம் சிறியது பெரியது என்ற வித்தியாசமில்லாமல் ஆயிஷா ﷺ, ஹப்ஸா ﷺ, அபூபக்ர் ﷺ, உமர் ﷺ போன்றோரை நயவஞ்சகர்கள் என்று கீழ்த்தரமான வார்த்தைகள் கொண்டு விமர்சிக்கின்றன. நான்காவது காரணத்தைச்சொன்னால்



நபியையே நிராகரித்த குற்றத்திற்கு ஆளாவார்கள் உண்மையில் இது ஷீஆக்களால் துப்பவோ, விழுங்கவோ முடியாத ஒரு எதார்த்தம்.

நபி (ஸல்) அவர்கள் தனது மகள் ருகையாவை உஸ்மான் ﷺ அவர்களுக்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். இருவருக்கும் அப்துல்லாஹ் என்றொரு பிள்ளையும் பிறந்தது. ருகையா மரணித்ததும் நபியவர்கள், உஸ்மானுக்கு தன் மகள் உம்மு குல்தூமை திருமணம் செய்து கொடுத்தார்கள். உண்மையில், உஸ்மான் ﷺ சிறந்தவராக இல்லையென்றால், நபியவர்கள் தனது இரண்டு மகளையும் திருமணம் செய்து வைத்திருக்கமாட்டார்கள். எமது பிள்ளைகளை கெட்டவனுக்கு நாம் திருமணம் செய்து கொடுக்கமாட்டோம். இந்நிலையில் இதை நபியோடு இணைப்பது எவ்வளவு கீழ்த்தரமான செயல்.

ஷீஆக்கள் உஸ்மான் ﷺ அவர்களை காபிர் என்பதோடு அவரே நபியின் மகளைக் கொலை செய்ததாகவும் சொல்கின்றனர். இது நபியவர்களையே குறைகாண்பதாகும். தனது மகளை ஒரு காபிருக்கும் ஒரு கொலைகாரனுக்கும் திருமணம் செய்து கொடுத்தார் என்பதோடு தன்பிள்ளையை கொலை செய்வதில் அவரும் பங்கெடுத்துக்கொண்டதாக அமைந்துவிடும். எனவே, ஷீஆக்கள் தங்கள் கொள்கையை ஒரு கணம் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

அலி ﷺ அவர்கள் நபியவர்களுக்கு மருமகன் ஆவதற்கு முன்னாலேயே உஸ்மான் ﷺ அவர்கள் மருமகனனார்கள். அதுபோலவே உலகத்தில் ஒரு நபியின் இரண்டு மகளை திருமணம் செய்த மிகப்பெரும் வரலாற்றுச்சிறப்பு அவருக்கு மாத்திரமே உள்ளது.

உமர் ﷺ அவர்கள் அலி ﷺ அவர்களின் மகள் உம்மு குல்தூமை திருமணம் செய்தார்கள். அலி ﷺ அவர்கள் திருமணம் செய்து கொடுத்தார்கள். இந்த இடத்தில் ஷீஆக்கள் யாரை

குறை சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை. இதில் யாரை அவர்கள் குறை கண்டாலும் அலிﷺ அவர்களை குறைகாண்பதாகவே அமையும்.

உமர் ﷺ அவர்களை காபிர் என்றால்! ஒரு காபிருக்கு தனது மகளை அலி ﷺ திருமணம் செய்து கொடுத்தார் என்று சொல்ல வேண்டும். அதுவும் நபியின் மரணத்திற்கு பின்தான் இந்த திருமணம் நடந்தது, அலி ﷺ அவர்களின் மகளை குறை கண்டாலும் அலி ﷺ தன் மகளைப் பயிற்றுவிப்பதில் தோழ்வியடைந்துவிட்டார் என்று சொல்லவேண்டும். இதில் உமர் ﷺ அவர்களுக்கு: ஸைத், ருகையா எனும் இரு பிள்ளைகள் கிடைத்தனர்.

அஸ்மா பின்த் உமைஸ் ﷺ அவர்களை அபூபக்ர் ﷺ அவர்கள் திருமணம் செய்திருந்தார்கள் அவர்கள் மரணித்ததற்கு பிறகு அஸ்மாவை அலி ﷺ அவர்கள் திருமணம் செய்தார்கள். அஸ்மாவின் மூலம் அலிﷺ அவர்களுக்கு அவ்ன், யஹ்யா என்னும் இரு குழந்தைகள் கிடைத்தன.

அலி ﷺ அவர்களின் மகன் ஹுஸைன் ﷺ அவர்கள் ஸைத் பின்த் ஆதிகாவை திருமணம் செய்தார்கள். இவர் உமர் ﷺ அவர்களின் மாமாவின் மகள், இவர் ஏற்கனவே உமர் ﷺ அவர்களின் மனைவியாக இருந்தவர்.

அலி ﷺ அவர்களின் மகள் ரம்லா அவர்கள் அபூ ஸுப்யானின் மகன் அப்துல்லாஹ்வை திருமணம் செய்து கொண்டார்கள். இவர், மரணித்ததற்கு பின் உமைய்யா வம்சத்தைச் சேர்ந்த மர்வானின் மகன் முஆவியாவை திருமணம் செய்து கொண்டார்கள். இன்று அஹ்லுல் பைத்தை நேசிப்பதாகச் சொல்லும் ஷீஆக்கள், இவ்வாறு பேசுவதையே பெரும் பாவமாக நினைப்பார்கள் அந்தளவுக்கு உமைய்யா வம்சாவளி, அபூஸுப்யான் போன்றவர்களில் அவர்களுக்கு எதிர்ப்புணர்வு இருக்கிறது. ஆனால் அஹ்லுல் பைத்களை நேசிப்பதாகவும் பீற்றிக்கொள்கின்றனர்.



ஹுஸைன் ﷺ அவர்களின் மகள் ஸகீனா, உஸ்மான் ﷺ அவர்களின் மகனின் (உமரின்) மகன் ஸைதை திருமணம் செய்திருந்தார். ஹுஸைன் ﷺ அவர்களின் அடுத்த மகள் பாதிமா உஸ்மான் ﷺ அவர்களின் மகனின் (அம்ரின்) மகன் அப்துல்லாஹ்வை திருமணம் செய்திருந்தார்.

அபூபக்ர் ﷺ அவர்களின் மகன் அப்துர்ரஹ்மானின் மகள் ஹப்ஸாவை, ஹுஸைன் ﷺ அவர்கள் மணந்திருந்தார்கள். ஷீஆக்களின் பிரதான இமாம்களில் ஒருவரான ஜ∴பருஸ்ஸாதிக் கூட அபூபக்ர் ﷺ அவர்களின் பரம்பரையில் வந்தவரே இதனால்தான் ஜ∴பருஸ்ஸாதிக் அபூபக்ர்ﷺ எனது பாட்டன் என்று அடிக்கடி சொல்லக்கூடியவராகவும் அவர்களைப்புகழக்கூடியவராகவும் இருந்தார்.

இவ்வாறு, அஹ்லுல் பைத்களுக்கும் ஏனைய ஸஹாபாக் களுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் மத்தியில் உள்ள திருமண உறவு முறையைப் பார்த்தால் தனியான ஒரு புத்தகம் எழுதுமளவு அதிகமாக உள்ளது. (இன்ஷா அல்லாஹ் தேவைப்படின பேனா பிடிப்போம்) ஆனாலும் புத்தியுள்ளவர்களுக்கு சிந்திக்கவும் படிப்பினை பெறவும் இவைகள் போதுமானவை. எதைச்சொன்னாலும் நாம் விடமாட்டோம் என்று சொல்பவர்கள் எதைச்சொன்னாலும் ஏற்கமாட்டார்கள்.

அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன். எல்லாவற்றுக்கும் அவனே போதுமானவன்.

பகுதி –02

## குழப்பங்கள் பற்றி இஸ்லாம்.

இஸ்லாம் மனிதர்களை மறுமையில் நரகத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவும் சுவர்க்கத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வதற்காகவும் இறைவனால் வழங்கப்பட்ட மார்க்கமாகும். எனவே அதன் இலட்சியத்திற்கு குந்தகம் விளைவிக்கும் அத்தனை காரியங்களிலிருந்தும் மக்களை எச்சரிப்பதில் அதிக ஈடுபாடு காட்டுகின்றது. நபி ﷺ அவர்கள் அதிகமான இடங்களில் குழப்பங்கள் பற்றி பொதுவாக எச்சரித்துள்ளதோடு சில சந்தர்ப்பங்களில் குழப்பங்களின் வடிவங்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். அத்தோடு இந்த சமுதாயத்தில் பிரச்சினை வரும் என்பதையும் முன்னறிவிப்புச் செய்து, பிரச்சினைவரும் போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தினார்கள்.

“விசுவாசிகளில் இரு கூட்டத்தார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால் அவ்விருவருக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள்” (49:9)

“உங்கள் வீடுகளில் மழை விழுவதைப் போன்று பிரச்சினைகள் விழுவதை நிச்சயமாக நான் காண்கிறேன்.” (புஹாரி1878, முஸ்லிம்2885)

“எனக்குப்பின் ஆண்களுக்கு மிகவும் பிரச்சினையானதாக பெண்களைத்தவிர நான் எதையும் விட்டுவிடவில்லை.” (புஹாரி5096, முஸ்லிம்2740)

“மிகுந்த இருள்மிக்க இரவின். இருள் மூடிக் கொள்வதைப்போல பிரச்சினைகள் அதிகரிப்பதற்கு முன்னால் நல்லமல்களை செய்வதில் அதிக ஈடுபாடு காட்டுங்கள். (அந்த நேரத்தில்) மனிதன் இறைவிசுவாசியாக காலைப்பொழுதை அடைவான். ஆனால்,



மாலையில் காபிராகி விடுவான். அல்லது மாலையில் இறைவிசுவாசியாக இருப்பான். காலையில் காபிராகிவிடுவான். தனது மார்க்கத்தை அற்ப உலகப் பொருட்களுக்கு விற்பான்.” (முஸ்லிம் 118)

நபியவர்களின் மனைவி உம்மு ஸலமா ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் ஓரிரவு திடீரென்று பதற்றத்துடன் விழித்தெழுந்தார்கள், அவர்கள் சொன்னார்கள்: “இந்த இரவில் எவ்வளவோ பிரச்சினைகள் இறக்கப்பட்டுள்ளன. மேலும் எவ்வளவோ பொக்கிஷங்களும் திறக்கப்பட்டுள்ளன (என்) மனைவியர்களை எழுப்பி விடுங்கள், இந்த உலகத்தில் எத்தனையோ ஆடை அணிந்த பெண்கள், மறுமையில் ஆடையின்றி இருக்கிறார்கள்.” (புஹாரி 115)

“இரண்டு குழுக்கள் நரகவாதிகள், நான் அவர்களை காணவில்லை. ஒரு கூட்டத்தினர், அவர்களுடன் மாட்டின் வால் போன்ற சாட்டை இருக்கும் அவர்கள் அதைக்கொண்டு மக்களைத் தண்டிப்பார்கள். (இரண்டாமவர்) பெண்கள், அவர்கள் ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருப்பார்கள், சாய்ந்தும் மற்றவர்களை சாய்க்கும் விதத்திலும் (தப்பான வழிக்கு தூண்டும் வகையில்) நடப்பார்கள்.” (முஸ்லிம் 2128)

அப்துல்லாஹிப்னு அம்ரிப்னில் ஆஸ் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்: “தொழுகைக்கு எல்லோரும் வாருங்கள் என்று நபியவர்களின் அழைப்பாளர் ஒருவர் அழைப்புவிடுத்தார். நாம் எல்லோரும் ஒன்று கூடினோம். நபியவர்கள் சொன்னார்கள்: ‘நிச்சயமாக எனக்கு முன்னாலிருந்த எந்த நபிக்கும் அவர் தெரிந்த நன்மையான காரியங்களை அவரது சமுதாயத்தினருக்கு தெரிவிப்பது கடமையாக இருந்தது. அதுபோலவே, அவருக்குத் தெரிந்த தீங்கிலிருந்து எச்சரிப்பதும் அவர் மீது கடமையாக இருந்தது. உங்களுடைய இந்த சமுதாயத்தினுடைய பாதுகாப்பு அதன் ஆரம்பத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதன் கடைசியை சோதனைகள் பீடித்துக்கொள்ளும். மேலும், நீங்கள் வெறுக்கின்ற

பல காரியங்கள் நிகழும், மேலும் பிரச்சினைகள் ஒன்றுக்கு மேல் ஒன்று வந்துகொண்டே இருக்கும்.'' (முஸ்லிம்)

ஹுதைபதுப்னுல் யமானி ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள் நபி ﷺ அவர்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நானும் அந்த சபையில் இருந்தேன். நபி ﷺ அவர்கள் பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் கணிப்பிட்டுக்கொண்டிருக்கும் வேளையில் பின்வருமாறு சொன்னார்கள்: "அதில் மூன்று (வகை) உள்ளது: எதையும் அது விட்டுவைக்காது. அவைகளில் பலமான காற்று வீசுவதைப்போன்ற பிரச்சினைகளும் உள்ளன, சிறிய பிரச்சினைகளும் உள்ளன. மேலும் பெரும் பிரச்சினைகளும் உள்ளன.'' (முஸ்லிம்2891)

நபி ﷺ அவர்கள் இந்த ஹதீஸிலே பிரச்சினைகள் எல்லாம் ஒன்றாக இருக்காது அவைகளுக்கு மத்தியில் ஏற்றயிறக்கம் இருக்கும். ஆனால், அதிகமான பிரச்சினைகள் இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறார்கள்.

''மனிதன் மற்ற மனிதனின் கப்ரின் பக்கம் சென்று இந்த கப்ரில் இருப்பது நானாக இருந்திருக்கக்கூடாதா! என்று சொல்லும் வரைக்கும் மறுமை ஏற்படாது.''
அறிவிப்பவர்: அபூஹுரைரா ﷺ, புஹாரி7115, முஸ்லிம்157

"உங்களில் எவரும் தன்னை சோதனைகள் பிடித்திருக்கிறது என்பதற்காக மரணிக்க நினைக்கவேண்டாம். என்றாலும், தான் மரணிப்பதை அதிகம் விரும்பினால், இறைவா! நான் உயிர் வாழ்வது எனக்கு நல்லதாக இருந்தால் என்னை உயிர் வாழ வைத்துவிடு. நான் மரணிப்பது எனக்கு நல்லதாக இருப்பின் என்னை மரணிக்கச் செய்துவிடு என்று பிரார்த்திக்கட்டும்'' என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் ﷺ நூல்: புஹாரி5671,முஸ்லிம்2680

இங்கே, இறுதியாக வந்த இரண்டு ஹதீஸ்களும் முரண்படுவதைப்போன்று தோன்றலாம். ஆனால், சிந்தித்தால் இரண்டுக்கும்



மத்தியில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை உணரலாம். முதல் செய்தியில் நடக்கின்ற ஒரு நிகழ்வை நபியவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதற்காக, அதை நபியவர்கள் ஆதரித்தார்கள் என்றோ, ஊக்குவித்தார்கள் என்றோ பொருள்படாது. இரண்டாவது செய்தியில் ஒருவர் நிராசையடைந்து வாழ்க்கையில் சோதனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் மரணத்தை ஆதரவு வைப்பதை தடை செய்கிறார்கள். ஆனால், தனக்கு நல்லது எதுவோ அதை தன் விவகாரத்தில் நிறைவேற்றுமாறு பிரார்த்திப்பதொன்றும் தப்பில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறார்கள்.

"மிகவுமே, மோசடி செய்யப்படுகின்ற காலங்கள் மனிதர்களுக்கு வரும் அதிலே பொய்யன் உண்மைப்படுத்தப்படுவான் உண்மையாளன் பொய்பிக்கப்படுவான் மோசடிக்காரன் நம்பப்படுவான் நம்பிக்கையாளன் மோசடி செய்பவன் என்று பெயர்சூட்டப்படுவான் அதிலே 'ருவைபிழாக்கள்" பேசுவார்கள்'' என்று நபியவர்கள் கூறினார்கள் அப்போது ஒருவர் "நபியவர்களே! அதுயார் ருவைபிழா?" என்றார். அதற்கு நபியவர்கள்: "அவன்தான் பொதுமக்களின் விடயத்தில் பேசுகின்ற பிரயோசனம் இல்லாத வீணாய்ப்போன மடையன்'' என்றார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா ﷺ, நூல்: இப்னு மாஜா, அஹ்மத் (இந்தசெய்தியை இமாம் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் பலமானது என்று கூறியுள்ளார்கள்)

இவ்வாறு குழப்பங்கள் பற்றி ஏராளமான செய்திகளை நபியவர்கள் கூறியுள்ளார்கள். எல்லாவற்றையும் இங்கே தொகுப்பது இலகுவான விடயமல்ல. புத்தகத்தின் பக்கங்களும் அதற்கு இடமளிக்காது. ஹதீஸ்களைத் தொகுத்த பெரும்பான்மையான அறிஞர்கள் ''பிரச்சினைகள்'' என்ற பாடமிட்டு இது தொடர்பான செய்திகளை பதிவுசெய்துள்ளனர். விரும்பியவர்கள் ஹதீஸ் நூல்களில் அவைகளை அவதானிக்க முடியும்.

## குழப்பங்களின் திறவுகோல்.

நபி ﷺ அவர்களால் கடுமையாக எச்சரிக்கப்பட்ட குழப்பங்கள் எப்போது தோற்றம் பெறும்? அதன் ஆரம்பம் எது? என்பவற்றை நபியவர்களின் பொன்மொழிகளிலிருந்து புரிந்துகொள்ளலாம். ஹதீஸ்களின் அடிப்படையில் ஆய்வு செய்யும்போது உமர்ؓ அவர்களின் மரணத்துடன் நபியவர்களால் எச்சரிக்கப்பட்ட பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன என்பதை உணரலாம்.

இஸ்லாத்திற்கெதிரான கொள்கைகள் முஸ்லிம்களுக்கு மத்தியில் தலைத்தோங்குவதையும், நபியவர்களால் காட்டப்படாத விடயங்களில் மக்கள் ஈடுபடுவதையும் உமர் ؓ அவர்கள் கடுமையாகத் தடுத்தார்கள். அவைகளை இனங்கண்டு அழிப்பதற்காகவே பிரத்தியேக நேரங்களையும் ஒதுக்கி செயற்பட்டார்கள். அவைகளில் ஏதாவது ஒன்றைக் கண்டால் காணும் இடத்திலேயே அதைத்தடுப்பதற்கு முயல்வார்கள். இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காகவே, எந்நேரமும் தன்னுடன் ஒரு தடியை வைத்துக் கொள்வார்கள். இந்த உலகத்தில் இன்றிருக்கின்ற அட்டூழியங்களும் அடாவடித்தனங்களும் நீங்கி நல்லதொரு நீதமான சூழ்நிலை உருவாக வேண்டுமென்றால் உமரின் ஆட்சிவேண்டும் என்று மாற்று மதத்தவர்களால் சொல்லப்படுமளவுக்கு அநியாயத்திற்கும அடாவடித்தனத்திற்கும் எதிரான அவரின் போராட்டம் கடுமையாக இருந்தது.

நபி ﷺ அவர்கள் உமர்ؓஅவர்களைப் பார்த்துச் சொன்னார்கள்; "இறைவன் மீது ஆணையாக உமரே! நீர் ஒரு தெருவினால் சென்றால் ஷைத்தான் அந்த தெரு அல்லாத வேறொரு தெருவினால் செல்கிறான்" (புஹாரி3683, முஸ்லிம்2396)

உமரைக்கண்டால் ஷைத்தானே விரண்டோடும் அளவுக்கு ஷைத்தானியத்திற்கு எதிரான போராட்டம் அவரிடம் கடுமையாக இருக்கும் என்று நபியவர்கள் கூறினார்கள். எனவே, உமர் ؓ



அவர்கள் இருக்கும் வரைக்கும் ஷைத்தானிய சக்திகள் தலைத்தோங்குவது கடினமானது என்பதை இது தெளிவுபடுத்துகின்றது.

ஹுதைபதுப்னுல் யமானி ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு தடவை உமர் ؓ அவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக நபியவர்கள் சொன்னதை உங்களில் யார் பாடமிட்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

ஹுதைபதுப்னுல் யமானி ؓ அவர்கள் சொல்கிறார்கள்: "நபியவர்கள் சொன்னதைப்போல நான் பாடமிட்டுள்ளேன்." என்று சொன்னேன். அதற்கு உமர் ؓ அவர்கள்: "நீர் அதற்குத் தகுதியானவர்தான். என்ன பாடமிட்டாய்? சொல்." என்றார்கள்.

நபி ﷺ அவர்கள் சொன்னார்கள்: "ஒரு மனிதனின் குடும்பம், பணம், அண்டைவீட்டார் போன்ற விடயங்களில் நடக்கும் பிரச்சினைகளை தொழுகை, தர்மம், நன்மையை ஏவுதல் தீமையைத் தடுத்தல் என்பது அழித்துவிடும்."

அப்போது, உமர் ؓ அவர்கள் சொன்னார்கள்: இது அல்ல. கடலின் அலை போன்று வீசுகின்ற பிரச்சினைகளைப்பற்றி (நான் கேட்டேன் என்றார்கள்)

"அமீருல் முஃமினீனே! அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட தேவையில்லை. ஏனெனில், உங்களுக்கும் அந்த பிரச்சினைகளுக்கும மத்தியில் உள்ள கதவு தாழிடப்பட்டுள்ளது" என்று ஹுதைபா ؓ அவர்கள் கூறினார்கள்.

அப்போது, உமர் ؓ அவர்கள் அந்தக்கதவு திறக்கப்படுமா? அல்லது உடைக்கப்படுமா? என்று கேட்டார்கள். அதற்கு ஹுதைபாؓ அவர்கள்: இல்லை. கலீபா அவர்களே! அது உடைக்கப்படும் என்றார்கள். "அப்படியென்றால், அதற்குப்பிறகு அது மூடப்படாமல் இருப்பதற்கு மிகவும் தகுதியானது." அதாவது, அந்த வாயில் அதன் பிறகு மூடப்படாது என்று உமர் ؓ அவர்கள் கூறினார்கள்.

ஹுதைபா ﷺ அவர்களிடமிருந்து ஹதீஸை அறிவிப்பவர் சொல்கிறார்: "யார் அந்த வாயில் என்பதை உமர் ﷺ அறிந்துகொண்டாரா?" அதாவது பிரச்சினைகள் மக்களைத்தீண்டாத வகையில் மக்களைப் பாதுகாக்கும் அந்த அரண், தடுப்புச்சுவர் எது என்பதை உமர் ﷺ அவர்கள் புரிந்துகொண்டார்களா? என்று ஹுதைபா ﷺ அவர்களிடம் கேட்டோம்.

அதற்கு ஹுதைபா ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "பகலுக்கு அடுத்தது இரவு என்று அறிவதைப்போல நான்தான் அந்த தடுப்புச்சுவர் என்பதை உமர் ﷺ அவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். ஏனெனில், நான் அவரிடம் ஹதீஸைத்தான் சொன்னேன் இட்டுக்கட்டப்பட்ட செய்திகளையோ பொய்களையோ அவரிடம் சொல்லவில்லை." (புஹாரி3586, முஸ்லிம்144)

இவைகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டதினால்தான் குழப்பங்களை ஏற்படுத்துவதை இலட்சியமாகக் கொண்டிருந்த, கொண்டிருக்கின்ற ஷீஆக்கள் அவரைக் கொன்றார்களோ தெரியவில்லை.

இதனால்தான், உமர் ﷺ அவர்கள் கொலை செய்யப்பட்ட நாளை ஷீஆக்கள் ஒரு பெருநாளாகக் கொண்டாடுகின்றனர். அதற்கு 70 க்கு மேற்பட்ட பெயர்கள் அவர்களிடம் இருக்கின்றது. மகிழ்ச்சியின் உச்சகட்டத்தினால் உமர் ﷺ அவர்களைக் கொன்ற பாவி அபூலு∴லுஆ அல்-மஜூஸிக்காக ஷீஆக்களின் முக்கிய நகரமான கும் என்ற பிரதேசத்திற்கு அருகில் உள்ள காஸான் என்ற பகுதியில் ஒரு கப்ரை பெரும் ஆடம்பரத்துடன் கட்டிவைத்துள்ளனர். ஒவ்வொரு வருடமும் அங்கே விசேட நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுகின்றன.

உமர் ﷺ அவர்களை சபிப்பதிலும் அவரைக்கொன்றவனுக்கு அருள் வேண்டிப்பிரார்த்திக்கின்ற நடவடிக்கைகளிலும் இங்கு வருகின்ற ஷீஆ பக்தர்கள் ஈடுபடுகின்றனர். இது ஒன்றும் இரகசியமாக நடக்கின்ற நடவடிக்கையல்ல. பகிரங்கமாக ஒலி, ஒளிப்பதிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு நடை பெறுகிறது.



## எங்கிருந்து குழப்பங்கள் தோன்றும்.

தனது மரணத்தின் பின் குழப்பங்கள் தோன்றும். ஒருபோதும் அது குறையாது. ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே செல்லும். ஒவ்வொரு மனிதனும் அந்த பிரச்சினைகளில் சிக்கித்தவிப்பான். அல்லாஹ் காப்பாற்றியவர்களைத்தவிர அதிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது என்று நமக்கு பாடம் சொல்லித்தந்த நபியவர்கள், நாம் பிரச்சினைகளை இலகுவாக இனங்கண்டு அதிலிருந்து ஒதுங்கி வாழ்வதற்காக அது எங்கிருந்து தோற்றம் பெறும் என்பதையும் சொல்லித் தந்துள்ளார்கள். (அல்லாஹ் எம்மனைவரையும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்து சுவர்க்கவாதிகளாக மாற்றி வைப்பானாக!)

இப்னு உமர் ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: நபியவர்கள் ஒரு தடவை கிழக்குப் பகுதியை நோக்கி நின்றார்கள். பின்பு, "அறிந்து கொள்ளுங்கள் பிரச்சனைகள் இங்கிருந்துதான் வரும் என்று கிழக்குப் பகுதியை நோக்கி கையை சுட்டிக்காட்டியவர்களாக ஷைத்தானின் கொம்பு இங்கிருந்து உதயமாகும் என்றார்கள்."
(புஹாரி7093,முஸ்லிம்2905)

முஸ்லிமில் வரும் அறிவிப்பிலே கிழக்கை நோக்கி கையை அசைத்து பிரச்சினைகளின் தலைமை இங்கிருந்தே தோற்றம் பெறும் என்று நபியவர்கள் கூறியதாக இடம்பெற்றுள்ளது.

இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள் "பிரச்சினைகள் இங்கிருந்துதான் வந்தன என்று நபியவர்கள் கிழக்குப்பகுதியை நோக்கி கையசைத்தார்கள்"
(புஹாரி4398, முஸ்லிம்51)

இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ﷺ அவர்கள் ஒரு தடவை பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள்: "இறைவா! எங்களது முத்திலும் ஸாவிலும் (அன்று மதீனாவில்

காணப்பட்ட தானியங்களை அளக்கின்ற முறை) பரகத் செய்வாயாக, இறைவா எங்களுக்கு யெமன் பிரதேசத்திலும் ஷாமிலும் பரக்கத் செய்வாயாக" அப்போது கூட்டத்திலிருந்த ஒரு மனிதர் நபியவர்களிடம், எங்கள் இராக்கிலும் பரகத் செய்யுமாறு பிரார்த்தியுங்கள் என்று சொன்னார். அதற்கு நபியவர்கள் "அதிலேதான் ஷைத்தானின் கொம்பு உள்ளது (அங்குதான்) அதிகமான பிரச்சினைகள் தோன்றும். மேலும் ஈரமில்லாத நிலை (கல்நெஞ்சம், கஸ்டம், பிரச்சினை) கிழக்கில் தோன்றும்'' (தபரானி)

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தன்னுடைய வரலாற்றுப் புகழ்மிக்க விரிவுரை நூலான 'பத்ஹுல் பாரி'' எனும் நூலில்: மதீனாவாசிகளின் கிழக்கு என்பது ஈராக் பிரதேசமும் அதனை அண்டிய பகுதிகளும் என்று இமாம் ஹத்தாபி (ரஹ்) அவர்கள் சொல்வதாக குறிப்பிடுகிறார்கள்.

மதீனாவின் கிழக்குப் பகுதியில் பாரசீகத்தின் பிரதேசங்களே நிறைந்து காணப்படுவதை இன்றைய உலக வரைபடத்தைப் பார்க்கின்ற எவரும் புரிந்துகொள்ள முடியும். பாரசீகத்தின் முக்கிய பகுதியாகவும் அன்றைய அழிந்துபோன பாரசீக நாகரிகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் முயற்சிக்கின்ற ஒரு பிரதேசமே, இன்றைய ஈரான் என்பது எம்மில் பலருக்கு தெரியாத தகவலாக இருக்கலாம்.

அது மாத்திரமல்லாமல், அரபுக்கடலைப் பாரசீகக் கடலாக பிரகடனப்படுத்துமாறு ஐ.நா விடம் ஈரான் கோரிக்கை விடுத்தது யாவரும் அறிந்த விடயமே. மத்தியகிழக்கில் இஸ்ரேலுக்கு மறைமுகமான ஆதரவை செலுத்திக்கொண்டு, வெளியில் மற்றவர்களை ஏமாற்றும் விதத்தில் நடந்துகொண்டு தன்னை ஒரு அணுவாயுத வல்லரசாக பிரகடனப்படுத்தி ஏனைய முஸ்லிம் நாடுகளை அச்சுறுத்தி, தனது ராபிழா மத்ஹபுக்கு பலம் சேர்க்கப் பாடுபடும் ஒரு பலமான நாடும் இன்றைய பாரசீகமான ஈரான்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரதேசங்களிலிருந்தே பிரச்சினைகள் அதிகம் தோற்றம் பெறும் என்று நபியவர்கள் முன்னறிவிப்புச்செய்தார்கள் அதற்கேற்ப



அனைத்துப் பிரச்சினைகளும் அங்கிருந்தே தோற்றம் பெற்றதை வரலாற்று நெடுகிலும் காணலாம்.

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "முதல் பிரச்சினை இந்த கிழக்குப் பிரதேசத்திலிருந்தே தோற்றம் பெற்றது. அதுவே முஸ்லிம்கள் பிளவுபடுவதற்கும் காரணமாக அமைந்தது. அதுதான் ஷைத்தான் விரும்புகின்ற, அவன் சந்தோசப்படுகின்ற விடயம் அதுபோல் மார்க்கத்தில் இல்லாத புதிய விடயங்களும் இஸ்லாமிய அகீதாவிற்கு முரணான கொள்கைகளும் இங்கிருந்தே தோற்றம் பெற்றன.'' (பத்ஹுல் பாரி)

ஈராக்கிலிருந்துதான் ஹவாரிஜ், ஷீஆ, ரவாபிழா, பாதினிய்யா, கதரிய்யா, மு:தஸிலா போன்ற இஸ்லாத்திற்கு முரணான கொள்கைகள், இஸ்லாம் என்ற பெயரில் தோற்றம் பெற்றன. நபியவர்கள் சொன்னதைப்போல அதிகமான வழிகேடுகளும் முஸ்லிம்களை சின்னாபின்னப்படுத்தும் செயற்பாடுகளும் சதிமுயற்சிகளும் இந்த கிழக்குப் பகுதியிலிருந்தே தோற்றம் பெற்றதை வரலாறு தெரிந்த எவரும் அறிந்துகொள்ள முடியும்.

பாரசீகப் பகுதியிலிருந்துதான் அதிகமான மதங்களும் வழிகேட்டுச் சித்தாந்தங்களும் சிந்தனைகளும் தோற்றம் பெற்றன. மேலும் கிழக்குப்பிராந்தியமான ஈராக்கினூடாகத்தான் ஷீஆக்களின் துணையுடன் தாத்தாரியர்கள் ஹி.07ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுத்தனர். அதன் மூலம் பல லட்ச்சம் உயிர்கள் போக்கப்பட்டன. இறைவனால் மாத்திரமே கணக்கிடமுடியுமான கொலைகள் நடந்தன. ஈராக்கில் 40 நாட்கள் ஜமாஅத்துத்தொழுகைக்கு செல்லவிடாமல் முஸ்லிம்கள் தடுக்கப்பட்டார்கள். வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. பல முஸ்லிம் அறிஞர்கள் ஷீஆக்களால் தேடித்தேடி கொலை செய்யப்பட்டார்கள்.

இன்றைய நாள் வரை, இந்த கிழக்குப்பகுதி பிரச்சினைகளினதும் முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்குமான

அடிப்படையாகத் தொழிற்பட்டு வருவது, நபியவர்கள் சொன்னது இறைவாக்கு என்பதை நிரூபிக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். (அல்லாஹ் எம்மனைவரையும் இத்தகைய பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பானாக!)

உண்மையில், நபியவர்களின் இத்தகைய செய்திகளை அடிப்படையாகக்கொண்டு பிரச்சினைகளை ஆய்வுசெய்து அதன், தோற்றுவாயையும் ஆழ அகலத்தையும் கருத்தில் கொண்டு சரியான நேரங்களில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய இஸ்லாமிய சமுதாயம், பிரச்சனையின் காரணகர்த்தாக்களை சமுதாயத்தின் பாதுகாவலர்கள் என்றும் அவர்களே முஸ்லிம்களைப் பாதுகாப்பவர்கள், அவர்களின் கரங்களை நாம் அனைவருமாகச் சேர்ந்து பலப்படுத்த வேண்டும் என்றும், பிரச்சாரம் செய்துவருகின்றது. அதேவேளை இவர்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளை இனங்கண்டு அவைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டு எமது சகோதர முஸ்லிம்களையும் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தில ஈடுபடுகின்றவர்களை அமெரிக்காவின் அடிவருடிகள் என்றும், இஸ்ரேலின் ஏஜென்டுகள் என்றும் விமர்சிக்கின்றனர்.

உலகளாவிய முஸ்லிம்கள் பற்றி அதிக அக்கறையுடன் செயற்படுவதாகவும் நவீன காலம் பற்றிய அதிக அறிவும் எமது சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகளும் தங்களிடம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் சில புத்திஜீவிகள் கூட இதற்கு பலியாகிவிடுகின்றனர். அல்லது பலியாக்கப்படுகின்றனர். சரியான வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து எமது எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை இனங்காணாமல் வெளிவேசங்களுக்கும வெற்றுக்கோசங்களுக்கும் இரையாகிவிடுகின்றனர். இது ஓர் கசப்பான உண்மையும், கவலைக்கிடமான எதார்த்தமுமாகும்.

“நாம் பிளவுபடுகின்றவற்றில் பிளவுபடுவோம்: ஒற்றுமைப் படுகின்றவற்றில் ஒற்றுமைப்படுவோம்” என்பது இந்தப்பிரதேசங்களில் பிறந்த வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகள் தங்களைத் தக்கவைத்துக்



கொள்வதற்காக தோற்றுவித்த கொள்கை. ஆனால் இவைதான் இன்றைய 20ஆம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்கள் என்று தங்களை இனங்காட்டிக் கொள்வோரின் தாரக மந்திரமாய் மாறியுள்ளது. அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.

நபியவர்களால் எச்சரிக்கப்பட்ட பிரச்சினைகள் ஒன்றோடொன்று கலந்து அதிகரித்துவிட்ட இது போன்ற காலங்களில்: உறுதியான ஈமானோடு பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவதன் மூலமும், எதையும் அல்-குர்ஆன் அஸ்ஸுன்னா அடிப்படையில் நின்று ஆய்வு செய்வதனாலும் மாத்திரமே இத்தகைய பிரச்சனைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். (அல்லாஹ் மிகவும் அறிந்தவன்)

நிச்சயமாக, சமுதாயத்தில் உள்ள அறிஞர்கள் குறிப்பாக மார்க்க அறிஞர்கள்; தங்கள் அமானிதங்களை சரிவரப் புரிந்துகொண்டு எமது வாழ்க்கையில் ஏற்படும் அத்தனை பிரச்சனைகளையும் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களை ஆய்வு செய்து, தெரியாதவற்றை தெரிந்தவர்களிடம் கேட்பதற்கு வெட்கப்படாமல், உயர்வு தாழ்வு வேற்றுமை கற்பிக்காமல் சரியான வழிகாட்டல்களை எமது சமுதாயத்தினருக்கு வழங்கினால், நிச்சயம் எவர்கள் தீயவர்கள், எவர்கள் பிரச்சினைகளின் அடிவருடிகள் என்பதை எமது சமுதாயம் இனங்கண்டுகொள்ளும்.

❁❁❁

## ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகள்:

ஸஹாபாக்களும் மனிதர்கள் என்ற அடிப்படையில் நபியவர்களின் பின் சில பிரச்சினைகள் உருவாயின. இதை வைத்து ஷீஆக்கள் தங்களுக்கு ஆள்திரட்டும் பணிகளில் ஈடுபடுகின்றனர். ஸஹாபாக்களை குறைகாண்பதற்கும் தூற்றுவதற்கும் இதை ஒரு சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். எனவே, ஸஹாபாக்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகளையும் அதன் உண்மை நிலையையும் இங்கு அவதானிப்போம்.



## பிரச்சனைகளுக்கு அடித்தளமிட்ட உஸ்மான் ﵁ அவர்களின் கொலை.

**உஸ்மான் ﵁ அவர்களுக்கு எதிரான பிரச்சாரம்:**

முஸ்லிம்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்துவதோடு மார்க்க ரீதியாகவும் அவர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளையும் பிளவுகளையும் ஏற்படுத்தவேண்டும் என்ற இப்னு ஸபஇன் தந்திரம், உஸ்மான் ﵁ அவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் இருந்தே ஆரம்பமாகிறது.

ஆரம்ப காலம் தொடக்கம் முஸ்லிம்களின் தலைமைகளை சிதைப்பதற்காக தோன்றுகின்ற அத்தனை குழுக்களும், தலைமைகளை குறைகாண்பதற்காக நியாயமான சில விடயங்களைக்கூட தவறானதாக சித்தரித்து மக்களை தன் பக்கம் திருப்புவதற்கு அயராது உழைத்தன, உழைக்கின்றன. அந்த வகையில் முஸ்லிம்களை பிளவுபடுத்துவதை இலக்காகக்கொண்ட ஷீஆக்களின் தந்தை இப்னு ஸபஇன் பிரச்சாரமும் அன்றைய கலீபா உஸ்மான்﵁ அவர்களுக்கு எதிரான பிரச்சாரத்திலிருந்தே ஆரம்பமாகிறது. இந்த குற்றச்சாட்டுகளில் சில பின்வருமாறு;

உஸ்மான் ﵁ அவர்கள் அலி ﵁ அவர்களுக்கு சேர வேண்டிய ஆட்சியை பிடுங்கி அவருக்கு அநியாயம் செய்து விட்டார்.

உஸ்மான்﵁ தனது குடும்பத்தினரை அதிகமாக ஆட்சியிலமர்த்துவதோடு அரச சொத்துக்களை அதிகமாக தனது குடும்பத்திற்கு செலவிடுகிறார்.

“மினாவில்” நபியவர்கள் நான்கு ரக்அத்துக்கள் உள்ள தொழுகைகளை இரண்டாகச் சுருக்கித் தொழுதார்கள். ஆனால், உஸ்மான் ﵁ அவர்கள் நான்காகவே தொழுதார்கள்.

சிறியவர்களை அதிகமாக பதவியில் அமர்த்தினார்கள்.

இதில் சில ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டிய விடயங்களாக இருந்தாலும் சில விடயங்கள் தவறான அடிப்படையில் சித்தரிக்கப் பட்டவையாகும் என்பதை சிந்தித்தால் உணர்ந்துகொள்ள முடியும்.

இப்படியான விசமப்பிரச்சாரங்கள் உஸ்மான்ﷺ அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக அவருக்கு எதிரான ஒரு குழு உருவானது.

ஹி.35 துல் ஹஜ் மாதம் கூபா, பஸரா, எகிப்து போன்ற பிரதேசங்களிலிருந்து ஹஜ் செய்யச் செல்வதாகப் பொய் சொல்லி உஸ்மான் ﷺ அவர்களை கொலை செய்யும் நோக்குடன் மதீனாவிற்குள் சிலர் நுழைந்தனர். இவர்கள் எத்தனைபேர் என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. மேற்குறிப்பிட்ட 03 பிரதேசங்களிலிருந்தும் தலா 2000மாக 6000 பேர் கலந்து கொண்டதாகவும் மற்றும் சிலர் மொத்தமாக 2000பேர் தான் இதில் கலந்து கொண்டார்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். இப்படி பலரும் பலவிதமான எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றனர். என்றாலும் எவரும் போதுமான ஆதாரங்களுடன் துல்லியமாக கணிப்பிட்டதாக தெரியவில்லை. இவ்வாறு பல தகவல்கள் நிலவினாலும் இவர்கள் 6000க்கு கூடாமலும் 2000தையும் விட குறையாமலும் இருந்தார்கள் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்லலாம்.

தங்கள் கோத்திரங்களின் மிகச்சிறந்த போர் வீரர்களைக் கொண்டிருந்த இந்தக்குழு, உஸ்மான் ﷺ அவர்களை கொலை செய்தல் அல்லது அச்சுறுத்தி பதவி நீக்கம் செய்தல் என்ற நோக்கில் மதீனாவை வந்தடைந்தது. உஸ்மான் ﷺ அவர்களைப் பதவி விலகுமாறு கோரி அவரின் வீட்டை முற்றுகையிட்டனர். துல்கஃதா மாதத்தின் கடைசிப்பகுதியிலிருந்து ஆரம்பித்த இந்த முற்றுகை துல்ஹஜ் மாதம் பிறை 18ம் நாள் வரை தொடர்ந்தது. இந்த நாளில் தான் உஸ்மான்ﷺ அவர்கள் கொலை செய்யப்பட்டார். கிட்டத்தட்ட முற்றுகை 40 நாட்கள் நீடித்ததாக சில அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உஸ்மான் ﷺ அவர்கள் முற்றுகை இடப்பட்டபோது தொழுகை போன்ற வணக்கவழிபாடுகளிலிருந்தும் அன்றாட நடவடிக்கைகளிலிருந்தும் தடுக்கப்பட்டார்கள். குடி நீர் பெறுவதற்குக்கூட அவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. இந்த வேளையில் அதிகமான ஸஹாபாக்கள் மதீனாவில் இருக்கவில்லை. ஹஜ், போராட்டம், தூரப்பிரதேசங்களின் நிர்வாக வேலைகள் என்று பல பகுதிகளிலும் பரவிக்கிடந்தார்கள்.

அதேவேளை, சிலர் மதீனாவிலிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு மார்க்கத்தை பிரச்சாரம் செய்யும் நோக்கில் அல்லது வியாபார காரணங்களுக்காக இடம்பெயர்ந்திருந்தனர். மீதமிருந்த ஸஹாபாக்கள் உஸ்மான் ﷺ அவர்களிடம் போராட அனுமதி கோரினர். என்றாலும் எதிரிகள் ஸஹாபாக்களை விட பல மடங்கு அதிகமாக இருந்ததால் பிரச்சினையை தவிர்க்கும் நோக்கில் போராடுவதற்கு உஸ்மான் ﷺ அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை.

ஸைத் பின் தாபித் ﷺ அவர்கள் உஸ்மான் ﷺ அவர்களிடம் வந்து, இதோ! அன்ஸார்கள் உங்கள் வாயிலில் நிற்கின்றனர். நீங்கள் விரும்பினால். நபியவர்களுக்கு நாம் உதவியாளர்களாக இருந்ததைப்போல உமக்கும் உதவியாக இருந்து அல்லாஹ்வின் உதவியாளர்களாக மாற நாம் தயாராக உள்ளோம் என்றார்கள். அதற்கு உஸ்மான் ﷺ அவர்கள் போராட்டமென்றால் அது வேண்டாம் என்றார்கள். (முஸன்னப் இப்னு அபீ ஷைபா 19509)

எப்போதும் பிரச்சினைகளை விரும்பாத சாதுவான குணமுடைய இரக்கமுள்ள உஸ்மான்ﷺ அவர்களுக்கு அரக்கர்களின் குணம் புரியவில்லை. அவர்கள் எனக்கு எதிராக சொல்கின்ற குற்றச்சாட்டுக்கள் என்ன? என்னைப் பற்றி அவர்களிடம் இருக்கின்ற தப்பான அபிப்பிராயங்கள் என்ன? அவற்றிற்குப் பதில் சொல்லிவிடலாம் என்பதிலேயே குறியாக இருந்தார்கள். தனது உயிர் போவது உஸ்மான் ﷺ அவர்களுக்கு பெரிதாக தெரியவில்லை, தான் மற்றவர்களுக்கு அநியாயம் இழைத்தவனாகவோ தப்பான

வழிமுறைகளை கடைப்பிடித்தவனாகவோ வாழக்கூடாது, அப்படி வாழ்ந்ததாக மற்றவர்கள் நினைத்துவிடவும் கூடாது என்பதில் அவதானமாக இருந்தார்கள்.(அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக)

**அரங்கேறியது நபியவர்களின் முன்னறிவிப்பு :**

உஸ்மான் ﵁ அவர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டது எவருக்கும் தெரியாத, சடுதியாக நடைபெற்ற ஒரு விடயமல்ல. நபியவர்களால் ஏற்கனவே முன்னறிவிப்புச்செய்யப்பட்டதாகும். அதாவது உஸ்மான் ﵁ அவர்களுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடும் மிகவும் கெட்ட ஒரு குழுவினரால் உஸ்மான்﵁ அவர்கள் கொலை செய்யப்படுவார் என்பது நபியவர்களின் முன்னறிவிப்பு, இதை அறிந்து கொண்டு இறைவனின் வஹியில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்ததால்தான் உஸ்மான் ﵁ அவர்கள் மற்ற ஸஹாபாக்களை கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போராட வேண்டாமென்று தடுத்தார்களோதெரியவில்லை. ஏனெனில், நபியவர்கள் நீர் கொலை செய்யப்படுவீர் என்று அறிவித்திருந்தார்கள். அது இந்த சந்தர்ப்பமாகத்தான் இருக்கும் என்று உறுதியாக ஊகித்துக் கொண்டதற்குப் பிறகு போராட்டங்கள் நடத்துவதால் பலன் இல்லை. ஸஹாபாக்களும் ஏனையவர்களும் வீணாக கொலை செய்யப்பட்டு நமது உயிர் போவதைவிட நாம் மரணித்து மற்றவர்கள் காப்பற்றப்படுவது சிறந்தது என்று கருதியிருக்கலாம்.

இது ஒரு நல்ல ஆட்சியாளனுக்கு அழகாகும். அதாவது தன்னாலும் தனது படையாலும் இந்த யுத்தத்திற்கு ஈடு கொடுக்க முடியாது எனும்போது விளைவுகளின் கோரத்தை கட்டுப்படுத்த போராட்டத்தை தவிர்த்துக்கொள்ளுதல்.

புஹாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இடம் பெற்றிருக்கக்கூடிய அபூமூஸா அல் அஷ்அரி ﵁ அவர்கள் அறிவிக்கக்கூடிய ஒரு நீளமான செய்தியில் நபி ﷺ அவர்கள் ஒரு இடத்தில் கிணற்றில் சென்று உட்கார்கிறார்கள் அவர்களுக்கு பாதுகாப்புக்காக அந்த தோட்டத்தின் வாயிலில் அபூ மூஸா﵁ அவர்கள் அமர்திருந்தார்கள்.



அபூபக்ர் ﵁ அவர்கள் வந்தார்கள் பின்பு உமர் ﵁ அவர்கள் வந்தார்கள். நபியவர்களிடம் அபூ மூஸா﵁ அவர்கள் இருவருக்காகவும் அனுமதி கோரியபோது நபியவர்கள் அனுமதி கொடுக்குமாறும் சுவர்க்கத்தைக்கொண்டு நன்மாராயம் செய்யுமாறும் கூறினார்கள். பின்பு உஸ்மான் ﵁ அவர்கள் வந்தார்கள். நபியவர்களிடம் அவருக்காக அனுமதி கோரப்பட்டது, “அவருக்கு அனுமதி கொடுங்கள் அவருக்கு ஏற்படப்போகும் சோதனையின் பின் அவருக்கு சுவர்க்கம் இருக்கிறது என்று நன்மாராயம் சொல்லுங்கள்” என்று நபியவர்கள் சொன்னார்கள். முஸ்லிமில் வரும் அறிவிப்பின் படி உஸ்மான் ﵁ அவர்களிடம் இவ்வாறு அபூ மூஸா ﵁ அவர்கள் சொன்னபோது, உஸ்மான் ﵁ அவர்கள்: “இறைவன் அதன் போது எனக்கு பொறுமையைத் தருவானாக. அல்லது இறைவனே துணை” என்று சொன்னதாக இடம்பெற்றுள்ளது.

நபியவர்களும் அபூபக்ர்﵁ அவர்களும், உமர்﵁ அவர்களும், உஸ்மான்﵁ அவர்களும் உஹது மலைக்குன்றில் நின்றார்கள் அப்போது மலை நடுங்கியது. உஹது மலையைப்பார்த்த நபியவர்கள்: “உஹதே! ஆடாமல் அசையாமல் இரு உனக்கு மேலே ஒரு நபியும் ஒரு உண்மையாளரும் இறை பாதையில் உயிர்தியாகம் செய்ய இருக்கும் இரண்டு ஷஹீதுகளும் இருக்கிறார்கள்” என்றார்கள். (புஹாரி)

“உஸ்மானே! அல்லாஹ் உனக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கலாம் அதை அவர்கள் உன்னிடமிருந்து கழற்றிவிட நினைத்தால் அவ்வாறு கழற்றிவிடாதே!” (அஹ்மத், இப்னு மாஜா, திர்மிதி இமாம் அல்பானி அவர்கள் இந்த செய்தியை பலமானது என்று கூறியுள்ளார்கள்.)

இவ்வாறான செய்திகள் மூலம் நான் அநியாயமான முறையில் கொலை செய்யப்படுவேன் என்பதையும் இது இறைவனின் நாட்டம் என்பதையும் தெளிவாகத் தெரிந்துகொண்ட உஸ்மான்﵁ அவர்கள், என்ன நடந்தாலும் பொறுமையை கடைப்பிடிப்பது என்று தீர்க்கமான ஒரு

முடிவை எடுத்துக்கொண்டார்கள். இதனால்தான் கொலைக்கும்பல் அவரைக்கொடூரமான முறையில் சுற்றி வளைத்தபோது மீதமிருந்த ஸஹாபாக்கள் அவர்களுடன் போராடுவதற்கு அனுமதி கோரினார்கள். ஆனால் உஸ்மான் ﷺ அவர்கள் கொடுக்கவில்லை. மாறாக பின்வருமாறு கூறினார்கள்: “இல்லை நான் போராடமாட்டேன். நபியவர்கள், என்னுடன் ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டார்கள் அதிலே நான் பொறுமையாக இருப்பேன் என்றார்கள்.” (அஹ்மத், இப்னுமாஜா, இப்னு அபீஷைபா)

எனவே, நபியவர்களின் முன்னறிவிப்பின்படி கொலை நடைபெற்ற அதேவேளை கொலை செய்தவர்கள் அநியாயக்காரர்களும் இஸ்லாத்தைவிட்டும் சென்று விட்டவர்களும் என்பது தெளிவாகத்தெரிகிறது. (இவர்கள்தான் ஷீஆ உருவாக்கத்தின் ஆரம்பகர்த்தாக்கள்)

❁❁❁



## உஸ்மான் ﷺ அவர்களைக் கொன்றது யார்?

உஸ்மான் ﷺ அவர்களை முற்றுகையிட்ட கும்பலே, உஸ்மான் ﷺ அவர்கள் தன் கையில் குர்ஆனை வைத்திருந்த நிலையில் அவரின் வீடு புகுந்து அவரைக்கொலை செய்தது. (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் மூத்த தாபிஈன்களில் ஒருவராக இருந்ததால் உஸ்மான் ﷺ அவர்கள் கொலைசெய்யப்பட்ட காலத்தில் வாழ்ந்தார். இவரிடம் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்த கும்பலில் முஹாஜிர்கள் அன்ஸார்கள் யாராவது இருந்தார்களா? என்று கேட்கப்பட்டது அதற்கு அவர்கள் இல்லை அவர்கள் எகிப்தைச்சேர்ந்த சில குழுக்கள் என்றர்கள். (தாரீஹுகலீபா ப:176)

உஸ்மான் ﷺ அவர்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்து அவரை கொலை செய்தவர்களில் கினானா பின் பிஷ்ர், றூமான் அல்யமானி, ஜப்லா, ஸவ்தான் இப்னு ஹம்றான், மௌதுல் அஸ்வத் என்ற புனைப்பெயரால் அழைக்கப்படும் பனூ ஸதூஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவன், மாலிக் இப்னுல் அஸ்தர் அந்நஸஈ போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

அம்றா பிந்து அர்த்தஆ சொல்கிறார்கள்; உஸ்மான் ﷺ அவர்கள் கொலை செய்யப்பட்ட ஆண்டு நான் ஆயிஷா ﷺ அவர்களுடன் மக்கா சென்றேன். பின்பு மதீனா வழியாக வந்தோம். அப்போது, உஸ்மான் ﷺ அவர்கள் கொலை செய்யப்படும்போது தன்னிடம் வைத்திருந்த குர்ஆன் பிரதியைப் பார்த்தோம். அவரின் இரத்தம் இரண்டாவது அத்தியாயம் 137வது வசனத்தில் வீழ்ந்திருந்தது.’’ (பழாயிலுஸ்ஸஹாபா 1:501 -817-)

2:137 வசனம் பின்வருமாறு சொல்கிறது:

“(நம்பிக்கை கொண்டோரே!) நீங்கள் எவற்றைக் கொண்டு நம்பிக்கை கொண்டீர்களோ, அதே போன்று அவர்களும் நம்பிக்கை

கொண்டால், நிச்சயமாக அவர்கள் நேர்வழி பெறுவர். அவர்கள் புறக்கணித்தால், அவர்கள் முரண்பாட்டிலேயே இருப்பர். எனவே, அவர்களிலிருந்து உம்மைக் காப்பாற்ற அல்லாஹ்வே போதுமானவன். அவன் (யாவற்றையும்) செவியுறுபவனும். நன்கறிந்தவனுமாவான்."

❁❁❁



## உஸ்மான் ﷺ அவர்களின் கொலையில் ஸஹாபாக்கள் சம்பந்தப்பட்டனரா?

வரலாற்றை ஆய்வு செய்தால் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தது எகிப்து, கூபா, பஸரா போன்ற பிரதேசங்களிலிருந்து ஹஜ்ஜுக்கு செல்வதாக நடித்து இஹ்ராத்தோடு மதீனாவில் நுழைந்த இப்னு ஸபஇன் கும்பல்தான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். உஸ்மான் ﷺ அவர்களின் கொலையில் ஸஹாபாக்கள் பங்கு கொள்ளவில்லை, அவர்கள் பங்குகொள்ள நினைக்கவுமில்லை என்பதை சம்பவ காலத்தில் உயிர்வாழ்ந்த பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சில வரலாற்று ஆய்வாளர்கள் இதில் வழிகெட்டுப் போயுள்ளனர். உஸ்மான்ﷺ அவர்களின் கொலையில் ஸஹாபாக்களுக்கு தொடர்பு இருப்பதாக இட்டுக்கட்டுகின்றனர்.

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; "ஸஹாபாக்களில் சிலர் உஸ்மான் ﷺ அவர்களின் கொலையை ஏற்றுக்கொண்டனர், அதை பொருந்திக்கொண்டனர் என்று மனிதர்களில சிலர் சொல்கிறார்கள் அது தவறானதாகும். ஸஹாபாக்களில் எவரும் உஸ்மான் ﷺ அவர்களின் கொலையை பொருந்திக் கொள்ளவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை. மாறாக, அதை வெறுத்தனர் அதை செய்தவர்களைக் கோபித்தனர், அதை செய்தவர்களை ஏசினர். ஆனால் ஒருசில ஸஹாபாக்கள் உஸ்மான் ﷺ அவர்கள் பதவியை துறந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்தனர்" (البداية والنهاية 7/207)

உஸ்மான் ﷺ அவர்கள் முற்றுகையிடப்பட்டபோது ஸைதுப்னு தாபித் அழுது கொண்டே இருந்தார்கள். (ابن سعد في الطبقات)

உஸ்மான் ﷺ அவர்கள் முற்றுகையிடப்பட்ட நேரம் அப்துல்லாஹிப்னு உமர் ﷺ அவர்கள் அவருடனேயே இருந்தார்கள்.

எதற்கும் தயாராக தன் போர்க்கவசத்தை அணிந்துகொண்டே இருந்தார்கள். ஆனால் அவர் கொலை செய்யப்படக்கூடும் என்பதனால் உஸ்மான் ﵁ அவர்களே கட்டாயப்படுத்தி அவரை வெளியேற்றினார்கள்." (تـــاريخ خليفـــة بـــن خيـــاط)

அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் உஸ்மான் ﵁ அவர்களை கொலை செய்யவில்லை, அவரைக்கொலை செய்யுமாறு நான் ஏவவுமில்லை. ஆனால், என்னால் தடுக்கமுடியாத அளவுக்கு அது என்னை மீறிவிட்டது. என்று அலி﵁ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (பார்க்க: ஸஹீஹ் முஸ்லிம்)

வேறு ஒரு அறிவிப்பில் உஸ்மான் ﵁ அவர்களைக்கொலை செய்தவரை தான் வெறுப்பதாகக் குறிப்பிடுகிறார்கள்.

ஆயிஷா ﵂ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "உஸ்மான் ﵁ அவர்கள் அநியாயமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள் அவரைக்கொன்றவர்களை அல்லாஹ் சபிப்பானாக" (التـــاريخ الكبـــير للبخـــاري)

இவ்வாறு உஸ்மான்﵁ அவர்களை கொலை செய்தவர்களை நிராகரிப்பாளர்கள் என்று சொல்கின்ற ஸஹாபாக்களின் கூற்றுக்கள் ஏராளமாகவே உள்ளன. ஆனாலும் சில வரலாற்று ஆய்வாளர்கள் உஸ்மான் ﵁ அவர்களின் கொலை தொடர்பாக வருகின்ற அறிவிப்புக்களில் ஒன்றை வைத்து முஹம்மத் பின் அபீபக்ர் அவர்களுக்கு இக்கொலையில் தொடர்பிருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். அந்த அறிவிப்பு பலவீனமானது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நபிﷺ அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது: அபூபக்ர்﵁ அவர்களுக்கு இந்த முஹம்மத் பிறந்தார். அதாவது நபியவர்கள் மரணிப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னால் பிறந்தவர். இவரைப்போன்றவர்கள் பேரளவில்தான் ஸஹாபி என்று அழைக்கப் படுவார்கள். மற்றைய எல்லா சட்டங்களுக்கும் ஸஹாபியை அடுத்து



வந்த தாபிஈன்களின் சட்டமே இவர்கள் விடயத்தில் நடைமுறைப் படுத்தப்படும். இதனால்தான் இவர் நபியவர்களிடமிருந்து நேரடியாக அறிவிக்கும் செய்திகளை அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை வேறு யாராவது ஒரு ஸஹாபியிடம் அவர் கேட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். நபியவர்கள் மரணிப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னால் பிறந்தவரிடம் நபியவர்களின் பயிற்றுவிப்பில் வளர்ந்த ஒரு ஸஹாபியிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் விடயங்களை எதிர்பார்க்க முடியாது என்பது யாவரும் அறிந்த விடயம்.

இது தவிர, ஏனைய ஸஹாபாக்கள் இதில் பங்கு கொண்டதாக வரும் அறிவிப்புக்கள் அனைத்திலும் பொய்யர்களின் கைவரிசை தாராளமாக வேலைசெய்துள்ளது. அவை அத்தனையும் இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்புக்களாகவே உள்ளன. (அல்லாஹ் எம்மனைவரையும் பாதுகாப்பானாக.)

❁❁❁

## ஸஹாபாக்கள் இருந்தும் உஸ்மான் ﷺ கொலை செய்யப்பட்டது எவ்வாறு?

இதற்கு வரலாற்று ஆய்வாளர்கள் பல பதில்களைக் குறிப்பிடுகின்றனர்.

**01)** ஸஹாபாக்களையும் தன்னோடிருந்தவர்களையும் உஸ்மான் ﷺ அவர்களே போராட வேண்டாம் என்று தடை விதித்தார்கள். அல்லாஹ்வின் நாட்டப்படி நடப்பது நடக்கட்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

இதில் எமக்கு இரண்டு விடயங்கள் புலப்படுகின்றன.

★ உஸ்மான் ﷺ அவர்களின் உறுதியும் வீரமும் அஞ்சா நெஞ்சமும் இதில் தெரிகிறது. எதிரிகள் சுற்றி வளைத்த பின்பும் சமாதானமாகவே பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர முனைந்ததில் அவரின் நெஞ்சுரம் தெளிவாகத்தெரிகிறது.

★ சமுதாயத்தின் மீதும் நபியின் தோழர்கள் மீதும் அவருக்கிருந்த பாசமும் அக்கறையும்.

சுற்றி வளைத்திருப்பது கொலைகாரக் கும்பல் என்பதையும், அவர்கள் குழப்பவாதிகள் என்பதையும், அவர்களை எதிர்த்து போரிட முனைந்தால் இன்னும் பிரச்சினை விஸ்வரூபம் அடையும், ஒருவர் கொலை செய்யப்படுவதற்கு பதிலாக பல ஸஹாபாக்கள் கொலை செய்யப்படுவார்கள். பலரின் உரிமைகள் பறிக்கப்படும் முஸ்லிம்களின் சொத்துக்கள் சூரையாடப்படும், மதீனாவின் புனிதத்தன்மை கெடுக்கப்படும் போன்ற விடயங்களை உஸ்மான் ﷺ அவர்கள் விளங்கிக் கொண்டதால் போராட்டத்திற்கு தடை விதித்தார்கள். இதன் மூலம் அவருக்கு சமூகத்தின் மீதிருந்த பாசமும் அதைப் பாதுகாப்பதில் இருந்த அக்கறையும் தெளிவாகத் தெரிகிறது.



**02)** கிளர்ச்சியாளர்கள் உஸ்மான் ﷺ அவர்களுடன் இருந்தவர்களை விட பன்மடங்கு கூடுதலாக இருந்தார்கள். அக்காலத்தில் ஸஹாபாக்கள் 04 பிரதானமான இடங்களிலிருந்தனர்.

01- உஸ்மான் ﷺ அவர்கள் முற்றுகையிடப்பட்ட காலம் ஹஜ்ஜின் காலமாக இருந்ததால் பெரும்பாலும் ஸஹாபாக்கள் மக்காவில் இருந்தனர். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸை அந்த வருட ஹஜ்ஜின் கடமைகளை தலைமையேற்று நடாத்துமாறு உஸ்மான் ﷺ அவர்கள் பணித்திருந்தார்கள்.

02- சிலர் மக்காவிற்கு வெளியிலிருந்தனர். இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் விரிவடைந்த போது மக்கள் எல்லா இடங்களுக்கும் பரவலாக இடம்பெயரத் தொடங்கினர். நிர்வாக வேலைகள், பிரச்சாரம் போன்ற பல நோக்கங்களுக்காக இந்த இடப்பெயர்வு அமைந்தது இதில் பஸரா, கூபா, எகிப்து, ஷாம் போன்ற பிரதேசங்கள் முக்கியமானவை.

03- மற்றும் சிலர் புனிதப்போரில் ஈடுபட்டிருந்தனர்.

04- மிகவும் சொற்பமானவர்களே மதீனாவிலிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை ஹவாரிஜ்களோடு (உஸ்மான் ﷺ அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்களோடு) ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே இருந்தது.

இவ்வாறு பல இடங்களில் இருந்தபோதும் பிரச்சினையை அறிந்த ஸஹாபாக்கள் தங்களின் பிள்ளைகளை உஸ்மான் ﷺ அவர்களை காப்பாற்றுவதற்காக அனுப்பிவைத்தனர். பிரச்சினை இந்தளவிற்கு விஸ்வரூபம் பெறுமென்றோ, கிளர்ச்சியாளர்கள் உஸ்மான ﷺ அவர்களைக் கொலை செய்யத்துணிவார்கள் என்றோ எவரும் நினைக்கவில்லை.

இவ்வாறு பல காரணங்கள் கூறப்பட்டாலும் முதற்காரணமே மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.

## அலி ﷺ அவர்களின் பதவிப்பிரமாணமும் போராட்டங்களும் :

நபியவர்களின் அருமை மகளார் பாதிமா ﷺ அவர்களின் கணவரும், ஹஸன் ﷺ, ஹுஸைன் ﷺ ஆகியோரின் தந்தையுமான அலி ﷺ அவர்கள், உஸ்மான் ﷺ அவர்கள் மரணித்தவேளை அவர் கொலை செய்யப்பட்ட வீட்டில் நுழைந்து கதவை மூடிவிட்டார்கள். முஸ்லிம்களின் கலீபா மரணித்துவிட்டார். எமக்கு ஓர் தலைவர் வேண்டும். என்று கூறிக்கொண்டே மக்கள் கதவில் தட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு அலி ﷺ அவர்கள் நான் தலைவராக இருப்பதைவிட உங்களைப்போன்ற சாதாரண குடிமகனாக இருப்பதையே விரும்புகிறேன் என்றார்கள்.

ஆனாலும், மக்கள் மறுத்துவிட்டனர். உம்மை விட பொறுத்தமான ஒருவரை எமக்குத் தெரியவில்லை என்று விடாப்பிடியாக நின்றனர். செய்வதறியாத அலி ﷺ அவர்கள் அப்படி நீங்கள் விரும்பினால் நான் ரகசியமாக உங்களோடு உடன்படிக்கை செய்ய விரும்பவில்லை. நமது உடன்படிக்கை பள்ளியில் பகிரங்கமாகவே இருக்க வேண்டும் என்று கூறி பள்ளிக்குச் சென்றார்கள். முஹாஜிர்கள், அன்ஸார்கள் உள்ளிட்ட ஏனைய மக்களும் பள்ளியில் அவருக்கு பைஅத் எனும் உடன்படிக்கை செய்தார்கள். இதில், சில ஸஹாபாக்கள பைஅத் செய்யாமல் இருந்தார்கள் என்று சில அறிவிப்புகள் சொன்னாலும், மதீனாவில் வாழ்ந்த எல்லா ஸஹாபாக்களும் பைஅத் செய்தார்கள் என்பதே சரியானதாகும். (இமாம் அஹ்மதின் பழாயிலுஸ்ஸஹாபா 1:287)

உஸ்மான் ﷺ அவர்களுக்குப் பின் தலைமைக்கு மிகவும் தகுதியானவர் அலி ﷺ அவர்கள்தான் என்பதில் அறிஞர்கள் ஏகோபித்த முடிவைக்கொண்டுள்ளனர். உஸ்மானுக்குப்பிறகு ஆட்சிக்குத்தகுதியானவர் அலி ﷺ அவர்களைத்தவிர வேறொருவர் இருக்கிறார் என்று அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களில் ஒருவர் கூட சொல்லவில்லை. மாறாக, இதில் சந்தேகப்படவுமில்லை. என்று



இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் சொன்னதாக இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் தனது "மஜ்மூஉல் பதாவா 4:4380" எனும் நூலில் குறிப்பிடுகிறார்:

பல பிரச்சினைகள் நிறைந்த காலத்தில் அலி ﷺ அவர்கள் பதவியேற்றார்கள். அத்தோடு, ஆட்சியும் ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருந்தது. இதனால் அவரின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமிய சமுதாயத்திற்குள் பிளவுகளும் போரட்டங்களும் அதிகரித்ததைக் காணலாம்.

❁❁❁

## ஜமல்ப் போர் :

அலி ﷺ அவர்களுக்கு பைஅத் செய்யப்பட்டபோது தல்ஹா, ஸுபைர் ﷺ இருவரும் மக்கா செல்ல அலி ﷺ அவர்களிடம் அனுமதி கோரினர். அலி ﷺ அவர்களும் அனுமதி வழங்கவே மக்காவந்த இருவரும் ஆயிஷா ﷺ அவர்களை மக்காவில் சந்திக்கிறார்கள். ஏற்கனவே, ஆயிஷா ﷺ அவர்களுக்கு உஸ்மான் ﷺ அவர்களின் கொலை செய்யப்பட்ட செய்தி வந்திருந்தது. இதனால் மூவரும் கூடி உஸ்மான் ﷺ அவர்களைக் கொன்றவர்களைத் தீர்த்துக்கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். அதுபோலவே, பஸராவிலிருந்து எ.்.லா பின் முனய்யாவும் கூபாவிலிருந்து அப்துல்லாஹ் பின் ஆமிரும் வந்தனர். அவர்களும் உஸ்மானின் கொலைக்கு காரனமானவர்களைக் கொலை செய்வதென்று உறுதி செய்தனர்.

உஸ்மான் ﷺ விவகாரத்தில் நாம் தவறிழைத்து விட்டோம் என்று கண்ட இவர்கள் தங்களோடு சேர்ந்தவர்களை எடுத்துகொண்டு உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களைத் தேடி பஸரா நோக்கிப் புறப்பட்டனர். அலி ﷺ அவர்கள் மதீனாவில் இருந்தார்கள். பஸராவிலோ உஸ்மான் பின் ஹனீப் அவர்கள் அலியின் கவர்னராக இருந்தார்.

பஸராவை அவர்கள் சென்றடைந்ததும் உஸ்மான் இப்னு ஹனீப் அவர்கள்; அவர்களை மறித்து, "என்ன விரும்புகிறீர்கள்? உங்கள் நோக்கமென்ன?" என வினவினார். வந்தவர்கள், "நாம் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களைத்தேடி வந்திருக்கிறோம்" என்றனர். அப்போது உஸ்மான் இப்னு ஹனீப் அவர்கள்: அலி ﷺ வரும்வரை நீங்கள் நுழையக்கூடாது என்று அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

இவைகளை அவதானித்த உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களில் ஒருவனான ஜபலா 700 படைவீரர்களோடு



சென்று தல்ஹா ﷺ, ஸுபைர் ﷺ, ஆயிஷா ﷺ போன்றோருக்கு எதிராக போர்தொடுத்தான் மிகவும் உக்கிரமாக நடந்த இப்போரில் ஜபலாவின் அணி தோல்வியைத்தழுவியது. அதில் பலரும் கொலை செய்யப்பட்டனர். இதைப் பார்த்த பஸரவாசிகளில் அதிகமானோர் ஆயிஷா ﷺ அவர்கள், ஸுபைர் ﷺ, தல்ஹா ﷺ அவர்களின் அணியில் சேர்ந்தனர்.

பஸராவில் தனது பிரதிநிதிக்கு எதிராகப் போர் தொடுக்கப்படுகிறது என்ற தவறான செய்தியை அலி ﷺ அவர்கள் கேள்விப்பட்டதும் 10000 படைவீரர்களோடு அலி ﷺ அவர்கள் தல்ஹா ﷺ, ஸுபைர் ﷺ, ஆயிஷா ﷺ அவர்கள், அவர்களின் அணியோடு போரிடுவதற்காக மதீனாவிலிருந்து கூபா நோக்கிப்பயணமானார்கள். இங்கே போராடுவதற்காக அலி ﷺ அவர்கள் தான் வெளியாகிச் சென்றார்கள். அலியோடு போராட ஆயிஷாவின் தரப்பினர் வரவில்லை என்பது தெளிவாகிறது. ஆயிஷா ﷺ அவர்களின் அணியினர் அலியோடு போராட வந்திருந்தால் மதீனாவுக்குச் சென்றிருப்பார்கள் பஸராவுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை.

படையோடு கூபா வந்த அலி ﷺ அவர்கள் மிக்தாத் இப்னு அஸ்வதையும், க.்.கஆ பின் அம்ரையும் தல்ஹாவோடும் ஸுபைரோடும பேசுவதற்கு அனுப்பிவைத்தார்கள். இந்த இரு குழுவினரும் போராடுவதில்லை என்று முடிவு செய்ததோடு தங்கள் கருத்துக்களைத் தெளிவுபடுத்தினர். தல்ஹா ﷺ, ஸுபைர் ﷺ அணியினர் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களை விடக்கூடாது எனக்கருதினர்.

அலி ﷺ அவர்களின் தரப்பினரோ! உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களை விடக்கூடாது. ஆனாலும், இது அதற்கு உகந்த காலமல்ல, காலம் கைகூடும் போது காரியத்தைக் கச்சிதமாகச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டனர். இங்கே இரு தரப்பாரும் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களைக் கொலை செய்யவேண்டும் என்பதில் ஒரு மித்த கருத்தைக் கொண்டிருந்தனர். ஆனாலும், எப்போது அதை நிறைவேற்றுவது என்பதில் தான் கருத்து வேறுபாடு நிலவியது.

ஒப்பந்தம் முடிந்து போர் நிறுத்தப்பட்ட மன நிறைவோடு இரு அணிகளும் அன்றிரவு நிம்மதியாக உறங்கின. ஆனால் உஸ்மான் ﵁ அவர்களைக் கொலை செய்த ஸபஇய்யாக்களுக்கு இது மிகவும் கவலைக்குரிய இரவாக இருந்தது. ஏனெனில் இருதரப்பாருமாகச் சேர்ந்து கொலைக்கும்பலைத் தேடி கொலை செய்வதென்று முடிவு செய்திருக்கிறார்கள். எனவே, கொலையுடன் தொடர்புடையவர்கள் நிம்மதியாக இருக்க வாய்ப்பில்லை? எல்லோரும் கண் விழித்து ஒப்பந்தத்தை குலைக்க ஆலோசனை செய்தார்கள். இறுதியில் இந்த ஒப்பந்தம் நிறைவேறாமலிருக்க இரண்டு குழுக்களுக்கும் மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்துவது என்று முடிவு செய்தனர்.

அன்றிரவு, எல்லோரும் தூக்கத்திலிருந்தபோது ஸபஇய்யாக்களின் ஒரு படை தல்ஹா﵁. ஸுபைர் ﵁ அவர்களின் படைக்குள் நுழைந்து சிலரைக் கொலை செய்தனர். தன் அணியினர் கொலை செய்யப்பட்டிருப்பதை உணர்ந்த தல்ஹா﵁, ஸுபைர்﵁ தரப்பார் அலி ﵁ அவர்களைச் சார்ந்தோர் தமக்கு மோசடி செய்து விட்டதாக நினைத்தனர். இதனால், அலியின் தரப்பாரை நோக்கி அம்புகளை ஏவவும் போராடவும் ஆரம்பித்தனர். இதைப் பார்த்த அலியின் தரப்பார் தல்ஹா﵁, ஸுபைர்﵁ அவர்களின் அணியினர் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகவும் மோசடி செய்துவிட்டதாகவும் நினைத்து பதிலுக்கு போராடத் தொடங்கினர்.

போர் உக்கிரமடைந்தது. அலி ﵁, தல்ஹா﵁, ஸுபைர்﵁ போன்றோர் போரட்டத்தை நிறுத்துமாறு அறைகூவல் விடுத்துக் கொண்டே இருந்தனர். ஆனால், எதுவும் பயனளித்ததாகத் தெரியவில்லை. போர்த்தீ மிக வேகமாக பற்றிக்கொண்டு உக்கிரமடைந்தது.

ஆயிஷா ﵂ அவர்கள் க.ஃப் பின் ஸுரைஹ் அவர்களிடம் குர்ஆன் பிரதியைக் கொடுத்து போராட்டத்தை நிறுத்துமாறு அனுப்பிவைத்தார்கள். ஸபஇய்யாக்களோ அவரை கொலை செய்து பிரச்சாரத்திற்கு தடைவிதித்தனர்.



அலி ﵁ அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பப்பகுதியில் ஹி. 36 இல் லுஹர் தொழுகையின் பின் நடைபெற்ற இந்தப்போர் அதே நாளில் முடிவடைந்தது.

அதிகமான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட இப்போரில் ஆயிஷா ﵂ அவர்களைப் பாதுகாக்கும் பணியில் அதிகமானோர் பலியாகினர். இதனால் ஆயிஷா ﵂ அவர்களின் ஒட்டகம் வீழ்ந்தபோதே போராட்டம் முடிவுக்குவந்தது. பல மணி நேரம் நடைபெற்ற இப்போரில் எத்தரப்பாரும் வெற்றியடைவில்லை என்று சொன்னாலும் முஸ்லிம்கள் பலத்த சேதத்தை சந்தித்தார்கள் என்பது மாத்திரம் உண்மை.

தல்ஹா﵁, ஸுபைர்﵁ போன்ற பலர் இந்தப்போரில் கலந்து கொள்ளாமல் இருந்தபோதும் இவர்கள் திட்டமிட்டு எதிரிகளால் கொலை செய்யப்பட்டனர். போர் முடிந்ததும் தல்ஹா ﵁ கொலை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த அலி ﵁ அவர்கள் தல்ஹாவின் தலையை உயர்த்தி அவரின் முகத்தை தடவி அழுதார்கள். இது நடப்பதற்கு இருபது வருடங்களுக்கு முன்னரே நான் மரணித்திருக்கக்கூடாதா! என்றார்கள். ஏனைய கொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்காக கடும் கவலை அடைந்தார்கள். அலி ﵁ அவர்கள் மட்டுமல்லாது; போராட்டத்திற்கான காரணம் தெரியவந்தபோது முஸ்லிம்கள் அனைவருமே கவலையடைந்தார்கள்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்புவோர் பின்வரும் நூல்களை அவதானிக்கலாம். (பலவீனமான அறிவிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவதானமாக ஆய்வு செய்யவேண்டும்.)

01) தாரீஹுத்தபரி تـــاريخ الطـــبري
02) அல்-பிதாயா வந்நிஹாயா البدايـــة والنهايـــة
03) அல்-காமில் பித்தாரீஹ் الكامــل فـــي التـــاريخ
04) தாரீஹு கலீபா பின் ஹய்யாத் تـــاريخ خليفـــة بـــن خيـــاط

❁❁❁

## ஸிப்பீன் யுத்தம் :

உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் வரை முஆவியா ﷺ அவர்கள் அலி ﷺ அவர்களுக்கு பைஅத் செய்ய மறுத்தார்கள். ஆனால், அலி ﷺ அவர்களோ ஜமல் போர் முடிந்த கையோடு முஆவியா பைஅத் செய்ய வேண்டும். இல்லையேல், போராட்டத்திற்குத் தயாராக வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்கள். 100,000 படைவீரர்களோடு முஆவியாவை எதிர்க்கத் தயாரானார்கள்.

அலி ﷺ அவர்கள்; ஹி.37 இல் ஸபர் மாதம் ஸிப்பீன் எனும் இடத்தை வந்தடைந்தார்கள். முஆவியாவும் பதிலுக்கு 70,000 படை வீரர்களோடு ஸிப்பீன் எனும் இடத்திற்கு வந்தார். போர் ஆரம்பமானது உக்கிரமடைந்தது. இடை நடுவில் ஈட்டி முனையில் குர்ஆன் பிரதிகள் உயர்த்தப்பட்டன. இறுதியில் இரண்டு நடுவர்களை வைத்து சமாதானமாக பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவோம் என்று இருதரப்பும் வெற்றி தோல்வியின்றி போரை முடித்துக்கொண்டனர்.

எதிர்வரும் ரமழான் மாதத்தில் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதாக இணங்கிக்கொண்டதற்கு ஏற்ப அலி ﷺ அவர்கள் அபூமூஸா அல் அஷ்அரி ﷺ அவர்களையும், முஆவியா ﷺ தரப்பில் அம்ருப்னு ஆஸ் ﷺ அவர்களையும் அனுப்பிவைத்தனர். இருவரும் சந்தித்து சமாதான பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

நம் எல்லோருக்கும் தெரிந்த பிரபல்யமான அந்த உடன்படிக்கை என்னவெனில்: அம்ருப்னு ஆஸும்ﷺ அபூமூஸா அல்அஷ்அரி ﷺ அவர்களும் அலி ﷺ அவர்களையும் முஆவியா ﷺ அவர்களையும் பதவியிலிருந்து நீக்குவதாக முடிவு செய்தனர். முதலில் அபூமூஸா அல்அஷ்அரிﷺ அவர்கள் மிம்பரின் மீதேறி நான் என் விரலிலிருக்கும் மோதிரத்தைக் கழற்றுவதைப்போல அலி ﷺ அவர்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்குகிறேன்



என்று சொல்லிவிட்டு தன் விரலிலிருந்த மோதிரத்தைக் கற்றினார்கள். பின்பு அம்ரிப்னு ஆஸ் ﷺ அவர்கள் எழுந்து அபூமூஸா ﷺ அவர்கள் அலி ﷺ அவர்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கியதைப் போலவும் இந்த மோதிரத்தைக் கழற்றுவதைப் போலவும் அலியை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்குகிறேன். அதே போன்று என் மோதிரத்தை திரும்ப அணிவதைப் போன்று முஆவியாவை கிலாபத்திற்கு நியமிக்கிறேன் என்றார். கோபமடைந்த அபூமூஸா ﷺ மிம்பரிலிருந்து இறங்கியவர்களாக மக்கா சென்றார்கள். கூபாவிற்கு (அலியிடம்) செல்லவே இல்லை. அம்ரிப்னுல் ஆஸ் ﷺ ஷாமுக்கு முஆவியாவிடம் திரும்பிச்சென்றார். மக்கள் குழப்பமடைந்தனர்.
(தாரீஹுத்தபரி 4:51 அல்காமில் பித்தாரீஹ் 3:168)

இந்த செய்தி பொய்யானதாகும். புஹாரி (ரஹ்) அவர்கள் தனது தாரீஹ் என்ற நூலில் இது தொடர்பாக குறிப்பிட்டிருப்பதே சரியான தகவலாகும். அதன்படி, அபூமூஸா ﷺ அம்ரிப்னுல் ஆஸ் ﷺ ஆகியோர் சந்தித்துக்கொண்டனர். நீண்ட நேர உரையாடலின் பின்; இருவரும் போராட்டத்தை நிறுத்துவதாகவும் இருவரும் அவரவர் பொறுப்புக்களில் தொடர்ந்து இருப்பதாகவும் முடிவு செய்து பிரிந்து சென்றனர். இதன் படி முதலில் சொல்லப்பட்ட தகவல் பொய்யானதாகும். அதுபோன்று மக்களுக்கு மத்தியில் பிரபல்யம் அடைந்திருப்பதாக குறிப்பிட்ட செய்தியின் அறிவிப்பாளர் வரிசையில் 'அபூ மிஹ்னப்' என்பவர் இடம் பெறுகிறார். அவர் பொய்யன் என்று ஹதீஸ் கலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே அந்த செய்தி பலவீனமானதாகும்.

அத்தோடு, அந்த செய்தியில் கலீபாவை அபூமூஸா ﷺ நீக்கியதாக கூறப்படுகிறது. இவ்வாறு சமூகத்தில் ஒருவர் நீக்குமளவுக்கு ஆட்சிப்பதவி என்பது சாதாரணமான விடயமல்ல, இப்படி நீக்கும் போது நீங்கக்கூடியதாக ஆட்சி இருந்தால் அது ஒரு அதிகாரமுள்ள, இறைமையுள்ள தலைமையாகவும் இருக்காது, அது போலவே இந்த செய்தி புஹாரி (ரஹ்) அவர்கள் 'அத்தாரீஹ்'

என்ற தனது நூலில் குறிப்பிடும் நம்பகமான அறிவிப்புக்கு முரண்படுகிறது.

எனவே, இந்த மூன்று காரணங்களினடிப்படையில் எல்லோருக்கும் மத்தியில் பிரபல்யமாகியிருக்கின்ற இந்தத் தகவல் தவறானதாகும்.

**ஸிப்பீன் யுத்தத்திற்கான காரனம்:**

எம் சமுதாயத்தில் அதிகமானவர்கள்; ஸிப்பீன் யுத்தத்தை இரு அரசியல் குழுக்களுக்கு மத்தியில் நடந்த யுத்தமாகவும், ஆட்சியைப் பங்கு போட்டுக்கொள்வதில் நடந்த பிரச்சினையாகவும் கருதுகின்றனர். ஷீஆக்களோ இதைக்காரணம் காட்டி, முஆவியாவையும் அவர் சார்ந்தோரையும் காபிர்கள் என்று சொல்வதற்குத் தலைப்படுகின்றனர். இஸ்லாமிய கிலாபத்துக்கு எதிராக, அதை பலவீனப்படுத்த படை திரட்டி போர் புரிந்தார் என்றும் வசைபாடுகின்றனர்.

ஆனால், உண்மை அவ்வாறன்று. முஆவியா ﵁ அவர்கள் ஆட்சி மீது கொண்ட மோகத்தினால் இந்த யுத்தம் நிகழவில்லை. தன்னை அலி ﵁ அவர்களை விட சிறப்புக்குரியவராக முஆவியா﵁ அவர்கள் ஒருபோதும் நினைத்ததுமில்லை.

அபூமுஸ்லிமுல் ஹவ்லானி அவர்கள் முஆவியா﵁ அவர்களிடம் வந்து, "நீ அலியோடு சண்டை போடுகிறாயா? நீ அலி﵁ அவர்களைப் போன்றவரா? என்று கேட்டார்கள். அதற்கு முஆவியா ﵁ அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இல்லை. நிச்சயமாக அலி ﵁ என்னை விட சிறப்புக்குரியவர். ஆட்சி செய்வதற்கு மிகவும் தகுதியானவர். என்றாலும் உஸ்மான் ﵁ அவர்கள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? நான் அவரின் சாச்சாவின் மகன் அவரைக் கொன்றவர்களை பழி தீர்க்கவேண்டும் என்கிறேன். நீங்கள் அலியிடம் சென்று உஸ்மானைக் கொலை செய்தவர்களை ஒப்படைக்குமாறு சொல்லுங்கள். நான் எனது எல்லா விடயங்களையும் அவரிடம்



ஒப்படைக்கிறேன்" என்றார்கள். பின்பு அலி ﵁ அவர்களிடம் சென்று உஸ்மானைக் கொலைசெய்தவர்களை ஒப்படைக்குமாறு கூறினார்கள் ஆனால், அலி ﵁ அவர்கள் மறுத்துவிட்டார்கள். கொலையாளிகளை ஒப்படைக்கவில்லை. (தாரீஹுல் இஸ்லாம்)

முஆவியா ﵁ அவர்கள் அலி ﵁ அவர்களை கலீபாவாக ஏற்றுக் கொள்ளவில்லை அவருக்கு பைஅத் செய்யவுமில்லை. எனவே ஒரு அரசருக்கு எதிராகப் போர் செய்வதாகவும் அவர் நினைக்கவில்லை. இதனால்தான் போர் முடிந்து கடைசியாக ஒப்பந்தம் எழுதப்பட்ட போது, 'இது மு..மீன்களின் தலைவர் அலியும் அபூஸுஃப்யானின் மகன் முஆவியாவும் செய்து கொள்ளும் உடன்படிக்கை' என்று எழுதப்பட்டபோது, 'இல்லை மு..மீன்களின் தலைவர் என்று ஏற்றுக்கொண்டிருந்தால் போராடி இருக்கமாட்டேன்' என்றார்கள். பின்பு எழுது வினைஞரைப் பார்த்து என்னுடைய பெயருக்கு முன்னால் அவரின் பெயரை எழுதுங்கள், அவர் என்னை விட சிறப்புக்குரியவர். ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்" என்று கூறினார்கள். (அல்பிதாயா வந்நிஹாயா 7:288)

எனவே, இது அரசுக்கும் ஆட்சியை கைப்பற்ற நினைத்த ஒருவருக்கும மத்தியில் நடைபெற்ற போராட்டமல்ல.

அப்படியென்றால் போராட்டம் எதற்காக இடம் பெற்றது என்ற கேள்வி எழலாம்.

அலி ﵁ அவர்கள் முஆவியா ﵁ அவர்களைக் கவர்னர் பதவியிலிருந்து நீக்க நினைத்தார்கள் ஆனால் முஆவியாவோ உஸ்மான் ﵁ அவர்களின் கொலைக்கு பழிதீர்க்கமுன் தான் பதவி விலகப்போவதில்லை என்றார்கள். எனவே, கொலையாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கலே போராட்டத்திற்கான காரணமாகும்.

## நமது நிலைப்பாடு:

ஸிப்பீன் யுத்தம் பற்றித் தெரிந்து கொண்டதன் பிறகு இந்த இரண்டு குழுவினரில் யாரோ ஒருவர் தவறிழைத்திருப்பார் என்பது தெரிகிறது. ஆனால், அது யார் என்பதுதான் தெரியவில்லை இத்தகைய சந்தர்ப்பங்களில் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

ஸிப்பீன் யுத்தத்தில் எவரையும் தவறிழைத்தார்கள் என்று சொல்லமுடியாத அளவு, அல்லது அலி ﵁ அவர்களோடு கொண்ட கோபத்தில் முஆவியாவின் தரப்பாரும் முஆவியாவின் மீது கொண்ட கோபத்தில் அலியின் தரப்பாரும் போராடினார்கள் என்று சொல்ல முடியாதளவு இருபக்கமும் நியாயமான காரணங்கள் இருப்பதை உணரமுடியும். அலி ﵁ அவர்கள் முஆவியாவுக்கு எதிராக போராடியதற்கு முஆவியா, அலிக்கு பைஅத் செய்யவில்லை அவர் பதவி விலகக்கோரியபோது விலகவில்லை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

முஆவியா ﵁ அவர்களின் தரப்பார் அடிபணியாதமைக்கு உஸ்மான் ﵁ அவர்களைக் கொலை செய்ததில் அலி ﵁ அவர்களுக்கும் பங்கிருக்கிறது என்று கருதியதைச் சொல்லலாம் இந்த உணர்வு அவர்களிடம் பின்வரும் நான்கு காரணங்களினால் ஏற்பட்டது.

**01)** உஸ்மான் ﵁ அவர்களைக் கொலை செய்தவர்களை அலி ﵁ அவர்கள் கொலை செய்யவில்லை.

**02)** உஸ்மான் ﵁ அவர்களைக் கொலை செய்தவர்களைத் தேடி பழிதீர்க்கவென பஸராவுக்கு வந்த தல்ஹா﵁, ஸுபைர்﵁, ஆயிஷா﵁ போன்றோருக்கு எதிராக மதீனாவிலிருந்து படைதிரட்டிவந்து ஜமல் போரை அலி ﵁ அவர்கள் உருவாக்கினார்கள்.



**03)** மதீனாவை விட்டு விட்டு உஸ்மான் ﵁ அவர்களைக் கொலை செய்த கும்பல் வாழும் கூபாவை தனது தங்குமிடமாக எடுத்துக்கொண்டார்.

**04)** உஸ்மான் ﵁ அவர்களின் கொலையோடு சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டோரை அலி﵁ தன் படையில் வைத்திருந்தார்.

இக் காரணங்களினால் ஷாம் வாசிகள் உஸ்மானின் கொலையில் அலிக்கு சம்பந்தமிருக்கலாம் என்று ஊகித்தனர். அலி ﵁ அவர்களுக்கு ஒருபோதும் தொடர்பிருக்கவில்லை. மாறாக, உஸ்மான் ﵁ அவர்களை கொலை செய்த கும்பல் பலமுள்ளதாக இருந்தது இதனால் முதலில் ஆட்சியை ஸ்திரப்படுத்தியதன் பின்பு கொலைக்கும்பலை பலிவாங்கலாம் என்று அலி﵁ நினைத்தார்கள்.

இங்கே, யார் தவறு செய்தார்?, யார் சரிசெய்தார்? என்பதை ஆய்வு செய்வதைவிடுத்து இருவருமே இஜ்திஹாத் அடிப்படையில் செயல்பட்டார்கள் என்று முடிவு செய்வதே நமது ஈமானைப் பாதுகாப்பதற்கான வழியாகும்.

ஸிப்பீன் யுத்தத்தில் கலந்து கொண்டவர்களில் சுவர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே மரணித்து விட்டார்கள். எனவே, இந்த நேரத்தில் ஒரு கூட்டத்தின் மீது குற்றத்தை சுமத்தி ஷீஆக்கள் சுய லாபம் தேட முயற்சிப்பது கண்டனத்திற்குரியதும் கவலைக்குரியதுமாகும். ஏனெனில், மரணித்தவர்கள் யார் தவறு செய்தார்கள்? என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். நாம் இங்கே தவறு செய்ததாக ஒரு கூட்டத்தை தீர்மானிக்க அவர்களை தவறிழைக்காதவர்களாக இறைவன் கண்டால் நாம் தண்டனைக் -குரியவர்களாக மாறிவிடுவோம், இறைவன் நம்மைப் பாதுகாப்பானாக.

## இந்தப்போராட்டங்களில் ஸஹாபாக்களின் நிலைப்பாடு:

ஸஹாபாக்களின் காலத்தில் நடந்த இத்தகைய போராட்டங்களின போது ஸஹாபாக்கள் முப்பெரும் குழுக்களாகப் பிரிந்திருந்தனர்.

01) தல்ஹா ﷺ, ஸுபைர் ﷺ, ஆயிஷா ﷺ, முஆவியா ﷺ தலைமையிலான குழுவினர். இவர்கள் உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து உடனடியாகத் தண்டனை வழங்கவேண்டும் என்று கருதினர்.

02) அலி ﷺ அவர்களும் அவரோடு இருந்தவர்களும். இவர்கள் முதலில் ஆட்சியைப் பலப்படுத்துவோம். பின்பு, உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்தவர்கள் பற்றி சிந்திக்கலாம் என்று கருதினர்.

03) மூன்றாவது குழுவில்தான் ஸஹாபாக்களில் பெரும்பாலானவர்கள இருந்தார்கள். இதில்தான் ஸஃத் ﷺ, இப்னு உமர் ﷺ, அபூஹுரைரா ﷺ, முஹம்மத் இப்னு மஸ்லமா, அல்அஹ்னப், உஸாமா, போன்ற ஸஹாபாக்கள் அங்கம் வகித்தனர். இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுக்கியிருப்பதுதான் நமக்கு நல்லது என்று இவர்கள் கருதினர். அது பிரச்சினைக்குரிய ஒரு காலமாக இருந்தது. பிரச்சினைகளின் போது இப்படிப்பிரிந்து கிடப்பது மனித இயல்பு அதற்கு ஸஹாபாக்களும் விதிவிலக்கன்று.

இமாம் தபரி அவர்கள் தன்னுடைய பிரசித்திபெற்ற வரலாற்று நூலான 'அத்-தாரீஹ்' என்ற நூலில் நம்பகமான அறிவிப்பாளர்கள் மூலம் அறிவிக்கும் ஒரு செய்தியில் அஹ்னப் பின் கைஸ் ﷺ அவர்கள் சொல்கிறார்கள்; உஸ்மான் ﷺ அவர்கள் முற்றுகையிடப்பட்டதன் பிறகு நான் தல்ஹா ﷺ அவர்களையும் ஸுபைர் ﷺ அவர்களையும் சந்தித்து, "உஸ்மான் ﷺ அவர்களை கொலை செய்யப்பட்ட நிலையில் பார்த்தேன். இப்போது, நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்றேன்." அதற்கு அவர்கள் "அலி ﷺ அவர்களுடன் இருந்துகொள்" என்றார்கள். உஸ்மான் ﷺ கொலையுண்டதற்குப் பிறகு ஆயிஷாவை மக்காவில் சந்தித்தேன். "நீங்கள் எனக்கு என்ன உபதேசம் செய்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்கவர்கள் "அலி ﷺ அவர்களைச் சார்ந்து இரு" என்றார்கள். (தாரீஹுத்தபரி)



## நஹர்வான் யுத்தம்:

நஹர்வான் யுத்தம் முஸ்லிம்களின் தலைவரான அலி ﷺ அவர்களுக்கும், இஸ்லாமிய அரசுக்கு எதிராக செயற்பட்ட ஒரு கூட்டத்திற்கும் மத்தியில் நடைபெற்ற ஒரு போராட்டமாகும். இவர்கள் அலி ﷺ அவர்களை கலீபாவாக ஏற்று பின்பு ஸிப்பீன் யுத்த காலப்பகுதியில் அலியின் தரப்பிலிருந்து பிரிந்து சென்று அவருக்கு செய்த உடன்படிக்கையை முறித்துக்கொண்டனர்.

**போராட்டத்தைத் தடுப்பதற்கான முயற்சிகள்:**

இந்தக் குழு அலி ﷺ அவர்களின் தரப்பிலிருந்து பிரிந்து சென்றபோது, ஸிப்பீன் யுத்தத்தில் சமரச முடிவை எட்டுவதற்கு காரணமாக இருந்தவர்களுக்கு எதிராக, அதிகமாக பிரச்சாரம் செய்தனர். இதன் விளைவாக இவர்களுடன் கிட்டத்தட்ட 24000 பேர் வரை சேர்ந்து கொண்டதாக சில வரலாற்றுத் தகவல்கள் சொல்கின்றன. இவர்கள் தங்களுக்கென்று தனியான தலைமைத்து -வங்களை ஏற்படுத்திக்கொண்டனர்.

இவர்களின் பிரச்சாரத்தினதும் பிரச்சினையினதும் விளைவுகளைப புரிந்துகொண்டு ஸஹாபாக்களும் அலி ﷺ அவர்களும் இவர்களை மீண்டும் அவர்களின் பழைய உடன்படிக்கைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இதற்காக தனியான குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்ட அதேநேரம் பல ஸஹாபாக்களும் தங்களாலான முயற்சிகளை மேற்கொண்டனர். உத்தியோக பூர்வமாக நடைபெற்ற சந்திப்புகள், பெரும் விளைவுகளை ஏற்படுத்திய சந்திப்புக்கள் என்று பின்வருவனவற்றைக் கூறலாம்.

**01) இப்னு அப்பாஸ் ﷺ அவர்களின் முயற்சி:**

இவர்களின் பிரச்சாரங்களின் தவறுகளை உணர்ந்து கொண்ட இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் இவர்களுடன் பேசுவதற்கு

அலி ﷺ அவர்களிடம் அனுமதி கோரினார்கள். அலி ﷺ அவர்களும் அதற்கு அனுமதி வழங்கினார்கள்.

இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் இந்த பிரிவினைவாதக் கும்பலிடம் சென்றபோது அவரை அவர்கள் மிகவும் சந்தோசத்துடன் வரவேற்றார்கள். அவர்களிடம் அவர்களின் வணக்கவழிபாடுகளை மெச்சிய இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் அவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டினார்கள். இறைவன் குர்ஆனை இறக்கிவைத்தான். அதை நாமே விளங்கி நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் "தன் முடிவுக்கு முரண்பட்டிருப்பவர்களுடன் உடன்படிக்கை செய்வதொன்றும் மார்க்கத்திற்கு முரணான காரியமன்று" என்று நபியவர்கள் ஹுதைபியா உடன்படிக்கை செய்துகொண்டதைச் சுட்டிக்காட்டி அவர்களின் தவறான கொள்கைகள் ஒவ்வொன்றையும் தெளிவாக விளங்கப்படுத்தினார்கள்.

இதன் விளைவாக அல்லாஹ் அவர்களில் பலருக்கும் நேர்வழியைக் கொடுத்தான். முக்கியமாக அவர்களின் இரண்டு தலைவர்களும் (அப்துல்லாஹ், ஷப்த்) தவ்பாச்செய்து மீண்டும் அலியின் அணியோடு இணைந்து கொண்டனர். ஆனாலும் மற்றும் சிலர் தங்கள் தவறான கொள்கையைப் பிடிவாதத்துடன் பின்பற்றிக்கொண்டிருந்தார்கள். (مسند أحمد، مصنف عبد الرزاق)

**02) அலி ﷺ அவர்களின் முயற்சி:**

இவர்களின் தவறுகளை உணர்ந்துகொண்ட முஸ்லிம்களின் தலைவர் அலி ﷺ அவர்களே அவர்களுடன் பேசுவதற்கு முன்வந்தார்கள். அவர்களின் தவறுகளை ஒவ்வொன்றாக தெளிவு படுத்தினார்கள். ஆனாலும், ஷைத்தானின் வலையில் அவர்கள் வீழ்ந்துவிட்டதால் எல்லோரையும் பாதுகாப்பது கடினமாகிவிட்டது.

இவ்வாறு பல ஸஹாபாக்களாலும், முக்கியமான பெரும் தாபிஈன்களின் முயற்சியாலும் கவாரிஜ்களின் எண்ணிக்கையை 4000 பேர் வரை குறைக்க முடிந்தது.

(بيهقي، تاريخ الطبري، مصنف بن أبي شيبة)



**★ போராட்டத்திற்கான காரணங்களும் போராட்டமும்:**

தலைமைத்துவத்தை விட்டும் இவர்கள் பிரிந்து நின்றாலும் அலி ﷺ அவர்கள், அவர்களுடன் திடீரென்று போராட்டத்தில் இறங்கவில்லை. அவர்களாகவே போராடுவதற்கு நிர்ப்பந்திக்கும்வரை முஸ்லிம்களின் பள்ளிகளில் தொழுவதற்கும், போராட்டங்களில் கிடைக்கும் கனீமத் பொருட்களில் பங்கு பெறுவதற்கும் அவர்களுக்கு அலி ﷺ அவர்கள் அனுமதி வழங்கியிருந்தார்கள்.

(بيهقي، تاريخ الطبري، مصنف بن أبي شيبة)

ஆனாலும், வழிகேடு எப்போதும் அதன் பண்புகளை காட்டியே தீரும் என்பதற்கு அமைய, அலி ﷺ அவர்களையும் ஏனைய முஸ்லிம்களையும் போராடுவதற்கு அழைப்பதைப்போல தங்களின் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டனர். இதுவே, நஹ்ர்வான் யுத்தம் நடப்பதற்கு காரணமாக அமைந்தது. போராட்டத்திற்கான காரணங்களில் பின்வரும் காரணங்களை முக்கியமானவை என்று குறிப்பிடலாம்.

01) ஹவாரிஜ்கள், அப்துல்லாஹிப்னு ஹப்பாப் இப்னுல் அரத் ﷺ அவர்களையும், அவருடன் சேர்த்து சிலரையும் கொலை செய்தமை.

02) கொலை செய்தவர்களை ஒப்படைக்குமாறும், இந்தக் கொலையாளிகள் வேண்டுமென்றே செய்திருப்பதால் அவர்களுக்கு இஸ்லாம் சொல்லும் தண்டனை வழங்கப்பட வேண்டும். என்றும் அலி ﷺ அவர்கள் கோரிக்கை விடுத்தபோது, "அவர்களைக் கொலை செய்தவர் தனி ஒருவர் அன்று நாம் எல்லோருமே அதை செய்தோம்" என்று சொன்னமை.

03) தங்களுக்கு முரண்படுவோரை காபிர்கள் என்று சொன்னது மாத்திரமல்லாமல் அவர்களின் இரத்தத்தை ஓட்டுவதும் அவர்களின் சொத்துக்களை சுவீகரிப்பதும் தமக்கு ஹலால் என்று தீர்ப்பு வழங்கியமை.

**04)** அலி ﷺ அவர்களால் சமாதானத்திற்காக அனுப்பப்பட்ட தூதரை கொலை செய்தமை.

(مصنف بن أبي شيبة، تاريخ الطبري، فتح الباري)

இத்தகைய காரணங்களினால் அலி ﷺ அவர்கள் ஹி.38 ஆம் ஆண்டு ஷாம்வாசிகளுடன் போராடுவதற்குத் தயார்படுத்தி வைத்திருந்த படையுடன் ஹவாரிஜ்களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடுத்தார்கள். இதில் அலி ﷺ அவர்கள் தரப்பில் குறைவான விளைவுகள் ஏற்பட்டாலும் எதிர்த்தரப்பில் பாரிய விளைவுகள் ஏற்பட்டன. ஹவாரிஜ்களின் அடையாளமே துடைத்தெறியப்படும் அளவுக்கு பெரும் அழிவுகளை அவர்கள் சந்தித்தார்கள் என்று வரலாறு சொல்கிறது. காயப்பட்டவர்களையும் தப்பிஓடியவர்களையும் தவிர வேறு எவரும் ஹவாரிஜ்களில் மீதமிருக்கவில்லை.

**★ சத்தியத்தில் அலி ﷺ அவர்கள்:**

அலி ﷺ அவர்கள் ஹவாரிஜ்களுக்கு எதிராக போராடியதில் தான் தவறிழைக்கவில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள். என்றாலும், மற்றவர்களுக்கும் இதை தெளிவுபடுத்தும் நோக்கில் நபியவர்களால் எச்சரிக்கப்பட்ட ஸுத்ததிய்யாவை (இவரும் இவரோடு சேர்ந்திருக்கும் கூட்டமும் வழிகேட்டிலிருப்பார்கள் என்று நபியவர்கள் சொல்லியிருந்தார்கள்.) தேடுமாறு பணித்தார்கள்; தேடினார்கள்; கண்டுபிடித்தார்கள். அலி ﷺ அவர்களும் அவரின் தரப்பாரும் ஹவாரிஜ்களுக்கு எதிரான போரில் சத்தியத்தில் இருந்தார்கள் என்பது தெளிவானது.

❁❁❁



## பகுதி –03

# குற்றச்சாட்டுக்களும் பதில்களும்.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அத்தனை பிரிவுகளும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தங்களுக்கு எதிரான விடயங்களை ஸஹாபாக்கள் அறிவிக்கும்போது அவர்களை விமர்சிப்பதற்குத் தலைப்பட்டிருக்கின்றன. இத்தகைய குழுக்களில் ஷீஆக்கள் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் ஒரு சில ஸஹாபாக்களைத்தவிர மற்ற எல்லோரையும் “காபிர்கள்” என்றும் “முனாபிக்குகள்” என்றும் விமர்சிக்கின்றனர். ஷீஆக்களிடம் ஏன் இப்படி விமர்சிக்கிறீர்கள் என்று கேட்டால் சில நொண்டிச் சாட்டுக்களையும் குற்றச்சாட்டுக்களையும் குறிப்பிடுகின்றனர். அந்தக் குற்றச்சாட்டுக்களின் உண்மை நிலையையும் அதன் சுயரூபத்தையும் இந்தப்பகுதியில் நோக்குவோம்.

❁❁❁

## ஸஹாபாக்கள் மார்க்கத்தை மறைத்தார்களா?

ஸஹாபாக்கள் மார்க்கத்தில் அதிகமானவற்றை மறைத்து விட்டதாகவும், அஹ்லுல்பைத்கள் பற்றி நபியவர்கள் சொன்னவற்றை தங்களின் சுயநலத்திற்காக மறைத்துவிட்டதாக ஷீஆக்கள் பிரச்சாரம் செய்கின்றனர். இதன் உண்மை நிலையை இங்கு அவதானிப்போம்.

அல்லாஹ் தன் மார்க்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளான். "நாம் தான் (இந்த) உபதேசத்தை இறக்கினோம்; நாம்தான் அதைப் பாதுகாப்போம்." எனஇறைவாக்கில் நம்பிக்கை வைத்துள்ள எவரும் நபியின் செய்திகளை அல்லாஹ் பாதுகாத்துள்ளான் என்பதிலோ, சந்தேகமற்ற அடிப்படையில் அவனது பாதுகாப்பு அமைந்திருக்கும் என்பதிலோஎவரும் சந்தேகப்படமாட்டார்கள். அவ்வாறு சந்தேகப்படுபவர் முஃமீன்களாகவும் இருக்க முடியாது.

நமது இஸ்லாமிய மார்க்கத்தை அல்லாஹ் ஸஹாபாக்கள் மூலமும் அவர்களுக்குப் பிறகு வந்த தாபிஈன்கள் மூலமும் பாதுகாத்துள்ளான். இதனோடு, தொடர்புபடும் அத்தனைபேருடைய வரலாறுகளும் எந்த சந்தேகமும் ஏற்படாத அடிப்படையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு 1,000,000 க்கும் மேற்பட்டவர்களின் வரலாறுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த மார்க்கத்தைப் பாதுகாத்தவர்களில் முதன்மையானவர்கள் ஸஹாபாக்கள். ஸஹாபாக்கள் விடயத்தில் ஒருவன் குறை கண்டால் அதன் பிறகு அவனால் அல்-குர்ஆனையோ, ஸுன்னாவையோ எடுக்க முடியாது. எனவே, இவ்வாறு குற்றம் சுமத்துபவர்கள் இஸ்லாத்தையே குழிதோண்டிப் புதைக்க முயற்சிக்கிறார்கள் என்பதையே எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இஸ்லாத்தை விட்டும் வெளியில் சென்றுவிட்டவர்கள், அவர்கள் ஸலாம் சொன்னால்கூட பதில் சொல்லக்கூடாது என்று இமாம்களால் சுட்டிக்காட்டப்படுகின்ற குழுவான ஷீஆக்கள்தான் இத்தகைய குற்றச்சாட்டுக்களைச் சொல்கின்றனர். எனவே, இது



எமது நம்பிக்கைக்கும், கொள்கைகளுக்கும் எவ்விதத் தாக்கத்தையும ஏற்படுத்தாது. யூதர்களின் வழித்தோன்றல்களான இவர்களின் பிரச்சாரத்தால் நாம் பாதிப்படையவேண்டிய அவசியமில்லை.

ஸஹாபாக்கள் மறைத்துவிட்டதாக ஷீஆக்கள் குற்றம் சாட்டும் அத்தனை ஹதீஸ்களும் ஷீஆக்களின் அடிப்படைக் கொள்கைகளை நிறுவுவனவாகவும் அவற்றுக்கு உயிர்கொடுப்பனவாகவும் அமைந்திருக்கின்ற செய்திகளாகும். உண்மை என்னவெனில் ஆரம்பத்தில் எதையும் கவனிக்காமல் இப்னு ஸபஇனால் இஸ்லாமிய வேடமனிந்து யூத கொள்கைகள் ஷீஆ என்ற பெயரில் ஒரு புதிய மார்க்கம் உருவாக்கப்பட்டது. இதன் அடிப்படைக் கொள்கை இஸ்லாத்தின் மூலாதாரங்களுக்கும், அடிப்படை விடயங்களுக்கும் முரண்படுவதாக அமைந்ததால் அதை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மத்தியில் சிந்தனைச் சிக்கலை ஏற்படுத்தவும் ஏனையவர்களால் விமர்சிக்கப்படவும் வழிவகுத்தது. இதை அறிந்துகொண்ட இந்த யூதப்பிள்ளைகள் இத்தகைய விமர்சனங்கள் அத்தனைக்கும் பதில் சொல்லவும் தங்கள் கொள்கையை தக்கவைத்துக்கொள்வதற்கும் இலகுவான வழியாக இந்தக்குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

ஏனெனில், இந்தக்குற்றச்சாட்டைச்சொல்லும் எவரும் தான் நினைத்தவற்றை மார்க்கம் என்று சொல்லலாம் ஆதாரம் கேட்டால் தான் எழுதியவற்றையே எடுத்துக்காண்பிக்கலாம். விளக்கம் கேட்டால் இதை ஸஹாபாக்கள் மறைத்துவிட்டார்கள் என்று இலகுவாக தப்பிவிடலாம். எனவே இந்தக்குற்றச்சாட்டுக்கள் உள்நோக்கம் கொண்டவை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஸஹாபாக்களின் வரலாற்றை சிறிதளவேனும் படித்த எவரும் இக்குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளமட்டார். நபி ﷺ அவர்கள் மீது பொய் சொல்வதற்கு அதிகம் பயந்த ஸஹாபாக்கள் நபியவர்கள் சொன்ன செய்திகளை மறைப்பதற்கும் பயந்தார்கள். அபூஹுரைரா ؓ அவர்கள் தன்னுடைய எந்த சபையை ஆரம்பிக்கும் போதும், "என் மீது இட்டுக்கட்டுபவர்கள் தனது தங்குமிடத்தை

நரகமாக்கிக் கொள்ளட்டும்'' (புஹாரி,முஸ்லிம்) என்ற பொருள்படும் ஹதீஸைக் கூறியே ஆரம்பிப்பார்கள். இது ஹதீஸ்களை அறிவிப்பதில் அவர் எந்தளவிற்கு அவதானமாக நடந்திருக்கிறார் என்பதையும் பயபக்தியோடு ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அவர்கள் சொல்கிறார்கள்: நான் இறைவனுடைய அருள் மறையிலிருந்து 02 (02:159,160) வசனங்களைக் கேட்டிராவிட்டால் ஒரு செய்தியையேனும் அறிவித்திருக்கமாட்டேன். இது அவர் மார்க்கத்தை மறைக்கக்கூடாது என்பதில் எந்தளவுக்கு அவதானமாக இருந்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

நானும் உமைய்யா பின் ஸைத் எனும் கிளையாரைச்சேர்ந்த ஒருவரும் தோழராக்கப்பட்டிருந்தோம் நபியவர்களிடம் ஒவ்வொரு நாளைக்கு ஒருவர் வீதம் செல்வதாகவும் மற்றவர் வயலில் வேலை செய்வதாகவும் நாட்களைப் பிரித்துக்கொண்டோம். அன்றைய தினம் நான் கற்ற செய்திகளை வயலில் இருக்கும் எனது அன்ஸாரித் தோழரிடம் சொல்வேன் அவரும் அவ்வாறே சொல்வார் என்று உமர் ﵁ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (புஹாரி 89, முஸ்லிம்)

இப்னு மஸ்ஊத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள். ''நாம் இறைவனுடைய வேதத்திலிருந்து 10 வசனங்களைக் கற்றுக்கொள்வோம அதை நடைமுறைப்படுத்தி மற்றவர்களுக்கு எத்திவைத்து அமல் செய்யாமல், அதற்குப் பின்னால் இறங்கிய 10 வசனங்களை கற்றுக்கொள்ள மாட்டோம்.'' என்கிறார்கள்.

(ஸுனன் அல்-குப்ரா, தபகாதுல் குப்ரா)

இவ்வாறு ஸஹாபாக்கள் நபியவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட செய்திகளை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதில் காட்டிய ஈடுபாட்டிற்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

இந்த மார்க்கத்தை மற்றவர்களுக்குச் சொல்வதும் பரப்புவதும் அதை அறிந்தவர்களின் பொறுப்பு என்று நபி ﷺ



அவர்கள் சொன்னதோடு அல்-குர்ஆனும் அஸ்-ஸுன்னாவும் அப்படிச் செய்பவர்களுக்கான வெகுமதிகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

''காலத்தின் மீது சத்தியமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான், விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்து **சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து**பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிப்பவர்களைத்தவிர.''

(103: 1,2,3)

"(விசுவாசங்கொண்டோரே!) மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தார்களில்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள். தீமையை விட்டும் (அவர்களை) நீங்கள் விலக்குகிறீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள்..." (3:110)

"என்னைப்பற்றி ஒரு வசனம் (விடயம்) தெரிந்தாலும் அதை எத்திவையுங்கள்'' (புஹாரி, திர்மிதி, அஹ்மத்)

"யார் ஒரு நல்ல விடயத்தை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறானோ அவனுக்கு அதை செய்பவனுக்கு கிடைக்கும் நன்மை போன்ற நன்மை கிடைக்கின்றது.'' (முஸ்லிம், அபூதாவுத், திர்மிதி)

"இன்னும் (விசுவாசங்கொண்டோரே) உங்களில் ஒரு கூட்டத்தார் அவர்கள் (மனிதர்களை) நன்மையின் பால் அழைக்கின்றவர்களாகவும், நல்லதை (மக்களுக்கு) ஏவுகின்றவர்களாகவும், தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்குகின்றவர்களாகவும் இருக்கட்டும். அவர்களே வெற்றி பெற்றோர்." (3:104)

இவ்வாறு ஏராளமான வசனங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம், நபியவர்களின் வார்த்தைகளை அணுவும் தவறாமல் அப்படியே நடைமுறைப்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்த ஸஹாபாக்கள் நிலையான தர்மமாகிய இந்த மாபெரும் பணியை செய்யாமல் மார்க்கத்தை மறைத்து தங்கள் மறுமை வாழவை சீர்குழைத்துக்கொள்ள ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

எனவே, இந்த மார்க்கத்தையும் அதை ஏற்றவர்களையும் பாதுகாக்க தங்கள் உயிரையும் துச்சமாக மதித்த ஸஹாபாக்கள், மார்க்கத்தை மறைத்து மறுமையை வீணாக்கிவிட்டார்கள் என்பது மிகப் பெரும் பழியாகும். யாரெல்லாம் ஸஹாபாக்கள் விடயத்தில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்களோ அவர்கள் விடயத்தில் சந்தேகம்கொண்டு அவதானமாக நடக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

❁❁❁



## ஸஹாபாக்கள் பித்அத்வாதிகளா?

“நான் அறிந்த என்னைத்தெரிந்த பல மனிதர்கள் நாளை மறுமையில் நான் ஹவ்ழுல் கௌதரில் இருக்கும் போது அதைநோக்க வருவார்கள். அப்போது அதைவிட்டும் அவர்கள் தடுக்கப்படுவார்கள். அப்போது நான், “இறைவா! அவர்கள் எனது தோழர்கள் (ஸஹாபிகள்)” என்று சொல்வேன். அதற்கு உனக்குப்பிறகு அவர்கள் எதையெல்லாம் உருவாக்கினார்கள் என்பது உமக்குத் தெரியாது என்று சொல்லப்படும்.” (புஹாரி 4740)

இந்த ஆதாரபூர்வமான செய்தியைச் சிலர் தவறாக விளங்கிக் கொண்டு ஸஹாபாக்களை பித்அத்வாதிகள் என்று விமர்சிக்கின்றனர். ஷீஆக்கள் போன்ற ஸஹாபாக்கள் மீது கொடூரமான கருத்துக்களை விதைக்கின்றவர்களின் மிகப்பெரும் ஆதாரமாகவும் இந்த செய்தி இருக்கிறது. இதுபோலவே சிலர் இந்தச் செய்தியில் நபியவர்களின் ஸஹாபாக்கள் ஹவ்ழுல் கவ்தரிலிருந்து துரத்தப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறதே, இந்த மார்க்கத்தைப் பாதுகாக்க தங்கள் உயிரையும் துச்சமாக மதித்த ஸஹாபாக்களுக்கே இந்த நிலையா? அவர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்கள் என்பதற்கு ஹதீஸ் ஆதாரங்கள் உண்டா? என்ற ஐயத்தோடும் கவலையோடும் இருக்கின்றனர்.

மேலே, நாம் குறிப்பிட்ட ஹதீஸை: அறிஞர்கள் பல வழிகளில விளக்க முயற்சிக்கின்றனர். அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறேன்.

இங்கே நபியவர்கள் ஸஹாபாக்கள் என்று குறிப்பிடுவோர் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த முனாபிக்குகளை (இஸ்லாத்தை வெளிப்படுத்தி நிராகரிப்பை மறைத்து வாழ்ந்தோரை)க் குறிக்கும். இவர்களில் சிலரை அல்லாஹ்வின் அறிவிப்பின் படி நபியவர்களுக்குத் தெரியும், மற்றும் சிலரைத் தெரியாது எல்லோரையும் ஸஹாபாக்கள் என்றே நபியவர்கள் கருதினார்கள்.

இறைவன் 63:1,2 ல் அவர்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

“(நபியே!) நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால், “நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதரே என நாங்கள் சாட்சி கூறுகின்றோம்” என்று கூறுவர். நிச்சயமாக நீர் அவனது தூதர் என்பதை அல்லாஹ் நன்கறிவான். நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் பொய்யர்களே என அல்லாஹ் சாட்சி கூறுகின்றான். அவர்கள் தமது சத்தியங்களைக் கேடயமாக எடுத்துக்கொண்டு, அதனால் அல்லாஹ்வின் பாதையை விட்டும் (பிறரைத்) தடுக்கின்றனர். நிச்சயமாக அவர்கள் செய்து கொண்டிருந்தது மிகக் கெட்டதாகும்.”

நபியவர்களுடன் இருந்த சில முனாபிக்குகளை நபியவர்களுக்குத் தெரியாதிருந்தது என்பதை பின்வரும் வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான்.

“உங்களைச் சூழவுள்ள கிராமப்புற அரபிகளில் நயவஞ்சகர்களும் உள்ளனர். மேலும், மதீனா வாசிகளிலும் நயவஞ்சகத்தில் ஊறித் திழைத்தோர் உள்ளனர். (நபியே!) நீர் அவர்களை அறியமாட்டீர். நாம் அவர்களை நன்கறிவோம். அவர்களை நாம் இருமுறை தண்டிப்போம். பின்னர் கடுமையான வேதனையின்பால் அவர்கள் மீட்டப்படுவார்கள்” (9:101)

மற்றும் சில அறிஞர்களின் கருத்துப்படி: நபி ﷺ அவர்களுக்குப்பின் மதம் மாறியவர்களையே இது குறிக்கும். நபி ﷺ அவர்களின் இறுதிக் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட இஸ்லாத்தில் சரியான தெளிவில்லாத பலர் நபியின் மரணத்தோடு மதம் மாறினார்கள். இவர்களையே நபியவர்கள் தனது தோழர்கள் என்று அழைப்பார்கள்.

‘ஸஹாபி’ என்ற அரபுச் சொல்: ஒன்றாக இருந்த எல்லோரைய்யும குறிக்கும். இந்த அர்த்தத்திலேயே அந்த ஹதீஸில் நபியவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்று மற்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது இஸ்லாமிய வழக்கில்



சொல்வதைப் போன்று ஸஹாபி என்றால்: “நபியவர்ளை ஈமான் கொண்ட நிலையில் அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தில் மரணித்திருக்கவேண்டும்” என்பதல்ல. பொதுவாக இச்சொல்லுக்கான மொழிக்கருத்தின் படி நபியவர்களை கண்ட சந்தித்த எல்லோரையும் இந்த ஹதீஸ் குறிப்பதாகச் சொல்கின்றனர்.

இதை நபியவர்களின் இன்னுமொரு செய்தியும் தெளிவு படுத்துகின்றது. அப்துல்லாஹ் பின் ஸப.ஃ. எனும் முனாபிக்குகளின் தலைவனைக் கொலைசெய்ய நபியவர்களிடம் அனுமதி கேட்டபோது ‘இல்லை, வேண்டாம் முஹம்மத் தன் தோழர்களைக் கொலை செய்கிறான்’ என்று மக்கள் நினைத்து விடுவார்கள் என்று சொல்லி அதற்கு நபியவர்கள் தடைவிதித்தார்கள். இந்த வார்த்தைப் பிரயோகத்தில் நபியவர்களை உண்மையாகவே ஈமான் கொண்டிருக்க வேண்டும் என்பது கவனிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிலபோது நபியவர்களை சந்திக்காத நபியவர்களின் சமூகத்தைக் குறிக்கவும் ‘ஸஹாபி’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த கருத்தினடிப்படையிலும் மேலே சுட்டிக்காட்டிய ஹதீஸில் ஸஹாபி என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று மற்றும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

குறித்த இந்த ஹதீஸை ஸஹாபாக்களைக் குறை காணும் விதத்தில் ஷீஆக்கள் மாத்திரமே பயன்படுத்துகின்றனர். இவர்களைத் தவிர இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய எந்தக்குழுவும் இந்த ஹதீஸை ஸஹாபாக்களைக் குறைகாண பயன்படுத்தியதில்லை. அதனால் ஷீஆக்களிடம் நாம் ஒரு கேள்வியை கேட்கலாம். அலி ؓ, பாதிமா ؓ, ஹஸன் ؓ, ஹுஸைன் ؓ, ஸல்மானுல் பாரிஸி ؓ போன்ற நீங்கள் போற்றுகின்ற இவர்கள் ஸஹாபாக்களில்தானே அடங்குகின்றனர். எனவே இவர்களும் நாளை மறுமையில் ஹவ்ழுல் கௌதரிலிருந்து துரத்தப்படுவார்களா? ஸஹாபாக்களை நபியவர்ள் விரட்டுவார்கள் என்றால் இவர்களையும் விரட்டத்தானே வேண்டும். அப்படி விரட்டப்படமாட்டார்கள் என்று உங்களால் பதில் சொல்ல

முடியுமா? அப்படிச் சொன்னால் எந்த ஆதாரத்தினடிப்படையில் சொல்கிறீர்கள் என்று சொல்லமுடியுமா? நிச்சயமாக முடியாது. அப்படி நீங்கள் சொன்னாலும் உங்களால் இம்சிக்கப்படும் ஏனைய ஸஹாபாக்களுக்கு வந்திருக்கும் செய்திகளைப்போன்ற செய்திகளைத்தான் சொல்லவேண்டும். எனவே, இந்த ஹதீஸ் விடயத்தில் நாம் சுட்டிக்காட்டிய, இமாம்களின் கருத்துக்களில் ஏதாவதொன்றுக்கு நீங்களும் வந்தாகவேண்டும்.

❁❁❁



## ஹுதைபியாவில் ஸஹாபாக்கள் நபியவர்களை நிராகரித்து இஸ்லாத்தைவிட்டும் சென்று விட்டனரா?

நபியவர்களும் ஸஹாபாக்களும் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு உம்றா செய்வதற்காக மக்காவுக்குச் சென்றார்கள். ஆனால், ஹுதைபியா என்ற இடத்தில் எதிரிகளால் தடுக்கப்பட்டார்கள். அங்கே, அவர்களுக்கும் மக்காவின் முக்கிய புள்ளிகளுக்குமிடையில ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பின்பு, அந்த இடத்திலேயே முடிய்யக களையுமாறும், கொண்டுவந்த பிராணிகளை அறுத்து அந்த இடத்திலேயே பலியிடுமாறும் ஸஹாபாக்களுக்கு நபியவர்கள் ஏவினார்கள். ஆனால், ஸஹாபாக்கள் யாரும் அதைச் செய்யவில்லை. நபியவர்கள் கோபப்பட்டார்கள். தன் மனைவி உம்மு ஸலமா ﵂ அவர்களிடம் சென்றார்கள்.

நபியவர்களின் முகத்தில் கோபத்தை அம்மையார் அவர்கள் காண்கிறார். அப்போது, 'யார் உங்களைக் கோபப்படுத்தினார்கள்? யார் உங்களைக் கோபப்படுத்தினாரோ அல்லாஹ் அவரைக் கோபிப்பான் என்றார்கள். நபியவர்கள் 'நான் எப்படி கோபப்படாமலிருப்பேன். நான் ஒன்றை சொல்கிறேன் அதை பின்பற்றாமல் இருக்கிறார்கள்.' என்றார்கள். (நஸஈ)

அதாவது இங்கே உம்மு ஸலமா﵂ அவர்கள் நபியவர்களுக்கு ஆறுதல் சொல்லும் அதேவேளை நபியவர்கள் கோபப்படுவதின் அபாயத்தையும் உணர்த்துகிறார்கள்.

இந்தச் செய்தியை வைத்து ஷீஆக்கள் ஸஹாபாக்களை குறைகாண்கின்றனர். ஸஹாபாக்கள் நபியவர்கள் உயிருடன் இருக்கும்போதே நபியவர்களுக்கு முன்னாலேயே அவரை பின்பற்றவில்லை, அவருக்கு கட்டுப்படவில்லை. அவர்கள் உயிருடன் இருக்கும்போதே இப்படியென்றால், அவர்கள் மரணித்த பிறகு கேட்கவா வேண்டும். என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

உண்மையில் மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய என்பதைப்போல, இந்த ஷீஆக்கள் ஸஹாபாக்களை குறைகாண வேண்டும் என்று முடிவு செய்து விட்டதனால் அவர்களின் கொள்கைக்கு எவையெல்லாம் ஆதாரம் என்று நினைக்கிறார்களோ! அவற்றையெல்லாம், தங்களின் ஆதாரங்களாகக் சுட்டிக்காட்டுவது அவர்களின் வழமையாகிவிட்டது. சிலபோது அவர்களின் கொள்கையை அடியோடு தகர்க்கக்கூடியதாக அவர்களின் ஆதாரங்கள் இருக்கும். அதையும் அவர்கள் பார்க்கமாட்டார்கள். ஆதாரம் கிடைத்த அவசரத்தில் அவைகளை முன்வைத்துவிடுவார்கள். அதுபோல், முன்பின் பார்க்காமல் அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களிலொன்றாகவே இதையும் நாம் அவதானிக்கமுடிகிறது.

ஸஹாபாக்கள் இங்கே நபியவர்களுக்கு முரண்படவில்லை மாறாக, க∴பாவுக்குச் செல்லவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு அதிகமாக இருந்தது. இதனால், ஒருவேளை நபியவர்கள் சொல்வதை மாற்றி வஹி இறங்காதா அல்லது இறங்குமோ என்று நினைத்து சற்று தாமதித்தார்கள். நபியவர்களுக்கு மாறுசெய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒரு வீதமேனும் அவர்களுக்கிருந்ததில்லை. சிலபோது நபியவர்களின் தீர்ப்புக்கு முரணாக இறைவனின் செய்திகள் இறங்கியிருக்கிறது என்பது அவர்களுக்குத்தெரியும். அதனால் நபியவர்களின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு தாமதித்தனர்.

ஹுதைபியாவில் இடம்பெற்ற நிகழ்வின் முடிவிலே நபியவர்களுக்கு உம்மு ஸலமா ﷺ அவர்கள், அவரின் தலை முடியை மழிக்குமாறும், குர்பானியை அறுக்குமாறும், இவ்வாறு மற்றவர்களுக்கு செயல் மூலம் உணர்த்துமாறும் ஆலோசனை சொன்னார்கள். அதை நபியவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். உடனே, ஸஹாபாக்கள் இதுதான் முடிவு, இதற்குப்பிறகு இதில் மாற்றமில்லை என்று தெரிந்துகொண்டார்கள். எல்லோரும் போட்டிபோட்டுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்தினார்கள். எனவே, நபியவர்களுக்கு மாறுசெய்ய வேண்டும் என்ற நோக்கம் அவர்களிடம் இருந்திருந்தால் அவர்கள் அவ்வாறு நிறைவேற்றி இருக்கமாட்டார்கள்.



இந்த ஹதீஸை வைத்து ஸஹாபாக்களை குறைகாண முனையும் ஷீஆக்களிடம் நாம் ஒரு கேள்வியைக் கேட்கலாம். அலி ﷺ அவர்களும் அந்த ஹுதைபியாவில் இருந்தார்கள். அவர்களும் அப்படி தாமதித்தவர்களில் ஒருவர். அப்படியென்றால் அலி ﷺ அவர்களும் நபிக்கு மாறுசெய்தார்களா? பாவம் ஷீஆக்கள் ஆப்பிழுத்த குரங்கு போன்றாகிவிட்டார்கள்.

நாம் அவ்வாறு நினைக்கவில்லை. ஸஹாபாக்கள் நபியவர்களின உமிழ் நீரைக்கூட கீழே விழவிடாமல் எடுத்து தங்கள் மேனியில் பூசிக்கொள்வார்கள். அந்தளவுக்கு அவர்கள் நபி ﷺ மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். ஆனால், க∴பாவிற்கு செல்ல வேண்டும், நீண்ட காலத்திற்கு பின் தமது நாட்டுக்கு செல்லவேண்டும் என்ற அதீத ஆர்வத்தில் நபியவர்களின் கட்டளையை நிறைவேற்ற சற்று தாமதித்தனர். தங்கள் உயிர் உள்ளவரை அதற்காக போராட வேண்டியேற்பட்டாலும் அதற்கு தயாராக இருந்தார்கள். இதனாலேயே அல்லாஹ் ஹுதைபியா உடன்படிக்கையின்போது பத்ஹ் எனும் அத்தியாயத்தை இறக்கி ஸஹாபாக்களைப் புகழ்ந்தான்.

“(நபியே!) நம்பிக்கையாளர்கள் அந்த மரத்தின் கீழ் உம்மிடம் உடன்படிக்கை எடுத்தபோது, நிச்சயமாக அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான். அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றை அவன் நன்கறிந்து, அவர்கள் மீது அமைதியை இறக்கிவைத்தான். மேலும், அவன் அவர்களுக்கு சமீபமான வெற்றியையும் வழங்கினான். (போரில் கிடைக்கும்) அதிகமான “கனீமத்” பொருட்களையும் (வழங்கினான்.) அதை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கின்றான்.’
(48:18,19)

“முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார். மேலும், அவருடன் இருப்போர் நிராகரிப்பாளர்கள் மீது கடுமையானவர்களாகவும், தமக்கிடையே கருணையுடையோராகவும் இருக்கின்றனர். அல்லாஹ்வின் பொருத்தத்தையும், அருட்கொடையையும் நாடி, ருகூ∴ செய்பவர்களாகவும்,

சுஜூது செய்பவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அவர்களது அடையாளம் அவர்களது முகங்களிலுள்ள சுஜூதின் அடையாளமாகும். இதுவே தவ்றாத்தில் அவர்களுக்குரிய உதாரணமாகும். இன்ஜீலில் மேலும் அவர்களுக்குரிய உதாரணமாவது ஒரு பயிரைப் போன்றதாகும். அது தனது முளையை வெளிப்படுத்தி, பின்னர் அதனைப் பலப்படுத்துகிறது. பின்னர் அது பலமாகி தனது தண்டின் மீது நிலையாக நிற்கின்றது. விவசாயிகளை அது ஆச்சரியமடையச் செய்கின்றது. இவர்கள் மூலம் நிராகரிப்பாளர்களை அவன் கோபமூட்டுவதற்காகவே (இவ்வாறு செய்கின்றான்.) மேலும், அவர்களில் நம்பிக்கை கொண்டு, நல்லறங்கள் புரிவோருக்கு மன்னிப்பையும் மகத்தான கூலியையும் அல்லாஹ் வாக்களிக்கின்றான்." (48:29)

❁❁❁



## உஸாமாவின் படையில் பெரும் ஸஹாபாக்கள் செல்லாதது ஆட்சியை கைப்பற்றுவதற்காகவா?

நபி ﷺ அவர்கள் உஸாமாவின் தலைமையில் ஒரு படையை ரோமர்களுக்கு எதிராக போராடுவதற்கு தயார் செய்துவிட்டு மரணமடைந்தார்கள். நபியவர்கள் மரணித்து அபூபக்கர்ؓ அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது அந்தப்படை செல்வதா? இல்லையா? என்ற கருத்து முரண்பாடு தோன்றியது. ஆனால் ஷீஆக்களோ இதற்கு புதிய வடிவம் கொடுக்கின்றனர். அதாவது நபியவர்கள் உஸாமாவின் படையைத் தயாரித்துவிட்டு "யார் உஸாமாவின் படையில் செல்வதற்குத் தயார்படுத்தப்பட்டும் செல்லவில்லையோ அவர்கள் நாசமாகட்டும்" என்று சொன்னார்கள் என்றும், எனவே அபூபக்ர்ؓ, உமர் ؓ போன்றவர்கள் உஸாமாவின் படையில் இருந்தும் அவர்கள் செல்லவில்லைஇதனால், அவர்கள் நபியவர்களின் சாபத்திற்குரியவர்கள் என்றும், அவர்கள் நின்றது நபியவர்களின் பின் ஆட்சியை தங்கள் கையகப்படுத்திக்கொள்ளவே என்றும் கதையளக்கின்றனர்.

நபியவர்கள் சொன்னதாகச் சொல்லப்படும் இந்த செய்தியில் எந்த உண்மையுமில்லை. அது இட்டுக்கட்டப்பட்ட ஒரு செய்தியாகும். உஸாமாவின் படையில் அபூபக்ர் ؓ அவர்கள் இருக்கவில்லை. நபியவர்கள் கடுமையாக சுகவீனமுற்றிருந்த கடைசி நாட்களில் அபூபக்ர் ؓ அவர்களே நபியவர்களுக்கு பகரமாக தொழுகை நடாத்தினார்கள். எனவே, உஸாமாவின் படையில் அவர் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை.

உமர் ؓ அவர்கள் உஸாமாவின் படையில் இருந்தார்கள். ஆனால், அபூபக்ர் ؓ அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பிறகு முக்கிய ஸஹாபாக்களை தன்னோடு மதீனாவில் வைத்துக்கொண்டு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை பெற நாடினார்கள். இதனால், படைத்தளபதி உஸாமா ؓ அவர்களிடம் உமர் ؓ

அவர்களை தன்னோடு மதீனாவில் வைத்துக்கொள்ள அனுமதி கோரினார்கள். உஸாமா ﷺ அவர்களும் அதற்கு அனுமதி வழங்கவே உமர் ﷺ அவர்கள் படையோடு செல்லாமல் அபூபக்ர் ﷺ அவர்களுக்கு உதவியாக மதீனாவில் தங்கினார்கள்.

இது தவிர அவர்கள் ஆட்சியைத் தம்வசப்படுத்திக் கொள்ளவே நின்றார்கள் என்பது உண்மைக்கு புறம்பான செய்தியாகும். இது உண்மையாக இருந்தால் ஸஹாபாக்களுக்கு முதலில் இது விளங்கியிருக்கும். அவர்கள் ஒருபோதும் உண்மை சாவதை விரும்பமாட்டார்கள்.

அல்லது ஸஹாபாக்கள் எல்லோரும் உமர் ﷺ அவர்களின் கட்சியில் இணைந்திருந்தார்கள் என்று சொன்னால்: நபியவர்களின் குடும்பத்தினர்களில் முக்கியமானவர்கள் அங்கு இருந்தார்கள் அவர்கள் எதிர்க்கவில்லை. பிற்பட்ட காலத்திலாவது அந்த விடயங்களை சொல்லியிருக்கவேண்டும் அதற்கான எந்தப்பதிவுகளும இல்லை. ஆனால், அலி ﷺ அவர்கள் முன்சென்ற ஆட்சியாளர்களைப் புகழ்ந்து சொன்னதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக அபூபக்கர் ﷺ, உமர் ﷺ போன்றோரை புகழ்ந்து கூறியதற்கான ஆதாரங்கள் அதிகமாகவே உள்ளன. குறைந்தது அலி ﷺ அவர்களின் குடும்பத்தில் வந்த எவராவது இப்படி நடந்துவிட்டது என்று சொல்லியிருக்கவேண்டும். அவ்வாறு எவரும் சொன்னதில்லை. மாறாக, அவற்றுக்கு எதிரான ஆதாரங்களே நிரம்பிக் காணப்படுகின்றன. எனவே, ஷீஆக்களின் இந்தக் கற்பனையை கருத்தில் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு வாதிடுவது மிகவும் இலகுவானது. ஒவ்வொருவரும் வாதிடலாம் அவற்றை உண்மைப்படுத்தவோ பொய்ப்பிக்கவோ யாராலும் முடியாது. உதாரணமாக, அலி ﷺ அவர்கள் நபியவர்கள் மரணித்த பிறகும் நபியவர்களுடன் கூடவே இருந்தது எதற்காக தெரியுமா? நபியின் உடலை எரிப்பதற்காக என்று ஒருவர் வாதிடலாம். இன்னுமொருவர், இல்லை பாதிமாவிடயத்தில் அலி ﷺ



அவர்களின் நடவடிக்கையில் நபியவர்களுக்குத் திருப்தியிருக்கவில்லை அதுபோல், பாதிமா ﷺ அவர்களின் நடவடிக்கையிலும் அலி ﷺ அவர்களுக்கு திருப்தியிருக்கவில்லை. இதனால், நபியவர்களுக்கும் அலி ﷺ அவர்களுக்கும் மத்தியில் ஒரு மனக்கசப்பு இருந்தது அதை நபியவர்கள் மரணிக்கும் வரை தீர்த்துக்கொள்ளவில்லையே என்ற கவலையில் இருந்தார்கள் என்று வாதிடலாம். மற்றவர், இல்லை நபியவர்களின் குடும்பத்தின் ஒட்டுமொத்த ஆதரவையும் திரட்டிக்கொண்டு அரசராவதற்கே இருந்தார்கள் என்று வாதிடலாம். இந்தக் கற்பனைகளுக்கு ஆதாரங்கள் இல்லை என்பதைப் போல எல்லையுமில்லை.

❁❁❁

## நபியவர்களின் பின் கலீபா யார்?

நபியவர்களுக்குப்பின் அபூபக்ர் ﵁ அவர்கள்தான் கலீபா என்பதில் அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு கிடையாது. இதுபோலவே முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவாகவும் இது காணப்படுகிறது. ஆனாலும், ஷீஆக்கள் இதற்கு முரண்படுகின்றனர். அஹ்லுஸ்ஸுன்னாக்களுக்கு இவர்கள் முரண்படுவதால் இந்தக்கருத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஏனெனில், ஷீஆக்கள முஸ்லிம்களின் வட்டத்தை விட்டும் வெளியேறியவர்கள் என்று இமாம்கள் குறிப்பிடுகின்றனர். ஆனாலும் ஷீஆக்கள் தங்கள் கருத்துக்கு சில குர்ஆனிய வசனங்களையும் சில ஹதீஸ்களையும் குறிப்பிடுகின்றனர். அவர்கள் குறிப்பிடுகின்ற அனைத்து ஆதாரங்களும் திரிபுபடுத்தப்பட்டதாகவே அமைந்துள்ளன.

'நபி ﷺ அவர்களுக்குப் பிறகு ஆட்சி செய்வதற்கு தகுதியானவர் அலி ﵁ அவர்களும் அவரின் குடும்பத்தவருமாகும். இதையே, நபியவர்கள் ஸஹாபாக்களுக்கு வஸிய்யத் செய்தார்கள். ஆனால், ஸஹாபாக்கள் அதற்கு மாறுசெய்து அண்ணல் நபியின் குடும்பத்தினருக்கு துரோகம் செய்துவிட்டனர்' என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். ஷீஆக்கள் தங்களின் இந்த கருத்துக்கு சொல்லும் மிகவும் பிரபல்யமான ஆதாரம் "கதீர் கும்" எனும் இடத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் செய்தியாகும்.

இந்த செய்தியே ஷீஆக்களின் பிரதான கொள்கையின் அடிப்படையாகும். இதை வைத்தே தங்களின் அனைத்து பிரச்சாரங்களையும் மேற்கொள்கின்றனர். இந்த ஹதீஸை மாத்திரம் வைத்தே பல நூல்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஸைத் பின் அர்க்கம் ﵁ அவர்கள் அறிவிக்கும் இந்த செய்தியை இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள் "மதீனாவிற்கும் மக்காவிற்கும் இடையில் உள்ள "கதீர்க்கும்" எனும் ஒரு இடத்தில் நபியவர்கள் எங்களுக்கு உரையாற்றுவதற்காக எழுந்தார்கள்;



அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனைத் துதித்தார்கள். பின்பு "மனிதர்களே! நானும் உங்களைப்போன்ற மனிதன்தான். எனக்கும் இறைவனின் தூதர் வந்து, என் உயிரைக் கைப்பற்றிவிடுவார். நான் உங்களுக்கு மத்தியில் இரண்டு பெரும் விடயங்களை விட்டுச்செல்கிறேன். அதில் முதன்மையானது இறைவேதமாகும். அதில்தான் நேர்வழியும் வழிகாட்டலும் இருக்கிறது. எனவே நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தைப்பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்." (இவ்வாறு) இறைவனின் வேதத்தைப் பின்பற்றுவதைத் தூண்டினார்கள். அதை ஊக்குவித்தார்கள்.

பின்பு சொன்னார்கள்: எனது குடும்பத்தினர் விடயத்தில் உங்களுக்கு நான் இறைவனை ஞாபகப்படுத்துகின்றேன், என்று மூன்று தடவைகள் குறிப்பிட்டார்கள். இந்தச் செய்தியை ஸைத் ﵁ அவர்களிடம் இருந்து அறிவிக்கும் ஹுஸைன் (ரஹ்) அவர்கள்; "குடும்பம் என்றால் யார்? நபியவர்களின் மனைவியர், அவர்களின் குடும்பம் இல்லையா?" என்றார். அதற்கு ஸைத்﵁ "ஆம், யாருக்கு ஸகாத் பெருவது ஹராமாக்கப்பட்டதோ: அவர்களே, நபியவர்களின் குடும்பத்தினர்" என்றார்கள். அதற்கு ஹுஸைன் (ரஹ்) அவர்கள்: 'அவர்கள் யார்? என்றார். ஸைத் ﵁ அவர்கள் சொன்னார்கள்: அலி ﵁ அவர்களின் குடும்பம், உகைலின் குடும்பம், ஜஃபரின் குடும்பம், அப்பாஸின் குடும்பம். அதற்கு ஹுஸைன் (ரஹ்) இவர்கள் அனைவரும ஸகாத் பெறுவதற்கு தடுக்கப்பட்டவர்களா? என்று கேட்டார்கள். அதற்கு 'ஆம்' என ஸைத் ﵁ அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்தச் செய்தியை திர்மிதி, அஹ்மத், நஸஈ, ஹாகிம் போன்றவர்கள் அறிவிக்கும் போது நாம் மேல் குறிப்பிட்டதை சேர்த்து "யார் என்னை நேசிக்கிறாரோ, அவன் அலியை நேசிக்கட்டும்" என்று இடம்பெற்றுள்ளது. இந்த வாக்கியம் தவிர்ந்த ஏனைய சில வாக்கியங்களும் வேறு பல கிரந்தங்களில் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவை பலவீனமானவையாகும்.

01. இந்த ஹதீஸே ஷீஆக்களின் பிரதானமான ஆதாரம். அலி ﵁ அவர்கள் தனது ஆட்சிக்காலத்தில் கூபாவில் வைத்து இந்த சம்பவத்தைக் கூறிவிட்டு இதை நபியிடம் இருந்து கேட்டவர்கள் யார் என்றார்கள். அதற்கு பத்ரில் கலந்து கொண்ட 12 ஸஹாபாக்கள், ‘நாங்கள் கேட்டோம்’ என்று சாட்சி சொன்னார்கள். நபியவர்கள் கொளுத்தும் வெயிலில் “கதீர் கும்” என்ற இடத்தில் மக்களை நிறுத்தியது; அலி ﵁ அவர்கள் பற்றிய இந்த சிறப்பை தெளிவு படுத்துவதற்கும், நபியை கலீபாவாக ஏற்றுக்கொண்டவர்கள் அவருக்கு பின் அலியை கலீபாவாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை தெளிவுபடுத்தவுமே என்று ஷீஆக்கள் குறிப்பிடுகின்றனர். அத்தோடு இதிலே 100,000க்கும் அதிகமான ஸஹாபாக்கள் கலந்துகொண்டார்கள ஹஜ்ஜாஜிகள் தங்கள் ஊர்களுக்கு பிரிந்து செல்லும் இடமாக இந்த “கதீர் கும்” இருந்தது. எனவே, எல்லோருக்கும் இத்தகவலைச சொல்வதற்காகவே நபியவர்கள் இந்த இடத்தில் நிறுத்தினார்கள் என்றும் ஷீஆக்கள் சொல்கின்றனர்.

**இந்த வாதங்களின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் இச் செய்தியை நபியவர்கள் சொன்னதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்வோம்.**

ஷீஆக்கள் சொல்வதைப் போன்று அலி ﵁ அவர்கள் மற்றும் அவர் குடும்பத்தின் தலைமைத்துவத்தை நிலைநாட்டுவதற்காக இந்த சந்திப்பை நபியவர்கள் செய்யவில்லை. அவ்வாறு செய்து நபியவர்கள் தெளிவுபடுத்தியிருந்தால் அதை நடைமுறைப்படுத்துவதில ஸஹாபாக்கள் போட்டி போட்டுக்கொண்டு செயற்பட்டிருப்பார்கள். நபியவர்கள் சொன்னதை நிறைவேற்ற தங்களின் உயிரையும் துச்சமாக மதித்து செயல்பட்டிருப்பார்கள். அப்படி செயல்பட்டவர்கள்தான ஸஹாபாக்கள்.

100,000க்கும் அதிகமான ஸஹாபாக்கள் ஒன்றுகூடி கேட்டார்கள், பின்பு எவரும் அதற்கு கட்டுப்படவில்லை எனும் ஷீஆக்களின் சித்திரம் சற்று விநோதமும் வேடிக்கையும் நிறைந்தது.



தங்கள் உயிரையும் விட மேலாக நபியை மதித்த ஸஹாபாக்கள் விடயத்தில் இப்படிக் கற்பனை செய்வது வேதனைக்குரியது.

இந்த சந்திப்பை நபியவர்கள் இரண்டு காரணங்களுக்காக செய்தார்கள்:

**01)** நபி ﷺ அவர்கள் ஹாலித் பின் வலீத் ﵁ அவர்களை எமன் பிரதேசத்திற்கு அனுப்பினார்கள். அவர் அதை வெற்றி கொண்டதன் பின்பு அங்கு கிடைத்த கனீமத் பொருட்களில் நபியவர்களுக்கும் அவரின் குடும்பத்திற்கும் சேரவேண்டிய பகுதியைப் பெறுவதற்கு ஒருவரை அனுப்புமாறு நபியவர்களுக்கு செய்தி அனுப்பினார். நபி ﷺ அவர்கள்: அலி ﵁ அவர்களை அனுப்பினார்கள். அலி ﵁ அவர்களிடம் அந்த சொத்தைக் கொடுத்த போது அலி﵁ அவர்கள் உடனடியாக அதிலிருந்த ஒரு அடிமைப் பெண்ணைத் தேர்வு செய்து வீடு கூடிவிடுகிறார்கள். கைமாறிய மறுகணமே இவ்வாறு நிகழ்ந்ததால், ஸஹாபாக்களுக்கு சற்று அருவருப்பாக இருந்தது. புரைதா ﵁ அவர்கள், ‘நான் இதற்காக அலி ﵁ அவர்களை கோபிக்கிறேன்’ என்றார்கள். ஹாலித் ﵁ அவர்களைப் பார்த்து புரைதா﵁ அவர்கள், ‘பார்த்தீர்களா? அலியை’ என்று கூறினார்கள்.

புரைதா ﵁ அவர்கள் சொல்கிறார்கள்: “நான் நபியவர்களிடம் வந்தபோது இதைச்சொன்னேன். நபியவர்கள் புரைதா ﵁ அவர்களுக்குச் சொன்னார்கள்: ‘புரைதாவே! நீ அலியை கோபிக்கிறாயா?’ அதற்கு புரைதா ‘ஆம்’ என்றார்கள். நபியவர்களோ ‘இல்லை’ அவரை வெறுக்காதே. ஐந்தில் ஒன்றில் அவருக்கு சேரவேண்டிய பகுதி இதை விட அதிகமானது என்றார்கள்.” (புகாரி 4350)

மற்றொரு அறிவிப்பில், புரைதா﵁ அவர்களுக்கு நபியவர்கள் சொன்னார்கள் “யார் என்னை நேசிக்கிறாரோ அவர் அலியையும் நேசிக்கட்டும்.” (திர்மிதி 3712)

எனவே, அலி ﵁ அவர்கள் மீது மக்களுக்கு இருந்த இந்த கசப்புணர்வை நீக்கவே நபியவர்கள் இந்த சந்திப்பைச் செய்தார்கள்.

**02)** இமாம் பைஹகீ (ரஹ்) அவர்கள் அபூஸஈத் ﵁ அவர்கள் மூலம் அறிவிக்கக்கூடிய செய்தியில், அலி﵁ அவர்கள் ஸகாத்துக்குரிய ஒட்டகங்களில் ஏறிப் பிரயாணம் செய்வதற்கு தடைவிதித்தார்கள். பின்பு அவைகளுக்கு ஒருவரைப் பொறுப்பாக்கி விட்டு நபி ﷺ அவர்களிடம் சென்றார்கள். ஆனால், வீதியில் தான் பொறுப்பாக்கிய -வரையும் ஒட்டகங்களையும் தனது கட்டளைக்கு முரணானதாகக் காண்கிறார். மற்றவர்கள் அவைகளில் ஏறிப் பிரயாணம் செய்வதற்கு பொறுப்பாளர் அனுமதி வழங்கியிருந்தார். அலி ﵁ அவர்கள் அவரை கண்டித்தார்கள்; கடிந்து கொண்டார்கள்.

அபூ ஸஈத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள்: நாம் நபி ﷺ அவர்களை வந்தடைந்தபோது பிரயாணத்தில் அலி﵁ அவர்களிடம் நாம் சந்தித்ததையும் அவரது கடுமையையும் நபியவர்களுக்கு எடுத்துச் சொன்னோம். அப்போது நபியவர்கள் “அபூஸயீதே! கொஞ்சம பொறுங்கள். உங்கள் சகோதரன் விடயத்தில் அடக்கி வாசியுங்கள். மேலும், அவர் அல்லாஹ்வின் பாதையில் நல்லதையே செய்திருக்கிறார்” என்று சொன்னார்கள்.

இமாம் இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: இவ்வாறு அலி ﵁ அவர்கள் மீது விமர்சனங்கள் அதிகரித்தபோது நபியவர்கள் ஹஜ் கடமைகளை முடித்ததற்குப் பிறகு தன் கடமைகளிலிருந்து ஓய்வுபெற்று மதீனாவிற்கு திரும்பிக் கொண்டிருக்கும வழியில் ‘‘கதீர்கும்’’ என்ற இடத்தில் அலி ﵁ அவர்கள் மீது மனிதர்களுக்கு மத்தியில் இருந்த கசப்புணர்வையும், விமர்சனங்களையும் நீக்கி அவரின் புகழை உயர்த்தவும் ஓங்கச் செய்யவுமே இந்த சந்திப்பை செய்தார்கள். அலி ﵁ அவர்களின் ஆட்சியைப்பற்றி முன்னறிவிப்புச் செய்வதற்காக அல்ல.

(அல்பிதாயா வன்னிஹாயா 5:95)

நபி ﷺ அவர்கள் இதற்காகவே மினாவிலோ, அரபாவிலோ இது பற்றிப்பேசாமல் அது தொடர்பான பேச்சுக்களை ‘‘கதீர்கும்’’ எனும் இடம் வரைக்கும் பிற்படுத்தினார்கள். அதுபோன்று இந்த



விடயம் மதீனாவாசிகளுடன் மாத்திரம் தொடபுடையதாகும். காரணம் அவர்களே அலி ﵁ அவர்களுடன் பிரச்சினையில் தொடர்புடையவர்க்ள இதனால், நபியவர்கள் எல்லோருக்கும் மத்தியில்வைத்து இந்த விடயம் தொடர்பாக பேசாமல் அதை ‘‘கதீர்கும்’’ எனும் இடம் வரை பிற்படுத்தினார்கள்.

ஷீஆக்கள் சொல்லுவதைப் போன்று ‘‘கதீர்கும்’’ என்பது ஹஜ்ஜாஜிகள் தங்கள் ஊர்களுக்கு பிரிந்து செல்வதற்கான இடம் கிடையாது. ஹஜ் முடிந்ததும் மக்காவில் வைத்தே அனைவரும் திரும்பிச்சென்றுவிட்டார்கள். மக்காவாசிகள் மக்காவிலேயே இருந்து விடுவார்கள். மக்காவிலிருந்து 250கிலோமீற்றர் தூரமாகவுள்ள “கதீர்கும்” எனும் இடம் வரை அவர்கள் வரவேண்டிய அவசியமில்லை. அப்படி அவர்கள் வருவதுமில்லை... ஹஜ்ஜாஜிகள் கூடுவதும் அவர்கள் பிரிவதும் மக்காவில்தான். கூடும் இடம் மக்காவாகவும் பிரியும் இடம் மக்காவிலிருந்து 250கிலோமீற்றர் தூரமாகவும் இருக்க -வேண்டிய அவசியமில்லை.

நபியவர்கள் ‘‘கதீர்கும்’’ எனும் இடத்தில் நின்றார்கள் வேறு எந்த நாட்டைச் சேர்ந்தவர்களும் அவர்களுடன் இருக்கவில்லை. எனவே 100,000க்கும் மேற்பட்ட ஸஹாபாக்களுக்கு மத்தியில் வைத்து நபியவர்கள் இதைச்சொன்னார்கள் என்று ஷீஆக்கள் கதையளப்பது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.

**03.** நபி ﷺ அவர்கள் ‘‘கதீர்கும்’’ எனுமிடத்தில் நின்றதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. அதாவது மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்வதற்கு ஆறு அல்லது ஏழு நாட்கள் எடுக்கும் மிகவும் நீண்ட பயணம். இதனால், இவ்வாறான பயணங்களின் போது நபியவர்கள் பலமுறை ஓய்வெடுப்பார்கள். இதுபோலவே செல்லும் வழியில் ஓய்வெடுப்பதற்காக நபியவர்கள் ‘‘கதீர்கும்’’ எனும் இடத்தில் இறங்கினார்கள் மக்களுக்கு இறைமறை பற்றி உபதேசம் செய்தார்கள். அத்தோடு அந்த மக்களிடம் அலி ﵁ அவர்களைப் பற்றியிருந்த தப்பான அபிப்பிராயத்தை நீக்குவதற்க்குவதற்குரிய

ஒரு சந்தர்ப்பமாகவும் இதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அலி ﵁ அவர்களுக்காகவே நபியவர்கள் இந்த இடத்தில் நின்றார்கள் என்பது தவறாகும்.

அத்தோடு இந்தச் செய்தியில் நபியவர்களுக்குப் பிறகு அலி ﵁ அவர்கள்தான் கலீபா என்பதற்கான எந்த ஆதாரமுமில்லை. ஆனால் ஷீஆக்கள் இந்த செய்தியின் ஒரு அறிவிப்பில் வரும் 'மவ்லா' என்ற வார்த்தைக்கு, தலைவர் ஆட்சியாளர் என்ற அர்த்தத்தைக் கொடுத்து நபியவர்கள் அலி ﵁ அவர்களை தலைவராக முன்மொழிந்தார்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் இந்தச் சொல் பல அர்த்தங்களைக் கொண்டதாகும். "உதவியாளர், நேசர், நண்பர், தலைவர்.." எனும் பல அர்த்தங்கள் இதற்குள்ளன. இந்த வார்த்தைக்கு இந்த ஹதீஸிலே நேசர் என்ற அர்த்தமே கொடுக்கப்படவேண்டும் என்று எல்லா அறிஞர்களும் குறிப்பிடுகின்றனர். ஆனால், எல்லாவற்றிலும் முரண்படுவதை வழமையாகக்கொண்ட ஷீஆக்கள் மாத்திரம் இதற்கு தலைவர் என்று அர்த்தம் கொடுக்கின்றனர்.

நபி ﷺ அவர்கள்: எல்லோருக்கும் விளங்கும் அடிப்படையில் தெளிவாகப்பேசக்கூடியவர் என்பது எல்லோரும் அறிந்த விடயம். எனவே, தலைமைத்துவம் போன்ற மிகப்பெரும் விடயங்கள் பற்றி நபியவர்கள் சொல்லுவதாக இருந்தால் வேறு கருத்துக்களுக்கு இடம் கொடுக்காத வகையில் அமைந்த பல வார்த்தைகள் உள்ளன. அவைகளைப் பயன்படுத்தியிருப்பார்கள்.

பல கருத்துக்களைக்கொண்ட இந்த வார்த்தையை நபியவர்கள் இப்படி பெரியதொரு விடயத்தைப் பற்றிப் பேசுவதற்கு பயன்படுத்தி இருக்க மாட்டார்கள். அந்த சந்திப்பில் கலந்துகொண்ட எல்லா ஸஹாபாக்களும் குறித்த சொல்லுக்கு நேசர் என்ற கருத்தையே விளங்கிக் கொண்டார்கள். இதனாலேயே அவர்கள் எவரும் பிற்பட்ட காலத்தில் அபூபக்ர் ﵁ அவர்களுக்கு எல்லோரும் ஒன்றுசேர்ந்து அலி ﵁ அவர்கள் உட்பட பைஅத் செய்து அவரை தலைவராக



ஏற்றுக்கொண்டனர். நபியவர்கள் சொன்னதை மறந்ததால் இவ்வாறு செய்தார்கள் என்று சொல்லமுடியாது. காரணம்; அலி﵁ அவர்கள் தன் ஆட்சிக் காலத்தில் இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு, யாரெல்லாம் இதை நபியவர்களிடமிருந்து கேட்டீர்கள் என்றபோது பத்ரில் கலந்துகொண்ட 12 ஸஹாபாக்கள் நபியவர்களிடம் இந்தச் செய்தியை கேட்டதாகச் சொன்னார்கள். எனவே, இதன் மூலம் ஸஹாபாக்கள் எல்லோருமே இந்த வார்த்தைக்கு நேசர் என்ற அர்த்தத்தையே கொடுத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

ஸஹாபாக்களோ, இமாம்களோ கொடுக்காத ஒரு விளக்கத்தைக் கொடுத்து நடந்து முடிந்த ஒரு விடயத்தைச் சொல்லி, ஸஹாபாக்கள் விடயத்தில் தப்பபிராயங்களை ஏற்படுத்தி எம் சகோதரர்களின் ஈமானுக்கு வேட்டுவைக்க ஷீஆக்கள் முயற்சிக்கின்றனர்.

நபி ﷺ அவர்களுக்குப் பிறகு அபூபக்ர் ﵁ அவர்களே ஆட்சிக்கு மிகவும் தகுதியானவர் என்பதற்கு பல ஆதாரங்களை அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அவைகளை இனி அவதானிப்போம்.

**01)** நபி ﷺ அவர்கள் தனது மரண வேளையில் நோயோடு இருக்கும்போது "அபூபக்ரை மக்களுக்குத் தொழுகை நடத்தச் சொல்லுங்கள் என்றார்கள். ஆனாலும், ஆயிஷா ﵂ அவர்கள் மறுத்தார்கள்; அவரை விடவேண்டாம் என்று தடுத்தார்கள். நபியவர்களோ அபூபக்ரையே தொழுகை நடத்தச் சொல்லுங்கள் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்கள்." (புஹாரி 3654)

அதாவது, நபியவர்கள்தான் மக்களுக்கு தொழுகை நடத்தி வந்தார்கள், அவர் இல்லையென்றால்! அந்த இடத்தில் அபூபக்ர் இருக்க வேண்டும் என்று நபியவர்கள் விரும்பியிருக்கிறார்கள். அத்தோடு அவர் இருக்கும்போது எவரும் அவருடைய இடத்தில் தொழுகை நடத்தவில்லை. ஆனால், நபியவர்களே தான் உயிருடன் இருக்கும்போது அபூபக்ரை மக்களுக்கு தொழுகை நடத்துமாறு ஏவியுள்ளார்கள், தொழுகை எனும் ஆத்மீகக் கடமைக்கு

நபியவர்கள் அபூபக்ர் ﷺ அவர்களை தலைவராக ஆக்கி இருக்க, உலகக் காரியங்களை நடத்துவதற்கு அவரை தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என்பது மிகவும் வேடிக்கையானதாகும்.

**02)** நபி ﷺ அவர்களின் காலத்திலே அவருக்கு அடுத்த படியான சிறப்பு அபூபக்ர் ؓ அவர்களுக்குரியது என்றே ஸஹாபாக்கள் எல்லோரும் சொல்லி வந்தார்கள். இது நபியவர்களுக்குத் தெரிந்திருந்தும் மௌனமாக இருந்து அதை உண்மைப்படுத்தியதோடு அதற்கு தனது முழுமையான அங்கீகாரத்தையும் வழங்கினார்கள். இதை இப்னு உமர் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி)

எனவே, முக்கிய பொறுப்புக்களில் நபியவர்களால் எவரும் நியமிக்கப்படாதவிடத்து மிகவும் சிறந்தவர்களை முற்படுத்துவதே மிகவும் பொருத்தமானதாகும்.

**03)** நபி ﷺ அவர்களிடம் ஒரு பெண்மணி வந்தார். அவருக்கு நபியவர்கள் மறுநாள் வருமாறு பணித்தார்கள். அப்போது, அந்தப் பெண்மணி "நாளைக்கு ஒருவேளை நீங்கள் இல்லை, என்றால் என்ன செய்வது?" என்றார். அதற்கு நபியவர்கள் "நான் இல்லை என்றால் அபூபக்ரிடம் செல்" என்றார்கள்.

(புஹாரி 3659, முஸ்லிம் 2386)

இந்த செய்தியில் நபியவர்கள் தனக்குப் பிறகு தனது பொறுப்புக்களை வகிக்கக்கூடியவராகவும், மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைக்கக் கூடியவராகவும் அபூபக்ர் ؓ அவர்களை இனங்காட்டியிருக்கிறார்கள்.

**04) நபி ﷺ அவர்கள் தன் மரணவேளை நெருங்கி நோய் அதிகரித்தபோது ஆயிஷா ؓ அவர்களுக்கு பின்வருமாறு சொன்னார்கள்:**

"உனது தந்தையையும் சகோதரனையும் அழைப்பீராக! நான் தெளிவாக எழுதித் தந்துவிடுகிறேன். ஏனெனில் சிலவேளை பேராசையுள்ள யாராவது வந்து, நான் தான் மிகத்தகுதியானவர்



என்று சொல்ல, மு.ஃமின்களும், அல்லாஹ்வும் அபூபக்ரைத் தவிர எவரையும் ஏற்றுக்கொள்ள மறுக்க (பிரச்சினைகள் வந்துவிடுமோ என்று) நான் அஞ்சுகிறேன்" (முஸ்லிம் 2387)

இதிலே நபியவர்கள் தனக்குப் பிறகு அபூபக்ர்தான் ஆட்சியாளர் என்பதை முழுமையாக எவருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் தெளிவாக சொல்லாவிட்டாலும் ஓரளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**05) ஸஹாபாக்கள் எல்லோரினதும் ஏகோபித்த முடிவு:**

நபி ﷺ அவர்களுக்குப் பின் அபூபக்ர் ؓ அவர்கள்தான் ஆட்சியாளர் என்பதில் ஸஹாபாக்களுக்கு மத்தியில் எந்த விதமான கருத்துமுரண்பாடும் இல்லை. அனைவரினதும் ஒப்புதலிலும், உடன்படிக்கையின் பேரிலும் அபூபக்ர் ؓ தலைவராக வந்தார்கள். அலி ؓ அவர்கள், ஹஸன் ؓ, ஹுஸைன் ؓ போன்றோரின் கருத்தும் இதுவே. இது ஸஹாபாக்களின் நூறு வீத ஏகோபித்த முடிவாகும்.

எனவே, ஸஹாபாக்கள் எவரும் கருத்து முரண்படாத இந்த விடயங்களை நாம் தர்க்கித்துக்கொள்வது எம்மை நேரான வழியிலிருந்து நீக்கிவிடலாம். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக.)

❁❁❁

## அபூபக்ர் ؓ அவர்கள் பாத்திமா ؓ அவர்களுக்கு அநியாயம் செய்தார்களா?

நபியவர்கள் மரணித்தபின், தனது தந்தை அனந்தரமாக விட்டுச்சென்ற சொத்தை தனக்கு வழங்குமாறு, பாத்திமா ؓ அவர்கள் அபூபக்ர் ؓ அவர்களிடம் கேட்டார்கள். ஆனால், அபூபக்ர் ؓ அவர்கள் கொடுக்கவில்லை. தரமுடியாது என்றும் அது முஸ்லிம்களின் சொத்து என்றும் மறுத்துவிட்டார்கள்.

இந்த நிகழ்வைக் காட்டி அபூபக்ர் ؓ அவர்கள் பாத்திமா ؓ அவர்களுக்கு அநியாயம் செய்துவிட்டதாகவும், அவரை வஞ்சித்துவிட்டதாகவும் குறிப்பிடுகின்றனர். இந்த சம்பவத்திலும் அபூபக்ர் ؓ அவர்களைக் குறைகாண்பவர்கள் ஷீஆக்களே. அஹ்லுல் பைத்தினரின் அங்கத்தவர்கள்: அபூபக்ர்ؓ அநியாயம் செய்துவிட்டார் என்று சொல்லவுமில்லை; அவ்வாறு அவர்கள் நினைக்கவுமில்லை என்பது ஒரு விசித்திரமான உண்மையாகும்.

அதேவேளை நபியவர்கள் அனந்தரமாக விட்டுச்சென்ற 'பதக்' எனும் தோட்டத்தை பாதிமா ؓ அவர்கள் கேட்டார்களா? அல்லது நபியவர்கள் பாதிமாவிற்கு அன்பளிப்பாக கொடுத்தவற்றை அபூபக்ரிடம் கேட்டார்களா? என்பதில் ஷீஆ அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடு நிலவுகின்றது.

நபியவர்களிடமிருந்து பாதிமாவிற்கு வந்த அனந்தரச் சொத்தையே வேண்டினார்கள் என்ற கருத்தினடிப்படையில் பார்த்தால் புஹாரியில் இது தொடர்பாக வரும் அறிவிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது:

"நபி ﷺ அவர்கள் மரணித்த பின் பாத்திமா ؓ அவர்கள் நபியவர்கள் விட்டுச்சென்ற அனந்தரச்சொத்தான 'பதக்' கிலிருந்து தனக்குச்சேர வேண்டிய பகுதியையும், ஹைபரில் நபியவர்கள் கொடுத்த பங்கையும், அவையல்லாத நபியவர்கள் விட்டுச்சென்ற



ஏனைய சொத்துக்களில் தனக்குரிய பங்கையும் தருமாறும் அபூபக்ர் ؓ அவர்களிடம் வேண்டினார்கள்.

ஆனால், அபூபக்ர் ؓ அவர்களோ பின்வருமாறு சொன்னார்கள். "நாம் அனந்தரச் சொத்தாக எதையும் விட்டுச்செல்ல மாட்டோம். அவ்வாறு விட்டுச்சென்றால் அது ஸதகாவாகும். என நபியவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்". இந்தச் செய்தியை இமாம் அஹ்மத் அவர்கள் தனது நூலில் அறிவிக்கும்போது "நாங்கள் நபிமார்கள் அனந்தரச் சொத்தாக எதையும் விட்டுச்செல்வதில்லை" என்று வந்துள்ளது. இவைகளைக் காரணம் காட்டி அபூபக்ர்ؓ அவர்கள் பாதிமாؓ அவர்கள் கேட்டதைக் கொடுக்கமறுத்துவிட்டார்கள். இவ்வாறு அபூபக்ர் ؓ அவர்கள் செய்ததற்காக பாதிமா ؓ அவர்கள் அவர் மீது கோபப்பட்டதாக புஹாரி, முஸ்லிம் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நபியவர்கள் உயிர் வாழும்போது பாதிமா ؓ அவர்களுக்கு கொடுத்த நன்கொடையைத்தான் அபூபக்ர்ؓ அவர்களிடம் கேட்டார்கள் என்று சொல்வதற்கு ஆதாரமில்லை. அதை அபூபக்ர்ؓ அவர்களிடம் கேட்க வேண்டிய அவசியமுமில்லை. காரணம் நபியவர்கள் பாதிமாவிற்கு நன்கொடையாக வழங்கியது அவரிடமே இருந்தது. எவரும் அதை பறிக்கவில்லைஅப்படி பறித்திருந்தால் ஸஹாபாக்களுக்கு மத்தியில் பெரியதொரு விடயமாக கருதப்பட்டிருக்கும். அப்படி ஒரு அநீதி நடந்திருந்தால் அலிؓ அவர்கள் வாளாவிருந்திருக்கமாட்டார்கள். அநீதியை தட்டிக்கேட்க அலி ؓ அவர்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு தன் மனைவியை அனுப்பியிருக்கமாட்டார்கள். இப்போது கூட எம்மவர்கள் அவ்வாறு செய்தால் அவரை ஆண்மையில்லாதவர் என்றெல்லாம் பல பெயர்கள் சொல்லி இழிவாக அழைக்கின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்க வீரத்திற்கு உதாரணமாகக் கூறப்படும் அலி ؓ அவர்கள் இதைச் செய்திருப்பார்கள் என்று நாம் சொல்லமுடியாது. எனவே, இந்த செய்தி உண்மைக்குப் புறம்பானது. பாதிமாؓ, நபியவர்கள் அனந்தரமாக விட்டுச்

சென்றவைகளைத்தான் அபூபக்ர் ﵁ அவர்களிடம் வேண்டினார்கள் என்பது தெளிவாகின்றது.

நபி ﷺ அவர்கள் விட்டுச்சென்ற அநந்தரச் சொத்தைத்தான் பாதிமா﵂ அவர்கள் கேட்டார்கள், என்று சொன்னதற்குப் பின்பு இதில் கூடுதலான வாதங்களைச் செய்வது நிச்சயமாக பாதிமா ﵂ அவர்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், அபூபக்ர் ﵁ அவர்கள் கொடுக்காமல் மறுத்ததற்கு நபியவர்களின் வாக்கே காரணம். அவர்கள் மனோ இச்சைப்படியோ அல்லது பாதிமாவிற்கு அநீதி இழைக்கவேண்டும் என்ற நோக்கத்திலோ மறுக்கவில்லை. நாம் விட்டுச்சென்ற சொத்துக்கள் யாவும் தர்மங்கள் ஆகும். நாம் செல்வத்தை விட்டுச்செல்வதில்லை அறிவைத்தான் விட்டுச்செல்கிறோம் என்று நபியவர்கள் சொன்னதனால்தான் கொடுக்க மறுத்தார்கள். நபியின் மகள் என்றாலும் மார்க்கம் ஒன்றுதான் என்பதில் உறுதியாக இருந்தார்கள். இது அபூபக்ர்﵁ அவர்களின் மார்க்கப்பற்றையும் அதை பின்பற்றுவதில் அவருக்கிருந்த பற்றையுமே எடுத்துக்காட்டுகிறது. மார்க்கம் என்றால் மாநபியின் குடும்பமானாலும் விட்டுக்கொடுக்கமாட்டேன என்ற அவரின் உறுதியைப்பார்க்கும்போது அவரின் புகழ், சிறப்பு இன்னும் அதிகரிக்கிறது.

இது போன்ற சில தனியான சட்டங்கள் நபியவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இருக்கின்றன. நபியவர்களின் அனந்தரச் சொத்தை அவர்கள் பெற முடியாது என்று சொல்வதைப்போல ஸகாத் நிதியைப் பெறுவதற்கும் அவர்கள் தகுதியானவர்கள் அல்லர். ஸகாத் பெறத்தகுதியான 8 கூட்டத்தில் அவர்கள் ஒருவராக இருந்தாலும் ஸகாத்தைப் பெறுவது அவர்களுக்கு ஹராம். இது அவர்களுக்கு மாத்திரமுரிய ஒரு தனியான சட்டமாகும்.

பாத்திமா ﵂ அவர்களுக்கு இவைகள் பற்றித்தெரியாததினால் தனது உரிமை என்று நினைத்து அபூபக்ர் ﵁ அவர்களிடம் இவைகளைக் கேட்டிருக்கலாம் என்று நாம் நல்லெண்ணம் வைக்க முடியும் இதை விடுத்து, இந்த நிகழ்வை பெரிதாக விமர்சிப்பது



பாதிமா ﵂ அவர்கள் விடயத்தில் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். (அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக)

நபிமார்கள் அனந்தரச்சொத்தாக எதையும் விட்டுச்செல்வதில்லை. அப்படி விட்டால் அது தர்மமாகவே அமையும் என்று சொல்லும் ஹதீஸை அபூபக்ர் ﵁, உமர்﵁, உஸ்மான்﵁, அலி﵁, அப்பாஸ்﵁, அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப்﵁, ஸஃத் பின் அபீவக்காஸ்﵁, ஸுபைர் இப்னுல் அவாம்﵁ போன்ற நபித்தோழர்கள் அறிவிக்கின்றனர்

“பதக்” எனும் தோட்ட விடயத்தில் அபூபக்ர்﵁ அவர்கள் பாதிமா ﵂ அவர்களுக்கு அநீதி இழைத்திருந்தால் அலி﵁ அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் அதை மீட்டு தன் குடும்ப சொத்தாக மாற்றியிருப்பார்கள். அவ்வாறு அவர் செய்யவில்லை. இதுவே இந்தக்குற்றச்சாட்டில் உண்மையில்லை என்பதற்கு போதிய சான்றாகும்.

இது தவிர, ஹைபரில் உள்ள பதக் என்று சொல்லக்கூடிய இடத்தை நபியவர்கள் பாதிமா ﵂ அவர்களுக்கு நன்கொடையாக வழங்கினார்கள் என்று சொல்வதும் இட்டுக்கட்டப்பட்ட சம்பவமாகும். ஏனென்றால் நபியவர்கள் ஹைபர் பகுதியை கைப்பற்றும் போது ஹி07ல் ஸைனப்﵂, உம்முகுல்தூம் ﵂ போன்ற நபியவர்களின் ஏனைய பெண் மக்களும் உயிருடன் இருந்தார்கள். அந்த வேளையில் அவர்களுக்கு எதையுமே கொடுக்காமல் பாதிமாவிற்கு மாத்திரம் கொடுத்து மற்றவர்களுக்கு அநீதி செய்தார்கள் என்றாகிவிடும். கருணையும் நீதியும் நிறைந்த நபிமீது இவ்வாறு சொல்வது அபத்தமும் ஆபத்தானதுமாகும்.

# உஸ்மான் ﷺ அவர்கள் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள்.

**உஸ்மான் ﷺ தன் குடும்பத்தினருக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கினார்களா?**

உஸ்மான் ﷺ அவர்களின் காலத்தில் பிரச்சினைகள் அதிகரித்ததற்கும் அதன் விளைவாக அவர் கொலைசெய்யப்பட்டதற்கும காரணம் சொல்லும் ஷீஆக்களும், அவர்களால் கவரப்பட்டவர்களும், அவர்களின் நூல்களை அடிப்படை தெரியாமல் வாசித்து அவர்களின கருத்துக்களை உண்மையென்று நினைத்து உள்வாங்கிக் கொண்ட வரலாற்று ஆய்வாளர்களும், ஆசிரியர்களும்: உஸ்மான் ﷺ தனது குடும்பத்தினருக்கு அதிகமான பதவிகளை வழங்கியமை கிளர்ச்சி வளர்வதற்குக் காரணமாயிற்று என்று குறிப்பிடுகின்றனர். இது உண்மைக்குப் புறம்பான இட்டுக்கட்டப்பட்ட ஒரு செய்தியாகும்.

உஸ்மான் ﷺ அவர்களின் காலத்தில் ஏராளமான கவர்னர்களும் அதிகாரிகளும் இருந்தார்கள் அவர்களுள் பின்வருவோர் முக்கியமானவர்கள்:

அபூமூஸா அல்அஷ்அரி, அல்க∴கா பின் அமீர், ஜாபிர் அல்முஸனி, ஹபீப் பின் மஸ்லமா, அப்துர்ரஹ்மான் இப்னுல் ஹாயித் இப்னுல் வலீத், அபுல் அ∴வர் அஸ்ஸுலமி, ஹகீம் பின் ஸலாமா, அல்அஸ்அத் பின் கைஸ், ஜரீர் பின் அப்தில்லாஹ் அல்பஜலி, உபைதுப்னுன் னஹ்ஹாஸ், மாலிக் பின் ஹபீப், அந்நஸீர் அல்இஜ்லி, அஸ்ஸாயிப் இப்னுல் அக்ர∴, ஸஈத் இப்னு ரபீஆ, ஹனீஸ் பின் ஹபீஸ், முஆவியா ﷺ, அப்துல்லாஹ் இப்னு ஸஈத் பின் அபிஸ்ஸர்ஹ்ஸ், அல்வலீத் பின் உக்பா ﷺ, ஸஈத் இப்னுல் ஆஸ் ﷺ, அப்துல்லாஹ் பின் ஆமிர் ﷺ.

இவர்களுள் இறுதியாகச்சொல்லப்பட்ட ஐவரே பனூ உமையா எனும் உஸ்மான் ﷺ அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எனவே, உஸ்மான் ﷺ அவர்கள் தமது ஆட்சியில்



தன் குடும்பத்தினருக்கு அதிகமான பதவிகளை வழங்கினார் என்பது இதன் மூலம் பொய்ப்பிக்கப்படுகிறது. தன்னிடமிருந்த ஏராளமான பொறுப்பாளர்களில் ஐவர் தனது குலத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் அவர் தன் குடும்பத்தினரையே பொறுப்புக்களுக்கு நியமித்தார் என்றாகிவிடாது. தகுதியானவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை இனங்கண்டு சரியான அடிப்படையில் பொறுப்புக்களை வழங்குவதே ஒரு ஆட்சியாளரின் சிறப்பம்சம். ஒருவர் ஆட்சியாளராக இருந்தால் அவரின் வம்சத்தில் எவரும் கவர்னராக இருக்க முடியாது என்பது எங்கு கண்டுபிடித்த தத்துவமோ தெரியவில்லை.

பனூ உமைய்யா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பமுதல் நிர்வாகத் திறமை கொண்டவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நபி ﷺ அவர்களின் நிர்வாகத்திலும் அவர்களின் பங்கு சற்று அதிகமாகவே இருந்துள்ளது.

இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "பனூ உமையா கோத்திரத்தை தவிர குறைஷிகளின் வேறு எந்தக் கோத்திரத்திலிருந்தும் நபியவர்களுக்கு பணியாட்கள் அதிகமாக இருந்ததாக எமக்குத் தெரியவில்லை. ஏனெனில், அவர்கள்தான் அதிகமாக இருந்தார்கள். அவர்களுக்குத்தான் தலைமைப் பதவிகளும், சிறப்பும் இருந்தன." (மின்ஹாஜுஸ்ஸுன்னா)

நபி ﷺ அவர்களின் காலத்தில் கவர்னர்களாக இருந்தவர்களில் ஐந்து பேர் பனூ உமையா கிளையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். உதாப் பின் உஸைத் ﷺ, அபூ ஸுப்யான் பின் ஹர்ப் ﷺ, ஹாலித் பின் ஸஈத் ﷺ, உஸ்மான் பின் ஸஈத் ﷺ, அபான் பின் ஸஈத் ﷺ.

உஸ்மான் ﷺ அவர்களின் காலத்தில் எவ்வாறு ஐந்துபேர் பனூ உமையா கிளையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்களோ, அதுபோலவே நபியவர்களின் காலத்திலும் ஐவர் பனூ உமைய்யா கிளையைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றனர். எனவே எந்த ஐவருக்காக உஸ்மான் ﷺ அவர்களை விமர்சிக்கின்றனரோ அதே

ஐவருக்காக நபியவர்களையும் விமர்சிக்கவேண்டும். (அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக).

இதேவேளை உஸ்மான் ﷺ அவர்களின் காலத்தில் கவர்னர்களாக இருந்ததாக நாம் குறிப்பிட்ட ஐவரும் ஒரே நேரத்தில் பொறுப்புக்களை வகிக்கவில்லை. ஒரே நேரத்தில் உமையா கிளையைச்சேர்ந்த நால்வரே கவர்னர்களாக இருந்திருக்கின்றனர். உஸ்மான் ﷺ அவர்கள் மரணிக்கும்போது பனூ உமையாவைச் சேர்ந்த மூவரே கவர்னர்களாக இருந்தார்கள். உஸ்மான் ﷺ அவர்கள் மரணிக்கும்போது முஆவியா ﷺ, அப்துல்லாஹ் பின் ஸஃத் ﷺ, அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் கிர்ரீஸ் போன்றோரே பனூ உமையாவைச்சேர்ந்த கவர்னர்களாக இருந்தனர்.

இது போலவே அலி ﷺ அவர்களும் அவர்களின் ஆட்சியில் தன் சொந்தக்காரர்கள் பலருக்கு பொறுப்புக்களை வழங்கி கவர்னர்களாக அமர்த்தியிருந்தார்கள். அப்துல்லாஹ், உபைதுல்லாஹ், கதம், தம்மாம் போன்ற அப்பாஸின் பிள்ளைகளோடு அவரின் வளர்ப்புமகன் முஹம்மத் பின் அபீபக்ரும் கவர்னர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். உஸ்மான் ﷺ அவர்களின் காலத்தில் தமது கோத்திரத்தைச் சார்ந்த ஐவர் கவர்னர்களாக இருந்தார்கள் என்பதற்காக அவரை விமர்சிக்கும் எந்தக் கல்விமானும், அலி ﷺ அவர்களின் காலத்தில் நடைபெற்ற பிரச்சினைகள், அவரின் கொலைக்கான காரணம் என்பவை பற்றிப் பேசும் போதும், ஆய்வுசெய்யும் போதும் அதே ஐந்தைக் காரணம் காட்டுவதில்லை. நடுநிலையோடு சிந்தித்தால் நல்ல முடிவு கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்.

**உஸ்மான் ﷺ அவர்களை இவ்வாறு விமர்சிப்பவர்களை இரண்டாகப் பிரிக்கமுடியும்.**

**01) ஷீஆ:**

இவர்களுக்கு நாம் மேலே குறிப்பிட்ட ஆய்வைச் சுட்டிக்காட்டி நீங்கள் உஸ்மான் ﷺ அவர்களை குடும்பத்திற்கு பதவிகொடுத்தார்



என்பதற்காக விமர்சித்தால், அதே காரணத்திற்காக அலி ﷺ அவர்களையும் விமர்சியுங்கள். இல்லையென்றால், நீங்கள் காழ்ப்புணர்வு கொண்டவர்கள், உண்மைக்குப் புறம்பானவர்கள் என்று நாம் சொல்லலாம்.

இதுபோல் அலி ﷺ அவர்கள் நியமித்த கவர்னர்களில் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ﷺ அவர்களைத்தவிர வேறு எவரும் உஸ்மான் ﷺ அவர்கள் நியமித்தவர்களைப் போன்று சிறப்புக்குரியவர்களாக இருக்கவில்லை.

**02) அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் கொள்கையை ஏற்றவர்கள்:**

அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தினரின் கொள்கையை ஏற்றுக்கொண்டு உஸ்மான் ﷺ அவர்களை இவ்வாறு விமர்சிப்பவர்கள், பின்வரும் இரண்டு முடிவுகளில் ஒன்றையே சொல்லவேண்டும்.

01- உஸ்மான் ﷺ அவர்கள் தனது கோத்திரத்தின் மீது கொண்ட அதிகமான பற்றினால் அல்லது வெறியினால் அவர்களை கவர்னர்களாக மாற்றினார் என்று சொல்ல வேண்டும்.

இவ்வாறு சொல்ல முடியாது. காரணம் உமையா வம்சத்தைச சேர்ந்த ஐவர் நபியவர்களின் காலத்தில் ஆட்சியில் இருந்தனர். இதற்காக நாம் நபியை உமையா வெறிபிடித்தவர் என்று சொல்லமாட்டோம்.

அலி ﷺ அவர்களின் காலத்திலும் அவரின் குடும்பத்தைச் சார்ந்த ஐவர் கவர்னர்களாக இருந்தனர். அதற்காகவும் அவரை குல வெறிபிடித்தவர் என்று சொல்வதில்லை.

உஸ்மான் ﷺ அவர்கள் குல வெறி பிடித்தவராக இருந்திருந்தால தனது குடும்பத்தில் தகுதியானவர்கள், தகுதியற்றவர்கள் என்ற பாகுபாடின்றி பதவிகளில் வைத்திருக்க வேண்டும் அப்படியும்

அவர் வைத்திருக்கவில்லை. அவர் மரணிக்கும்போது அவரது குலத்தைச் சேர்ந்த மூவர் மட்டுமே கவர்னர்களாக இருந்தனர். எனவே அவரை கோத்திர வெறிபிடித்தவர் என்று சொல்வது பொருத்தமற்றது.

**02-** உஸ்மான் ﵁ அவர்கள் தமது ஆட்சியில் தகுதியானவர்களை கவர்னர்களாக நியமித்தார். சிலபோது இவர்கள் தனது கோத்திரத்தைச சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதற்காக அவர்களை உஸ்மான்﵁ அவர்கள் விட்டுவிடவுமில்லை, தகுதிக்கு மேல் உயர்த்தவுமில்லை. எத்தரப்பிலிருந்தாலும் தகுதியானவர்கள், நிர்வாகத்திறன் மிக்கவர்கள் என்று கண்டவர்களுக்குப் பதவிகளை வழங்கினார்.

உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் பதவி வகித்த பனூ உமையா கோத்திரத்தைச்சேர்ந்த கவர்னர்களை ஆய்வு செய்து, அவர்கள் பற்றிய இமாம்களின் கருத்துக்களை அவதானித்தால இந்த இரண்டாவது கருத்தே உண்மையானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பதை உணரலாம்.

**முஆவியா பின் அபீ ஸுப்யான் ﵁ :**

உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் கவர்னர்களாக இருந்தவர்களில் முஆவியா﵁ முதன்மையானவர் இவர் சிறந்தவர் என்பதில் எந்த முஸ்லிமும் கருத்து முரண்படவில்லை. ஷாம் பிரதேசத்தின் கவர்னராக இருந்த அவரை அந்த மக்கள் முழுமனதுடன் நேசித்தார்கள். முஆவியா ﵁ அவர்கள் உமர் ﵁ அவர்களின் காலத்தில் ஷாம் பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். உஸ்மான் ﵁ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவரின் திறமையான நிர்வாகத்தைக் கண்டு இன்னும் சில பகுதிகளை ஷாம் பிரதேசத்தோடு சேர்த்து அவதானிக்குமாறு அவரைப் பணித்தார்கள்.



முஆவியா ﵁ அவர்கள் வஹி எழுதும் நபியவர்களின் எழுத்தாளர்களில் ஒருவராக இருந்தார்கள். மிகச்சிறந்த ஆட்சியாளர்களில ஒருவராகவும் திகழ்ந்தார்கள்.

நபி ﷺ அவர்கள் சொன்னார்கள்: "நீங்கள் நேசிக்கின்றவர்களும உங்களை நேசிக்கின்றவர்களுமே உங்கள் தலைவர்களில் மிகச்சிறந்தவர்கள். மேலும், அவர்கள் மரணித்தால் அவர்களுக்காக நீங்கள் தொழுவீர்கள். நீங்கள் மரணித்தால் உங்களுக்காக அவர்கள் தொழுவார்கள்.'' (முஸ்லிம் 1855)

முஆவியா ﵁ அவர்களின் வரலாற்றைப் படிக்கும் எவரும் இந்த ஹதீஸ் அவரின் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்திருப்பதை உணர்வார்கள். முஆவியா ﵁ அவர்களின் தகுதிக்கும் நிர்வாகத் திறமைக்காகவும், அவர்கள் அந்த மக்கள் நேசித்ததற்காகவுமே மேலதிக பிரதேசங்கள் அவருக்கு வழங்கப்பட்டன.

**அப்துல்லாஹ் பின் ஸஃத் பின் அபிஸ்ஸர்ஹ் ﵁ :**

ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு நபியவர்களின் அருமைத் தோழர்களில் ஒருவராக இருந்தார். பின்பு மதம் மாறி, நபியவர்கள் மரணிப்பதற்கு முன்னரே மீண்டும் இஸ்லாத்தில் நுழைந்து நபியவர்களுக்கு பைஅத் செய்து தவ்பாச்செய்தார். நபியவர்களின் தோழர்களில் ஒருவராக வாழ்ந்தார். (அபூதாவுத்)

உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் மிகச் சிறந்த கவர்னர்களில் ஒருவராக இருந்தார். இவரின் தலைமையிலும் போராட்ட வியூகங்களிலுமே ஆபிரிக்கா இஸ்லாமிய ஆளுகைக்கு உட்பட்டது. (இன்று உலகிலேயே அதிகம் முஸ்லிம்கள் வாழும் கண்டமாக ஆபிரிக்கா உள்ளது.)

இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் இவரைப் பற்றிச் சொல்லும் போது: ''மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது முதல் இஸ்லாமிய வரையறைகளை மீறாமலும், விமர்சிக்கப்படும்படியான காரியங்களில் ஈடுபடாமலும் வாழ்ந்து

வந்தார். அத்தோடு மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராகவும், மிகச்சிறந்த சிந்தனைவாதிகளில் ஒருவராகவும் திகழ்ந்தார்கள்.'' ( 3/34 سير أعـــلام النبـــلاء)

**ஸஃத் இப்னுல் ஆஸ்ؓ :**

நபி ﷺ அவர்களின் ஸஹாபாக்களில் மிகச்சிறந்தவர்களில் ஒருவராக இருந்தார்.

இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: ''அவர் மிகச்சிறந்த தலைவராகவும் அதிகம் கொடைகொடுப்பவராகவும், புகழப்படக் கூடியவராகவும், பிரச்சினைகளின் ஆழத்தைப் புரிந்துகொண்டு செயற்படும் நுணுக்கமுள்ளவராகவும், தலைமைத்துவப் பண்புகள் நிறையப் பெற்றவராகவும் இருந்தார். மேலும், உறுதியானவராகவும் மிகச்சிறந்த சிந்தனைவாதியாகவும் இருந்தார். இதனால் ஆட்சிக்கு தகுதியானவராகத் திகழ்ந்தார்.'' (سير أعـــلام النبـــلاء)

**அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் கிர்ரீஸ்:**

இவரே கிஸ்ரா, குராஸான் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார். பாரசீக ஆட்சியின் இறுதிச்சீட்டு உஸ்மான்ؓ அவர்களின் ஆட்சியில் இவரின் கையினாலேயே கிழிக்கப்பட்டது. ஸிஜிஸ்தான், கிர்மான் போன்ற பிரதேசங்களை இவர் வெற்றி கொண்டார்.

இமாம் தஹபி (ர ஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: ''இவர் அரேபியர்களின் மிகப்பெரும் ஆட்சியாளர்களில் ஒருவராகவும், அவர்களில் மிகவும் வீரமுள்ளவராகவும், மிகச்சிறந்தவராகவும் இருந்தார்.'' (3/21 سير أعـــلام النبـــلاء)

**அல்வலீத் பின் உக்பா:**

இமாம் ஆமிர் அஷ்ஷ.ஃ.பி (ரஹ்) அவர்களிடம் ஒரு தடவை ஹபீப் பின் மஸ்லமா அவர்கள் பற்றியும், அவர்களின் தியாகம் பற்றியும், அவர்களின் மூலம் கிடைத்த வெற்றிகள் பற்றியும்



பெருமிதமாகப் பேசப்பட்டபோது, இமாம் ஷ.ஃ.பி (ரஹ்) அவர்கள் சொன்னார்கள்: ''நீங்கள் ஹபீபைப் பற்றி இவ்வளவு பெரிதாகச் சொல்கிறீர்களே! வலீதையும் அவரின் போராட்டங்களையும் அவரின் ஆட்சியையும் கண்டிருந்தால் எப்படிப் பேசியிருப்பீர்கள்! வலீத் அவர்கள் கூபாவை ஐந்து ஆண்டுகள் ஆட்சிசெய்தார்கள். அந்த வேளையில் அவரின் வீட்டில் கதவு இருக்கவில்லை. விரும்பியோர் விரும்பிய நேரத்தில் வரலாம், பேசலாம். என்று தன் ஆட்சியின் தூய்மையையும் நியாயத்தையும் நிரூபித்தார்.''

எனவே, நாம் மேலே குறிப்பிட்ட விடயங்களிலிருந்து, உஸ்மான்ؓ அவர்களின் உண்மைத் தன்மையையும், இதய சுத்தியையும், அவர்களை விமர்சிப்போரின் வஞ்சக உணர்வுகளையும் உண்மைக்குப் புறம்பான உளறல்களையும் தெரிந்துகொள்ள முடியும்.

**உஸ்மான் ؓ அவர்கள் அல்குர்ஆனை எரித்தார்களா?**

உஸ்மான் ؓ அவர்கள் குர்ஆனை எரித்ததாகவும் அதன் மூலம் குர்ஆனில் நிறைய விடயங்களை மறைத்துவிட்டதாகவும் ஷீஆக்கள் ஒரு தப்பான பிரச்சாரத்தை மேற்கொள்கின்றனர். இதன் உண்மை நிலையை தெளிவாக அவதானிப்போம்.

உலகத்தில் எந்த ஒரு மொழியாக இருப்பினும் அதற்கு இரண்டு வடிவங்கள் இருக்கும்.

**01)** அகராதி.
**02)** புழக்கப்பாஷை அல்லது பரிபாஷை.

இரண்டாவது வகையில் ஒரு சொல் அல்லது ஒரு வார்த்தை பல பரிமாணங்களை எடுக்கும். இடம், காலம், கோத்திரம் என்பவற்றுக -கேற்ப இவை வேறுபடும். இது தமிழ் மொழி தொடக்கம் எல்லாவற்றுக்கும் பொதுவானது. நமது பிரதேசங்களில் சொல்லப்படும் சில வார்த்தைப் பிரயோகங்கள் ஏனைய பிரதேசங்களில் தெரியாத

ஒன்றாகவும், ஏனைய பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் சில வார்த்தைகள் நமது பிரதேசங்களில் தெரியாத ஒன்றாகவும் இருக்கும். சிலபோது வேறு அர்த்தங்கள் கொண்டதாகவும் காணப்படும். இதே நிலை அரபு மொழிக்கும் இருந்தது. இதற்கு அமைவாக அல்லாஹ் அல்குர்ஆனை ஏழு முறைகளில் இறக்கிவைத்ததாக நபி ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (புஹாரி)

ஒரே வசனத்தை பல முறைகளில் ஓதும் அமைப்பு நபியவர்களின் காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்கு அதிகமான ஆதாரங்கள் உள்ளன.

உதாரணமாக, உமர் ؓ அவர்கள் கூறுகிறார்கள்: "ஹிஷாம் பின் ஹகீம் அவர்கள் அல்புர்கான் எனும் அத்தியாயத்தை பல முறைகளில் ஓதுவதை நான் செவியுற்றேன். ஆனால், இதில் எதையும் நான் நபியவர்களிடமிருந்து கேட்டதில்லை. ஹிஷாமைப்பிடித்து 'உனக்கு யார் இதைக் கற்றுத் தந்தார்' என்றேன். 'எனக்கு இதை நபியவர்களே கற்றுத்தந்தார்கள்' என்றார். அதற்கு நான் இல்லை பொய் சொல்கிறாய். நிச்சயமாக நபியவர்கள் வேறு ஒரு முறையிலேயே எனக்கு இதை ஓதிக்காண்பித்தார்கள். என்று சொல்லிவிட்டு அவரை அழைத்துக் கொண்டு நபியவர்களிடம் வந்தேன். 'அல்லாஹ்வின் தூதரே! இவர் அல்புர்கான் அத்தியாயத்தை நீங்கள் எனக்கு ஓதிக்காண்பிக்காத முறையில் ஓதுகிறார்' என்றேன். அப்போது நபியவர்கள் 'அவரை விடு. ஹிஷாமே! ஓதும்' என்றார்கள். அவர் நான் ஏற்கனவே கேட்டதையே ஓதினார். நபியவர்களோ 'இவ்வாறே இறங்கியது என்றார்,' பின்பு 'உமரே நீர் ஓதும்' என்றார்கள். நானோ அவர் எனக்கு ஓதிக்காட்டிய அடிப்படையில் ஓதினேன். நபியவர்கள் 'அவ்வாறே இறக்கப்பட்டது' என்று சொல்லிவிட்டு நிச்சயமாக இந்தக்குர்ஆன் ஏழு முறைகளில் இறக்கிவைக்கப்பட்டுள்ளது, உங்களால் முடியுமான முறையில் ஓதிக்கொள்ளுங்கள்' என்றார்கள்." (புஹாரி 4992)

இவ்வாறு, நபியவர்களின் காலத்திலேயே நபியவர்களிடமிருந்து ஒரு முறையில் குர்ஆனை ஓதக் கற்றுக்கொண்டவர்கள், இன்னொரு



முறையில் நபியவர்களிடமிருந்து கற்றுக்கொண்டவர் குர்ஆனை அந்த முறையில் ஓதும்போது கருத்து முரண்பாடு கொண்டனர். அவர் தவறாக ஓதுவதாகவும் நினைத்தனர். நபியவர்களிடம் சென்று அதை தெளிவுபடுத்திக் கொண்டனர்.

இதனால், குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஏழு முறைகளில் ஓதப்படும் என்பதோ, அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான அர்த்தங்கள் இருக்கும் என்பதோ கிடையாது. ஆனால், பெரும்பாலும் ஏழு முறைப்படி ஓதக்கூடிய அமைப்பில் இருக்கும். எந்த முறையில் ஓதினாலும் கருத்து சிதைவடையாது. இவ்வாறு கருத்துச் சிதைவில்லாத அடிப்படையில் இருந்தபோதும் ஸஹாபாக்கள் சந்தேகப்பட்டு நபியவர்களிடம் தெளிவுபெற்றார்கள் என்பதைப் பார்க்கும்போது குர்ஆனின் தூய்மைத் தன்மையை பாதுகாப்பதில் ஸஹாபாக்களுக்கிருந்த அக்கறையையும், ஈடுபாட்டையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

நபியவர்கள் இருந்தபோது, இத்தகைய கருத்து முரண்பாடுகளை நபியவர்களிடம் சென்று தீர்த்துக்கொண்டனர். ஆனால், நபியவர்களுக்குப் பிறகு இந்த நிலை இருக்கவில்லை. நபியவர்களுட்ன இருந்து அவரிடம் குர்ஆனைக் கற்றுக்கொண்ட ஸஹாபாக்கள் மூலமே இவைகள் தீர்த்துக்கொள்ளப்பட்டன.

நபியவர்களின் மரணத்தின்பின், இஸ்லாமிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பும் விரிவடைந்தபோது ஸஹாபாக்கள குர்ஆன், ஸுன்னாவை கற்றுக்கொடுப்பதற்கு ஒவ்வொரு பிரதேசத்திற்கும இடம் பெயர்ந்தனர்.

இதில், ஷாம் பிரதேசத்தில் உபை இப்னு க.்.ப் ؓ அவர்களும், ஈராக்கில் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத்ؓ அவர்களும், கூபாவில் அபூமூஸா அல்அஷ்அரி ؓ போன்றவர்களும் பிரபல்யம் அடைந்திருந்தனர். ஒவ்வொரு பிரதேசத்திலும் அப்பகுதியில் பிரபல்யம் அடைந்திருந்த காரிகளின் முறைப்படி அப்பிரதேச மக்கள்

குர்ஆனை ஓதிவந்தனர். குர்ஆன் இவ்வாறு பல முறைகளில் ஓதப்பட்டதால் காலப் போக்கில் மக்கள் கட்டுப்பாடு இல்லாமல் அந்த ஸஹாபி ஓதிக்காட்டாததையெல்லாம் அவர் ஓதிக்காட்டியதாக தவறாக நினைத்துக்கொண்டு ஓத ஆரம்பித்தனர்மற்றைய முறைகளை தவறானது என்றும் சொல்ல ஆரம்பித்தனர். இது ஒரு பெரும் சிக்கலாக உணரப்பட்டது என்பதை இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தமது "பத்ஹுல் பாரி" எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள்.

இது போலவே, ஒவ்வொரு பிரதேசத்தவர்களும் அப்பிரதேசத்தில இருந்த காரிகளின் முறைப்படி ஓதியதால் அதையே குர்ஆன் என்றும், அதற்கு மாற்றமாக ஓதும் முறை குர்ஆனில் இல்லாதது, சம்பந்தப்பட்டவர்கள் தவறுதலாக செய்கின்றனர் என்றும் நினைத்தனர். முன்சென்ற கலீபாக்களின் காலத்தில் இது சற்றுகுறைவாக இருந்தாலும், உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் இது சற்று கூடுதலாகவே உணரப்பட்டது. இதை நீக்குவதற்கு என்ன செய்யலாம் என்று உஸ்மான்﵁ அடங்கலாக பல ஸஹாபாக்களும் யோசித்தனர். இந்த வேளையில்தான். ஹுதைபா ﵁ அவர்கள், உஸ்மான் ﵁ அவர்களிடம் திடுக்கிடும் படியான ஒரு சம்பவத்தைச் சொன்னார்கள்.

ஹி.25 இல் அர்மீனியாவை வெற்றிகொள்வதற்கான போராட்டத்தில் ஷாம், மற்றும் ஈராக் பிரதேசத்தைச்சேர்ந்த மக்களுடன் ஹுதைபா﵁ அவர்கள் கலந்து கொண்டார்கள். போராட்டத்திலிருந்து திரும்பி வந்த ஹுதைபா ﵁ அவர்கள் தன் வீட்டுக்கு செல்லாமல் நேரடியாக உஸ்மான் ﵁ அவர்களிடம் வந்தார்கள்.

"அமீருல் முஃமினீன் அவர்களே! (மக்கள் வழிகேட்டின் பால் சென்று விடும் முன்னால்) மக்களைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள் என்றார்கள். அப்போது, உஸ்மான் ﵁ அவர்கள் என்ன விடயம்? என்று ஆச்சரியத்துடன் கேட்டார்கள், நான் அர்மீனியாவை வெற்றிகொள்வதற்காக போராடினேன். அப்போது ஷாம் வாசிகள் உபையிப்னு கஃப் ﵁ அவர்கள் குர்ஆனை ஓதிக்காட்டிய முறைப்படி ஓதினார்கள், ஈராக்வாசிகள் கேள்விப்படாத



முறையிலெல்லாம் ஓதினார்கள். ஈராக்வாசிகளோ அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் ﵁ அவர்கள் ஓதிய முறைப்படி ஓதினார்கள், ஷாம் வாசிகள் கேள்விப்பட்டிராதபடி ஓதினார்கள். பின்பு ஒருவருக்கொருவர் முரண்பட்டனர், காபிர்கள் என்றனர்." என்று கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில், "ஈராக் வாசிகளும் ஷாம் வாசிகளும் இவ்வாறு பிரச்சினைப்படுவதைக் கண்ட ஹுதைபா ﵁ அவர்கள் அவர்களை கண்டித்துவிட்டு நிச்சயமாக நான் இதை முஃமீன்களின் தலைவர் உஸ்மான் ﵁ அவர்களிடம் கொண்டு செல்வேன் என்று சப்தமிட்டதாக குறிப்பிடப்படுகின்றது." (பத்ஹுல்பாரி 9:23)

இதைக் கேட்ட உஸ்மான் ﵁ அவர்கள் ஏற்கனவே இது தொடர்பாக யோசித்துக்கொண்டிருந்ததால் கடுமையாகக் கவலைப்பட்டார்கள். பின்பு மக்களிடம் உரையாற்றினார்கள்: "மக்களே! உங்கள் தூதர் மரணித்து 15 ஆண்டுகள்தான் சென்றிருக்கின்றன. அதற்குள் குர்ஆனை ஓதுவதில் இவ்வாறு கருத்து முரண்பாடு கொண்டீர்களே! என்று கூறினார்கள். பின்பு பல ஸஹாபாக்களிடமும் என்ன செய்யமுடியும்! என்று ஆலோசனை கேட்டார்கள் இதில் அலி ﵁ அவர்கள் உள்ளிட்ட பல முக்கிய ஸஹாபாக்கள் கலந்து கொண்டனர். இதனால்தான் அலி﵁ அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்.

"உஸ்மான் ﵁ அவர்கள் மீது நல்லதைத் தவிர வேறு எதையும் சொல்லாதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர் குர்ஆன் விடயத்தில் செய்தது அவர் தன்னிச்சையாக செய்ததல்ல. எங்களில் பெரும் ஒரு கூட்டத்தின் முடிவையே அவர் செய்தார். அந்தக் கூட்டத்தில் குர்ஆனை ஓதும் முறையில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றார்? மேலும் எனக்கு வந்த தகவலின்படி சிலர் உனது கிராத்தை விட எனது கிராஅத்துதான் சிறந்தது என்று கூறுகின்றனர். இது சிலவேளை நிராகரிப்புக்கு இட்டுச்சென்று விடலாம் என்றார். அப்போது நாங்கள், 'நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?' என்றோம். அதற்கவர்கள் 'மக்கள் எல்லோரையும் ஒரே குர்ஆனில்

ஒரே முறைப்படி ஓதுவதில் ஒன்றிணைக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அப்போதுதான், கருத்து முரண்பாடுகளும் பிளவுகளும் இருக்காது என்று நான் கருதுகிறேன் என்றார். நாங்கள் எல்லோரும் ஆம் நீங்கள் கருதியதுதான் சரியானது என்றோம்.''

எனவே, குர்ஆனை ஒரே முறையில் எல்லோரும் ஓதும் படி செய்ய வேண்டும் என்ற முடிவை எடுத்தது உஸ்மான்ﷺ மாத்திரமல்ல அலி ﷺ உள்ளிட்ட ஏனைய ஸஹாபாக்களும் சேர்ந்தே எடுத்தார்கள் என்பது தெளிவாகின்றது.

பின்பு, இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பெரியதொரு குழுவை ஒன்றிணைத்தார்கள். இதில் உபையிப்னு க.்.ப் ﷺ, ஸஈத் இப்னுல் ஆஸ் ﷺ, ஸைத் பின் தாபித் ﷺ போன்றோர் முக்கிய பாத்திரங்களாக இருந்தனர். இதில் இடம்பிடித்த ஸைத் பின் தாபித்ﷺ அவர்கள் இறுதியாக நபியவர்களிடம் ஜிப்ரீல் (அலை) இரண்டு முறை குர்ஆனை ஓதிக்காட்டியபோது நபியுடன் இருந்தவர். இவர் அபூபக்ர் ﷺ அவர்களின் காலதில் குர்ஆன் தொகுக்கப்பட்டபோது தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தியவரும், வஹியை எழுதியவர்களில் ஒருவருமாவார்.

பின்பு, அபூபக்ர் ﷺ காலத்தில் தொகுக்கப்பட்டு உமர் ﷺ அவர்களின் மரணத்தின் பின் அவரின் மகள் ஹப்ஸா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த குர்ஆன் பிரதி வரவழைக்கப்பட்டது. பொறுப்புச்சாட்டப்பட்ட குழுவினால் அதிலிருந்து பல பிரதிகள் எடுக்கப்பட்டன.

சில அறிவிப்புக்களின் படி 05பிரதிகள் எடுக்கப்பபட்டன என்றும், சில அறிவிப்புக்களின் படி 07பிரதிகள் எடுக்கப்பட்டன என்றும் வந்துள்ளது. இவற்றுள்: மக்கா, ஷாம், எமன், பஹ்ரைன், பஸரா, கூபா போன்ற பிரதேசங்களுக்கு தலா ஒவ்வொரு பிரதிகளை அனுப்பிவைத்துவிட்டு மதீனாவில் ஒரு பிரதியை வைத்துக்கொண்டார்கள். அனுப்பப்பட்ட பிரதிகளின் படியே தங்கள் கிராத் முறையை வைத்துக்கொள்ளுமாறு மக்கள்பணிக்கப்பட்டார்கள். இந்த பிரதிக்கு



மாற்றமான கிராத் முறைகளைக் கொண்டுள்ள பிரதிகளை அழித்துவிடுமாறு தனது பணியாட்களுக்கு உஸ்மான்ﷺ அவர்கள் கட்டளையிட்டார்கள். இன்னும் சில அறிவிப்புக்களின் படி இந்த பிரதிகளுக்கு முரண்படும் பிரதிகளை கிழித்து விடும்படி கட்டளையிட்டார்கள் என்று வந்துள்ளது, இதையே பல அறிஞர்களும் சரியானது என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், உஸ்மான்ﷺ அவர்கள் இந்தப்பிரதிக்கு முரண்படும் பிரதிகளை எரித்துவிடுங்கள் என்று சொன்னதாகவே மக்களுக்கு மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

எது எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களை ஒரே அமைப்பில் குர்ஆனை ஓதச்செய்யும் வகையில் அமைந்த இந்தச்சேவை எல்லா ஸஹாபாக்களின் ஏகோபித்த முடிவாக இருந்தது. அலி ﷺ அவர்கள் உள்ளிட்ட முஸ்லிம்கள் எல்லோரும் இந்த விடயத்தில் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த அதே நேரம் இந்தப்பிரதிக்கு எதிரானவற்றை எரிக்கவோ அல்லது கிழிக்கவோ வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். இதனால் பிற்பட்ட காலங்களில் உஸ்மான்ﷺ அவர்களின் காலத்தில் ஸஹாபாக்களால் பிரதிசெய்யப்பட்ட மூலத்தைத்தவிர வேறு எதுவும் பிரபல்யம் அடையவில்லை. அலி ﷺ அவர்களின் ஆட்சியிலும் அந்தப் பிரதியே பின்பற்றப்பட்டது.

இந்த நிகழ்வை அதிகமான அறிஞர்கள் தங்கள் நூல்களில் பதிவுசெய்திருந்தாலும் இமாம் இப்னு ஹஜர் (பத்ஹுல் பாரி), இமாம் இப்னுகதீர் (அல்பிதாயா வந்நிஹாயா), இமாம் தபரீ (தாரீஹ்) போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

எனவே, ஸஹாபாக்களின் ஆலோசனைப்படி உஸ்மான் ﷺ அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இப்பணி காலத்தின் தேவையாகவும், முஸ்லிம்கள் தங்கள் முதல் அடிப்படையான அல்குர்ஆனில் ஒற்றுமைப்படுவதற்கு இன்றியமையாததாகவும் இருந்தது.

அதற்குப்பிறகு, பிரதான நகரங்களுக்கு அனுப்பப்பட்ட பிரதிகளை தழுவியதாகவே தங்கள் கிராத் அமைப்பையும் கற்பித்தலையும் ஸஹாபாக்கள் அமைத்துக்கொண்டதால் அல்-குர்ஆன் விடயத்தில் முஸ்லிம்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

ஆனால், அல்-குர்ஆன் தொடர்பான விரிவான அறிவைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு உதவும் வகையில் வித்தியாசமான கிராத் அமைப்புக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எனவே, இன்றும் கூட அந்த ஏழு கிராத் முறைகளையும் அறிந்துகொள்ள விரும்புவோர் தெளிவாக அறிந்துகொள்ளலாம். அல்ஹம்துலில்லாஹ்.

**அபூ தர் அல் கிபாரி ﵁ அவர்களை உஸ்மான் ﵁ அவர்கள் நாடு கடத்தினார்களா?**

அபூதர் அல்கிபாரி ﵁ அவர்கள்: மனிதன் தனது தேவைக்கு அதிகமாக தங்கம் வைத்திருப்பது கூடாது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதாவது, ஒருவர் தன்னிடமுள்ள பொருளுக்குரிய ஸகாத்தை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் தேவைக்கு அதிகமாக உள்ளவற்றை மற்றவர்களுக்கு தர்மம் செய்துவிடல் வேண்டும் என்பது அபூதர் ﵁ அவர்களின் கருத்து. இதன் படி, அரசாங்கம் தன் கருவூலத்தில் அதிகமான சொத்துக்களைச் சேகரிப்பதும் கூடாது என்றே அபூதர் ﵁அவர்கள் கருதினார்கள். ஆனால், ஏனைய ஸஹாபாக்கள் இதற்கு முரண்பட்டனர். அவருக்கு பிறகு எல்லா அறிஞர்களும் அபூதர்﵁ அவர்களின் கருத்துக்கு முரண்படுகின்றனர். ஒருவர் கடமையான ஸகாத்தை கொடுத்துவிட்டு, தங்கம் வெள்ளி போன்றவற்றை தன் தேவைக்கு அதிகமாகவும் வைத்திருக்கலாம், அது தவறல்ல என்பது அறிஞர்களின் கருத்து. இந்த விடயத்தில்தான் உஸ்மான் ﵁ அவர்களின் காலத்தில் அவரின் கவர்னர்களில் ஒருவரான முஆவியா﵁ அவர்களுக்கும் அபூதர்﵁ அவர்களுக்கும் மத்தியில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.



இந்நிகழ்வை பலரும் பலவிதமாக அறிவித்துள்ளனர். அதில் இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு அறிவித்துள்ளார்கள்:

“ஸைத் பின் வஹ்ப் சொல்கிறார்: நான் ரப்தா எனும் பிரதேசத்தின் வழியாக நடந்து சென்றேன். அப்போது, அபூதர் அல்கிபாரியை சந்தித்தேன். நீங்கள் இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்கள்? என்றேன். நான் ஷாம் பிரதேசத்தில் இருந்தேன். எனக்கும் முஆவியாவிற்கும் இடையில் தங்கம் வெள்ளியை சேமிப்பது தொடர்பாக கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

‘(தங்கம் வெள்ளியை பதுக்குவதை தடுக்கக்கூடிய வசனம்) அஹ்லுல் கிதாபுகள் விடயத்தில்தான் இறங்கியது என்று முஆவியா ﵁ அவர்கள் கூறினார்கள். நான்: ‘இல்லை இது எங்கள் விடயத்திலும், அஹ்லுல்கிதாபுகள் விடயத்திலும் இறங்கியது’ என்றேன். இருவருக்கும் மத்தியில் கருத்துமோதல் வலுப்பெற்றது.

முஆவியா ﵁ அவர்கள் உஸ்மான் ﵁ அவர்களுக்கு விடயத்தை எழுதினார்கள். நான் இது தொடர்பாகப் பேசி மக்களுக்கு மத்தியில் பிரச்சினைகளுக்கு வித்திடுவதாகவும் முறையிட்டார்கள். என்னை மதீனாவிற்கு வருமாறு எனக்கு உஸ்மான் ﵁ அவர்கள் கடிதம் எழுதினார்கள். மதீனாவுக்கு சென்றேன். அதிகமான மக்கள் இதற்கு முதல் காணாதவர்கள் போன்று என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். உஸ்மான் ﵁ அவர்களிடம் இதை அறிவித்தேன். உஸ்மான் ﵁ அவர்கள் நீங்கள் விரும்பினால் எங்களை விட்டும் சற்றுத் தொலைவிலிருக்கலாம் அல்லது மிகவும் நெருக்கத்தில் இருக்கலாம் என்றார்கள். அதுவே இந்த இடத்திற்கு என்னைக் கொண்டுவந்தது. எனக்கு ஒரு எதியோப்பிய நாட்டு அடிமைதான் தலைவராக்கப்பட்டாலும் அவருக்கு நான் செவியேற்று வழிப்பட்டிருப்பேன்.”

(புஹாரி 1496)

எனவே, அபூதர் ﵁ அவர்களை உஸ்மான் ﵁ அவர்களோ, முஆவியா ﵁ அவர்களோ துரத்தவில்லை; அவரை இழிவு

படுத்தவுமில்லை என்பது அபூதர் ﷺ அவர்களின் வாக்கு மூலத்திலிருந்தே தெளிவாகத் தெரிகிறது.

அபூதர் ﷺ அவர்கள் ரப்தாவில் இருந்தபோது உஸ்மான் ﷺ அவர்கள் அவரை அழைத்தார்கள். அபூதர் அவர்கள் மதீனா வருகிறார். உஸ்மான் ﷺ அவர்களைப் பார்த்து; 'கலீபா அவர்களே! நிச்சயமாக நான் உங்களுக்குச் செய்த உறுதி மொழியை முறிக்கவில்லை. ஒரு மரத்தின் வேரை நீங்கள் பற்றிப்பிடிக்கச் சொல்லியிருந்தாலும் எனது மரணம் வரை நான் அவ்வாறே செய்திருப்பேன்' என்றார்கள். அதற்கு உஸ்மான் ﷺ அவர்கள், 'அபூதர்ரே நீர் முறிக்கவில்லை என்பதும் நீர் கட்டுப்படுவீர் என்பதும் எனக்குத்தெரியும். ஆனாலும், நீர் மதீனாவில் கட்டாயம் இருக்கவேண்டும் என்பதற்காகவே உம்மை இங்கு அழைத்தேன்' என்றார்கள். அதற்கு அபூதர் ﷺ அவர்கள் தான் மதீனாவில் இருப்பதைவிட ரப்தாவில் இருப்பதையே அதிகமாக விரும்புவதாகவும் அதற்கு அனுமதி தருமாறும் வேண்டிக்கொண்டார். உஸ்மான் ﷺ அவர்களும் (வேறு வழியின்றி) அனுமதி வழங்கினார்கள்.

(تاريخ المدينة لعمر بن شبة)

❁❁❁



# அபூஹுரைரா ﷺ அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்.

**இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றினால் அவர் இஸ்லாத்தை ஏற்கவில்லை:**

இஸ்லாமிய வரலாற்றில் தவறான கொள்கைகளை உடையவர்களாக இருந்த குழுக்கள் அபூஹுரைரா ﷺ அவர்களைக் குறைகாண்பதில் அதிகம் முயற்சித்தது. காரணம் அபூஹுரைரா ﷺ அவர்கள் ஏனைய ஸஹாபாக்களைவிட ஹதீஸ்களை அதிகமாக அறிவித்தவர். அவரின் செய்திகள் தவறான கொள்கைகளை தகர்த்தெறிவதாக அமைந்துள்ளன. இந்த செய்திகளிலிருந்தெல்லாம் விடுபட்டு தங்கள் கொள்கையை தக்கவைத்துக் கொள்வதற்கு ஒரே வழி அவரையே நம்பகத்தன்மை அற்றவராகவும் இஸ்லாத்திற்கு விரோதமானவராகவும் சித்தரிப்பதாகும்.

இதனாலேயே, அபூஹுரைரா ﷺ அறிவித்த ஹதீஸ்களை குறைகாண்பதை விடுத்து அவரையே குறைகாண முயற்சிக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே ஆதாரமற்றதும், சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளை தவறான கோணங்களில் விளக்க முனைவதுமேயாகும்.

அபூஹுரைரா ﷺ அவர்கள் இஸ்லாத்தின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையினாலும், அதன் கொள்கையில் அவருக்கிருந்த உள்ளார்ந்த விருப்பத்தினாலுமே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார் என்பதில் இஸ்லாமிய அறிஞர்களுக்கும், இஸ்லாமிய கொள்கைப் பிடிப்புள்ள வேறு எவருக்கும் சிறிதளவேனும் சந்தேகம் கிடையாது. ஆனாலும், சிலர் நாம் மேலே குறிப்பிட்ட காரணத்திற்காக தவறான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். அதில் முதன்மையானபிரச்சாரம் அபூஹுரைரா ﷺ அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதிலேயே சிக்கலை ஏற்படுத்தும் முயற்சியாகும். "அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதுதன் வயிற்றை வளர்த்துக்கொள்வதற்காகவேயன்றி, இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றினால் அல்ல" என்று குறிப்பிடுகின்றனர்.

இதற்கான பதிலை சற்று விரிவாக நோக்குவோம். அதற்கு முன்னால் இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையை நாம் தெரிந்துகொள்வோம்.

ஸஹாபாக்களிலே அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர் அபூஹுரைரா ﷺ அவர்கள்தான். அவர் 5374ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார். ஏனைய ஸஹாபாக்கள் இந்தளவுக்கு பெருந்தொகையான ஹதீஸ்களை அறிவிக்கவில்லை. இது சிலருக்கு சந்தேகத்தை உருவாக்குகிறது. ஒரு வேளை அபூஹுரைரா ﷺ அவர்கள் நபி மீது இட்டுக்கட்டுகிறாரோ எனும் எண்ணம் தோன்றுகிறது. சில தாபியீன்கள் சில ஸஹாபாக்களிடம் சென்று இது தொடர்பாக விளக்கம் கோரினர். இது அபூஹுரைரா ﷺ அவர்களுக்கும் தெரிந்தது. அப்போது தன் மாணவர்களுக்கு பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

“அபூஹுரைரா ஹதீஸ்களை அதிகமாகச்சொல்வதாகச் சொல்கின்றனர். அல்லாஹ்தான் எமக்கு மத்தியில் தீர்ப்பளிக்கப் போதுமானவனாக இருக்கிறான். முஹாஜிர்களுக்கும், அன்ஸார்களுக்கும் என்ன நடந்தது? அவர்கள் எவரும் அபூஹுரைராவைப்போல அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பதில்லையே என்று சொல்கின்றனர். முஹாஜிர்கள் வர்த்தகத்தில் ஈடுபடக்கூடியவர்களாக இருந்தார்கள். எனது தோழர்களான அன்ஸார்கள் தங்கள் சொத்துக்களை பரிபாலிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். நானோ ஏழையாக இருந்தேன். என் வயிற்றை நிரப்புவதற்காக நபியவர்களுடன் நான் எந்நேரமும் இருப்பேன். இதனால் அவர்கள் வராத சபைகளுக்கு நான் சமுகமளிப்பேன். அவர்கள் மறக்கும் போதெல்லாம் நான் மனனமிட்டுக்கொள்வேன்.” (புஹாரி 2350, முஸ்லிம் 2492)

இந்த செய்தியில் வரும் அபூஹுரைரா ﷺ அவர்களின் ஒரு சொல்லை வைத்துக்கொண்டே நாம் மேலே சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டைச் சொல்கின்றனர். அதாவது, அபூஹுரைரா தன் வயிற்றை நிரப்பவே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்; அவருக்கு கொள்கைப்பற்று கிடையாது. என்கின்றனர்.



அபூஹுரைராவின் கருத்தை ஆழ்ந்து கவனிப்பவர்களும், மேலோட்டமாக நோக்கும் எவரும் இந்தக்குற்றச்சாட்டுக்கான ஆதாரம் எதுவும் இதில் இல்லை என்றே குறிப்பிடுவார்கள்.

அபூஹுரைரா ﷺ அவர்களின் இந்தக்கூற்றுசபையடக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும், இது சாதாரணமாக எல்லோராலும் பயன்படுத்தப்படும் வார்த்தை முறையாகும். ஒருவர் சபையில் வைத்து எம்மை புகழும் போது அப்படி எதுவுமில்லை என்று சொல்வோம். அதற்காக நமக்கு எதுவும் தெரியாது, சொன்னவர் மடையன் என்று அர்த்தமில்லை. சபையை அடக்குவதற்காக நானும் உங்களைப் போன்றவன்தான் நமக்குள் வேறுபாடு கிடையாது என்று சபையோரின் மனதைத் தேற்றுவதற்காகவும் என்னிடம் அப்படியான ஆணவம் எதுவும் இல்லை என்பதைக் காட்டுவதற்காக்வும பயன்படுத்தப்படும் வாக்கிய முறையே இதுவாகும்.

அபூஹுரைரா ﷺ அவர்கள் சொன்ன வார்த்தையும் இவ்வாறானதே. சபையில் எல்லோரும் உள்ளபோது அபூஹுரைரா ﷺ அவர்கள் அதிகமான செய்திகளை அறிவிப்பதாக சொன்னதோடு, அவரைச் சிலர் அதற்காக புகழவும், மற்றவர்கள் இவ்வாறு அறிவிக்கவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்ளவும் ஆரம்பிக்கிறார்கள். இதன்போதே, அபூஹுரைரா ﷺ அவர்கள் இந்த வாசகத்தை பயன்படுத்துகிறார்கள். எனவே, இது சபை அடக்கத்திற்காகவும் தற்பெருமையிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டதாகும்.

அபூஹுரைரா ﷺ அவர்களின் இந்த வாக்கியம், நான் ஏன் அதிகமான ஹதீஸ்களை அறிவித்தேன் என்பதற்கான விளக்கமேயல்-லாமல், தான் ஏன் இஸ்லாதத்திற்கு வந்தேன்? என்பதற்கான விளக்கமல்ல. எனவே, மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதை நிறுத்திக்கொள்வதே பொருத்தமாகும்.

அபூஹுரைரா ﷺ அவர்கள் ஆரம்பத்தில் ஏழையாக இருந்து இஸ்லாத்திற்கு வந்திருந்தால் நாம் அவரின் வறுமையை

போக்குவதற்கே இஸ்லாத்திற்கு வந்திருக்கிறார் என்று சொல்லமுடியும். ஆனால், அபூஹுரைரா ﷺ அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கு முன்னால் அவரிடம் ஒரு அடிமையிருந்ததாகவும் அவர் ஹிஜ்ரத் செய்தபோது அவரது அடிமை அவரைவிட்டும் ஓடிவிட்டதாகவும் புஹாரியில் (2532) வரக்கூடிய ஒரு அறிவிப்புச் சொல்கிறது. எனவே, அபூஹுரைரா ﷺ இஸ்லாத்திற்கு வருவதற்கு முன்னால் அடிமையை வைத்து தன் காரியங்களைப் பார்த்து கொள்ளுமளவுக்கு வசதி படைத்தவராக இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

எனவே, அவர் வயிறு வளர்ப்பதற்காக இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை அவருக்கு இருக்கவில்லை. அத்தோடு அபூஹுரைரா ﷺ அவர்கள் இஸ்லாத்தை ஏற்று மதீனாவிற்கு வந்தது முதல் கடுமையான பசியாலும் வறுமையாலும் சோதிக்கப்பட்டார். உண்மையில் வயிற்றுப் பிழைப்பிற்காக இஸ்லாத்திற்கு வந்திருந்தால் வந்த அதே வேகத்தில் திரும்பிச் சென்றிருப்பார்கள். அப்படி அவர் செய்யவில்லை. சோதனைகள் மலைபோல் போட்டிபோட்டுக் கொண்டு வந்தபோதும் எதிர்நீச்சலடித்துக கொண்டு நபியின் செய்திகளை முழுமையாக மனனமிடுவதில் தனது கவனத்தைச் செலுத்தினார்கள். இது அவர்களின் கொள்கைப் பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மக்காவிலிருந்து மதீனாவிற்கு செல்வதற்கு சுமார் 480கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கவேண்டும். பாதைகள் எதுவும் செப்பனிடப்படாமல், பாலைவனமாக இருந்த அக்காலத்தில் குறித்த தூரத்தைக் கடப்பதற்கு குறைந்தது 06நாட்களாவது தேவைப்படும். கொழுத்தும் வெயிலில் மலைகள் நிறைந்த பாலைவனப்பகுதியை குதிரையில் கடப்பது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இவ்வளவு கஷ்டங்களையும் தாண்டி தனது நாட்டை விட்டு விட்டு கொள்கைக்காக வேறொரு நாட்டுக்கு இடம் பெயர்ந்தவரைப் பார்த்து வயிற்றை நிரப்பவே வந்தார் என்பது எவ்வளவு மதிகெட்ட வார்த்தை என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். 480கிலோமீட்டரை சாப்பாட்டுக்காகக் கடந்தார் என்பது…?



உண்மையில் அன்றிருந்த சூழலில் அபூஹுரைரா ﷺ அவர்கள் தனது வயிற்றை நிரப்ப மதீனா செல்ல வேண்டிய அவசியம் துளியளவும் இருக்கவில்லை. ‘தனக்கு வறுமையாயிருக்கிறது, அதைப்போக்க இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளப்போகிறேன்’ என்று பகிரங்கமாக அறிவித்திருந்தாலே போதும். எல்லோரும் அவருக்கு நன்கொடைகளை வழங்கி அவரை நன்றாக உபசரித்திருப்பார்கள் சிலபோது செல்வந்தனாகக்கூட மாற்றியிருப்பார்கள். அதற்காக, அவ்வளவு தூரம் கடந்து மதீனாவிற்கு வரவேண்டிய தேவை இருந்திருக்காது. ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை, அவருக்கு அது தேவையுமில்லை. இது அவரின் கொள்கைப்பற்றையே காட்டுகிறது.

அபூஹுரைரா ﷺ அவர்கள் மாத்திரம் தனது உணவுக்கு நபியவர்களே பொறுப்பு என்ற நிலையில் இருக்கவில்லை ஏராளமான ஸஹாபாக்கள் இந்த நிலையில் இருந்தார்கள். அவர்களை திண்ணைத்தோழர்கள் என்று நாம் அழைக்கிறோம்.

இவர்கள் எல்லோருமே நபியவர்களுக்கு வரும் நன்கொடைகளில பங்குபோட்டு தங்கள் வயிறுகளை நிரப்பிக்கொள்ளவே இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று எவரும் சொல்வதில்லை. இது ஆரம்ப காலத்திலிருந்த ஒரு பாடசாலை முறை. அதாவது இஸ்லாத்தை கற்றுக் கொள்வதற்காக தங்களை சிலர் அர்ப்பணிப்பார்கள். அவர்கள் தொழில்களில் ஈடுபட்டு தங்கள் நேரத்தினை அதிலே செலவிடாமல், தங்கள் முழு நேரத்தையும் இஸ்லாத்தை கற்றுக்கொள்வதிலே செலவிடுவார்கள். அவர்களின் பொருளாதார ரீதியான தேவைகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பை மற்றும் சிலர் ஏற்றுக் கொள்வார்கள். இன்றளவிலும் இந்த முறை நமது நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் வழக்கிலிருக்கிறது.

நமது நாடுகளிலிருந்து பலர் எமது அண்டை நாடான இந்தியாவிற்கு இஸ்லாத்தைக் கற்பதற்காகச் செல்வார்கள். அவர்கள அங்கு சென்று தொழில் புரிவதில்லை, அவர்களின் உணவு மற்றும்

ஏனைய தேவைகளுக்கான செலவுகளை அந்தக்கல்லூரிக்கு கிடைக்கின்ற நன்கொடைகளிலிருந்து அக்கல்லூரியே செலவுசெய்யும். அதற்காக இங்கிருந்து சென்றவர்கள் எல்லோரும் சாப்பாட்டுக்காகத்தான் இந்தியா சென்றார்கள் என்று எவருமே சொல்வதில்லை. இது போன்று இயங்கிய ஒரு கல்லூரி முறையே அன்றிருந்த 'அஹ்லுஸ்ஸுஃப்பா' முறை என்று நாம் சொல்லலாம். இதிலிருந்தவர்களின் உணவுத் தேவைகளை நபியவர்கள் அவர்களுக்கு வரும் அன்பளிப்புக்களிலிருந்து நிவர்த்தி செய்வார்கள். அதற்காக அவர்கள் அனைவரும் வயிறு வளர்க்கவே நபியுடன் இருந்தார்கள் என்பது அறிவாளிகளின் வாதமல்ல.

இஸ்லாத்தில் பற்றில்லாத எவரும், மற்றவர்கள் இஸ்லாத்தை ஏற்காததற்காக வருத்தமோ, கவலையோ அடையமாட்டார்கள். ஆனால், அபூஹுரைரா ﵁ அவர்கள் இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றினால் மற்றவரும் இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கவலைப்பட்டார்கள், அவர்கள் ஏற்றுக்கொள்ளும் போது சந்தோசமடைந்தார்கள்.

அபூஹுரைரா ﵁ அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது முதல் தனது தாயும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் அவரை இஸ்லாத்தின் பால் அழைத்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால், தாயோ இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக இல்லை. இவ்வாறு தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் அபூஹுரைரா அவர்களின் தாயார் நபி ﷺ அவர்கள் விடயத்தில் தனது மகன் வெறுக்கும் விதமாகப் பேசிவிடடார்கள். அபூஹுரைரா ﵁ அவர்கள் நபியவர்களிடம் அழுதுகொண்டே வருகிறார். நபி ﷺ அவர்கள் காரணத்தைக் கேட்கிறார்கள். அபூஹுரைரா﵁ அவர்கள் காரணத்தை விளக்கியதோடு தனது தாயாரின் நேர்வழிக்காகப் பிரார்த்திக்குமாறு நபியவர்களிடம் வேண்டினார்கள்: நபியவர்களும் "இறைவா! அபூஹுரைராவின் தாய்க்கு நேர்வழி காட்டுவாயாக" என்று பிரார்த்தித்தார்கள்.



அபூஹுரைரா ﵁ அவர்கள் வீடு சென்ற போது சந்தோசமான ஒரு முடிவு அவரை வரவேற்றது. அபூஹுரைரா ﵁ அவர்களின் தாய் இஸ்லாத்தை ஏற்றிருந்தார். துக்கத்தால் அழுதுகொண்டு நபியிடம் வந்த அபூஹுரைரா ﵁ அவர்கள் மீண்டும் நபியவர்களிடம் சந்தோசத்தால் அழுது கொண்டு வந்தார்கள். நபியவர்களிடம் விடயத்தைச் சொல்லிவிட்டு மீண்டும் ஒரு பிரார்த்தனையை செய்யுமாறு கோரினார்கள். எங்களை மு.ஃ.மீன்கள் நேசிக்கக்கூடியவர்களாகவும், நாங்கள் மு.ஃ.மீன்களை நேசிப்பவர்களாகவும்இருக்க பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொண்டார்கள். நபியவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

அபூஹுரைரா ﵁ அவர்கள் கூறுனார்கள்; நபியவர்களின் பிரார்த்தனைக்குப்பின் எங்களைப்பற்றி கேள்விப்படுகின்ற மு.ஃ.மீனும் அல்லது எங்களை சந்திக்கும் எந்த மு.ஃ.மீனும் எங்களை நேசிக்கக்கூடியவர்களாகவே இருந்தனர்.'' (முஸ்லிம் 2491)

நிச்சயமாக கொள்கைப் பற்றில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக மாத்திரம் நபியவர்களுடன் இருப்பவரால், இவ்வாறான தொடர்ச்சியான முயற்சியை மேற்கொள்வது இயலாத காரியமாகும். இவ்வாறு அபூஹுரைரா ﵁ அவர்களின் கொள்கையின் உறுதியையும் ஆழத்தையும் தெளிவாக விளக்கும், ஏராளமான வரலாற்றுக் குறிப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. அபூஹுரைரா ﵁ அவர்களின் வரலாற்றைப் படிக்கும் எவரும் இத்தகைய குற்றச்சாட்டுக்களின் உண்மை நிலையை புரிந்துகொள்வதோடு தெளிவாக அவைகளை மறுக்கவும் அதற்கெதிராக பிரச்சாரம் செய்வதற்கும் முனைவார்கள்.

**✸ அபூஹுரைரா ﵁, நபி ﷺ அவர்கள் மீது இட்டுக்கட்டினார்களா?**

அபூஹுரைரா ﵁ அவர்கள் ஹி.07ம் ஆண்டு நபியவர்கள் ஹைபர் போரில் இருக்கும்போது மதீனாவிற்கு வந்தார்கள். பின்பு நபியவர்கள் மரணிக்கும் வரை நபியவர்களுடன் இருந்தார்கள்.

சுமார் 04வருடங்கள் நபிﷺ அவர்களுடன் இருந்தார்கள். ஆனாலும், ஏனைய எல்லா ஸஹாபாக்களையும் விட அதிகமான செய்திகளை அறிவித்திருக்கிறார்கள். அவர் 5374ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார். இவ்வளவு செய்திகளை நபியவர்களுடன் 10அல்லது 20வருடங்கள் இருந்த ஏனைய ஸஹாபாக்கள் அறிவிக்கவில்லை. எனவே, அபூஹுரைரா ؓ அவர்கள் நபிமீது இட்டுக்கட்டிவிட்டாரா? எனும் சந்தேகம் தோன்றுகின்றது. ஷீஆக்கள் போன்ற இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமான குழுக்கள், அவர் நபிﷺ அவர்கள் மீது இட்டுக்கட்டிவிட்டார் என்று பிரச்சாரம் செய்கின்றனர். இதன் உண்மை நிலையை சற்று விரிவாக ஆராய்வோம்.

அபூஹுரைரா ؓ அவர்கள் தனது ஹதீஸ் வகுப்பை ஆரம்பிக்கும் போது; "யார் என்மீது வேண்டுமென்று பொய்யை இட்டுக்கட்டுகிறானோ! அவன் அவனது தங்குமிடத்தை நரமாக்கிக் கொள்ளட்டும்" எனும் ஹதீஸைக்கொண்டே ஆரம்பிப்பார்கள் இது அபூஹுரைராؓ அவர்கள், தான் அறிவிக்கும் செய்திகளில் தவறுக்ள நடந்துவிடக்கூடாது என்பதில் அவதானமாக இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. நிலைமை இவ்வாறிருக்க அவர் இட்டுக்கட்டியுள்ளார் என்று சொல்வது…?

அபூஹுரைராؓ அவர்கள் தனக்கு சந்தேகமாக இருக்கும் செய்திகளை, ஏனைய ஸஹாபாக்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அறிவிக்கக்கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள். சிலபோது ஆயிஷாؓ அவர்களிடம் உறுதிப்படுத்திக்கொண்டதாக அப்துர்ரஹ்மான் அல்முஅல்லிமி (ரஹ்) அவர்கள் தனது 'அன்வாருல் காஷிபா' எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள்.

ஹதீஸ்களை இட்டுக்கட்டுபவர்கள், தவறாகச்சொல்பவர்கள் விடயத்தில் ஸஹாபாக்கள் மற்றவர்களை எச்சரித்திருக்கிறார்கள். மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்ட ஸஹாபாக்கள் இந்த விடயத்தில் யார்?, எவர்? என்று பார்க்காமல் எவராக இருந்தாலும் சுட்டிக்காட்டவும், தகுந்த



நடவடிக்கைகளை எடுக்கவும் செய்தனர். ஆனால், அபூஹுரைரா ؓ அவர்கள் விடயத்தில் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக வரலாறுகள் எதுவும் கிடையாது.

ஆயிஷா ؓ அவர்களும், இப்னு உமர் ؓ அவர்களும் அபூஹுரைரா ؓ அவர்களை இட்டுக்கட்டுகிறார் என்று சந்தேகித்ததாக சிலர் கதையளக்கின்றனர். இருவரும் அபூஹுரைரா ؓ அவர்கள் மீது சந்தேகப்பட்டதற்கான எந்த வரலாற்றுத் தடயங்களும் இல்லை. ஆனால், குறிப்பிட்ட சில செய்திகளில் அபூஹுரைரா ؓ அவர்கள் தவறிழைத்திருப்பதாக நினைத்தனர். அவைகளையும் அபூஹுரைராؓ அவர்கள் ஏனைய ஸஹாபாக்களிடம் கேட்டு உறுதிப்படுத்தியபோது தங்கள் கூற்றைக் களைந்து அபூஹுரைராؓ புகழ்ந்தார்கள்.

இமாம் ஹாகிம் (ரஹ்) அவர்கள் தனது "முஸ்தத்ரக்" என்ற நூலில் ஆயிஷா ؓ அவர்கள் அபூஹுரைராவிடம் கேட்டு அறிவித்திருப்பதாக குறிப்பிடுகின்றார். உண்மையில் ஆயிஷா ؓ அவர்கள் அபூஹுரைரா ؓ மீது சந்தேகப்பட்டிருந்தால் அவரிடமிருந்து செய்திகளை அறிவித்திருக்கமாட்டார்கள்.

இதுபோலவே, ஏராளமான ஸஹாபாக்கள் அபூஹுரைரா ؓ அவர்களிடமிருந்து செய்திகளைக் கேட்டு அறிவித்திருப்பதாக இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது "அல்-இஸாபா" என்ற நூலிலும், இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் தனது "ஸியர்" எனும் நூலிலும் குறிப்பிடுகிறார்கள். உண்மையில் அபூஹுரைரா ؓ ஹதீஸ்களை இட்டுக்கட்டியிருந்தால், பெருந்திரளான ஸஹாபாக்கள் அவரிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்திருக்கமாட்டார்கள். இவர்கள் அனைவருமே பொய்யில் ஒன்றுபட்டுள்ளார்கள் என்பது நிச்சயமாக ஊகிக்க முடியாத இமாலய விடயமாகும்.

இது தவிர, அதிகமான ஸஹாபாக்கள் அபூஹுரைரா ؓ அவர்கள் அறிவிக்கும் செய்திகள் உண்மையானவை என்றும், அவர் எங்களைவிட ஹதீஸ்களைப் பற்றி அதிகம் அறிவுள்ளவர்கள்

என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். இப்னு உமர் ﷺ அவர்கள் சொல்கிறார்கள்: அபூஹுரைரா என்னைவிட சிறந்தவர் என்னைவிட அறிந்தவர். (تهـــذيب التهـــذيب والإصـــابة)

மற்றொரு அறிவிப்பில் இப்னு உமர் ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள் "அபூஹுரைராவே நீர் எங்களிலே அதிக நேரத்தை நபியவர்களுடன் கழிக்கக்கூடியவராக இருந்தீர் நபியவர்களின் செய்திகளை எங்களைவிட அதிகம் பாடமிடுபவராகவும் இருந்தீர்" (الترمـــذي)

அபூஹுரைரா ﷺ அவர்களை சந்தேகத்தோடு பார்த்திருந்தால்! இப்னு உமர் ﷺ அவர்களினால் இவ்வாறு சொல்லமுடியுமா? நிச்சயமாக முடியாது.

தல்ஹா பின் உபைதுல்லாஹ் ﷺ அவர்களிடம் ஒரு மனிதர் வந்து "அபூ முஹம்மதே இந்த யெமன் வாசியை (அபூஹுரைராவை) நீங்கள் பார்க்கவில்லையா? அவரென்ன உங்கள் எல்லோரையும் விட ஹதீஸ்கள் பற்றி அதிக அறிவுள்ளவரா? உங்களிடம் கேட்காத பல செய்திகளை அவரிடமிருந்து கேட்கிறோமே! அவர் நபியவர்கள் சொல்லாததையெல்லாம் நபியவர்கள் சொன்னதாகச்சொல்கிறாரே?" என்று கேட்டார். அதற்கு தல்ஹா ﷺ அவர்கள் அந்த மனிதனைப் பார்த்து: "நாங்கள் கேட்காதவற்றை அவர் நபியவர்களிடமிருந்து கேட்டார் என்பதில் நாம் சந்தேகப்படமாட்டோம். நிச்சயமாக நாம் கேட்காதவற்றை அவர் கேட்டிருப்பார். ஏனெனில், அவர் ஒரு ஏழை அவருக்கு சொத்து செல்வம் இருக்கவில்லை. நபியவர்களின் விருந்தினரைப்போல இருந்தார் நபியுடைய கையுடன் அவருடைய கை இருக்கும். நாங்கள் வீடுகளின் சொந்தக்காரர்கள், செல்வந்தர்கள். நபியவர்களிடம் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள்தான் வருவோம். எனவே, நாங்கள் கேட்காத பல செய்திகளை நபியவர்களிடமிருந்து அபூஹுரைரா ﷺ கேட்டிருப்பார் என்பதில் நாம் சந்தேகப்படமாட்டோம்." (திர்மிதி)

ஹதீஸ்களைப் புனைந்துரைப்பவர்கள் விடயத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்த ஹலீபாக்களில் கலீபா



ஹாரூன் ரஷீத் பிரதானமானவர். இவருடைய காலத்தில் ஹதீஸ்களை இட்டுக்கட்டுபவர்களை கண்டுபிடிப்பதற்கென்று தனியான ஆளனி வைக்கப்பட்டிருந்தது. இவரது காலத்தில் அபூஹுரைரா ﷺ அவர்களை இவர் மிகவும் கௌரவித்தார்.

இவர் ஒரு தடவை அபூஹுரைரா ﷺ அவர்களின் ஞாபகசக்தியை பரீட்சிக்கவென, அவரை தனது மாளிகைக்கு அழைத்தார். தனது எழுத்தாளரை திரைக்குப் பின்னால் உட்காரவைத்து தான் அபூஹுரைராவிடம் கேட்கும் செய்திகளையும் அவர் சொல்லும் செய்திகளையும் பதிவு செய்யுமாறு பணித்தார். செய்திகளெல்லாம் எழுதப்பட்டன. பின்பு, சரியாக ஒரு வருடம் கழித்தபின். மீண்டும் அபூஹுரைராவை தன் அரசவைக்கு அழைத்து, தனது எழுத்தாளரையும் அழைத்து அவர் ஒரு வருடத்திற்கு முன் அபூஹுரைராவிடமிருந்து எழுதிய செய்திகளைக் கொண்டுவருமாறு பணித்தார்.

அந்த செய்திகளை அபூஹுரைரா ﷺ சொல்லும்போது திரைமறைவிலிருந்து சரிபார்க்குமாறு பணித்தார். அபூஹுரைரா ﷺ வருகிறார். ஹாரூன் ரஷீதும் தான் ஒரு வருடத்திற்கு முன் கேட்ட செய்திகளை மீண்டும் கேட்கிறார். அபூஹுரைரா ﷺ மீண்டும் அதே செய்திகளைச் சொல்கிறார். எழுத்தாளர் ஒப்பிட்டு நோக்குகின்றார். என்ன ஆச்சரியம். முன்னுக்கு வரவேண்டியதை பின்னுக்கோ பின்னுக்கு வரவேண்டியதை முன்னுக்கோ சொல்லாமல் ஒரு அச்சரம் கூட தவறாமல் அபூஹுரைரா ﷺ அவர்கள் அப்படியே சொன்னார்கள். இது அனைவரையும் மலைக்கவைத்தது. இப்படியும் ஒரு மனன சக்தியா! என்று அனைவரும் நுனிமூக்கில் விரல்வைத்துக் கொண்டனர். அவர் நபியிடம் கேட்ட அத்தனை வார்த்தைகளும் பசுமரத்தாணிபோல், சிலையில் எழுத்துப்போல அவரது உள்ளத்தில் ஆழமாக பதிந்திருந்ததை அந்த நிகழ்வு படம்பிடித்துக் காட்டிற்று. (ஸியரு அஃலாமின்னுபலா)

நிச்சயமாக, இட்டுக்கட்டும் ஒருவரால் இவ்வாறு சொல்ல முடியாது என்பது வெள்ளிடை மலை. அத்தோடு அபூஹுரைரா

ﷺ அவர்கள் நபியவர்களுடன் 04 வருடங்கள் பிரியாமல் இருந்தார்கள். இதற்குள், தான் வருவதற்கு முன்னால் நபியவர்கள் சொன்ன செய்திகளை ஏனைய ஸஹாபாக்களிடம் கேட்டு மனனமிட்டுக் கொண்டார்கள். எனவே 04 வருடங்களில் அவரிடம் பெரும் தொகையான செய்திகள் மனனமிடப்பட்டிருந்தன.

04 வருடங்களில் ஒருவர் 5374 ஹதீஸ்களை மனனமிடுவது ஒன்றும் ஆச்சரியமான காரியமல்ல. இன்றைக்கு 01வருடத்திற்குள் அல்லது 6மாதங்களுக்குள் 6000த்திற்கும் அதிகமான வசனங்களைக் கொண்டுள்ள அல்-குர்ஆனை மனனமிடும் பலர் இருக்கிறார்கள். எனவே ஹதீஸ்களை மனனமிடுவதற்கென்று தன்னை அர்ப்பணித்த ஒருவரால் இவ்வளவு செய்திகளை மனனமிடுவது சாதாரணமான விடயம். எனவே, ஹதீஸ்களைக் கூடுதலாக அறிவிக்கிறார் என்பதற்காக அவரை இட்டுக்கட்டுகிறார் என்று குற்றம் சுமத்த வேண்டிய தேவையில்லை.

**அதிகமான ஹதீஸ்களை அபூஹுரைராﷺ அவர்களினால் எவ்வாறு அறிவிக்க முடிந்தது!**

நாம் மேலே சொன்னதைப் போல அபூஹுரைராﷺ அவர்கள் அறிவித்திருக்கும் 5374செய்திகள் என்பது அவர் நபியுடன் இருந்த காலத்தை ஒப்பிடும்போது சாதாரணமாக தெரிந்திருக்கின்ற மனனமிடமுடியுமான எண்ணிக்கையில் அமைந்த செய்திகளேயாகும். ஆனால், ஏனைய ஸஹாபாக்களோடு ஒப்பிடும்போது அதிகமாக உள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது என்பதை அவதானிப்போம். இதற்கு அறிஞர்கள் பல காரணங்களைக் குறிப்பிடுகின்றனர்.

**01**. ஹதீஸ்களை மனனமிடுவதிலும் கற்றுக்கொள்வதிலும் அவருக்கிருந்த ஆர்வம்:

ஏனைய ஸஹாபாக்களைவிட அபூஹுரைரா ﷺ அவர்களிடம் இது சற்று அதிகமாகவே காணப்பட்டது. அதற்கு நபியவர்களே சாட்சி சொல்கிறார்கள்.



அபூஹுரைரா ﷺ அவர்கள் நபி ﷺ அவர்களிடம்; “மறுமையில் உங்களின் சிபாரிசிற்கு மிகவும் தகுதியானவர் யார்? ” என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் “அபூஹுரைராவே உனக்கு ஹதீஸில் இருந்த ஆர்வத்தைக் கண்ட நான் இது தொடர்பாக முதலில் உன்னைத்தவிர வேறு எவரும் கேட்கமாட்டார்கள் என்று நினைத்திருந்திருந்தேன். (அதுபோலவே நடந்துவிட்டது) மறுமையில் எனது சிபாரிசிற்கு மிகவும் தகுதியானவர். உளப்பூர்வமாக லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்பவர்தான்.'' என்றார்கள். (புஹாரி) இந்த செய்தியின் மூலம் ஹதீஸைக் கற்பதிலும் அதை மனனமிடுவதிலும் அவருக்கிருந்த ஆர்வம் சந்தேகமற நிரூபணமாகிறது.

**02**. எந்நேரமும் அபூஹுரைரா ﷺ அவர்கள் நபியுடன் இருந்தது.

ஏனைய ஸஹாபாக்களைப்போன்று அபூஹுரைரா ﷺ அவர்கள் தோட்டந்துரவுகளுக்கு சொந்தக்காரராகவோ வியாபாரம் செய்பவராகவோ இருக்கவில்லை. பிள்ளைகுட்டிகள் என்று எதுவும் அவருக்கு இல்லை அதனால், முழுமையாக நபி ﷺ அவர்களுடன் தனது நேரத்தைச் செலவிட்டார்கள். நபியவர்கள் பிரயாணத்தில் இருக்கும் போதும் ஊரில் இருக்கும்போதும் நபியுடனேயே இருப்பார்கள். இதனால் ஏனைய ஸஹாபாக்கள் கலந்துகொள்ளாத பல சபைகளில் நபியவர்களுடன் கலந்துகொள்ளும் வாய்ப்பு அபூஹுரைரா ﷺ அவர்களுக்குக் கிடைத்தது. இதுவும் ஏனைய ஸஹாபாக்களைவிட அபூஹுரைரா ﷺ ஹதீஸ்களை அதிகமாக அறிவித்ததற்கான பிரதான காரணிகளிலொன்றாகும்.

இப்னு உமர் ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; “அபூஹுரைராவே! எங்களிலே நபி ﷺ அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவராக நீர் இருந்தீர் மேலும் எங்களிலே நபியவர்களின் ஹதீஸ்களை அதிகம் அறிந்தவராகவும் இருக்கின்றீர்.'' (திர்மிதி)

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் அபூஹுரைரா ﷺ அவர்கள் பற்றிச்சொல்லும் போது, “ஏனைய ஸஹாபாக்கள் சமுகமளிக்காத

சபைகளுக்கு அவர் சமுகமளித்தார் ஏனையவர்கள் மனனமிடாதவற்றை யெல்லாம் அவர் மனனமிட்டுக்கொண்டார்.'' (புஹாரி 118)

முஸ்லிமில் உள்ள ஒரு அறிவிப்பில் அபூஹுரைரா ﵁ அவர்கள் கூறுகிறார்கள்: ''அவர்கள் (பெரும்பான்மையான ஸஹாபாக்கள்) சமுகமளிக்காத சபைகளுக்கு நான் சமுகமளித்தேன் அவர்கள் மறந்தால் நான் ஞாபகம் வைத்திருப்பேன் என்று நான் சாட்சி கூறுகிறேன்'' (முஸ்லிம் 2492)

எங்களில் நபியவர்களுடன் அதிகமாக இருந்தவரும் ஹதீஸ்கள் விடயத்தில் அதிக அறிவுள்ளவரும் அபூஹுரைராதான் என்று அதிகமான ஸஹாபாக்கள் குறிப்பிடுகிறார்கள்.

அபூஹுரைரா ﵁ அவர்கள் தனது அத்தனை வேலைகளையும் ஒதுக்கிவிட்டு இஸ்லாத்தை படிப்பதற்கென்றே தனது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார்.

அபூஹுரைரா ﵁ அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில்சொல்லும் அடிப்படையில் சொல்கிறார்:

''அபூஹுரைரா ஹதீஸ்களை அதிகமாக அறிவிக்கிறார் என்று பேசிக்கொள்கிறார்கள். அல்லாஹ்வே இதற்கு சாட்சி. முஹாஜிர்களுக்கும், அன்ஸார்களுக்கும் என்ன நடந்தது? அவர்கள் அபூஹுரைரா ﵁ அறிவிப்பதைப்போன்று ஹதீஸ்களை அறிவிப்பதில்லையே என்றும் விமர்சிக்கின்றனர். எனது சகோதரர்களான முஹாஜிர்கள் சந்தைக்குச் சென்று வியாபாரம் செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். அன்ஸார்களோ, சொத்துக்கள் அதிகம் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால், நானோ எந்த தொழிலுக்கும் செல்லாத ஏழையாக இருந்தேன் எனது பசியைப்போக்க நபியவர்களுக்கு வரும் நன்கொடைகளில் உண்டு கொண்டு எந்நேரமும் நபியவர்களுடன் இருந்தேன். இதனால் அவர்கள் வராத பல சபைகளுக்கு நான் வருவேன். அவர்கள் மறந்த செய்திகளை நான் மனனமிட்டுக்கொள்வேன்.''
(புஹாரி 2350, 2047 முஸ்லிம் 2492)



**03.** ஏனைய ஸஹாபாக்களை விட அபூஹுரைரா ﵁ அவர்களிடமிருந்த அபாரமான ஞாபசகக்தி:

அபூஹுரைரா ﵁ அவர்கள் ஏனைய ஸஹாபாக்களிலும் பார்க்க ஞாபகசக்தி கூடியவர்களாக இருந்தார்கள். இமாம்கள் இவரின் ஞாபகசக்தி நுபுவ்வத்தின் அடையாளம் என்று குறிப்பிடுகின்றனர். அதாவது இவரது ஞாபக சக்திக்காக இறைத்தூதர் ﷺ அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். அல்லாஹ் அதை ஏற்றுக்கொண்டிருந்தான். இதனால், அவருக்கு எல்லா ஸஹாபாக்களையும் விட மிகவும் அதிகமான ஞாபகசக்தி இருந்தது. இது முஹம்மத் ﷺ அவர்கள் ஒரு நபி என்பதற்கு ஆதாரமாக திகழ்கிறது.

அபூஹுரைரா ﵁ அவர்கள் ஒரு தடவை நபியவர்களிடம்: "அல்லாஹ்வின் தூதரே! நான் அதிகமான ஹதீஸ்களை உங்களிடமிருந்து கேட்கிறேன், ஆனால், அதை மறந்து விடுகிறேன்" என்று முறையிட்டார்கள், அப்போது நபியவர்கள் "உனது போர்வையை விரி" என்றார்கள். அபூஹுரைரா ﵁ அவர்கள் சொல்கிறார்கள்: நான் விரித்தேன். அவர்களின் இருகரங்களையும் மூடி எனது போர்வையில் வைத்தார்கள். பின்பு அந்தப்போர்வையை எடுத்து அணைத்துக்கொள்ளுமாறு சொன்னார்கள் அணைத்துக்கொண்டேன். அதற்குப்பிறகு நான் கேட்ட செய்திகள் எதையும் மறந்ததில்லை."
(புஹாரி 119)

மற்றொரு அறிவிப்பில் அபூஹுரைரா﵁ அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு தடவை நான் நபி ﷺ அவர்களிடம் வந்தேன். அப்போது நபியவர்கள் "என்னுடைய பேச்சை முடிக்கும் வரை யார் அவரது போர்வையை விரித்து பின்பு அதை சுருட்டிக்கொள்வது" என்றார்கள். ''அப்படி செய்பவர் என்னிடமிருந்து கேட்ட எந்த செய்தியையும் மறக்கமாட்டார்'' என்று சொன்னார்கள். ''நான் என்மீது இருந்த போர்வையை எடுத்து விரித்தேன், பின்பு சுருட்டிக்கொண்டேன். இறைவன் மீது ஆணையாக, அதற்குப்பிறகு நான் அவரிடமிருந்து கேட்ட எந்த செய்தியையும் மறந்ததில்லை." (புஹாரி 7354)

இவ்வாறு நபியவர்களின் பிரார்த்தனை அபூஹுரைரா ﷺ அவர்களுக்கு கிடைத்ததனால், எல்லா ஸஹாபாக்களையும் மிஞ்சிய ஞாபக சக்தி அவருக்கு இருந்தது இதுவும் அவர் எல்லா ஸஹாபாக்களையும் விட ஹதீஸ்களை அதிகமாக அறிவிப்பதற்குக் காரணமானது.

**04**. இறைவன் மீதிருந்த பயம்:

அறிவை மறைப்பதனால், இறைவனிடத்தில் அதிக தண்டனை கிடைக்கும் என்பதில் அபூஹுரைரா ﷺ அவர்களுக்கு இருந்த பயமும் அவர் அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பதற்கு காரணமாயிற்று.

அல்லாஹ்வின் மீது ஆணையாக இறைவேதத்தில் இரண்டு வசனங்கள் இல்லையென்றால் நான் ஒருபோதும் எந்த செய்தியையும் உங்களுக்கு அறிவித்திருக்கமாட்டேன் என்று இரண்டாம் அத்தியாயத்தின் 159, 160வது வசனங்களை அபூஹுரைரா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். (புஹாரி 2350, முஸ்லிம் 2492)

அபூஹுரைரா ﷺ அவர்கள் குறிப்பிடும் அந்த இரண்டு வசனங்களும் பின்வருமாறு:

“மக்களுக்காக நாம் வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னர் நாம் இறக்கிய தெளிவான சான்றுகளையும், வழிகாட்டலையும் யார் மறைக்கின்றார்களோ! அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சபிக்கின்றான். சபிப்ப(தற்கு உரிமை உடைய)வர்களும் சபிக்கின்றனர். ஆனால், எவர்கள் (தம் தவறிலிருந்து) பாவ மன்னிப்புக்கோரி, தம்மை சீர்திருத்திக் கொண்டு, (தாம் மறைத்தவற்றை) தெளிவுபடுத்துகின்றார்களோ! அவர்களை நான் மன்னிப்பேன். நான் மிக்க மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையவன்.” (2:159,160)

**05**. அபூஹுரைரா ﷺ அவர்களின் நீண்ட ஆயுள் :

அபூஹுரைரா ﷺ அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்ததும் மக்கள் அவரிடமிருந்து அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பதற்கான



காரணங்களிலொன்றாகும். இவர் உமைய்யா ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் ஹி.57ம் ஆண்டு மரணித்தார் என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

அபூபக்ர்ﷺ, உமர்ﷺ, உஸ்மான்ﷺ, அலிﷺ போன்ற நபியவர்களுடன் இறுக்கமான தொடர்புகள் வைத்திருந்த பெரும் ஸஹாபாக்கள் எல்லோரும் நபியவர்களின் மரணத்தின்பின் நிருவாக வேலைகளில் அதிகம் ஈடுபட்டனர். பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்ததோடு, ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். இதனால் அவர்களின் முழுநேரமும் முஸ்லிம்களின் நிருவாக வேலைகளைக் கவனிப்பதிலேயே கழிந்தது. ஹதீஸ்களை அறிவிப்பதற்கோ, மக்களுக்கு மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பதற்கோ, அவர்களுக்கு பெரிதாக நேரம் கிடைக்கவில்லை. ஏனைய ஸஹாபாக்கள் ஹதீஸ்களை அறிவித்ததனால் அவர்கள் முஸ்லிம்களின் நிருவாக வேலைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். இதனால் அபூஹுரைராﷺ, இப்னு அப்பாஸ்ﷺ, இப்னு உமர்ﷺ, ஆயிஷாﷺ போன்ற ஸஹாபாக்கள் ஹதீஸ்களை அறிவிப்பதிலும், இளம் ஸஹாபாக்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மார்க்கத்தை போதிப்பதிலும் ஈடுபட்டனர். மொத்தத்தில் அவர்களுக்கு மத்தியில் பொறுப்புக்கள் பகிரப்பட்டுள்ளன என்பதை உணரலாம்.

அப்துர்ரஹ்மான் அல்-முஅல்லிமி (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்:

“நபிﷺ அவர்களுக்குப்பின் அபூபக்ர்ﷺ அவர்கள் இரண்டு வருடங்கள்தான் வாழ்ந்தார்கள். அந்த இரண்டு வருடமும் ஆட்சித்தலைவராக இருந்து முஸ்லிம்களின் விவகாரங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டார்கள். அபூபக்ர் ﷺ அவர்களின் காலத்தில் உமர் ﷺ அமைச்சுப் பதவிகளில் இருந்ததோடு, வியாபாரத்திலும் ஈடுப்பட்டார்கள். அபூபக்ர்ﷺ அவர்களின் பின்பு முஸ்லிம்களின் விவகாரங்களைக் கவனிக்கின்ற கலீபாவானார்கள்.

இமாம் ஹாகிம் அவர்கள் தமது 'முஸ்தத்ரக்' எனும் நூலில் அறிவிக்கிறார்கள்: முஆத்பின் ஜபல் ﷺ அவர்கள் தமது தோழர்களுக்கு அறிவைத் தேடுமாறு உபதேசித்ததோடு, அபுத்தர்தா ﷺ, ஸல்மான் ﷺ, இப்னு மஸ்ஊத் ﷺ, அப்துல்லாஹ் ﷺ போன்ற ஸஹாபாக்களிடம் கற்றுக்கொள்ளுமாறும் சொன்னார்கள் அப்போது யஸீத் பின் உமைரா 'உமர் ﷺ அவர்களிடம் கற்கலாமா?' என்று கேட்டார். அதற்கு முஆத் ﷺ அவர்கள் அவரிடம் எதைப்பற்றியும் நீ கேட்காதே! ஏனெனில், அவர் வேறு விடயங்களில் கவனம் செலுத்துகிறார் என்றார்கள். உஸ்மான் ﷺ, அலி ﷺ அவர்கள் எல்லோரும் அமைச்சுப்பதவிகளை வகித்தனர். பின்பு ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர். அதிகமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தனர். அறிவைத்தேடிப் பிரயாணம் செய்தவர்கள் எல்லோரும், இவர்களைப் போன்றவர்களை அதிகமாக கௌரவித்ததோடு, அவர்கள் நிருவாக வேலைகளில் ஈடுபட்டதனால் அவர்களுக்கு ஹதீஸ்களை அறிவிப்பதில் தவறுகள் ஏற்படலாம் என்று பயந்ததன் காரணமாக அவர்களிடமிருந்து ஹதீஸ்களை கற்பதை குறைத்துக்கொண்டனர்.

எல்லா ஸஹாபாக்களும் நம்பிக்கையானவர்களாகவும், பலம் வாய்ந்தவர்களாவும் இருந்ததனால் அவர்கள் (நிர்வாகத் துறையில் ஈடுபட்டவர்கள்) அல்லாத ஏணைய ஸஹாபாக்களிடம் கற்றுக்கொண்டனர். நிருவாக வேலைகளில் ஈடுபட்டிருந்த பெரும் ஸஹாபாக்கள்: அவசியமான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் கட்டாயம் எத்திவைத்தேயாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது என்று கருதினர். ஏனெனில், ஏனைய ஸஹாபாக்கள் அதை எத்திவைக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளனர். நாம் அவர்களின் நிருவாக வேலைகளில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறே, சென்றால் நபியவர்களின் ஹதீஸ்களில் எதுவுமே வீணாகிவிடாது என்று நம்பினர். அது போல் அதிகமான ஸஹாபாக்கள் இருக்கிறார்கள் அவர்கள் நிலைத்திருக்கும் காலம் இன்னும் அதிகமாகவே உள்ளது பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான செய்திகளைச் சொல்வதற்கான சந்தர்ப்பங்கள் இன்னும் அதிகமாகவே உள்ளது.



(எனவே, எப்படியும் ஸஹாபாக்கள் இந்த ஹதீஸ்களை எத்திவைத்துவிடுவார்கள்) என்று கருதினர்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் தனது மார்க்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளான். அத்தோடு ஹதீஸ்களை அறிவிக்கும்போது தவறுகள் நடப்பதை ஸஹாபாக்கள் பயந்தனர். கட்டாயம் மார்க்கத்தை எத்திவைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் தவறுகள் நடப்பதை அவர்கள் மன்னிக்க முடியுமான ஒன்றாக கருதினர். ஆனால் அவசியம் இல்லாத சந்தர்ப்பங்களில் ஒருவர் ஹதீஸ்களை அறிவித்து தவறு விடுவதை கடுமையானது என்று கருதினர். இதனால், தங்களைவிட மற்றவர்கள் எத்திவைப்பதையே அதிகம் விரும்பினார்கள். அதேவேளை அதிகமான ஹதீஸ்களை அறிவித்துமுள்ளனர்.'' (الأنوار الكاشفة 142)

**06)** மதீனாவில் வசித்தமை:

நபியவர்கள் உயிருடன் இருந்தபோதும், மரணித்தபின்பும் இஸ்லாத்தை கற்க விரும்புவோர், ஹதீஸ்களை தேடிப்பிரயாணம் செய்பவர்களும் மதீனாவை நோக்கியே அதிகம் படையெடுத்தனர். மதீனாவில் வாழ்ந்த அறிஞர்கள் பற்றிய மதிப்பு அவர்களின் உள்ளங்களில் சற்று அதிகமாகவே இருந்தது. இதனால், மதீனாவில் வாழ்ந்த ஸஹாபாக்களுக்கே அதிகம் ஹதீஸ்களை அறிவிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதிகமான ஸஹாபாக்கள் யுத்தங்கள், இஸ்லாத்தைத் தழுவிய பிரதேச மக்களுக்கு மார்க்கத்தைச் சொல்லிக்கொடுத்தல், நிருவாக வேலைகளில் ஈடுபடுதல் போன்ற காரணங்களுக்காக மதீனாவை விட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்தனர். அபூஹுரைராவை விட ஹதீஸ்களை அதிகமாகத் தெரிந்தவராகக் கருதப்படும் அப்துல்லாஹ் பின் அம்ர் ﷺ அவர்கள் தாயிப் பிரதேசத்தில் நிருவாக வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். தாயிப் பிரதேசத்திற்கு மாணவர்களின் வருகை மிகக்குறைவாகவே இருந்தது.

ஆனால், அபூஹுரைரா ﷺ அவர்களோ மதீனாவில் இருந்தார்கள். மாணவர்களின் வருகை அதிகமாக இருந்தது. இளம் ஸஹாபாக்களில் அதிகமானவர்கள் அவரிடம் மார்க்கத்தைக் கற்றுக் கொண்டார்கள். நிர்வாக வேலைகளில் ஈடுபட்டிருந்த ஸஹாபாக்களிடம் ஏதாவது மார்க்க விவகாரங்கள் பற்றிக்கேட்டால் அபூஹுரைரா ﷺ அவர்களிடம் செல்லுமாறு சொல்வார்கள், இதனால் அபூஹுரைரா ﷺ அவர்களுக்கு ஏனைய ஸஹாபாக்களை விட அதிகமான ஹதீஸ்களை அறிவிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் தனது 'ஸியரு அஃலாமின்நுபலா' எனும் வரலாற்றுப் புகழ்மிக்க நூலிலே அபூஹுரைராவிற்கு 800 மாணவர்கள் இருந்ததாக குறிப்பிடுகின்றார்கள். சில அறிஞர்கள் அபூஹுரைராவின் மாணவர்களை மாத்திரம் சொல்லும் அடிப்படையில் தனியான பல நூல்களை எழுதியுள்ளனர். அந்த அளவுக்கு அதிகமான, சிறந்த மாணவர்கள் அபூஹுரைரா ﷺ அவர்களுக்கு இருந்தார்கள். இதுவும் அபூஹுரைரா ﷺ அவர்கள் அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பதற்கு காரணமாக இருந்தது.

❁❁❁



## ஆயிஷா ﷺ அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்.

### ★ ஆயிஷா ﷺ அவர்கள் தப்பான நடத்தையுடையவர்களா?

நபி ﷺ அவர்களின் மிகுந்த விருப்பத்திற்குரிய மனைவியான ஆயிஷா ﷺ அவர்களைப்பற்றி ஷீஆக்களின் நூல்கள் தப்பும் தவறுமாக விமர்சிக்கின்றன. இறை நம்பிக்கையாளர்களின் அன்னை அவர்களை விபச்சாரி என்றும் விபச்சாரிகளின் வழிகாட்டி, விபச்சாரிகளின தாய் என்றும் விமர்சிக்கின்றன.

அனைவரும் மதிக்கின்ற நபியவர்களின் புகழுக்கு உரித்தான அன்னை அவர்கள் தொடர்பான உண்மை நிலையை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

நபியவர்கள் போருக்கு செல்லும்போது தனது மனைவியர்களில ஒருவரை குலுக்கல் மூலம் தெரிவு செய்து அழைத்துச் செல்வார்கள். வழமைபோன்று ஒரு யுத்தத்திற்கு செல்வதற்காக தயாரானபோது குலுக்கல் மூலம் அன்னை ஆயிஷா ﷺ அவர்களின் பெயர் தெரிவானது, அன்னையவர்களுக்கென்று பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட 'ஹவ்தஜ்' என்று சொல்லப்படும் கூடாரத்திற்குள் அமர்த்தப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டார்கள்; யுத்தம் முடிந்து திரும்பும் வழியில் ஓர் இடத்தில் தங்கியிருந்தார்கள்.

அன்னை ஆயிஷா ﷺ அவர்கள் அவசரதேவை நிமித்தம் கூடாரத்திலிருந்து வெளியாகி மக்கள் கண்களுக்கு தெரியாத ஒரு இடத்திற்கு சென்று தன் தேவையை நிறைவேற்றி விட்டு திரும்பும் வழியில் தன் கழுத்தில் எதேச்சையாக கையை வைத்தார்கள். கழுத்தில் இருந்த மாலையைக் காணவில்லை. அதிர்ச்சி அடைந்த அன்னை அவர்கள் மாலையை தேடும்பணியில் ஈடுபட்டார்கள். மாலையை தேடும் அவசரத்தில் தான் ஒரு குழுவுடன் வந்திருப்பதையே மறந்துவிட்டார்கள். சற்று நேரத்தில் மாலையை கண்டெடுக்கிறார்கள். பிரயாணக் குழுவை நோக்கி ஓடோடி வருகிறார்கள். நபி ﷺ அவர்கள், அன்னை வந்த கூடாரம் எதுவுமே இருக்கவில்லை.

எல்லோருமே சென்றுவிட்டனர். செய்வதறியாது திகைத்துப்போன அன்னை அவர்கள், எப்படியும் விடுபட்ட பொருட்களை எடுத்துவருவ தெற்கென்று யாரையாவது அனுப்பிவைப்பார்கள் அல்லது நான் இல்லாததை தெரிந்து கொண்ட பின்பாவது திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையில் கூட்டம் தங்கி இருந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தக்காலத்தில் பெண்கள் மிகவும் மெல்லியாக இருப்பார்கள். அவர்கள் எப்போதும் மென்மையான உணவுவகைளையே உண்பதால் அவர்களின் உடல் பெருத்திருக்காது. இதனால் கூடாரத்தில் ஆயிஷா ﵂ அவர்கள் இல்லை என்பது, நபியவர்களுக்கு தெரியவில்லை. ஆயிஷா ﵂ அவர்கள் இருக்கிறார்கள் என்ற நினைவில் கூடாரத்தை ஏற்றிக்கொண்டு கூட்டம் கிளம்பி விட்டது.

கூட்டம் திரும்பும்போது பின்னால் இறுதியாக ஒருவரை வருமாறு சொல்வது நபியவர்களின் வழமை. அவர் சற்று நேரம் தாமதித்து வருவார். இந்தக்கூட்டத்தில் பிந்திவரும் பொறுப்பை ஸப்வானிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வழமைபோன்று ஸப்வான்: எதையாவது விட்டுச்சென்றிருக்கின்றார்களா? என்று சுற்றும் முற்றும் பார்க்கிறார். சற்று தொலைவில் ஒரு கருத்த உருவம் இருப்பதைக் காண்கிறார். யாரென்று அவருக்கு தெரியவில்லை உருவத்தின் அருகே வந்ததும் நபியவர்களின் அன்பு மனைவி ஆயிஷா﵂ என்பதை உணர்ந்தபோது எங்கள் அன்னையை விட்டுச்சென்றிருக் -கிறார்களே! என்று ஆச்சரியத்தோடு “இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்” என்கிறார். அன்னை அவர்களும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தார்கள், ஸப்வான் மேலதிகமாக எதுவும் பேசவில்லை. வாகனத்தை பணிக்கிறார் அதிலிருந்த கூடாரத்திற்குள் அன்னை அவர்கள் ஏறி உட்கார்ந்துகொள்கிறார்கள், மதீனாவை நோக்கி வண்டி நகர்கிறது. ஆயிஷா ﵂ அவர்கள் சொல்கிறார்கள்: மதீனா செல்லும் வரை நானும் அவருடன் பேசவில்லை. அவரும் “இன்னாலில்லாஹ்..” என்று ஆரம்பத்தில் சொன்னதைத்தவிர வேறு எதையும் சொல்லவில்லை.



மதீனாவிற்கு ஷப்வானின் வண்டி வருவதற்கு முன் நயவஞ்சகர்களின் தலைவன் உபை இப்னு ஸலூல் திட்டமிட்டு விசமப்பிரச்சாரத்தை மேற்கொண்டான். ஆயிஷாவும் ஸப்வானும் ஒரு இரவு தனியாகத் தங்கி தப்பான நடத்தையில் ஈடுபட்டுவிட்டு திரும்புகின்றனர் என்ற தகவல் நயவஞ்சகர்களின் நாவுகளில் பட்டுத்தெறிக்கிறது. இந்த செய்தியை சில ஸஹாபாக்களும் நம்பிவிட்டனர்.

ஊர் முழுக்க கதை பரவினாலும் இவை எதுவும் தெரியாத ஆயிஷா ﵂ அவர்கள் வீட்டுக்கு வருகிறார்கள். நபி ﷺ அவர்கள் எப்போதும்போல் இல்லாமல் சற்று வித்தியாசமாக இருக்கிறார்கள். ஏதோ நடந்திருக்கிறது என்ற ஐயம் ஆயிஷா ﵂ அவர்களுக்கு ஏற்படுகிறது. எதையும் விசாரிக்கவில்லை, வேறொரு வேலைக்காக உம்மு மிஸ்தஹ் ﵂ அவர்களுடன் வெளியில் செல்லுகிறார்கள். அப்போது உம்மு மிஸ்தஹ் அவர்கள் ‘மிஸ்தஹ் பெரியதொரு தப்பை செய்து விட்டான்’ என்று ஏசுகிறார்கள். விசயம் தெரியாத ஆயிஷா﵂ அவர்களோ! அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. மிஸ்தஹ் ஈமான் கொண்டவர் என்று தடுக்கிறார்.

பின்பு, இரண்டாவது முறையும் உம்மு மிஸ்தஹ் மிஸ்தஹை ஏசுகிறார். இந்த முறையும் அன்னை அவர்கள் தடுக்கிறார்கள் மூன்றாவது முறையாகவும் உம்மு மிஸ்தஹ் ஏச ஆரம்பித்ததும் அன்னையவர்கள் என்ன விடயம் என்று விசாரிக்கிறார்கள். அப்போது அன்னை ஆயிஷா﵂ அவர்கள் பற்றி வந்த செய்தியையும் அதை நம்பி மிஸ்தஹ் ஏமாந்துபோனதையும் உம்மு மிஸ்தஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள். தான் நினைத்தும் பார்த்திராத இந்த விடயத்தை கேள்விப்பட்டதும் தன் மீது பெருமொரு மலையையே தூக்கிப் போட்டதைப்போல மனதிற்கு மிகவும் பாரமாக அவர்களுக்கு இருந்தது. இந்த நிலையிலேயே வீட்டுக்கு வருகிறார்கள். நபி ﷺ அவர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள். நபிவர்களின் முகத்தில் வித்தியாசமான உணர்வுகள் இருப்பதைக் கண்டுகொண்ட அன்னை ஆயிஷா﵂ அவர்கள் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தார்கள்.

நபியவர்களும் ஒரு சாதாரண மனிதனாக இருந்ததால் இந்த விடயத்தில் எது உண்மை என்று அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. சில ஸஹாபாக்களிடம் நபியவர்கள் இந்த விடயம் தொடர்பில் ஆலோசனை கேட்டார்கள். அவர்கள் எவருமே அன்னை அவர்களைப்பற்றி தப்பான முறையில் விமர்சிக்கவில்லை. எல்லோரும் அவர்கள் விடயத்தில் நல்லதையே சொன்னார்கள். ஆனாலும், எதுவும் நடக்கவில்லை என்று மக்களுக்கு தெளிவுபடுத்த இவை போதாது என்பது நபியவர்களுக்குத்தெரியும், அதுபோல அல்லாஹ்வும இதுதொடர்பில் ஏதாவது தெளிபடுத்துவான் என்று நபியவர்கள் நினைத்திருந்தார்கள். இதனால், பொறுமையுடன் இருப்போம் என்று நினைத்து வேதனையோடு நாட்களை கழித்தார்கள்.

இதுபோலவே, ஆயிஷா ﷺ அவர்களும் அழுதுகொண்டே நாட்களைக்கழித்தார்கள். தன் தந்தையிடமும் தாயிடமும் செல்ல அன்னை அவர்கள் அனுமதிகேட்டார்கள். நபியவர்களும் அனுமதி வழங்கவே தன்குடும்பத்தினரிடம் சென்ற ஆயிஷா ﷺ அவர்களை தாயும் தந்தையும் அன்போடு அரவணைத்தார்கள்நம் பரம்பரையிலே இப்படி ஒன்று நடந்ததில்லை. எனவேஇது நிச்சயம் பொய்யானதாகவே இருக்கும் என்று ஆயிஷாவிற்கு ஆறுதல் கூறினர். ஒரு மாதம் உருண்டோடியது. ஆனால், ஆயிஷா ﷺ அவர்களின் அழுகை நிற்கவில்லை.

திடீரென்று ஒரு நாள் நபியவர்கள் ஆயிஷாவின் வீட்டுக்குள் நுழைந்தார்கள். ஆயிஷாவே! நீ தூய்மையானவளாக இருந்தால் அல்லாஹ் உன்னைத் தூய்மைப்படுத்துவான் தப்பு செய்திருந்தால் அல்லாஹ்விடம் தௌபாச்செய்துகொள், நிச்சயமாக அல்லாஹ் தௌபாவை ஏற்றுக்கொள்வான் என்றார்கள். அன்னையவர்கள் அழுதுகொண்டே தன் தாயிடமும் தந்தையிடமும் நபியவர்களுக்கு பதிலளிக்குமாறு வேண்டினார்கள். ஆனால், அவர்களோ நீதான் பதில் சொல்லவேண்டும் என்று மறுத்துவிடுகின்றனர். அன்னை ஆயிஷா ﷺ அவர்கள் அழுதுகொண்டே நான் பரிசுத்தமானவள் என்பது அல்லாஹ்வுக்குத் தெரியும். ஆனால், நீங்கள் பேசுவதைப்



பார்த்தால் உங்களுக்கே சந்தேகமாக இருப்பதைப்போல் தோன்றுகிறது என்று கூறினார்கள்.

உறுதிப்படுத்த சரியான ஆதாரங்கள் இல்லாமல் தவித்த நபியவர்களுக்கு ஆயிஷா ﷺ அவர்கள் பேசி முடித்ததும் இறைவனின் புறத்திலிருந்து வஹி வந்தது. “அந்நூர்” அத்தியாயத்தில் அல்லாஹ் 10 வசனங்களை இறக்கிவைத்தான். இந்த வசனத்தில் நிச்சயமாக இந்த செய்தியைக்கொண்டு வந்தவர்கள் உங்களுடன் இருக்கும் ஒரு நயவஞ்சகக் கூட்டம், அவர்களுக்கு கசையடி வழங்குமாறும், ஆயிஷா ﷺ அவர்கள் பத்தினி என்பதையும் இறைவன் தெளிவுபடுத்தினான்.

பிற்பட்ட காலங்களில் ஆயிஷா ﷺ அவர்கள் சந்தோசத்தோடு இந்த விடயத்தை ஞாபகப்படுத்துவார்கள். ‘இறைவன் நபியவர்களுக்கு இந்த விடயத்தின் உண்மை நிலையை ஒரு கனவின் மூலம் தெளிவு படுத்த வேண்டும் என்றே நான் நினைத்திருந்தேன். ஆனால், மறுமை வரைக்கும் ஓதப்படுமளவுக்கு குர்ஆன் வசனங்களாக இதை இறக்குவான் என்று நான் நினைக்கவில்லை’ என்பார்கள்.

எனவே, ஆயிஷா ﷺ அவர்கள் மீது சொல்லப்படும் இந்த அபாண்டத்திலிருந்து அவர்கள் தூரமானவர்கள் என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**✸ ஆயிஷா ﷺ அவர்களுக்கும் அஹ்லுல் பைத்தினருக்கும் மத்தியில் குழப்பமா?**

ஆயிஷா ﷺஅவர்களுக்கும் அலி ﷺ அவர்களுக்கும் மத்தியில் ஜமல் போர் நடந்தது. இது என்ன காரணத்திற்காக நடந்தது என்பதை நாம் ஜமல் போர் பற்றி சொல்லும் போது குறிப்பிட்டோம். ஆனால் ஷீஆக்களும் கீழைத்தேய ஆய்வாளர்களும் இந்தப்போருக்கான காரணம் அப்போது ஏற்பட்ட உஸ்மான் ﷺ அவர்களின் கொலையோ அல்லது அதற்கு அலி ﷺ அவர்கள் பலிவாங்காமல் இருந்ததோ அல்ல. ஆயிஷா ﷺ அவர்களுக்கும்

அலி ﷺ அவர்களுக்கும் மத்தியில் ஏற்கனவே நபியவர்களின் காலத்திலிருந்தே மனக்கசப்பு இருந்தது அதை தீர்த்துக்கொள்ளவும் அதற்காக அலிக்கு பாடம் புகட்டவும் ஆயிஷா தருணம் பார்த்திருந்தார். அது இந்த சந்தர்ப்பத்தில்தான் கைகூடியது. அதனால் அதை பயன்படுத்திக்கொண்டார் என்று குறிப்பிடுகிறார்கள்.

அப்படி போராட்டம் நடத்துகின்ற அளவுக்கு என்ன மனக்கசப்பு என்று கேட்டால்: ஆயிஷா ﷺ அவர்கள் பற்றி சொல்லப்பட்ட செய்தியில இறைவனிடமிருந்து வஹி வரும்வரை நபியவர்களுக்கு உண்மை தெரியவில்லை. இதனால், பல ஸஹாபாக்களையும் அழைத்து ஆலோசனை கேட்டார்கள். ஆயிஷா அப்படி நடந்திருப்பாரா? என்று வினவினார்கள்.

அப்போது, நபியவர்களுக்கு இருந்த கவலையைப்பார்த்த அலி ﷺ அவர்கள் சொன்னார்கள்: இப்படி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஆயிஷாவை விட்டாலென்ன, வேறு ஒரு திருமணத்தை செய்து கொள்ளுங்கள். தாங்கள் விரும்பிய பெண்ணை மணந்துகொள்ளலாம் என்று சொன்னார்களாம். இதற்காகவே ஆயிஷா ﷺ பழிவாங்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்களாம். அத்தோடு இந்த கசப்பினால், ஆயிஷா ﷺ அவர்கள் ஹதீஸ்களை அறிவிக்கும் போது; அலி ﷺ அவர்களின் பெயரையோ அல்லது அவரின் மனைவி பாதிமாவின் பெயரையோ சொல்வதில்லையாம். அதற்கு பதிலாக ஒருத்தன், ஒருத்தி என்றுதான் சொல்வார்களாம். இவ்வாறு ஷீஆக்கள் கதையளக்கின்றனர்.

ஜமல் போர் நிகழ்ந்ததற்கு: இஸ்லாத்தின் எதிரிகளான ஷீஆக்களும் கீழைத்தேய ஆய்வாளர்களும் சொல்லும் காரணம் வெறும் கற்பனையே. இதற்கு ஆதாரங்கள் எதுவுமில்லை. இவர்கள் சொல்வதற்கு எதிராகவும் ஒருவர் கற்பனை செய்யலாம். அலி ﷺ அவர்கள் ஆயிஷாவை பழிவாங்கவும் அவர்களைக் கொலை செய்யவும் திட்டம் தீட்டினார்கள் என்று சொல்ல முடியும் அல்லது தல்ஹாவையும் ஸுபைரையும் தீர்த்துக்கட்டினால் தனது மகனுக்கு



தனக்குப்பிறகு ஆட்சி கிடைக்கும் என்ற நோக்கத்தில் எல்லோரையும் ஒரே இடத்தில் தீர்த்துக்கட்டுவதற்கான சந்தர்ப்பமாக அலி ﷺ அவர்கள் இந்த ஜமல் போரை நடத்தினார்கள் என்று சொல்லலாம். உஸ்மான் ﷺ அவர்களைக் கொலை செய்த கும்பல் இருக்கும் இடத்திற்கு அவர்களைத்தேடி ஆயிஷா ﷺ அவர்களின் தரப்பார் சென்றபோது இவர்களுக்கு எதிராக அலி ﷺ அவர்கள் மதீனாவிலிருந்து ஏன் படை திரட்டிவர வேண்டும் என்றும் கேட்கலாம்.

அல்லது, உஸ்மானைக் கொலை செய்ததில் அலி ﷺ அவர்களுக்கு பங்கு இருந்தது ஆயிஷா ﷺ அவர்களின் தரப்பார் உஸ்மான் ﷺ அவர்களை கொலைசெய்த சிலரை பிடித்தார்கள் என்றால் விடயம் அம்பலமாகிவிடும் என்பதற்காக ஆரம்பத்திலேயே இவர்களை அழித்துவிடுவதற்கு அலி ﷺ யோசித்தார்கள் என்று சொல்லலாம். இவ்வாறு விட்டால், கற்பனை செய்து சொல்லிக்கொண்டே இருக்கலாம் எதற்கும் ஆதாரமில்லை, ஆதாரமிருப்பதைப்போன்று மக்களிடம் சித்தரிக்கலாம். அல்லாஹ் எம்மைப்பாதுகாப்பானாக. நாம இவ்வாறு சொல்லவில்லை. குற்றச்சாட்டுக்களின் போலித்தன்மையைத தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே சில ஊகங்களை குறிப்பிட்டோம். சகோதரர்கள் மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடப் பார்க்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே சொன்னோம்.

நபி ﷺ அவர்களின் வேதனையைப் பார்த்து அவரை ஆறுதல் படுத்துமுகமாகவே அலி ﷺ அவர்கள், ஆயிஷா போனால் என்ன வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளலாம் என்று சொன்னார்கள். இது சாதாரணமாக மனைவியால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் ஆறுதல் கூறும்போது நாம் பயன்படுத்தும் வாசகம். இது போன்று நபியவர்கள் விசாரித்த ஒவ்வொரு ஸஹாபாக்களும் ஒவ்வொரு பதில் சொன்னார்கள். இதனால், ஆயிஷா ﷺ அவர்கள் கோபப்பட்டதாகவோ அவர்களை பழிவாங்குவதற்காக செயற்பட்டதாகவோ வரலாறு இல்லை. உண்மையில் அவ்வாறான எண்ணம் அவரிடம் இருந்திருந்தால் அவர் தனது தந்தை அபூபக்ர் ﷺ அவர்களின்

ஆட்சிக்காலத்தில் செய்திருப்பார் அதிகாரம் கையிலிருக்கும் போது அதை தவற விட்டுவிட்டு அலி ﷺ அவர்கள் ஆட்சியில் இருக்கும் போது செய்யவேண்டிய அவசியமில்லை.

ஆனால், இதற்கு எதிர்மறையாகஅபூபக்ர் ﷺ அவர்களின் ஆட்சியில் அலி ﷺ அவர்கள் முக்கிய பொறுப்பில் அமர்த்தப்பட்டதோடு அரசாங்கத்தின் முக்கிய பங்காளியாகவும் இருந்தார்கள், என்று வரலாறு சொல்கிறது.

ஜமல் போர் ஏன் நடந்தது? எவ்வாறு நடந்தது? என்பதை நாம் அந்த தலைப்பிலே தெளிவாக விளக்கினோம். உண்மையில், ஆயிஷா ﷺ அவர்களுக்கு, அலி ﷺ அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால், அவருக்கு எதிராகவே போர் தொடுத்திருப்பார்கள். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. அவர் இருந்த பிரதேசத்தை நோக்கியும் படை செல்லவில்லை. அலி ﷺ அவர்கள்தான் படைதிரட்டி ஆயிஷா ﷺ அவர்களையும் அவருடன் வந்த படையையும் தேடி வந்தார். எனவே, வேண்டுமென்று போர் தொடுத்தார் என்று கற்பனை செய்வதாக இருந்தால் அதற்கு அலி ﷺ அவர்களின் செயல்தான் மிகவும் பொருத்தமானது. அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக.

அலி ﷺ என்ற ஒரு தனிமனிதனை பழிவாங்குவதற்காக தன்னிடமிருந்த பல்லாயிரம் படையினரையும், அலி ﷺ அவர்களுடன் இருந்த பல்லாயிரம் பேரையும் ஆயிஷா ﷺ பயன்படுத்தினார்கள் என்று சொல்வது எவ்வளவு ஆபத்தானதும் அபத்தமானதும் என்பதை சம்மந்தப்பட்ட சகோதரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெறும் ஊகத்தை மையமாக வைத்து இளவயதிலிருந்தே நபியவர்களின் பயிற்றுவிப்பில் வளர்ந்த, நபியவர்கள் அதிகம் நேசித்த ஒரு பெண், பல பேரின் கொலைக்குக் காரணமாக இருந்தார் என்று நீங்கள் சொல்லவருகிறீர்களா?. (அல்லாஹ் போதுமானவன்)



ஹதீஸ்களை அறிவிக்கும்போது ஆயிஷா ﷺ அவர்கள்: பாதிமா ﷺ, அலி ﷺ அவர்களின் பெயர்களை குறிப்பிடுவதில்லை என்ற விமர்சனம் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முனையும் மொத்தப்பொய்யும், ஏமாற்று வேலையுமாகும்.

ஆயிஷா ﷺ அவர்கள் ஹதீஸை அறிவிக்கும் போதெல்லாம் தொடர்பில்லாமல் பாதிமா அலி, பாதிமா அலி என்று இருவரின் பெயரையும் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை, அவ்வாறு குறிப்பிடுமளவுக்கு அவர் ஷீஆக்களைப்போன்ற கூழ் முட்டையுமல்ல. எந்த இடங்களில் அவர்கள் தொடர்பான செய்தி வருகிறதோ, அந்த இடங்களில் பெயரை குறிப்பிடவேண்டிய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டால் போதுமானது. தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

ஷீஆக்கள் அஹ்லுல் பைத்திற்கு ஆதாரம் பிடிக்கின்ற போர்வை ஹதீஸ் எனும் பிரபல்யமான செய்தியை அறிவிப்பது ஆயிஷா ﷺ அவர்கள்தான். இது அவரின் மனதின் தூய்மையைக் காட்டுகிறது. ஷீஆக்கள் விமர்சிப்பதைப்போன்று குரூர எண்ணம் கொண்டவராக அவர் இருந்திருந்தால் அந்த செய்தியை அறிவித்திருக்கமாட்டார். (அல்லாஹ் போதுமானவன்). அதிலே அலி ﷺ , பாதிமா ﷺ, ஹஸன் ﷺ, ஹுஸைன் ﷺ போன்ற அத்தனைபேருடைய பெயரையும் ஆயிஷா ﷺ அவர்கள் குறிப்பிடுகிறார்கள். உண்மையில் அவருக்கு இவர்களின் பெயரைச் சொல்ல பிடிக்கவில்லை என்றிருந்திருந்தால், நபியவர்கள் தனது பிள்ளை, மற்றும் அவரது கணவன் அவர்களின் பிள்ளைகளையும் அழைத்தார்கள் என்று சொல்லியிருக்கலாம். அல்லது இது அல்லாத அவர்களைக் குறிக்கின்ற விதத்தில் வேறு வார்த்தைகளை சொல்லியிருக்கலாம். அவ்வாறு அவர் செய்யாமலிருந்ததே அவர்களுக்குள் எந்தப்பிரச்சினையும் இல்லை என்பதைக் காட்டுகிறது.

நபியவர்கள் ஒரு தடவை **அலி ﷺ, பாதிமா** ﷺ, ஹஸன்ﷺ, ஹுஸைன் ﷺ ஆகியோரை ஒரு போர்வையினால் மூடிவிட்டு "இறைவா! இவர்கள் எனது குடும்பத்தினர். அவர்களை நீ தூய்மைப்படுத்துவாயாக" என்று பிரார்த்தித்தார்கள். இந்த செய்தியை ஆயிஷா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம் 2424)

மஹ்ஸூமிய்யா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடியபோது அவளின் கரம் துண்டிக்கப்படாமல் இருக்க உஸாமா ﷺ அவர்கள் நபியவர்களிடம் சிபாரிசு செய்தார்கள். அப்போது நபியவர்கள்: ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் **பாதிமா**தான் திருடியிருப்பினும் அவளது கரத்தை துண்டித்துவிடுவேன்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷாﷺ நூல்: புஹாரி, முஸ்லிம்

❁❁❁



# ஷீஆக்களால் முடியுமா ?

ஸஹாபாக்களை காபிர்கள், நயவஞ்சகர்கள், உலக ஆதாயங்களுக்காக நபியுடன் நடித்து வாழ்ந்தார்கள் என்று விமர்சித்து மறு உலக பயன்களை இழந்துவிட்ட ஷீஆக்களின் கொள்கைகள் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தப்பகுதியில் ஷீஆக்களிடம் சில பதில் சொல்ல முடியாத கேள்விகளை அல்லது சவால்களை முன்வைக்க விழைகிறேன்.

**01)** எல்லா ஸஹாபாக்களையும் காபிர்கள் என்று விமர்சித்துவிட்டு நபியின் குடும்பத்தில் உள்ள முக்கியமான சிலரிடமிருந்துதான் மார்க்கத்தை நாம் எடுப்போம் என்று சொல்கின்ற நீங்கள் உங்களால் முடியுமென்றால், நடைமுறைக்குச் சாத்தியமான, பூரணமான எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லுகின்ற ஒரு மார்க்கத்தை கொண்டு வாருங்கள் பார்க்கலாம்.!

உங்களால் முடியாது. நீங்கள் அஹ்லுல் பைத்தாக நினைக்கின்றவர்களின் மொத்த ஹதீஸ்களே 300ஐத் தாண்டாது இப்படி இருக்கும்போது எப்படி நீங்கள் அவர்களின் மூலம் மாத்திரம் பூரணமான ஒரு மார்க்கத்தைக்கொண்டுவர முடியும்? அஹ்லுல்பைத் என்ற பெயரில் உங்கள் பெரியார்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களை மார்க்கமென்று பிரச்சாரம்செய்து, குளிர்காய்கிறார்கள் என்பது இப்போதாவது உங்களுக்குத் தெரியவில்லையா?.

**02)** பெரும்பான்மையான ஸஹாபாக்களை நம்பகத்தன்மை அற்றவர்கள் என்றும், தங்களைத்தவிர மற்றைய அத்தனை முஸ்லிம்களும் நாயை விட நஜீஸானவர்கள் என்றும் சொல்லும் நீங்கள், உங்களால் முடியுமென்றால் றாபிழாக்களை மாத்திரம் அறிவிப்பாளர் வரிசையாகக்கொண்ட ஒரு குர்ஆனை கொண்டு வாருங்கள்!

மறுமை நாள் வரை தேடினாலும் உங்களால் முடியாது, காரணம் குர்ஆனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கூட்டமல்ல நீங்கள். முஸ்லிம்களைச் சின்னாபின்னமாக்குவதற்காகவும் அவர்களுக்கு மத்தியில் சிந்தனைச்சிக்கலை உருவாக்குவதற்காகவும் யூதர்களால் உருவாக்கப்பட்டவர்கள் ஆனால், பிற்பட்ட காலத்தில் உங்களைப் பாதுகாப்பதற்கும், தக்கவைத்துக்கொள்வதற்கும், புதிய முறையில் மக்களைக்குழப்ப அஹ்லுல்பைத்தை தற்காப்பு அரணாக எடுத்துக்கொண்டு பதுங்கியும், முஸ்லிம்கள் மீது அவ்வப்போது பாய்ந்தும் வருகிறீர்கள்.

அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர்தான் இன்றளவும் குர்ஆனை சந்தேகமற நம்புகின்ற அடிப்படையில் அறிவிப்பாளர் வரிசையுடன் பாதுகாக்கிறார்கள். ஷீஆக்கள் பிளவுகளை ஏற்படுத்தி முஸ்லிம்களின் அடிப்படை மூலாதாரங்களுக்கு முகவரியில்லாமலாக்க முயற்சிக்கிறார்கள். அஹ்லுஸ்ஸுன்னாக்களைக்கொண்டு அல்லாஹ் தன் மார்க்கத்தைப் பாதுகாத்தான். அல்ஹம்துலில்லாஹ்.

**03)** அல்காபி என்பது ஷீஆக்களின் மார்க்கச் சட்டங்களினதும் கொள்கைகளினதும் அடிப்படை நூல். உலகத்தில் அதுபோன்ற ஒரு நூல் தொகுக்கப்படவில்லை, என்று ஷீஆ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். உலகத்தில் நாம் செய்யவேண்டிய அத்தனை செயல்களும், விட்டொதுங்கவேண்டிய அத்தனை விடயங்களும் அதில் இருப்பதாகச் ஷீஆக்கள் சொல்கின்றனர். உங்களால் முடியுமென்றால் அஹ்லுல்பைத்தின் முக்கிய அங்கமாகக் கருதுகின்ற பாதிமா ﷺ அவர்கள் அறிவிக்கின்ற ஒரு ஹதீஸையேனும் உங்கள் "காபி" என்ற நூலிலிருந்து எடுத்துக்காட்டுங்கள்.

80,000த்துக்கும் மேற்பட்ட செய்திகளைக் கொண்டிருக்கின்ற உங்கள் காபியில் பாதிமா ﷺ அவர்களுக்கு ஒரு ஹதீஸேனும் இல்லை. இதுதான் நீங்கள் அஹ்லுல்பைத்தை நேசிப்பதன் இலட்சணம்.



**04)** அலி ﷺ, பாதிமா ﷺ, ஹஸன் ﷺ, ஹுஸைன் ﷺ போன்றவர்களின் பரம்பரையில் வந்தவர்கள்தான் அஹ்லுல்பைத்தினர் என்று நீங்கள் சொல்வதும், அவர்களை நீங்கள் நேசிப்பதாகச் சொல்வதும் உண்மையாக இருந்தால், அவர்கள் பரம்பரையில் வந்த அத்தனை பேருடைய பெயர்களையும் உங்களால் வெளியிட முடியுமா? அவ்வாறு வெளியிட உங்கள் மனது இடம் கொடுக்குமா?

வெளியிடமாட்டீர்கள் வெளியிட்டால் உங்கள் போக்கிரித் தனத்தைப் பார்த்து உலகம் காறி உமிழுமே, ஷைத்தானையும் இப்லீஸையும்விட கெட்டவர்கள், எதிரிகள் என்று நீங்கள் அடையாளப்படுத்தும் அபூபக்ர் ﷺ, உமர் ﷺ போன்ற பெயர்களை அஹ்லுல் பைத்தினர் தங்கள் செல்லக் குழந்தைகளுக்கு சூட்டி அழகுபார்த்தது அம்பலமாகிவிடுமே. நீங்கள் சொல்வதைப்போன்று அபூபக்ரையும் உமரையும் கடுமையாக அஹ்லுல் பைத்தினர் எதிர்த்திருந்தால் தாங்கள் எதிர்க்கின்ற இஸ்லாத்தை விட்டும் சென்றுவிட்ட இத்தகையவர்களின் பெயர்களையா தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டினார்கள் என்று மக்கள் கேட்பார்களே!

இப்படியான சிக்களில் மாட்டிக்கொண்டு தொண்டையில் முள் தைத்தவனைப் போன்று இருக்க நீங்கள் விரும்பமாட்டீர்கள், கிறிஸ்தவர்களைப் போன்று ஹுஸைனின் இரத்தத்தைக் காரணம் காட்டி பலம் சேர்க்க மாத்திரமே! உங்களுக்கு திராணியிருக்கிறது.

**05)** மக்களிடம் நீங்கள் எல்லா ஸஹாபாக்களையும் நேசிப்பதாகச் செய்யும் பொய்ப்பிரச்சாரம் உண்மையானதாக இருந்தால், ஹுஸைன் ﷺ அநியாயமான முறையில் கொலை செய்யப்பட்டார் என்பதற்காக விழா கொண்டாடும் நீங்கள் நபியவர்களின் இரண்டு பிள்ளைகளைத் திருமணம் செய்து, எவரும் பெறாத வாய்ப்பைப்பெற்ற உஸ்மான் ﷺ அவர்கள் அநியாயமான முறையில் கொலைசெய்யப்பட்டதற்கு துக்கம் அனுஷ்டிக்கிறீர்களா? உங்கள் வரலாற்றில் ஹுஸைன் ﷺ அவர்களுக்கு துக்கம் அனுஷ்டிப்பதைப்போன்று ஒரு சதவீதமாவது உஸ்மான் ﷺ அவர்களுக்காக நாம் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என்று

சொல்லியிருக்கிறீர்களா?, அவரும் நபியின் மருமகன்தானே! ஆனால், உங்கள் கணக்கில் அவர் நபியின் குடும்பமில்லை.

நாம் எந்த வகையிலும் மூளைக்கும் வாய்க்கும் சம்மந்தமில்லாத ஒரு கொள்கைக்கு அடிமையாகியிருக்கிறோமென்று இப்போதாவது தெரிகிறதா? பல நாட்கள் முற்றுகையிடப்பட்டு தண்ணீர் குடிப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டு குர்ஆனை ஓதிக்கொண்டிருக்கும்போதுதானே உஸ்மான்ﷺ கொலை செய்யப்பட்டார்கள். ஹுஸைன்ﷺ அவர்கள் கூட, பிரச்சினையை தோற்றுவித்து கொலை செய்யப்பட்டார். உஸ்மான்ﷺ பிரச்சினைக்கே போகவில்லையே.

நிச்சயம் நீங்கள் அவ்வாறு துக்கப்படமாட்டீர்கள். அவ்வாறு செய்யுமாறு மற்றவர்களுக்கு சொல்லவுமாட்டீர்கள். கொன்றவர்களே நீங்கள்தானே, நீங்களே கொன்றுவிட்டு நீங்களே துக்கம் கொள்ள முடியாது இல்லையா? ஷீஆக்களைத்தவிர அத்தனைபேரையும் கொல்வதுதானே உங்கள் எதிர்கால இலட்சியம், அப்படி இருக்க அவரின் கொலைக்கு எப்படி நீங்கள் துக்கப்படுவீர்கள்.?

**06)** அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களிடம் பிரதிசெய்யப்படாத நீங்கள் அறிஞர்கள் என்று கருதுகின்ற உங்கள் அறிஞர்களால் உருவாக்கப்பட்ட ஒரு ஹதீஸ் திறனாய்வுக் கலையை உங்களால் கொண்டுவர முடியுமா? அல்லது உங்களால் சிறந்த அறிவிப்பாளர்கள் என்று கருதப்படும் அறிவிப்பாளர்களில் உங்கள் அறிஞர்கள் சொல்கின்ற விமர்சனங்களை நடைமுறைப்படுத்த முடியுமா? எங்கே நடைமுறைப்படுத்தப்போகிறீர்கள் அப்படி செய்தால் உங்கள் மதத்திற்கே முகவரியில்லாமல் போய்விடுமே!

**07)** உங்களால் முடியுமென்றால், உங்களின் நூல்களிலிருந்து ஒரு பலமான (ஸஹீஹான) ஹதீஸை எடுத்துக்காட்ட முடியுமா?



**08)** உமையா ஆட்சியாளர்கள், நபியின் குடும்பத்தினருக்கு அநியாயம் செய்ததாக அவர்கள் மீது எரிந்து விழுகிறீர்கள். அவர்களை உங்களின் எல்லா மேடைகளிலும் நாக்கூசாமல் தூற்றுகிறீர்கள். பாமர மக்கள், உமையா ஆட்சியாளர்கள் காபிர்கள், தஜ்ஜாலைவிட கொடியவர்கள் என்று நினைக்குமளவுக்கு அவர்களை சித்தரிக்கிறீர்கள். இத்தனைக்கும் உமையா ஆட்சியாளர்கள் அஹ்லுல் பைத்தினருக்கு அநியாயம் செய்ததாக உங்கள் நூல்களிலிருந்து ஒரு பலமான ஆதாரத்தையேனும் உங்களால் காட்ட முடியுமா?

(இது குவைத்தைச்சேர்ந்த அஷ்ஷெய்க் குழைர் அவர்கள் லண்டனில் ஷீஆக்களின் மூத்த அறிஞர்களுடன் நடந்த ஒரு விவாதத்தில் முன் வைத்த சவால் அது இறுதி வரை முறியடிக்கப்படவில்லை. அதனால் அதே சவாலை இங்கு நாம் பிரதி செய்துள்ளோம். இதில் எதையாவது இட்டுக்கட்டிச்சொல்லி மாட்டிக்கொண்டு விழிக்காதீர்கள். அதுதான் உங்களின் பரம்பரைக்குணமாயிற்றே அதனால் சொல்கிறேன்.)

நாம் இங்கு முன்வைத்திருக்கும் அம்சங்களே ‘ஷீஆக்களின் கொள்கை போலியானவை’ என்பதைப் புலப்படுத்தப் போதுமானவை என்று நினைக்கிறோம். இது உங்களின் மூதாதையர்களால், பெரும் அறிஞர்களால்கூட முறியடிக்கப்படாத சவால்கள். வீணாக நேரத்தைக்கழித்து வீண்போகாதீர்கள் நேரம் பொன்னானது.

ஷீஆக்கொள்கை என்பது யூதர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக அவர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. அதை இஸ்லாம் என்று சிலர் நினைத்ததனால், பிற்பட்ட காலத்தில் வளர்ச்சியடைந்து அரசியல் பலமும், பணபலமும் பெற்றதன் விளைவாக பொதுமக்களால் புரிந்துகொள்ளப்படாத ஒரு விடயமாக மாறிவிட்டது.

பெரும்பாலும் ஷீஆ அறிஞர்களின் பேச்சுக்களை செவிமடுத்தால் மற்றவர்களை ஏசுவதற்காக கொண்டுவருகின்ற குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்களைத்தவிர வேறு எதற்கும் அவர்கள் ஆதாரம் சொல்லமாட்டார்கள். வஹீ வந்ததைப்போன்று வாய்க்கு வருவதையெல்லாம் மார்க்கம் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஆதாரங்களைவிட அவர்களின் மனோ இச்சையும், தத்துவமும், மெய்யியலுமே அவர்களின் கொள்கைகளை நிரூபிப்பதற்கு அவர்களுக்கு மிகவும் சிறந்த சாதனம். அல்லாஹ் எம்மனைவரையும் இத்தகைய குழப்பங்களிலிருந்து பாதுகாப்பானாக! ஸஹாபாக்களுடன் சுவர்க்கத்தில் நாம் இருப்பதற்கு அருள்செய்வானாக! ஆமீன்.

நிச்சயமாக, அவனே யாவற்றையும் மிகைத்தவனாகவும் மிக்க ஞானமுடையவனுமாக இருக்கிறான்.



## குறிப்புக்கள்: